
# பெரிய புராண விளக்கம்

கி.வா.ஜ.



பகுதி

7

அல்லயன்ஸ்

# பெரிய புராண விளக்கம்

## பகுதி-7

திருநாவுக்கரசு நாயனார் புராணம் - பாகம்-2)

"வாகீச கலாநிதி"

கி. வா. ஜகந்நாதன்

அல்லயன்ஸ் கம்பெனி
244, ராமகிருஷ்ணா மடம் சாலை
தபால் பெட்டி எண் 617
மயிலாப்பூர் :: சென்னை-600 004.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Periya Purana Vilakkam vol - VII |
| Author | : | Ki. Va. Jagannathan |
| Language | ; | Tamil |
| Date of Publication | : | September 1990 |
| Copy Right Holder | : | Author |
| Paper used | : | 10·9kg. D/Cr. white printing |
| Size of the book | : | 18·5 cms × 12·5 cms |
| Printing point used | : | 10 point |
| Number of pages | : | (316+4) 320 pages |
| Artist | : | Muthu |
| Printer | : | Kalai Nilaa Achagam Madras-24. |
| Binding | : | Card Board Binding |
| Price | : | Rs. 30-00 |
| Publisher (with full address) | : | The Alliance Company<br>244, R. K. Mutt Road<br>Post Box No. 617<br>Mylapore, Madras-600 004.<br>Phone - 7 1 3 1 4 |
| Subject | | Appreciative Commentary on 'Periya Purana Vilakkam' (vol - VII)—Thirunavukkarasu Nayanar Puranam. Part - II |

## நூற்றாண்டை நோக்கி....

"தமிழில் நல்ல நூல்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸ் ஸ்தாபகர் ஸ்ரீ. வி. குப்புசாமி ஐயரை நான் பாராட்டுகின்றேன்."

—மகாத்மா காந்தி

"நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளையும், பல நாடகங்களையும், பல மொழிபெயர்ப்புக்களையும், இன்னும் பல விஷயங்களையும் எளிய அழகிய நடையில் வெளியிட்டு வரும் அல்லயன்ஸாரை நான் பாராட்டுகின்றேன்."

—மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

"Books published by Alliance Company are highly Popular Books."

—Rt. Hon'ble V. S. Srinivasa Sastri

"தமிழில் அழகிய புத்தகங்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸாருக்கு நன்றி செலுத்தி அவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுகிறேன்."

—சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

"அல்லயன்ஸ் கம்பெனியார் நல்ல நூல்களை வெளியிடுவதில் தேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தமிழ் நாட்டார் தக்க ஊக்கம் தர வேண்டும் என விரும்புகிறேன்."

—சத்தியமூர்த்தி

"மயிலை அல்லயன்ஸ் கம்பெனியாரின் வெளியீட்டுத் திறத்தை ஈண்டு விரித்துக் கூற வேண்டியதில்லை. அதை நாடறியும். அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப் பெற்ற நூல்கள் யாவும் தமிழ்நாட்டுக்குப் பலவழிகளிலும் பயன் விளைத்து வருவது கண்கூடு. நாட்டு நலங்கருதி ஒழுங்கு முறையில் உழைக்கும் அவர்களுக்கு நாடு கடமைப் படுவதாக."

—திரு. வி. க.

பெரிய புராண விளக்கத்தின் ஏழாவது பகுதியாகிய இந்நூல் திருநாவுக்கரசு நாயனார் புராணம் இரண்டாவது பாகமாக வந்துள்ளது. இந்நூலில், அப்பூதி அடிகளின் மகன் விடம் தீர்த்த பிறகு திருவாரூர்த் தரிசனம், ஞானசம்பந்தர் சந்திப்பு, புகலூரில் அடியார்கள், படிக்காசு பெறுதல், மறைக்கதவு திறத்தல், வாய்மூர் அருகு காட்சி, பழையாறை அடைதல், கட்டமுது அருந்தல், தொண்டை நாடு சேரல் முதலியவை அடங்கியுள்ளன. எஞ்சிய பகுதிகளுடன் அடுத்த பாகத்தில் திருநாவுக்கரசு நாயனார் புராணம் முற்றுப்பெறும்.

**பதிப்பகத்தார்**

# திருநாவுக்கரசு நாயனார் புராணம் (பாகம்-2)

பெரிய புராணத்தில் 5-ஆவதாக விளங்கும் திருநின்ற சருக்கத்தில் முதலாவதாக இருக்கும் திருநாவுக்கரசுநாயனார் புராணத்தில் வரும் 211-ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'தம்முடைய தலையின் பக்கத்தில் மாலை நேரத்தில் உதயமாகும் பிறைச் சந்திரனாகிய கண்ணியைச் சூடியிருக்கும் புரிகளைக் கொண்ட சடாபாரத்தை உடையவராகிய ஆபத்சகாயேசுவரருடைய தங்கத்தால் செய்த வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளின் நிழலின் கீழ் தம்மிடம் அடைந்திருக்கும் இயல்பாகிய சீலத்தைப் பெற்ற அப்பூதி அடிகள் நாயனாரை செய்யுளின் நடை மாட்சியை அடையும் வண்ணம் சிறப்பை எடுத்துத் திருவாய் மலர்ந்தருளிச் செய்து அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பல நன்மைகளைச் செய்யும் இனிய சொற் சுவை, பொருட் சுவை என்னும் சுவைகள் அமைந்த செந்தமிழ் மொழியில் தொடுத்தலைக் கொண்ட மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை, ''சொன்மாலை'' என்று தொடங்கி அந்த நாயனார் பாடியருளினார்.' பாடல் வருமாறு:

'' புடைமாலை மதிக்கண்ணிப்
புரிசடையார் பொற்கழற்கீழ்
அடைமாலைச் சீலமுடை
அப்பூதி அடிகள்தமை
நடைமாணச் சிறப்பித்து
நன்மைபுரி தீந்தமிழின்

**தொடைமாலைத் திருப்பதிகம்**
**'சொன்மாலை' பாடினார்.''**

புடை-தம்முடைய தலையின் பக்கத்தில். மாலை-மாலை நேரத்தில் உதயமாகும். மதி-பிறைச் சந்திரனாகிய. க்:சந்தி. கண்ணி-கண்ணியைச் சூடிக் கொண்டு விளங்கும். ப்:சந்தி. புரி-புரிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். சடையார்-சடாபாரத்தைப் பெற்றவராகிய ஆபத்சகாயேசுவரருடைய. பொன்-தங்கத்தால் செய்த. கழல்கீழ்-வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளின் நிழலின் கீழ். கழல்: ஆகுபெயர். அடை-தம்மிடம் அடைந்திருக்கும் மாலை-இயல்பாகிய. ச்:சந்தி. சீலம்-சௌசீல்யத்தை. உடை-பெற்ற. அப்பூதியடிகள் தமை-அப்பூதியடிகள் நாயனாரை. தமை: இடைக்குறை. தம்: அசை நிலை. நடை-செய்யுளின் நடை. மாண-மாட்சியை அடையும் வண்ணம். ச்:சந்தி. சிறப்பித்து-சிறப்பை எடுத்துத் திருவாய் மலர்ந்தருளிச் செய்து. நன்மை-பலவகையாகிய நன்மைகளை; ஒருமை பன்மை மயக்கம். புரி-செய்யும். தீம்-இனிய சொற்சுவை, பொருட்சுவை என்னும் சுவைகள் அமைந்த; வினையாலணையும் பெயர். தமிழின்-செந்தமிழ் மொழியில். தொடை-தொடுத்தலைக்கொண்ட. மாலை-மாலையாகிய. த்:சந்தி. திருப்பதிகம்-ஒரு திருப்பதிகத்தை. சொன்மாலை-சொன்மாலை என்று தொடங்கி. பாடினார்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளினார்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட திருப்பதிகம் திருப்பழனத்தைப் பற்றிப் பழந்தக்கராகப் பண்ணில் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியது. அந்தப் பாசுரம் வருமாறு:

''சொன்மாலை பயில்கின்ற
குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு
பண்மிழற்றும் பழனத்தான்

முன்மாலை நகுதிங்கள்
முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என்
புதுநலமுண் டிகழ்வானோ.''

திருப்பழனத்தைப் பற்றித் தக்கேசிப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' கடியார் கொன்றைச் சுரும்பின் மாலை
கமழ்புன் சடையார்விண்
முடியாப் படிமூ வடியால் உலகம்
முழுதும் தாவிய
நெடியான் நீள்தா மரைமேல் அயனும்
தேடிக் காணாத
படியார் பொடியா டகலம் உடையார்
பழன நகராரே.''

திருச்சோற்றுத் துறை: இது சோழநாட்டில் காவிரி யாற்றின் தென்கரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் தொலையாச் செல்வ ஈசுவரர், ஓதனவனேசுவரர் என்பவை. அம்பிகையின் திரு நாமங்கள் ஒப்பிலா அம்பிகை அம்மை, அன்னபூரணி என்பவை. இது திருக்கண்டியூருக்குத் தென்கிழக்குத் திசை யில் ஒன்றரை மைல் தூரத்தில் உள்ளது. இந்தத் தலம் சப்தஸ்தானத் தலங்களுக்குள் மூன்றாவது தலம். ஓதனவ னேசுவரர் சிவபெருமானுடைய பக்தனாகிய அருளாளன் என்னும் வேதியன் பசியால் வருந்திய போது எடுக்க எடுக்கக் குறையாமல் இருக்கும் தன்மையைப் பெற்ற சோற்றை வழங்கியருளிய தலம் இது. இந்திரன் முதலியவர்கள் வழி பட்ட தலம் இது. இந்தத் தலத்துக்குத் தெற்குத் திசையில் சோறுடையான் வாய்க்கால் என்ற பெயரைப் பெற்ற ஒரு கால்வாய் உள்ளது. அன்னம் படைத்த வயல் என்ற ஒரு வயலும் இந்தத் தலத்தில் உண்டு என்று ஆன்றோர் கூறுவர்.

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடி யருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

"அங்கதி ரோனவனை அண்ணலாக் கருதவேண்டா
வெங்கதி ரோன்வழியே போவதற் கமைந்துகொள்மின்
அங்கதி ரோனவனை உடன்வைத்த ஆதிமூர்த்தி
செங்கதி ரோன்வணங்கும் திருச்சோற்றுத் துறைய
னாரே."

இந்தத் தலம் திருச்சத்துறை என்று இக்காலத்தில் வழங்கும். இந்தத் தலத்தைப் பற்றிக் கௌசிகப் பண்ணில் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"அழல்நீர் ஒழுகி அனைய சடையும்
உழையீர் உரியும் உடையான் இடமாம்
கழைநீர் முத்தும் கனகக் குவையும்
சுழல்நீர்ப் பொன்னிச் சோற்றுத் துறையே."

அடுத்து வரும் 212-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'தங்களுடைய தலைகளைத் தூக்கிக் கொண்டு நிமிர்ந்துபார்க்கும் பாம்புகளையும், இளம் பருவத்தைப்பெற் றிருக்கும் பிறைச் சந்திரனையும் தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தில் அணிந்துள்ளவராகிய ஆபத்சகாயேசு வரரை எல்லாப் பக்கங்களிலும் இருக்கும் திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கும் திருப் பணியை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தம் மேற் கொண் டருளி திருச்சோற்றுத் துறை முதலாக உள்ள சிவத்தலங் களுக்கு அந்த நாயனார் எழுந்தருளிப் பக்தி செய்து தழும்பு ஏறியது போல அமைந்திருக்கும் பக்தியோடு எழுந்தருளிச் சிவத்தலங்கள் பலவற்றிலும் திருக்கோயில் கொண்டு எழுந் தருளியிருக்கும் சிவபெருமான்களைப் புகழ்ந்து பாடியருளி நீர் வளச் செழுமையையும், நில வளச் செழுமையையும், செல்வ வளச் செழுமையையும், திருமாளிகை வளச் செழு மையையும், ஆலயங்களின் வளச் செழுமையையும், நன் மக்களாகிய வளச் செழுமையையும், கற்புடை மங்கைமார்

களாகிய வளச் செழுமையையும், சமயத்தில் உதவி புரியும் சுற்றத்தார்களாகிய வளச் செழுமையையும், இடித்து உரைக்கும் நண்பர்களாகிய வளச் செழுமையையும் வேறு வளங்களாகிய செழுமைகளையும் பெற்ற திருப்பழனத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவராகிய அந்த ஆபத்சகாயேசுவரருடைய ஆலயத்தில், அந்த நாயனார் உழவாரத் தொண்டினையும் வேறு பல திருத்தொண்டுகளையும் புரிந்து கொண்டு அந்தத் திருப்பழனத்தில் தங்கிக் கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு:

'' எழும்பணியும் இளம்பிறையும்
அணிந்தவரை எம்மருங்கும்
தொழும்பணிமேற் கொண்டருளித்
திருச்சோற்றுத் துறைமுதலாத்
தழும்புறுகேண் மையில்நண்ணித்
தானங்கள் பலபாடிச்
செழும்பழனத் திறைகோயில்
திருத்தொண்டு செய்திருந்தார். ''

எழும்-தங்களுடைய தலைகளைத் தூக்கிக் கொண்டு நிமிர்ந்து பார்க்கும். பணியும்-பாம்புகளையும்; ஒருமை பன்மை மயக்கம். இளம்-இளம் பருவத்தைப் பெற்ற. பிறையும்-மூன்றாம் பிறைச்சந்திரனையும். அணிந்தவரை-தம்முடைய தலையில் உள்ள சடாபாரத்தில் புனைந்து கொண்டுள்ளவராகிய ஆபத்சகாயேசுவரரை. எம்மருங்கும்-எல்லாப் பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். தொழும்-இருக்கும் திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கும். பணி-திருப்பணியை. மேற்கொண்டருளி-திருநாவுக்கரசு நாயனார் தம்மேற் கொண்டருளி. த்:சந்தி. திருச்சோற்றுத் துறை முதலா-திருச்சோற்றுத் துறை முதலாக உள்ள. த்:சந்தி. தழும்பு-சிலத்தலங்களுக்கு அந்த நாயனார் எழுந்தருளிப் பக்தி செய்து தழும்பு ஏறியது போல. உறு-அமைந்திருக்கும். கேண்மையில்-பக்தியோடு

உருபு மயக்கம். நண்ணி-எழுந்தருளி. த்:சந்தி. தானங்கள்-சிவத்தலங்கள். பல-பலவற்றிலும் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை; ஆகு பெயர். பாடி-அந்த நாயனார் புகழ்ந்து பாடியருளி. ச்:சந்தி. செழும்-நீர் வளச் செழுமையையும், நில வளச் செழுமையையும், செல்வ வளச் செழுமையையும், திருமாளிகை வளச்செழுமையையும், ஆலயங்களின் வளச் செழுமையையும், நன்மக்களாகிய வளச் செழுமையையும், கற்புடை மங்கைமார்களாகிய வளச் செழுமையையும், சமயத்தில் உதவி புரியும் சுற்றத்தார்களாகிய வளச் செழுமையையும், இடித்து உரைக்கும் நண்பர்களாகிய வளச் செழுமையையும், அறிவுடைச் சான்றோர்களாகிய வளச் செழுமையையும், பசுமாடுகளாகிய வளச் செழுமையையும், வேறு பலவகையாகிய வளச் செழுமைகளையும் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். பழனத்து-திருப்பழனத்தில் எழுந்தருளியிருக்கும். இறை-இறைவராகிய அந்த ஆபத்சகாயேசுவரருடைய. கோயில்-ஆலயத்தில். திருத்தொண்டு-அந்த நாயனார் உழவாரத் திருத்தொண்டினையும், வேறுபல திருத்தொண்டுகளையும்; ஒருமை பன்மை மயக்கம். செய்து-புரிந்து கொண்டு. இருந்தார்-அந்தத் திருப்பழனத்தில் தங்கிக் கொண்டிருந்தார்.

பிறகு வரும் 213-ஆம் பாடலின் கருத்து வருமாறு;

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பல தினங்கள் அந்தத் திருப்பழனத்தில் தங்கியிருந்து கொண்டு தம்முடைய தலையின் மேல் திருவடிகளை வைத்தருளிய திருமால் பள்ளி கொண்டருளிய பாற்கடலில் எழுந்த ஆலகால நஞ்சை விழுங்கிய நீலமணியைப் போன்ற கழுத்தை உடையவராகிய அந்த ஆபத்சகாயேசுவரருடைய அழகிய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்து விளங்கும் திருவடிகளைத் தியானித்து சேல் மீன்கள் உலாவித் திரியும் நீர் ஓடும் பொன்னைக் கொழிக்கும் காவிரியாற்றினுடைய தெற்குக் கரைமேல் அந்த நாயனார் ஏறி மேலே எழுந்

தருளி அழகைப் பெற்ற உயரமாக நிற்கும் மாடங்களைப் பெற்ற திருநல்லூரை அடைந்தார்.' பாடல் வருமாறு:

" காலநாள் அங்கமர்ந்து
தம்தலைமேல் தாள்வைத்த
ஆலமார் மணிமிடற்றார்
அணிமலர்ச்சே வடிநினைந்து
சேலுலாம் புனற்பொன்னித்
தென்கரைஏ றிச்சென்று
கோலம்நீள் மணிமாடத்
திருநல்லூர் குறுகினார். "

கால-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பல. நாள்-தினங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அங்கு-அந்தத் திருப் பழனத்தில். அமர்ந்து-தங்கிக் கொண்டிருந்து. தம்-தம்முடைய. தலைமேல்-தலையின் மேல். தாள்-தம்முடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். வைத்த-வைத்தவராகிய கலியாணசுந்தரேசுவரரும்; வினையாலணையும் பெயர். ஆலம்-திருமால் பள்ளி கொண்டருளிய பாற் கடலில் எழுந்த ஆலகால நஞ்சை. ஆர்-விழுங்கிய. மணி-நீலமணியைப் போன்ற நீல நிறத்தைப் பெற்ற. மிடற்றார்-திருக்கழுத்தை உடையவராகிய அந்த ஆபத்சகாயேசுவரருடைய. அணி-அழகிய. மலர்-செந்தாமரை மலர்களைப் போல; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சே-சிவந்து விளங்கும். அடி-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். நினைந்து-தியானித்து. சேல்-சேல் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். உலாம்-உலாவித் திரியும். புனல்-நீர் ஓடும். பொன்னி-பொன்னைக் கொழிக்கும் காவிரியாற்றினுடைய; "பொன்னி பொன் கொழிக்கும்" என்று வருதலைக் காண்க. த்:சந்தி. தென்கரை-தெற்குக் கரையின் மேல். ஏறி-அந்த நாயனார் ஏறி. ச்:சந்தி. சென்று-மேலே எழுந்தருளி. கோலம்-அழகைப் பெற்றவையும்; வினையால

ணையும் பெயர். நீள்-உயரமாக நிற்பவையும் ஆகிய; வினையாலணையும் பெயர். மாட-மாடங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. திருநல்லூர்-திருநல்லூரை. குறுகினார்-அடைந்தார்.

பிறகு வரும் 214-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்தத் திருநல்லூரை அடைந்து தம்முடைய தலைவனாகிய கலியாண சுந்தரேசுவரனுடைய திருவடிகளைப் பணிந்து திருப்தியை அடையாமல் தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழுந்த பக்தியாகிய சமுத்திரத்தில் முழுகி இன்புற்று அந்தக் கலியாண சுந்தரேசுவரருடைய வாழ்த்துக்களைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு உழவாரத் திருப்பணியையும் வேறு திருப்பணிகளையும் அந்த நாயனார் புரிந்து கொண்டு வரும் காலத்தில் தம்முடைய திருவுள்ளத்தில் தங்கியிருந்த பெருமையைக் கொண்டிருக்கும் விருப்பத்தோடு தாமரை மலரின் மேல் அமர்ந்திருக்கும் பிரமதேவனோடு, சிவந்த கண்களைப் பெற்ற திருமாலும் அன்னப் பறவையினுடைய வடிவை எடுத்து மேலே பறந்து தேடிப் பார்த்தும் திருமுடியையும், பன்றியினுடைய திரு உருவத்தை எடுத்துக் கொண்டு நிலத்தைத் தோண்டிப் பார்த்தும் திருவடிகளையும் தெரிந்து கொள்ள அரியவராகிய தியாகராஜப் பெருமானார் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவாரூருக்கு அந்த நாயனார் எழுந்தருளி வன்மீகநாதரை வணங்குவதற்கு எண்ணினார்.' பாடல் வருமாறு:

**" அங்கணைந்து தம்பெருமான்**
**அடிவணங்கி ஆராது**
**பொங்கியஅன் பொடுதிளைத்துப்**
**போற்றிசைத்துப் பணிசெயும்நாள்**
**தங்குபெருங் காதலினால்**
**தாமரைமேல் விரிஞ்சனொடு**

செங்கண்மால் அறிவரியார்
திருவாரூர் தொழநினைந்தார்."

அங்கு-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்தத் திருநல்லூரை. அணைந்து-அடைந்து. தம்-தம்முடைய. பெருமான்-தலைவனாகிய கலியாணசுந்தரேசுவரருடைய. அடி-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். வணங்கி-பணிந்து. ஆராது-திருப்தியை அடையாமல். பொங்கிய-தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழுந்த; அன்பொடு-பக்தியாகிய சமுத்திரத்தில்; உருபு மயக்கம். திளைத்து-முழுகி இன்புற்று. ப்:சந்தி. போற்று-வாழ்த்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். இசைத்து-திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. ப்:சந்தி. பணி-உழவாரத் திருப்பணியையும்வேறு திருப்பணிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். செயும்-புரிந்து கொண்டு வரும். இடைக்குறை. நாள்-காலத்தில். தங்கு-தம்முடைய திருவுள்ளத்தில் தங்கியிருந்த. பெரும்-பெருமையைக்கொண்டிருக்கும். காதலினால்-விருப்பத்தோடு; உருபு மயக்கம். தாமரைமேல்-தாமரை மலரின் மேல் அமர்ந்திருக்கும். விரிஞ்சனொடு-பிரமதேவனோடு. செம்-சிவப்பாக இருக்கும். கண்-கண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மால்-திருமாலும். அறிவரியார்-அன்னப் பறவையினுடைய வடிவை எடுத்துக் கொண்டு மேலே பறந்து தேடிப் பார்த்தும் திருமுடியையும், பன்றியினுடைய திருவுருவத்தை எடுத்துக் கொண்டு நிலத்தைத் தோண்டிப் பார்த்தும் திருவடிகளையும் தெரிந்து கொள்ள அரியவராகிய தியாகராஜப் பெருமானார் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். திருவாரூர்-திருவாரூருக்கு அந்த நாயனார் எழுந்தருளி. தொழ-வன்மீக நாதரை வணங்குவதற்கு. நினைந்தார்-எண்ணினார்.

திருவாரூர்: இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் வன்மீக நாதர், புற்றிடம் கொண்ட நாதர், வீதி விடங்கர், தியாகராஜர் என்பவை. அம்பிகை அல்லியங்கோதை.

தீர்த்தங்கள், கமலாலயம் முதலிய தீர்த்தங்கள். இது நாகப்பட்டிணத்திற்கு மேற்குத் திசையில் 14 மைல் தூரத்தில் உள்ளது. 'நிறை செல்வத் திருவாரூர்' என்று இந்தத் தலம் சிறப்பிக்கப் பெறும். இங்கே உள்ள திருக்கோயிலுக்குத் திருமூலட்டானம் என்றும், பூங்கோயில் என்றும் பெயர்கள் உண்டு. "தேங்காவின் ஊறும் திருவாரூர்த் தொன்னகரிற், பூங்கோயிலுள் மகிழ்ந்து போகாதிருந்தாரே" என்று தேவாரத்தில் வருவதைக் காண்க. இது திருமகள் வழிபட்ட தலம். முத்தியை வழங்கும் தலம் இது. மனு நீதிகண்ட சோழ மன்னர் அரசாட்சி புரிந்த தலைநகர் இது. சிதம்பரம் திருக்கோயிலில் புதைக்கப் பெற்றிருந்த தேவாரப் பதிகங்களைக் கண்டெடுத்து அவற்றை ஏழு திருமுறைகளாகவும், திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எட்டாம் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர் பாடி அருளிய நான்கு திருவிசைப்பாக்களையும், சேந்தனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த மூன்று திருவிசைப்பாக்களையும், கருவூர்த் தேவர் பாடியருளிய பத்துத் திருவிசைப் பாக்களையும், பூந்துருத்தி நம்பி காடநம்பி பாடியருளிய இரண்டு திருவிசைப் பாக்களையும், வேணாட்டடிகள் அருளிய ஒரு திருவிசைப்பாவையும், திருவாலியமுதனார் பாடியருளிய நான்கு திருவிசைப் பாக்களையும், புருடோத்தம நம்பி பாடியருளிய இரண்டு திருவிசைப் பாக்கவையும், சேதிராயர் பாடியருளிய ஒரு திரு விசைப்பாவையும், சேந்தனார் பாடியருளிய திருப்பல்லாண்டையும் ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் பாடியருளிய திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், திருவாலவாயுடையார் பாடியருருளிய திருமுகப் பாசுரத்தையும் காரைக் கால் அம்மையார் பாடியருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணி மாலை, அற்புதத் திருவந்தாதி என்னும் நான்கையும், ஐயடிகள் காடவர் கோன் நாயனார் இயற்றிய க்ஷேத்திரத் திருவெண் பாவையும், சேரமான் பெருமாள் நாயனார் இயற்றியருளிய பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்

மணிக் கோவை, திருக்கைலாய ஞானஉலா என்னும் மூன்று பிரபந்தங்களையும், நக்கீர தேவ நாயனார் பாடியருளிய கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி, திருஈங்கோய மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழு கூற்றிருக்கை, பெருந்தேவ பரணி, கோபப் பிரசாதம், கார் எட்டு, போற்றித் திருக்கலி வெண்பா, திருமுருகாற்றுப் படை, திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்னும் பத்து நூல்களையும், கல்லாட தேவ நாயனார் பாடியருளிய திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்னும் நூலையும், கபில தேவ நாயனார் பாடியருளிய மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்னும் மூன்று பிரபந்தங்களையும், பரண தேவ நாயனார் பாடியருளிய சிவ பெருமான் திருவந்தாதி என்னும் நூலையும், இளம் பெருமான் அடிகள் பாடியருளிய சிவபெருமான் திருமும் மணிக்கோவை என்னும் நூலையும், அதிரா அடிகள் இயற்றிய மூத்த பிள்ளையார் திருமும்மணிக் கோவை என்னும் பிரபந்தத்தையும், பட்டினத்துப் பிள்ளையார் பாடியருளிய கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக் கோவை, திருவிடை மருதூர் மும்மணிக் கோவை, திருவே கம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபது என்னும் ஐந்து நூல்களையும், நம்பியாண்டார் நம்பி பாடியருளிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம், திருத் தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந் தாதி, ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை, திருநாவுக்கரசு தேவர் திரு ஏகாதச மாலை என்னும் பத்து நூல்களையும் பதினோராம் திருமுறையாகவும், செப்பேடு களில் வரையச் செய்து தியாகராஜப் பெருமானுடைய

சந்நிதியில் ஏற்றுவித்த அபய குலசேகர மன்னரும், பிறகு சேக்கிழார் பாடியருளிய பெரிய புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாகவும் அமைத்து அந்தப் புராணத்தையும் செப்பேடுகளில் வரையச் செய்து தியாகராஜப் பெருமானுடைய சந்நிதியில் ஏற்றுவித்த அநபாய சோழ மாமன்னரும் அரசாட்சி புரிந்த தலைநகர் இது. சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளிய தேவாசிரயன் என்னும் ஆயிரக்கால் மண்டபமாகிய காவணத்தையும், அந்த நாயனார் விருத்தாசலத்தில் மணிமுத்தா நதியில் இட்ட பொன்னைப் பரவை நாச்சியாருக்கு எடுத்துக் கொடுத்த கமலாலயம் என்னும் திருக் குளத்தையும் கொண்ட தலம் இது. அந்த நாயனாருக்காக தியாகராஜப் பெருமான் நள்ளிருளில் பரவை நாச்சியாரிடம் தூது சென்ற பெருமையைப் பெற்ற தலம் இது. ''அளியேற் கெளிவந்த தூதனை'' என்று அந்த நாயனார் பாடியருளி யிருப்பதைக் காண்க.

காஞ்சீபுரத்தில் ஒரு கண்ணில் பார்வையைப் பெற்ற அந்தச் சுந்தரமூர்த்தி நாயனார், ''மீளா அடிமை'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளி மற்றொரு கண்ணில் பார்வையையும் பெற்ற தலம் இது. சேரமான் பெருமாள் நாயனார் எழுந்தருளிச் சுந்தர மூர்த்திநாயனாரோடு நண்பர் ஆன திருத்தலம் இது. விறன்மிண்ட நாயனார், நமிநந்தி அடிகள் நாயனார், செருத்துணை நாயனார், தண்டியடிகள் நாயனார், கழற்சிங்க நாயனார், வேறு அடியவர்கள் யாவரும் முத்தி பெற்ற பழைய சிவத்தலம்இது. சப்த விடங்கத் தலங்களுக்குள் முதலாவதாக விளங்கும் தலம் இது. ''திருவாரூர்த் தேரழகு'' என்பது ஒரு பழமொழி. இந்தத் தலத்தில் திருக்கோயில், குளம், செங்கழுநீர் ஓடை என்பவை ஒவ்வொன்றும் ஐந்து ஐந்து வேலிகள் பரப்பு உடையது என்பர் ஆன்றோர். ''அஞ்சணை வேலி ஆரூர் ஆதரித்திடம் கொண்டாரே'' என்று தேவாரத்தில் வருவதைக் காண்க.

ஆடகேச்சுரம் என்னும் திருக்கோயில் இந்த ஆலயத்துக்குள் இருக்கிறது. அந்தத் திருக்கோயிலில் பிலம் ஒன்று கருங்கல்லினால் மூடப்பட்டிருக்கிறது. இந்தப் பிலம் புற்றிடம் கொண்டார் திருக்கோயிலுக்குத் தென் கிழக்குத் திசையில் உள்ளது. இதற்கு நாகபிலம் என்று பெயர். இதில் எழுந்தருளியிருக்கும் ஆடகேசரைத் தரிசித்து யாவரும் சுவர்க்க பதவியை அடைந்தமையினால் அந்தச் சொர்க்க லோகத்தில் இடம் இல்லாமற் போனதை அறிந்த இந்திரன் அரதனசிருங்கம் என்னும் மலையொன்றால் அந்த நாகபிலத்தை மூடி விட்டான் என்பது ஐதிகம். இந்தச்செய்தியைத் திருவாரூர்த் தல புராணத்தால் அறியலாம். கமலாம்பாள் சந்நிதி தனியாக இருக்கிறது. நீலோற்பலாம்பாள், அல்லியங் கோதை என்னும் திருநாமங்களைப் பெற்ற அம்பிகையின் சந்நிதி வேறாக உள்ளது. தெற்குக் கோபுரத்துக்கு அருகில் பரவை நாச்சியாருடைய திருக்கோயில் உள்ளது. மனு நீதிச் சோழ மன்னனுடைய புதல்வன் தேரில் ஏறிச் சென்றதும், ஒரு பசுமாட்டின் கன்றுக்குட்டி அந்தத்தேரினுடைய சக்கரங்களில் அகப்பட்டு இறந்ததும், அந்தச் சோழ மன்னன் தன்னுடைய புதல்வன்மேல் தன்னுடைய தேரை ஓட்டிச் சென்றதும் ஆகிய வரலாறுகளைக் காட்டுவதற்காகக் கருங்கல்லினால் தேர் முதலியவை செய்யப் பெற்று வைக்கப்பட்டிருக்கின்றன. இவை கிழக்குத் திசையில் உள்ள கோபுரத்துக்கு அருகில் உள்ளன. கமலாலயம் என்னும் பெரிய திருக்குளத்தின் நடுவில் ஒரு சிறிய ஆலயம் இருக்கிறது. இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிரா வணம்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டிவாழ்தி

அயிரா வணமேறா தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரூர்ஆண்ட
அயிரா வணமேஎன் அம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே.''

இதனையல்லாமல் காந்தாரப் பண்ணிலும், சீகாமரப் பண்ணிலும், குறிஞ்சிப் பண்ணிலும் அமைந்த திருப்பதிகங்களையும், திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகப், போற்றித் திருத்தாண்டகம் என்பவை அடங்கிய திருப்பதிகங்களையும் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியிருக்கிறார். அவற்றுள் காந்தாரப் பண்ணில் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

'' ஆயிரம் தாமரை போலும்
ஆயிரம் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும்
ஆயிரம் தோளுடை யானும்
ஆயிரம் ஞாயிறு போலும்
ஆயிரம் நீள்முடி யானும்
ஆயிரம் பேர்உகந் தானும்
ஆரூர் அமர்ந்தஅம் மானே.''

அதே பண் அமைந்த பழமொழிப் பாசுரம் ஒன்று வருமாறு:

'' மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொ ழாதே
உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி
உழிதந் தென்உள்ளம் விட்டுக்
கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலும் ஆரூ ரரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேனே.''

சீகாமரப் பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

'' சூலப் படையானைச் சூழரசு வீழருவிக்
கோலத்தோட் குங்குமம்சேர் குன்றெட் டுடையானைப்

பாலொத்த மென்மொழியாள் பங்கனைப் பாங்காய்
ஆலத்தின்கீ ழானை நான்கண்ட தாரூரே.''

குறிஞ்சிப் பண் அமைந்த திருவாதிரைத் திருப்பதிகத்தில் உள்ள ஒரு பாசுரம் வருமாறு:

'' முத்து விதான மணிப்பொற்க வரிமுறையாலே
பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்தலை மாலைவிரதிகள்
அத்தன்ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.''

அந்த நாயனார் பாடியருளிய திருநேரிசை ஒன்று வருமாறு:

'' பஞ்சின்மெல் அடியி னார்கள்
பாங்கராய வர்கள் நின்று
நெஞ்சில்நோய் பலவும் செய்து
நினையினும் நினைய ஒட்டார்
நஞ்சணி மிடற்றி னானே
நாதனே நப்ப னேநான்
அஞ்சினேற் கஞ்சல் என்னீர்
ஆரூர்மூ லட்ட னீரே.''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

'' ஒருவடி வின்றிநின் றுண்குண்டர்
முன்மைக் குண்டு கொலோ
செருவடி வெஞ்சிலை யாற்புரம்
அட்டவன் சென்றடை யாத்
திருவுடை யான்திரு ஆரூர்த்
திருமூலட் டானன் செங்கண்
பொருவிடை யானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.''

அவர் பாடியருளிய ஒரு திருக்குறுந் தொகை வருமாறு:

'' விடையும் ஏறுவர் வெண்தலை யிற்பலி
கடைகள் தோறும் திரியுமெம் கண்ணுதல்

உடையும் சீரை உறைவது காட்டிடை
அடைவர் போல்அரங் காகஆ ரூரரே.''

அவர் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

'' ஐயன்காண் குமரன்காண் ஆதி யான்காண்
அடல்மழுவாள் தானொன்று பியன்மேல் ஏந்து
கையன்காண் கடற்பூதப் படையி னான்காண்
கண்ணெரியால் ஐங்கணையோன் உடல்காய்ந்
தான்காண்
வெய்யன்காண் தண்புனல்சூழ் செஞ்சடை யான்காண்
வெண்ணீற்றான் காண்விசயற் கருள்செய் தான்காண்
செய்யன்காண் கரியன்காண் வெளியோன் தான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே.''

அவர் பாடியருளிய ஒரு போற்றித் திருத்தாண்டகம் வருமாறு:

'' கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுதம் ஆனாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.''

இந்தத் தலத்தைப் பற்றித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், குறிஞ்சிப் பண்ணிலும், வியாழக் குறிஞ்சிப் பண்ணிலும், காந்தாரப் பண்ணிலும், நட்டராகப் பண்ணிலும், கௌசிகப் பண்ணிலும், திருப்பதிகங்களைப் பாடியருளியிருக்கிறார். அவற்றுள் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த திருவிருக்குக்குறள் ஒன்று வருமாறு:

'' சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ, முத்திஆகுமே.''

வியாழக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

"பாடலன் நான்மறையன் படிபட்டகோ லத்தின் திங்கள்
சூடலன் மூவிலைய சூலம் வலனேந்திக்
கூடலர் மூவெயிலும் எரியுண்ணக் கூரெரிகொண்டெல்லி
ஆடலன் ஆதிரையன் ஆரூர் அமர்ந்தானே."

காந்தாரப் பண்ணில் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

"பவனமாய்ச் சோடையாய் நாவெழாப்
பஞ்சுதோயக் கட்டவுண்டு
சிவனதாட் சிந்தியாப் பேதைமார் போலநீ
வெள்கி னாயே
கவனமாய்ப் பாய்வ தோர் ஏறுகந்
தேறிய காலகண்டன்
அவனதா ரூர்தொழு துய்யலாம்
மையல் கொண்டஞ்சல் நெஞ்சே."

நட்டராகப் பண்ணில் அமைந்த ஒரு திருவிராகம் வருமாறு:

"பருக்கை யானை மத்தகத்
தரிக்குலத் துகிர்ப்புக
நெருக்கி வாய நித்திலம்
நிரக்குநீள் பொருப்பனூர்
கருக்கொள் சோலை சூழநீடு
மாடமாளி கைக்கொடி
அருக்கன்மண்ட லத்தணாவும்
அந்தண் ஆரூர் என்பதே."

கௌசிகப் பண்ணில் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

"அந்த மாய்உல காதியும் ஆயினான்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தை யேபுகுந் தான்திரு வாரூர்எம்
எந்தை தான்எனை என்று கொளுங்கொலோ."

சுந்தர மூர்த்தி நாயனார் இந்தத் தலத்தைப் பற்றி இந்தளப் பண்ணிலும், கொல்லிப் பண்ணிலும்,

கொல்லிக் கௌவாணப் பண்ணிலும், தக்கேசிப் பண்ணிலும், காந்தாரப் பண்ணிலும், புற நீர்மைப் பண்ணிலும், செந்துருத்திப் பண்ணிலும் திருப்பதிகங்களைப் பாடியருளியிருக்கிறார். அவற்றுள் இந்தளப் பண்ணில் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

"இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு
பறைகிழித் தனைய போர்வை
பற்றியான் நோக்கி னேற்குத்
திறைகொணர்ந் தீண்டித் தேவர்
செம்பொனும் மணியும் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே."

கொல்லிப் பண்ணில் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

"குருகுபா யக்கொழும் கரும்புகள் நெரிந்தசா
றருகுபா யும்வயல் அந்தணா ரூரரைப்
பருகுமா றும்பணிந் தேத்துமா றுந்நினைந்
துருகுமா றும்இவை உணர்த்தவல் லீர்களே."

கொல்லிக் கௌவாணப் பண்ணில் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

"பத்திமையும் அடிமையையும்
கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோ யதுவிதனைப்
பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினைமா மணிதன்னை
வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாட் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே."

தக்கேசிப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

"பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்

பின்னை என்பிழையைப் பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலும் ஆமே.''

காந்தாரப் பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

'' கரையும் கடலும் மலையும்
காலையும் மாலையும் எல்லாம்
உரையில்விரவி வருவான்
ஒருவன் உருத்திர லோகன்
வரையின் மடமகள் கேள்வன்
வானவர் தானவர்க் கெல்லாம்
அரையன் இருப்பதும் ஆரூர்அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர்.''

புற நீர்மைப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

'' அந்தியும் நண்பகலும் அஞ்சு பதம்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே.''

செந்துருத்திப் பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

'' பேயோ டேனும் பிறிவொன் றின்னா
தென்பர் பிறரெல்லாம்
நாய்தான் வேண்டிற் களிதான் அன்றோ
கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும்
உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே.''

'' தேனமர் சோலைத் திருவா ரூரின்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்.''

"ஆரூர் அமர்ந்த அரசே போற்றி."
"விளங்கும் திருவாரூர் உறைவாய்."
"ஆரூர்எம் பிச்சைத் தேவா."
"திருவாரூர் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ."
"ஓங்கெயில் சூழ் திருவாரூர் உடையானே."

இந்தத் தலத்தைப் பற்றிப் பூந்துருத்தி நம்பி காடநம்பி பாடியருளிய திருவிசைப்பா ஒன்று வருமாறு:

"கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து
கழுத்தில் ஓர் தனிவடம்கட்டி
முக்கண்நா யகராய் பவனிபோந் திங்ஙன்
முரிவதோர் முரிவுமை யளவும்
தக்கசீர்க் கங்கை யாவும் அன்றென்னோ
தம்மொருப் பாடுல கதன்மேல்
மிக்கசீர் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே."

"காளை வடிவொழிந்து கையறவோ டையுறவாய்
நாளும் அணுகி நலியாமுன்-பாளை
அவிழ்கமுகம் பூஞ்சோலை ஆரூரற் காளாய்க்
கவிழ்கமுகம் கூம்புக என்கை."

என்று ஐயடிகள் காடவர் கோன் நாயனாரும்,

"அந்தண ராம்இவர் ஆரூர்
உறைவ தென்றேன்."
"அரிவை பாகத் தண்ணல் ஆரூர்
எல்லையில் இரும்பலி சொரியும்
கல்லோ சென்ற காதலர் மனமே."
"அந்தண் ஆரூர் சிந்தித்து மகிழா
மயரிய மாக்களைப் போலத்
துயருழந் தழியக் கண்துயிலாவே."
"நஞ்சாரும் மிடற்றண்ணல் ஆரூர்
அனைய அணங்கினுக்கே.",

" திரிபுரம் எரிய ஒருகணை தெரிந்த
அரிவை பாகத் தண்ணல் ஆரூர்
வளமலி கமல வான்முகத்
திளமயிற் சாயல் ஏந்திழை தானே."
" அம்மான் அலைாடி ஆரூர்க்கோன் அன்றுரித்த
கைம்மானேர் அன்னகளிறு."
" அருளுடை ஆரூர் அமர்ந்துறை அமுதன்."
" கூற்றெனப் பெயரிய கொடுந்தொழில் ஒருவன்
ஆற்றல் செற்ற அண்ணல் ஆரூர்ச்
செய்வளர் கமலச் சீறடிக்
கொவ்வைச் செவ்வாய்க் குயில்மொழிக் கொடியே."
" நண்ணார்ஊர் மூன்றெரித்த நாகம்சேர் திண்சிலையான்
தண்ஆரூர் சூழ்ந்த தடம்."
" அலைபுனல் ஆரூர் அமர்ந்துறை அமுதன்."
" குமரன் தாதை குளிர்சடை இறைவன்
அறைகழல் எந்தை ஆரூர்."
" சுடுபொடி அணிந்த துளங்கொளி அகலத்
தண்ணல் ஆரூர்."
" அணிதிகழ் அகலத் தண்ணல் ஆரூர்."
" திருமட மலைமகட் கொருகூறு கொடுத்துத் தன்
அன்பின் அமைத்தவன் ஆரூர்."
" கண்ணாளன் ஆரூர்க் கடலார் மடப்பாவை."
என்று சேரமான் பெருமாள் நாயனாரும்,
" ... ஆரூர்க்கோன்
ஆனாய அமுதமே ஆனாய்."
" அரனே அணியாரூர் மூலட்டத்தானே."
என்று பரண தேவ நாயனாரும்,
" வேத மறிக்கரத் தாரூர் அரற்கு."
" நந்திக்கு நம்பெரு மாற்குநல்
லாரூரில் நாயகற்கு."
" அரசினை ஆரூர் அமரர்பிரானை."

"செல்வம்திகழ் திருவாரூர்
மதில்வட்டத் துட்பிறந்தார்
செல்வன் திருக்கணத்துள்ளவரே."
"பொழில்தரு திருவாரூரில்
வாசியும் பொன்னும் கொண்டோன்."

என்று நம்பியாண்டார் நம்பியும்,

"... கணநாதர் வாழும் கருத்தர் கனிச்
செங்கண்வரால் வளர்வாவித் திகழும் ஆரூர்ச்
சிறந்துளார் எமையாளப் பிறந்துளாரே."

என்று உமாபதி சிவமும்,

"பூதம் யாவையின் உள்ளலர் போதென
வேத மூலம் வெளிப்படும் மேதினக்
காதல் மங்கை இதய கமலமாம்
மாதொர் பாகனார் ஆரூர் மலர்ந்ததால்."

"மற்றி தற்குப் பதிகம்வன் றொண்டர்தாம்
புற்றி டத்தெம் புராணர் அருளினாற்
சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகையெனப்
பெற்ற நற்பதி கம்தொழப் பெற்றதால்."

"சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது
வன்னி ஆறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர்."

"படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிபார்
இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன் றொண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தா மரையடி நாறுமால்."

"உள்ளம் ஆருரு காதலி னூர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்பைங்

கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள். ''
" நிலம கட்கழ கார்திரு நீள்நுதற்
றிலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் டாமரை போல்மலர்ந்
தவசில் சீர்த்திரு வாரூர் மலர்ந்ததால். ''
" தென்னாவ லூராளி திருவாரூர் சென்றணைந்தார்.''
" தேராரும் நெடுவீதித் திருவாரூர். ''
" புற்றிடம் கொண்ட புராத னனைப்
பூங்கோயில் மேய பிரானை யார்க்கும்
பற்றிட மாய பரம் பொருளைப்
பார்ப்பதி பாகனைப் பங்க யத்தாள்
அற்சனை செய்ய அருள் புரிந்த
அண்ணலை மண்மிசை வீழ்ந்தி றைஞ்சி
நற்றமிழ் நாவலர் கோன் உடம்பால்
நன்மையின் தன்மையை மெய்ம்மை பெற்றார்.''
" அணியாரூர் மணிப்புற்றின்
மைவாழும் திருமிடற்று வானவர். ''
" உம்பர்களும்பணியும் செல்வத் திருவாரூர்
வாழ்பெருமா னடிகள். ''
" நீடுபுகழ்த் திருவாரூர் நிலவுமணிப்
புற்றிடம்கொள் நித்தர். ''
" அணியாரூர் மணிப்புற்றில்
அமர்ந்து வாழும்
நீண்டசுடர் மாமணி. ''
" சித்தம் நிலாவு தென்திருவாரூர் நகராளும்
மைத்தழை கண்டர். ''
" கொய்ம்மலர் வாவித் தென் திரு வாரூர். ''
" மாமதில் ஆரூர் மன்னரை. ''
" ...வாக்கின் பெருவிறல் மன்னனார்தாம்
புற்றிடம் கொண்டாரை வந்தி றைஞ்சிப்
பொன்மதில் ஆரூர் புகழ்ந்து போற்றி. ''

" சிவன தாரூர் தொழாய் நீமற வாது. "
" ஆழியான் அறியொணா அண்ணல் ஆரூர். "
" நம்பர் மகிழ் திருவாரூர். "
" நம்பர் ஆரூர்அணைந்தார் நாவலூர் நாவலனார். "
" அணியாரூர் மறுகதனில் ஆளியங்கப்
பறையறைந்த
பணியாலே மனைநிறைத்து. "
" நம்பியாரூரர்திரு வாரூரில் நயந்துறைநாள். "
" செல்வத் திருவாரூர்
காவல் கொண்டு தனியாளும்கடவுட் பெருமான். "
" மன்றினிடையே நடம்புரிவார்
மருவு பெருமைத்திரு வாரூர். "
" செல்வத் திருவாரூர்ப்
புறம்பு நணிய கோயில்களும் பணிந்து. "
" செறிபுன் சடையார் திருவாரூர்த்
திருப்பங் குனியுத் தரத் திருநாள். "
" தெய்வப் பெருமான் திருவாரூர்
முந்தி வணங்கி. "
" செஞ்சாலி வயன்மருதத் திருவாரூர் சென்றடைந்தார். "
" செல்வம்மலி திருவாரூர்த் தேவரொடு முனிவர்களும்
மல்குதிருக் கோபுரத்து வந்திறைஞ்சி. "
" அணியாரூர் மணிப்புற்றில் அமர்ந்தருளும் பரம்
பொருளை. "

" திருவாரூர் அணிவீதி அழகரவர்
மங்கலநாள் வசந்தம். "
" மின்னொளிர் செஞ்சடையானை
வேதமுத லானானை
மன்னுபுகழ்த் திருவாரூர்
மகிழ்ந்தானை. "
" பின்ஒருநாள் திருவாரூர் தனைப்பெருக நினைந்தருளி. "

" கண்ணிறைந்த திருவாரூர். "

" வன்றொண்டர் திருவாரூர்
மயங்குமா லையிற் புகுந்து. "

" திருவாரூர் வீற்றிருந்த பெருமானைத்
திருமூலட் டானச்சேர் பிஞ்ஞகனை. "

" அழகரவர் மகிழும் செல்வத் திருவாரூர். "

" சென்னியில் நீடுங்கங்கை ததும்பத் திருவாரூர்
மன்னவனார். "

" மலர்புகழ்த் திருவாரூரின் மகிழ்ந்துடன் ஏயர்
குலமுதல் தலைவனாரும். "

" பேணும் செல்வத் திருவாரூர்ப்
பெருமானடிகள். "

" அண்டர் போற்றும் திருவாரூர். "

" செல்வத் திருவா ரூர்மேவும்
செம்பொற் புற்றில் இனிதமர்ந்த
வில்வெற் புடையார் கழல் வணங்கி
வீதி விடங்கப் பெருமானை
மல்லற் பவனிசே வித்து. "

" திருவாரூர் ஒருவர் மலர்த்தாள்
புக்கிறைஞ்சி. "

" பரிசனங்கள் சூழத் திருவாரூர் இறைஞ்சி. "

" திருவாரூர் நகராகும் தேவர்பிரான். "

" ஆவியை ஆரூரானை மறக்கலும் ஆமே. "

" திருவாரூர் தனைநினைந்து
சென்று தொழுவேன். "

" தேரூரும் நெடுவீதித் திருவாரூர். "

" என்னுயிருக் கின்னுயிராம்
எழில்ஆரூர்ப் பெருமானை. ",

" ... மென்கரும்பும்
செயக்கொண்ட காவியும்சூழ்
திருவாரூர் சென்றணைந்தார். "

"அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்றபிரான் மருவாரும் குழல் உமையாள் மணவாளன் மகிழ்ந்தருளும் திருவாரூர்."

"திருக்கயிலை வீற்றிருந்த
சிவபெருமான் திருக்கணத்தார்
பெருக்கியசீர்த் திருவாரூர்ப்
பிறந்தார்கள்."

"ஈரமதுவார் மலர்ச்சோலை
எழிலாரூர்."

என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து உள்ள 215-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'திருநாவுக்கரசு நாயனார் திருநல்லூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நம்பராகிய கலியாண சுந்தரேசுவரர் வழங்கிய திருவருளைப் பெற்றுக் கொண்டு, மேலே எழுந்தருளி பழையாறை முதலிய பற்கள் அமைந்த பிரம கபாலமாகிய வெள்ளைத் தலையைத் தம்முடைய திருக்கரத்தில் ஏந்தியவராகிய சிவபெருமானார் எழுந்தருளியிருக்கும் தலங்கள் பலவற்றிற்கும் எழுந்தருளி அந்தத் தலங்கள் பலவற்றிலும் திருக்கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான்களைவணங்கிவிட்டுஇனியசுவையைப் பெற்ற சொற்கள் அடங்கிய சொற்சுவை பொருட் சுவை ஆகிய வளப்பத்தைப் பெற்ற செந்தமிழ் மொழியில் அமைந்த திருப்பதிகத்தைப் பாடியருளி திருவலஞ்சுழிக்கும் எழுந்தருளிக் கற்பகநாதேசுவரரை வணங்கித் துதித்து இரவு நேரத்தில் வானத்தில் தவழும் வெண்மையாகிய பிறைச் சந்திரனைத் தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தில் அணிந்தவராகிய கும்பேசுவரர் எழுந்தருளியிருக்கும் அழகிய குடமூக்கை அடைந்து அந்தக் கும்பேசுவரரை வணங்கி.' பாடல் வருமாறு:

"நல்லூரில் நம்பர் அருள்
பெற்றுப்போய்ப் பழையாறை

பல்லூர்வெண் டலைக்கரத்தார்
பயிலும்இடம் பலபணிந்து
சொல்லூர்வண் டமிழ்பாடி
வலஞ்சுழியைத் தொழுதேத்தி
அல்லூர்வெண் பிறையணிந்தார்
திருக்குடமூக் கணைந்திறைஞ்சி."

இந்தப் பாடல் குளகம். நல்லூரில்-திருநாவுக்கரசு நாயனார் திருநல்லூரில். நம்பர்-தம்முடைய அடியவர்களுக்குப் பல வகையாகிய நம்பிக்கைகளை உண்டாக்குபவராகிய கலியாண சுந்தரேசுவரர். அந்த நம்பிக்கைகள் இன்ன என்பதை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. அருள்-வழங்கிய திருவருளை. பெற்று-பெற்றுக் கொண்டு. ப்:சந்தி. போய்-மேலே எழுந்தருளி. ப்:சந்தி. பழையாறை-பழையாறை முதலிய. பல்-பற்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஊர்-அமைந்த. வெண்டலை-பிரம கபாலமாகிய வெள்ளைத் தலையை. க்:சந்தி. கரத்தார்-தம்முடைய திருக்கரத்தில் ஏந்தியவராகிய சிவபெருமானார். பயிலும்-எழுந்தருளியிருக்கும். இடம்-தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பல-பலவற்றிற்கும் எழுந்தருளி. பணிந்து-அந்தத் தலங்கள் பலவற்றிலும் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை அந்த நாயனார் வணங்கி விட்டு. சொல்-இனிய சுவையைப்பெற்ற சொற்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஊர்-அடங்கிய. வண்-சொற்சுவை, பொருட்சுவை ஆகிய வளப்பத்தைப் பெற்ற. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த திருப்பதிகத்தை; ஆகுபெயர். பாடி-பாடியருளி. வலஞ்சுழியை-திருவலஞ்சுழிக்கும் எழுந்தருளி; உருபு மயக்கம். த்:சந்தி. தொழுது-கற்பக நாதேசுவரரை வணங்கி. ஏத்தி-துதித்து விட்டு. அல்-இரவு நேரத்தில். ஊர்-வானத்தில் தவழும். வெண்-வெண்மை நிறத்தைப் பெற்ற. பிறை-பிறைச் சந்திரனை. அணிந்தார்-தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தில் சூடியவர்

ராகிய கும்பேசுவரர். திருக்குடமூக்கு-கும்பேசுவரர் எழுந்தருளியிருக்கும் அழகிய குடமூக்காகிய கும்ப கோணத்தை. அணைந்து-அடைந்து. இறைஞ்சி-கும்பேசுவ ரரை வணங்கி விட்டு.

திருப்பழையாறை: இது பழையாறை வடதளி என்று வழங்கும். இங்கே கோயில் கொண்டிருப்பவர் சோமேசுவரர். அம்பிகை சோமகலா நாயகி. தீர்த்தம் சோம தீர்த்தம். இது பழையாறை என்றும், வடதளி என்றும் இரண்டு சிவத்தலங்களாக உள்ளன. பட்டீச்சுரத்திலிருந்து கிழக்குத் திசையில் கால் மைல் தூரத்தில் வடதளி இருக்கிறது. அங்கிருந்து 3/8 மைல் தூரத்தில் பம்பைப் படை என்னும் ஊர் உள்ளது. அங்கிருந்து தெற்குத் திசையில் சென்று திருமலைராயன் ஆற்றைக் கடந்து கால் மைல் சென்றால் பழையாறையை அடையலாம். இந்த இரண்டு சிவத்தலங்களையும் ஒரே திருப்பதிகத்தில் சேர்த்துத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியிருக்கிறார். அந்தப் பதிகத்தில் வரும் ஒரு திருக்குறுந் தொகை வருமாறு:

"தலையெ லாம்பறிக் கும்சமண் கையர்உள்
நிலையி னான்ம றைத்தால் மறைக்கொண்ணுமே
அலையி னார்பொழில் ஆறை வடதளி
நிலையி னான்அடி யேநினைந் துய்ம்மினே."

வடதளியில் எழுந்தருளியிருப்பவருடைய திருநாமம் தருமபுரீசுவரர். அம்பிகை விமல நாயகி. இந்தச் சிவத்தலம் காமதேனுவினுடைய புதல்வியாகிய விமலி என்பவள் வழிபட்ட தலம். ஆலயம் ஒரு மேட்டின் மேல் இருக்கிறது. இங்கே தருமபுரீசுவரர், விமல நாயகி என்னும் இருவரையல்லாமல் வேறு யாருடைய விக்கிரகமும் இல்லை. இந்தத் திருக்கோயிலுக்கு அருகில் துறையூர் சிவப்பிரகாச சுவாமிகளினுடைய சமாதிக் கோயில் உள்ளது. பழையாறை சந்திரன் வழிபட்ட தலம். அமர்நீதி நாயனார் வாழ்ந்திருந்த தலமும் இதுவே. காமதேனுவினுடைய புதல்விகளுள் பட்டி

என்பவள் வழிபட்ட தலம் பட்டீச்சுரம். விமலி வழிபட்ட தலம் பழையாறை வடதளி. பளிவழிபட்டது திருமேற்றளி. இந்தத் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவர்கள் கைலாச நாதர், சபள நாயகி என்பவர்கள். நந்தினி வழிபட்ட தலம் முழையூர், இங்கே கோயில் கொண்டிருப்பவர்கள் பரசு நாதேசுவரர், ஞானாம்பிகை என்பவர்கள். இந்தத்தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய மற்றொரு திருக்குறுந்தொகை வருமாறு:

"நீதி யைக்கெட நின்றம ணேஉணும்
சாதி யைக்கெடு மாசெய்த சங்கரன்
ஆதி யைப்பழை யாறை வடதளிச்
சோதி யைத்தொழு வார்துயர் தீருமே."

திருவலஞ்சுழி: இது சோழ நாட்டில் காவிரி நதியின் தென் கரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் கற்பகநாதேசுவரர், கபர்த்தீசுவரர் என்பவை. அம்பிகை பெரிய நாயகி. இது கும்பகோணத்திற்கு மேற்குத் திசையில் நான்கு மைல் தூரத்தில் உள்ளது. இந்திரன் வழிபட்ட தலம் இது. இந்தத் தலத்துக்கு வடக்குத் திசையில் அரிசிலாறு என்னும் ஆறு ஓடுகிறது. இங்கே எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானார் வெள்ளை விநாயகர். தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து திருமால் பள்ளி கொண்டிருக்கும் பாற் கடலைக் கடைந்த போது இந்த விநாயகரை வழிபட்டமையால் அமுதம் திரண்டு எழுந்ததாகவும், இந்திரன் இந்த விநாயகரை வழிபட்டான். அவன் திருவலஞ்சுழிக்கு வந்த காலத்தில் இந்த விநாயகர் அந்தத் தலத்தில் நின்று விட்டதாகவும் ஆன்றோர் கூறுவர். பிரம்மோற்சவம் முதலிய திருவிழாக்கள் இந்த விநாயகருக்கே நடைபெறுகின்றன. இந்த விநாயகரைத் தீண்டக் கூடாது என்பர். காவிரியாறு ஒரு பிலத்தில் சென்று விட்டதாகவும், அதை

வெளிப்படுத்துவதற்காக ஏரண்ட முனிவர் என்பவர் தம்மைப் பலியாகக் கொடுத்ததாகவும், பிறகு காவிரியாறு மேலேவந்து வலமாகச் சுழித்துக் கொண்டு ஓடியதாகவும், அந்தக் காரணத்தினால் இந்தத் தலத்திற்குத் திருவலஞ்சுழி என்னும் பெயர் வந்ததாகவும் கூறுவர். ஏரண்ட முனிவருடைய திருவுருவமும் இந்த ஆலயத்தில் இருக்கிறது. அவருக்குப்பின் பக்கத்தில் வலஞ்சுழிநாதர், தட்சிணாவர்த்தர் என்னும் திருநாமங்களைப் பெற்ற சிவலிங்கப் பெருமானார் வீற்றிருக்கிறார். இந்தத் தலத்தைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

"பூச நீர்பொழி யும்புனற் பொன்னியிற் பனிமலர்
வாச நீர்குடை வாரிடர் தீர்க்கும் வலஞ்சுழித்
தேச நீர்திரு நீர்சிறு மான்மறி யீர்சொலீர்
ஏச வெண்டலை யிற்பலி கொள்வதி லாமையே."

திருவலஞ்சுழியைப் பற்றி இந்தளப் பண்ணிலும், நட்டராகப் பண்ணிலும், பழம் பஞ்சுரப் பண்ணிலும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகங்களைப் பாடியருளியிருக்கிறார். அவற்றுள் இந்தளப் பண் அமைந்த வினாவுரைப் பாசுரம் ஒன்று வருமாறு:

"விண்டெ லாமல ரவ்விரை
நாறுதண் தேன்விம்மி
வண்டெ லாம்நசை யால்இசை
பாடும் வலஞ்சுழித்
தொண்டெ லாம்பர வும்சுடர்
போலொளி யீர்சொலீர்
பண்டெ லாம்பலி தேர்ந்தொலி
பாடல் பயின்றதே."

நட்டராகப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்

மன்னு காவிரி வலஞ்சுழி வாணனை
வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே. ''

பழம்பஞ்சுரப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

'' பள்ளம தாய படர்சடைமேற்
பயிலும் திரைக்கங்கை
வெள்ளம தார விரும்பி நின்ற
விகிர்தன் விடையேறும்
வள்ளல் வலஞ்சுழி வாண னென்று
மருவி நினைந்தேத்தி
உள்ளம் உருக உணருமின்கள்
உறுநோய் அடையாவே. ''

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் திருக்குறுந் தொகை, திருத்தாண்டகம் என்பவை அடங்கிய திருப்பதிகங்களைப் பாடியருளியுள்ளார். அவற்றுள் ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

'' ஓத மார்கட லின்விடம் உண்டவன்
பூத நாயகன் பொற்கயி லைக்கிறை
மாதொர் பாகன் வலஞ்சுழி ஈசனைப்
பாதம் ஏத்தப் பறையும்நம் பாவமே. ''

இந்தத் தலத்தைப்பற்றிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

'' அலையார் புனற்கங்கை நங்கை காண
அம்பலத்தில் அருநட்டம் ஆடி வேடம்
தொலையாத வென்றியார் நின்றி யூரும்
நெடுங்களமும் மேவி விடையை மேல்கொண்டு
இலையார் படைகையில் ஏந்தி எங்கும்
இமையவரும் உமையவரும் இறைஞ்சி ஏத்த
மலையார் திரளருவிப் பொன்னி சூழ்ந்த
வலஞ்சுழியே புக்கிடமா மருவி னாரே. ''

அந்த நாயனார் திருவலஞ்சுழியையும், திருக் கொட்டை யூர்க் கோடிச் சரத்தையும் சேர்த்துப் பாடியருளிய ஒரு திருத் தாண்டகம் வருமாறு:

" கருமணிபோற் கண்டத் தழகன் கண்டாய்
கல்லால் நிழற்கீழ் இருந்தான் கண்டாய்
பருமணிமா நாகம் பூண்டான் கண்டாய்
பவளக்குன் றன்ன பரமன் கண்டாய்
வருமணிநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் வரதன் கண்டாய்
குருமணிபோல் அழகமரும் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையும் கோமான்தானே. "

திருக்குடமூக்கு: இதுசோழநாட்டில்காவிரியாற்றின்தென் கரையில் உள்ள கும்பகோணம். இங்கே கோயில் கொண்டிருப் பவர் கும்பேசுவரர். அம்பிகை மங்கள நாயகி. தீர்த்தம் மகாமகத் திருக்குளம். இது ஹேம முனிவர் முதலியவர்கள் வழிபட்ட தலம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாசி மாதத்தில் வரும் மகநட்சத்திரத்தில் காசியிலிருந்து கங்கையாறு வரும் ஐதிஹ்யம் ஒன்று உண்டு. இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

" காமியம் செய்து காலம் கழியாதே
ஓமியம் செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமி யோடு சரச்சு வதியவள்
கோமி யும்உறை யும்குட மூக்கிலே. "

இந்தத் தலத்தைப் பற்றிப் பஞ்சமப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" மலைமலி மய்கை பாகம்
மகிழ்ந் தான்எழில் வையம் உய்யச்
சிலைமலி வெங்கணையாற் சிதைத்
தான்புரம் மூன்றினையும்

குலைமலி தண்பல வின்பழம்வீழ்
குடமூக் கிடமா
இலைமலி சூலம் ஏந்தி
இருந்தானவன் எம்மிறையே.''

பிறகு வரும் 216-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'திருநாலூர், தெற்குத் திசையில் விளங்கும் திருச்சேறை, குடவாயில், நறையூர்; அதைச் சேர்ந்துள்ள இனிய சுவையைப் பெற்ற பாலைப் போன்ற வார்த்தைகளைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவளாகிய பெரிய அம்பிகையைத் தம்முடைய வாமபாகத்தில் எழுந்தருளச் செய்தவராகிய பலாசவனேசுவரர், ஞானவல்லி சமேதராகிய செந்நெறியப்பர், பெரிய நாயகியம்மை சமேதராகிய கோணேசுவரர், அழகாம்பிகை சமேதராகிய சித்தநாதேசுவரர், மங்கள நாயகி சமேதராகிய வாஞ்சிலிங்கேசுவரர் ஆகிய சிவபெருமான்களுடைய வெற்றிக் கழல்களைப் பூண்ட திருவடிகளைப் புகழ்ந்து வணங்கிவிட்டு, தமக்கு மேலே தம்முடைய வாகனமாக இடபத்தையும், துவசமாக அந்த இடபத்தையும் கொண்ட சிவபெருமானார் எழுந்தருளியிருக்கும் தலங்கள் பலவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தத் தலங்களில் திருக்கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான்களைப் பாடியருளிச் சேல்மீன்கள் தவழ்ந்து குதிக்கும் குளிர்ச்சியைப் பெற்ற வயல்கள் சுற்றியிருக்கும் தெற்குத் திசையில் உள்ள திருவாஞ்சியத்தை அடைந்தார்.' பாடல் வருமாறு:

**'' நாலூர்தென் திருச்சேறை**
**குடவாயில் நறையூர்சேர்**
**பாலூரும் இன்மொழியாள்**
**பாகனார் கழல்பரவி**
**மேலூர்தி விடைக்கொடியார்**
**மேவும்இடம் பலபாடிச்**

**சேலூர்தண் பணைசூழ்ந்த**
**தென்திருவாஞ் சியம்அணைந்தார்."**

*நாலூர்*-திருநாலூருக்கும். *தென்*-தெற்குத் திசையில்இருக்கும். *திருச்சேறை*-திருச்சேறைக்கும். *குடவாயில்*-குடவாயிலுக்கும். *நறையூர்*-நறையூருக்கும். *சேர்*-அதைச் சேர்ந்துள்ள. *பால் ஊரும்*-பாலைப் போல இனிமை சேரும். *இன்*-இனிய சுவையைப் பெற்ற. *மொழியாள்*-வார்த்தைகளைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவராகிய பெரிய அம்பிகையை. மொழி: ஒருமை பன்மை மயக்கம். *பாகனார்*-தம்முடைய வாமபாகத்தில் எழுந்தருளச் செய்திருப்பவராகிய பலாசவனேசுவரருடைய. *கழல்*-வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளை; ஆகு பெயர். *பரவி*-வாழ்த்தி வணங்கி. *மேல்*-தமக்கு மேலே. *ஊர்தி*-வாகனமாக. *விடை*-இடபத்தையும். க்:சந்தி. *கொடியார்*-துவசமாக அந்த இடபத்தையும் கொண்ட சிவபெருமானார். *மேவும்*-விரும்பி எழுந்தருளியிருக்கும். *இடம்*-தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். *பல*-பலவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி. *பாடி*-அந்தத் தலங்களில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களைப் பாடியருளி. ச்:சந்தி. *சேல்*-சேல் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். *ஊர்*-தவழ்ந்து குதிக்கும். *தண்*-குளிர்ச்சியைப் பெற்ற. *பணை*-வயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். *சூழ்ந்த*-சுற்றியுள்ள. *தென்*-தெற்குத் திசையில் விளங்கும். *திருவாஞ்சியம்*-திருவாஞ்சியத்தை. *அணைந்தார்*-அந்த நாயனார் அடைந்தார்.

*திருநாலூர்:* இது சோழ நாட்டில் நாலூர் மயானம் என வழங்கும் சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் பலாசவனேசுவரர். அம்பிகை பெரிய அம்பிகை. இது திருக்குடவாசலுக்கு வடகிழக்குத் திசையில் மூன்று மைல் தூரத்தில் உள்ளது. ஆபஸ்தம்ப முனிவர் பூசித்த தலம் இது. திருநாலூர் மயானத்திற்குத் தென் மேற்குத் திசையில் ஒரு மைல்

தூரத்தில் திருநாலூர் என்னும் ஊர் உள்ளது. இங்கும் ஓர் ஆலயம் இருக்கிறது. இந்தத் தலத்தைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

" கோலத்தார் கொன்றையான்
 கொல்புலித்தோல் ஆடையான்
நீலத்தார் கண்டத்தான்
 நெற்றியோர் கண்ணினான்
ஞாலத்தார் சென்றேத்தும்
 நாலூர் மயானத்திற்
சூலத்தான் என்பார்பாற்
 சூழாவாம் தொல்வினையே."

திருச்சேறை: இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் செந்நெறியப்பர். அம்பிகை ஞானவல்லி அம்மை. இந்தத் தலம் இந்தக் காலத்தில் உடையார் கோயில் என வழங்கும். இது கும்பகோணத்துக்குத் தென் கிழக்குத் திசையில் 9 மைல் தூரத்தில் உள்ளது. இது தௌமிய முனிவர் வழிபட்ட தலம். இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

" பெருந்திரு இமவான் பெற்ற
 பெண்கொடி பிரிந்த பின்னை
வருந்துவான் தவங்கள் செய்ய
 மாமணம் புணர்ந்து மன்னும்
அருந்திரு மேனி தன்பால்
 அங்கொரு பாகம் ஆகத்
திருந்திட வைத்தார் சேறைச்
 செந்நெறிச் செல்வ னாரே."

இந்தத் தலத்தைப் பற்றி அப்த நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

" பூரி யாவரும் புண்ணியம் பொய்கெடும்
கூரி தாய அறிவுகை கூடிடும்

சீரி யார்பயில் சேறையும் செந்நெறி
நாரி பாகன் நாமம் நவிலவே.''

இந்தத் தலத்தைப் பற்றிச் சாதாரிப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' முறியுறு நிறம்மல்கு முகிழ்முலை
மலைமகள் வெருவமுன்
வெறியுறு மதகரி அதன்பட
உரிசெய்த விறலினர்
நறியுறும் இதழியின் மலரொடு
நதிமதி நகுதலை
செறியுறு சடைமுடி அடிகள்தம்
வளநகர் சேறையே.''

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் திருநேரிசை, திருக்குறுந்தொகை என்பவை அடங்கிய திருப் பதிகங்களைப் பாடியருளியிருக்கிறார். அவற்றுள் ஒரு திரு நேரிசை வருமாறு:

'' ஒன்றிய தவத்து மன்னி
உடையனாய் உவப்பில் காலம்
நின்றுதம் கழல்கள் ஏத்தும்
நீள்சிலை விசய னுக்கு
வென்றிகொள் வேட னாகி
விரும்பிவெங் கான கத்துச்
சென்றருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே.''

திருக்குடவாயில்: இது சோழ நாட்டில் உள்ள சிவத் தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் கோணேசுவரர். அம்பிகை பெரியநாயகி அம்மை. இது கொரடாச்சேரி என்னும் ஊருக்கு வடக்குத் திசையில் எட்டு மைல் தூரத்தில் உள்ளது. திருணபிந்து என்னும் முனிவர் பூசிக்கக் கோணேசு வரர் ஒரு குடத்திலிருந்து வெளிப்பட்டு அந்த முனிவருக்கு

இருந்த குட்ட நோயைப் போக்கியருளிய தலம் இது. இதைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு :

" திகழும்திரு மாலொடு நான்முகனும்
புகழும்பெரு மான்அடி யார்புகல
மகிழும்பெரு மான்குட வாயில்மன்னி
நிகழும்பெரும் கோயில் நிலாயவனே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் இந்தளப் பண்ணிலும், காந்தாரப் பண்ணிலும் திருப்பதிகங்களைப் பாடியருளியிருக்கிறார். அவற்றுள் இந்தளப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு :

" கலையான் மறையான் கனலேந் துகையான்
மலையா ளவள்பா கமகிழ்ந்த பிரான்
கொலையார் சிலையான் குடவா யில்தனில்
நிலையார் பெருங்கோ யில்நிலா யவனே."

காந்தாரப் பண்ணில் அந்த நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

" கலைவாழும் அங்கையீர்
கொங்கை யாரும் கருங்கூந்தல்
அலைவாழும் செஞ்சடையில்
அரவும் பிறையும் அமர்வித்தீர்
குலைவாழை கமுகம்பொன்
பவளம் பழுக்கும் குடவாயில்
நிலைவாழும் கோயிலே கோயி
லாக நின்றீரே."

திருநறையூர் : இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் சித்தநாதேசுவரர். அம்பிகை அழகம்பிகை. இது கும்பகோணத்திற்குத் தென் கிழக்குத் திசையில் ஐந்தரை மைல் தூரத்தில் உள்ளது. இங்கே எழுந்தருளியிருக்கும் விநாயகர் ஆண்டபிள்ளையார். பிரம தீர்த்தம் திருக்கோயிலுக்கு வடக்கே உள்ளது. இங்கே உள்ள ஆலயத்துக்குச் சித் தீச்சுரம் என்பது பெயர். இதைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு :

" பிறைகொள் சடையர் புலியின் உரியர்
பேழ்வாய் நாகத்தர்
கறைகொள் கண்டர் கபாலம் ஏந்தும்
கையர் கங்காளர்
மறைகொள் கீதம் பாடச் சேடர்
மனையின் மகிழ்வெய்திச்
சிறைகொள் வண்டு தேனார் நறையூர்ச்
சித்தீச் சுரத்தாரே."

இந்தத் தலத்தைப் பற்றிக் குறிஞ்சிப் பண்ணில் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

" நீரும் மலரும் நிலவும் சடைமேல்
ஊரும் அரவம் உடையான் இடமாம்
வாரும் அருவி மணிபொன் கொழித்துச்
சேரும் நறையூர்ச் சித்தீச் சரமே. "

திருவாஞ்சியம் : இது சோழ நாட்டில் உள்ள சிவத் தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் வாஞ்சி லிங்கேசுவரர், வாஞ்சிநாதர் என்பவை. அம்பிகையின் திருநாமங்கள் மங்கள நாயகி, வாழவந்த நாயகி என்பவை. தல விருட்சம் சந்தன மரம். தீர்த்தம் குப்த கங்கை. இது திருவாரூருக்கு வடமேற்குத் திசையில் 11 மைல் தூரத்தில் உள்ளது. இந்தத் தலம் புத்தாறு என்னும் ஆற்றிற்கு வடகரையில் உள்ளது. இது திருமால் வாஞ்சி லிங்கேசுவரரைப் பூசித்துத் தம்மைவிட்டு பிரிந்து போயிருந்த திருமகளை மீண்டும் அடையப் பெற்ற தலம். திருவாஞ்சியம்-திருவைத் திருமால் வாஞ்சித்த இடம். வாஞ்சித்த-விரும்பிய. சந்தனமரம் ஆலயத்தின் பிராகாரத்தில் இருக்கிறது. குப்தகங்கை என்னும் தீர்த்தம் ஆலயத்துக்கு வடக்குத் திசையில் இருக்கிறது. கார்த்திகை மாதம் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்தத் தீர்த்தத்தில் நீராடுவது சிறப்பு என்பர். இந்தத் தலத்தில் இறப்பவர்களுக்கு யமனுடைய வாதனை இல்லை என்பர். திருக்கோயிலில்

யமனுக்குத் தனியாக ஒரு சந்நிதி உள்ளது. காசிக்கு நிகரானக் கூறப்படும் தென்னாட்டுத் தலங்கள் ஆறுக்குள் இது ஒன்று. இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு :

" அங்கம் ஆறும் அருமறை நான்குடன்
தங்கு வேள்வியர் தாம்பயி லுந்நகர்
செங்கண் மாலிட மார்திரு வாஞ்சியம்
தங்கு வார்நம் அமரர்க் கமரரே. "

இந்தத் தலத்தைப் பற்றி இந்தளப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

" வன்னி கொன்றை மதமத்தம்
எருக்கொடு கூவிளம்
பொன்னி யன்றசடை யிற்பொலி
வித்த புராணனார்
தென்ன என்றுவரி வண்டிசை
செய்திரு வாஞ்சியம்
என்னை ஆருடை யானிடம்
ஆக உகந்ததே. "

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு :

" படையும் பூதமும் பாம்பும்புல் வாயதன்
உடையும் தாங்கிய உத்தம னார்க்கிடம்
புடைநி லாவிய பூம்பொழில் வாஞ்சியம்
அடைய வல்லவர்க் கல்லலொன் றில்லையே. "

இந்தத் தலத்தைப் பற்றிப் பியந்தைக் காந்தாரப் பண்ணில் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

" பொருவ னார்புரி நூலர்
புணர்முலை உமையவ ளோடு

மருவ னார்மரு வார்பால்
வருவதும் இல்லைநம் அடிகள்
திருவ னார்பணிந் தேத்தும்
திகழ்திரு வாஞ்சியத் துறையும்
ஒருவ னார்அடி யாரை
ஊழ்வினை நலியஒட் டாரே. ''

பிறகு உள்ள 217-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பெருகி வீசும் நறுமணம் கமழும் மலர்கள் மலர்ந்திருக்கும் பல வகையாகிய மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழிலைப் பெற்ற பெருவேளூருக்குத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளிப் பிரியா ஈசுவரரை வணங்கித் துதித்து விட்டு நறுமணம் நிறைந்திருக்கும் கொன்றை மலர் மாலையை அணிந்தருளும் முதல்வராகிய சிவபெருமானார் எழுந்தருளியிருக்கும் தலங்கள் பிறவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி அழகு நிரம்பியிருக்கும் திருவிளமருக்கு உடனே எழுந்தருளிப் பதஞ்சலி மனோகரேசுவரரை வணங்கிவிட்டு வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் பகைவர்களாகிய தாரகாட்சன், வித்யுன்மாலி, வாணன் என்னும் மூன்று அசுரர்களுடைய பறக்கும் கோட்டைகளாகிய மூன்று புரங்களை எரித்தவராகிய தியாகராஜப் பெருமானார் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவாரூருக்கு அந்த நாயனார் எழுந்தருளிச் சேர்ந்தார்.' பாடல் வருமாறு:

''பெருவாச மலர்ச்சோலைப்
பெருவேளூர் பணிந்தேத்தி
முருகாரும் மலர்க்கொன்றை
முதல்வனார் பதிபிறவும்
திருவாரும் விளமருடன்
சென்றிறைஞ்சி வாகீசர்
மருவார்ஊர் எரித்தவர்தம்
திருவாரூர் வந்தடைந்தார். ''

பெரு-பெருகி வீசும். வாச-நறுமணத்தைப் பெற்ற மலர்-மலர்கள் மலர்ந்திருக்கும் பல வகையாகிய மரங்கள் வளர்ந்து நிற்கும். மலர்: ஒருமை பன்மை மயக்கம். ச்: சந்தி. சோலை-பூம்பொழிலைப் பெற்ற. ப்:சந்தி. பெருவேளூர்-பெருவேளூருக்குத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி. பணிந்து-பிரியா ஈசுவரரை வணங்கி. ஏத்தி-துதித்துவிட்டு. முருகு-நறுமணம். ஆரும்-நிறைந்திருக்கும். மலர்க்கொன்றை-கொன்றைமலர் மாலையை அணிந்திருக்கும்; ஆகுபெயர். முதல்வனார்-எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய சிவபெருமானார். பதி-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பிறவும்-பிறவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி. திரு-அழகு; 'செல்வத்தைப் படைத்தவர்கள்' எனலும் ஆம்; திணை மயக்கம். ஆரும் நிரம்பியிருக்கும்; நிரம்பி வாழும். விளமருடன்-திருவிளமருக்கு உடனே. சென்று-எழுந்தருளி. இறைஞ்சி-பதஞ்சலி மனோகரேசுவரரை வணங்கிவிட்டு. வாகீசர்-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார். மருவார்-பகைவர்களாகிய தாரகாட்சன், வித்யுன்மாலி, வாணன் என்னும் மூன்று அசுரர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஊர்-பறக்கும் கோட்டைகளாகிய மூன்று புரங்களை; ஒருமை பன்மை மயக்கம். எரித்தவர் தம்-எரித்தருளியவராகிய தியாகராஜப் பெருமானார். தம்:அசைநிலை. திருவாரூர்-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவாரூருக்கு. வந்து-அந்த நாயனார் எழுந்தருளி. அடைந்தார்-சேர்ந்தார்.

திருப்பெருவேளூர்: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் பிரியா ஈசுவரர். அம்பிகை மின்னனையாள் அம்மை. இது இக்காலத்தில் காட்டூர் ஐயன்பேட்டை என வழங்கும். இது தலையாலங்காட்டிலிருந்து கிழக்குத் திசையில் மூன்று மைல் தூரத்தில்

உள்ளது. இது கௌதம முனிவர் முதலியவர்கள் வழிபட்ட தலம்.

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு :

" மறையணி நாவி னானை
மறப்பிலார் மனத்து ளானைக்
கறையணி கண்டன் தன்னைக்
கனலெரி ஆடி னானைப்
பிறையணி சடையி னானைப்
பெருவேளூர் பேணி னானை
நறையணி மலர்கள் தூவி
நாடொறும் வணங்கு வேனே."

இந்தத் தலத்தைப் பற்றிப் பஞ்சமப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" கருமானின் உரியுடையர்
கரிகாடர் இமவானார்
மருமானார் இவரென்றும்
மடவாளோ ருடனாவர்
பொருமான விடையூர்வ
துடையார்வெண் பொடிப்பூசும்
பெருமானார் பிஞ்ஞகனார்
பெருவேளூர் பிரியாரே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

" குறவிதோள் மணந்த செல்வக்
குமரவேள் தாதை என்றும்
நறவிள நறுமென் கூந்தல்
நங்கையோர் பாகத் தானைப்

பிறவியை மாற்று வானைப்
 பெருவேளூர் பேணி னானை
உறவினால் வல்ல னாகி
 உணருமா றுணர்த்து வேனே.''

திருவிளமர்: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் பதஞ்சலி மனோகரேசுவரர், வியாக்ர பாதேசுவரர் என்பவை. அம்பிகை யாழினும் மென்மொழி அம்மை. தீர்த்தம் அக்கினி தீர்த்தம். இது திருவாரூருக்குத் தென் மேற்குத் திசையில் இரண்டு மைல் தூரத்தில் ஓடம் போக்கி ஆற்றின் தென்கரையில் இருக்கிறது. இது பதஞ்சலி முனிவர் வழிபட்ட தலம். பதஞ்சலி முனிவர், வியாக்ர பாதமுனிவர் ஆகியவர்களுடைய விக்கிரகங்கள் இந்தத் திருக்கோயிலில் உள்ளன. இதைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

'' மத்தக மணிபெற மலர்வதோர்
 மதிபுரை நுதல்கரம்
ஒத்தக நகமணி மிளிர்வதோர்
 அரவினர் ஒளிகிளர்
அத்தக அடிதொழ அருள்பெறு
 கணமொடும் உமையவள்
வித்தகர் உறைவது விரிபொழில்
 வளநகர் விளமரே.''

திருவாரூர்: இந்தச் சிவத்தலத்தைப் பற்றிய செய்தி களை முன்பே ஓரிடத்தில் கூறியுள்ளோம்; ஆண்டுக் கண்டுணர்க.

பிறகு உள்ள 218-ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அவ்வாறு திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட் கொண்ட திருநாவுக்கரசு நாயனார் தங்களுடைய ஊருக்கு எழுந்தருள திருவாரூரில் வாழும் பக்தர்கள் நீளமாகிய சடா

பாரத்தைத் தம்முடைய திருமுடியிற் பெற்றவராகிய தியாக ராஜப் பெருமானாரிடத்தில் நிரம்பிய திருவருளைப் பெற்றுக் கொண்டு அடியேங்களை அடிமைகளாக உடையவராகிய அந்த நாயனார் பார்க்கத் தகுதியைப் பெற்ற திருமாளிகை களும், மாடங்களும் அழகு சிறந்து ஓங்கி நிற்க, எல்லா இடங்களிலும் நெடுந்தூரத்திற்கு ஒளியை வீசிக்கொண்டு விளங்கும் திருவீதிகள் தோற்றப் பொலிவோடு விளங்கச் செல்வம் மிகுதியாக உள்ள மங்கல காரியங்களை அந்த வீதி களில் உள்ள திருமாளிகைகளில் வாழும் மக்கள் புரிந் தார்கள்.' பாடல் வருமாறு:

"ஆண்டஅர செழுந்தருள
ஆரூரில் அன்பர்கள்தாம்
நீண்டசடை முடியார்பால்
நிறைந்தஅருள் பெற்றுடையார்
காண்டகுமா ளிகைமாடம்
கவின்சிறந்தோங் கிடஎங்கும்
சேண்டிகழ்வீ திகள்பொலியத்
திருமலிமங் கலம்செய்தார்."

ஆண்ட-அவ்வாறு திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட. அரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். எழுந்தருள-தங்களுடைய நகரத்திற்கு எழுந்தருள. ஆரூரில்-திருவாரூரில் வாழும். அன்பர்கள் தாம்-தியாகராஜப் பெருமானாருடைய பக்தர்கள். தாம்: அசைநிலை. நீண்ட-நீளமாக உள்ள. சடை-சடா பாரத்தை. முடியார்பால்-தம்முடைய திருமுடியிற் பெற்றவ ராகிய தியாகராஜப் பெருமானாரிடத்தில். நிறைந்த- நிரம்பிய. அருள்-திருவருளை. பெற்று-அந்த நாயனார் பெற்றுக் கொண்டு. உடையார்-அடியேங்களை அடிமை களாக உடையவராகிய அந்த நாயனார். 'அடியேங்கள்' என்றது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும்

சேர்த்துக் கூறியது. காண்தகு-பார்க்கத் தகுதியைப் பெற்ற. மாளிகை-திருமாளிகைகளும்; ஒருமை பன்மை மயக்கம். மாடம்-மாடங்களும்; ஒருமை பன்மை மயக்கம். கவின்-அழகினால். சிறந்து-சிறப்பை அடைந்து. ஓங்கிட-உயரமாக நிற்க. எங்கும்-எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். சேண்-நெடுந்தூரத் திற்கு. திகழ்-ஒளியை வீசிக்கொண்டு விளங்கும். வீதிகள்-திருவாரூரில் உள்ள திருவீதிகள். பொலிய-தோற்றப் பொலி வோடு விளங்க. த்:சந்தி. திரு-செல்வம்; 'செல்வத்தைப் படைத்தவர்கள்' எனலும் ஆம்; திணைமயக்கம். மலி-மிகுதியாக உள்ள. மங்கலப்-மங்கல காரியங்களை; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: திருமணம் புரிதல், மண மாகிய பெண்மணிகளுக்குப் பூச்சூட்டுதல், இளைஞர்களுக்கு உபநயனம் செய்வித்தல், ருதுசாந்தி முகூர்த்தத்தை நடத்து தல், கருவுற்ற மகளிர்களுக்குச் சீமந்தம் நடத்துதல், வளை களை அணிதல், குழந்தைகள் பிறந்த பிறகு புண்யாஹவாச னம் செய்தல் முதலியவை. செய்தார்-அந்த வீதிகளில் உள்ள திருமாளிகைகளிலும் மாடங்களிலும் வாழும் மக்கள் புரிந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 219-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'வலிமையைப் பெற்ற சமணர்களாகிய இழிந்தவர்கள் புரிந்த மாய மந்திரங்களால் உண்டான துன்பத்தைத் தாண்டி அலைகள் சுருண்டு வீசும் சமுத்திரத்தில் தம்மை அந்தச் சமணர்கள் கட்டிவிட்ட கருங்கல்லே தெப்பமாக மாற அதன்மேல் ஏறிக் கொண்டு கரையை அடைந்தவர் நம்முடைய திருவாரூருக்கு எழுந்தருளினார் என்னும் மகிழ்ச்சியினால் கணக்கு இல்லாத திருத்தொண்டர்கள் அந்தத் திருநாவுக்கரசு நாயனாரை மதிலுக்கு வெளியில் போய் எதிர்கொண்டு வரவேற்ற சமயத்தில் வார்த்தை களுக்கு அரசராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தியாக ராஜப் பெருமானாரைப் பணிந்து தம்முடைய திருக்கரங்

களைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டுப் பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு அந்த நகரத்துக்குள் அடைவாரானார்.' பாடல் வருமாறு:

'' வல்லமண் குண்டர் தம்
மாயைகடந்து மறிகடலில்
கல்லே மிதப்பாகப் போந்தவர்
வந்தார் எனும்களிப்பால்
எல்லையில் தொண்டர் எயிற்புறம்
சென்றெதிர் கொண்டபோது
சொல்லின் அரசர் வணங்கித்
தொழுதுரை செய்தணைவார். ''

வல்-வலிமையைப் பெற்ற. அமண்-சமணர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம்; திணை மயக்கம். குண்டர்தம்-இழிந்தவர்கள் புரிந்த; ஒருமை பன்மை மயக்கம். தம்: அசைநிலை. மாயை-மாய மந்திரங்களால் உண்டான துன்பத்தை; ஒருமை பன்மை மயக்கம்; ஆகுபெயர். கடந்து-தாண்டி. மறி-அலைகள் சுருண்டு வீசும். கடலில்-சமுத்திரத்தில். கல்லே-தப்மை அந்தச் சமணர்கள் கட்டித் தள்ளிய கருங்கல்லே. மிதப்பாக-ஒரு தெப்பமாக மாற. ப்:சந்தி. போந்தவர்-அதன் மேல் ஏறிக்கொண்டு கரையை அடைந்தவராகிய திருநாவுக்கரசு நாயனார். வந்தார்-நம்முடைய திருவாரூருக்கு எழுந்தருளினார். எனும்-என்று எண்ணும்; இடைக்குறை. களிப்பால்-மகிழ்ச்சியினால். எல்லை-கணக்கு. இல்-இல்லாத; கடைக்குறை. தொண்டர்-திருத்தொண்டர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எயில்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாரை திருமதிலுக்கு. புறம்-வெளியில். சென்று-போய். எதிர்கொண்ட-எதிர் கொண்டு வரவேற்ற. போது-சமயத்தில். சொல்லின்-வார்த்தைகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். அரசர்-அரசராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். வணங்கி-தியாகராஜப்

பெருமானாரைப் பணிந்து. 'தம்மை வரவேற்ற மக்களைப் பணிந்து' எனலும் ஆம். த்:சந்தி. தொழுது-தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டு. உரை செய்து-பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. அணைவார்-திருவாரூருக்குள் அடைவாரானார்.

பிறகு வரும் 220-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

' " தங்களுக்குப் பற்றுக் கோடாக ஒன்றையும் பெற்றிலாத சகித்தற்கு அரியவைகளாக இருக்கும் பாதகச் செயல்களைப் புரிபவர்களாகும் சமணர்களிடத்தில் இருந்த போது அடியேன் அடைந்த சூலை நோய் தீர்ந்து உயிர் பிழைக்குமாறு திருவதிகை வீரட்டானத்திற்கு வந்தவனாகிய அடியேன் பெறுவதற்கு உரியதாக இருப்பது ஒன்றே. பாம்புப் புற்றைத் தான் எழுந்தருளியிருக்கும் இடமாகக் கொண்டவனாகிய வன்மீகநாதனுடைய திருத்தொண்டர்களுக்கு ஒரு தொண்டர் ஆகும் புண்ணியமே அது" என துன்பம் அற்ற உணர்ச்சியோடும் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாரூரில் உள்ள ஓர் அழகிய தெருவுக்குள் அடைந்தார்.' பாடல் வருமாறு :

" 'பற்றொன் றிலா வரும்
பாதகர் ஆகும் அமணர்தம்பால்
உற்ற பிணியொழிந் துய்யப்போந்
தேன்பெற லாவ தொன்றே;
புற்றிடம் கொண்டான் தன் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியம்' என்
றற்ற உணர்வொடும் ஆரூர்த்
திருவீதி உள்ள ணைந்தார். "

பற்று-தங்களுக்குப் பற்றுக்கோடாக. ஒன்று-ஒன்றையும். இலா-பெற்றிலாத; இடைக்குறை. அரும்-சகித்தற்கு அரியவைகளாக இருக்கும். பாதகர், ஆகும்- பாதகச்

செயல்களைப் புரிபவர்கள் ஆகும்; ஒருமை பன்மை மயக்கம். அமணர்தம்பால்-சமணர்களிடத்தில் இருந்தபோது; ஒருமை பன்மை மயக்கம். தம்: அசைநிலை. உற்ற-அடியேன் அடைந்த. பிணி-சூலை நோய். ஒழிந்து-தீர்ந்து. உய்ய-உயிர்பிழைக்குமாறு. ப்:சந்தி. போந்தேன்-திருவதிகை வீரட்டானத்திற்கு வந்தவனாகிய அடியேன். இது திருநாவுக்கரசு நாயனார் தம்மைக் கூறிக்கொண்டது. பெறலாவது-பெறுவதற்கு உரியதாக இருப்பது. ஒன்றே-ஒன்றுதான். 'அது என்ன என்றால்' என்பதை இங்கே கூட்டுக. புற்று-பாம்புப் புற்றை. இடம்-தான் எழுந்தருளியிருக்கும் இடமாக. கொண்டான்தன்-கொண்டவனாகிய வன்மீக நாதனுடைய. தன்: அசைநிலை. தொண்டர்க்கு-திருத் தொண்டர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தொண்டர்-ஒரு தொண்டர். ஆம்-ஆகும். புண்ணியம்-புண்ணியமே அது. என்று-என. அற்ற-துன்பம் அற்ற. உணர்வொடும்-உணர்ச்சியோடும். ஆரூர்-திருவாரூரில் உள்ள. த்:சந்தி. திரு-அழகிய. வீதிஉள்-ஒரு தெருவுக்குள். அணைந்தார்-அந்த நாயனார் அடைந்தார்.

பிறகு வரும் 221-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தம்மைச் சுற்றிவரும் திருத் தொண்டர்களோடு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாரூர்த் திருக்கோயிலுக்கு முன்னால் தோரணங்களைக் கட்டித் தொங்கவிட்டிருக்கும் கோபுர வாசலுக்கு எழுந்தருளி அழகிய உயரமாக உள்ள தேவாசிரயன் என்னும் காவணத்துக்கு முன்னால் அந்த நாயனார் எழுந்தருளித் தியாகராஜப் பெருமானாரைப் பணிந்து விட்டு சக்கரவாள மலையைப் போல உயரமாக நிற்கும் அழகிய திருக்கோயிலின் முன்னால் உள்ள கோபுர வாசலுக்குள் நுழைந்து நீளமாகிய ஒளியை வீசும் பெருமையைப் பெற்ற நாகமாணிக்கங்களை உமிழும் பாம்புப் புற்றை மகிழ்ச்சியை அடைந்து தாம் வாழும் இடமாகக் கொண்ட

வன்மீக நாதரை அவருடைய சந்நிதியில் அந்த நாயனார் தரிசித்து ஆனந்தத்தைப் பெற்றார்.' பாடல் வருமாறு:

**" சூழும் திருத்தொண்டர் தம்முடன்**
**தோரண வாயில் நண்ணி**
**வாழி திருநெடும் தேவா**
**சிரயன்முன் வந்தி றைஞ்சி**
**ஆழி வரைத்திரு மாளிகை**
**வாயில் அவை புகுந்து**
**நீள்சுடர் மாமணிப் புற்றுகந்**
**தாரைநேர் கண்டு கொண்டார். "**

சூழும்-தம்மைச் சுற்றிவரும். திருத்தொண்டர் தம் முடன்-திருத்தொண்டர்களோடு; ஒருமை பன்மை மயக்கம். தம்: அசைநிலை. தோரண-அந்தத் திருநாவுக்கரசு நாய னார் திருவாரூர்த் திருக்கோயிலுக்கு முன்னால் தோரணங் களைக் கட்டித் தொங்கவிட்டிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். வாயில்-கோபுரவாசலுக்கு. நண்ணி-எழுந்தருளி. வாழி: அசைநிலை. திரு-அழகிய. நெடும்-உயரமாக விளங் கும். தேவாசிரயன்-தேவாசிரயன் என்னும் காவணத் துக்கு. முன்-முன்னால். வந்து-அந்த நாயனார் எழுந்தருளி. இறைஞ்சி-தியாகராஜப் பெருமானாரை வணங்கிவிட்டு. ஆழிவரை-சக்கரவாள மலையைப்போல உயரமாக நிற்கும். த்:சந்தி. திரு-அழகிய. மாளிகை-திருக்கோயிலுக்கு முன் னால் உள்ள. வாயில் அவை-கோபுரவாசலுக்குள். 'அவை' என்பது மிகை. புகுந்து-நுழைந்து. நீள்-நீளமாகிய. சுடர்-ஒளியை வீசும். மா-பெருமையைப் பெற்ற. மணி-நாகமாணிக்கங்களை உமிழும்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. புற்று-பாம்புப் புற்றை. உகந்தாரை-மகிழ்ச்சியை அடைந்து தாம் எழுந்தருளி யிருக்கும் இடமாகக் கொண்ட வன்மீக நாதரை. நேர்-அவருடைய சந்நிதியில். கண்டு-

தரிசித்து. கொண்டார்-ஆனந்தத்தை அந்த நாயனார் பெற்றார்.

பிறகு உள்ள 222-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் வன்மீக நாதரைத் தரிசித்து விட்டுத் தரையில் விழுந்து அவரை வணங்கித் தம்முடைய திருக்கரங்கள், திருவடிகள் முதலிய உறுப்புக்கள் அடைந்த புளகாங்கிதமாகிய மயிர்க்கூச்சு உண்டாகுமாறு தரையிலிருந்து எழுந்து நின்றுகொண்டு பக்தி மிகுதியாக உண்டாகத் தம்முடைய விழிகள் குளிர்ச்சியைப் பெற்ற துளிகளாகிய மழையைச் சொரியத் திருமூலட்டானராகிய வன்மீக நாதரை அவருடைய செந்தாமரை மலர்களைப் போன்றவையும், வெற்றிக் கழலைப் பூண்டு விளங்குபவையுமாகிய திருவடிகளை வாழ்த்தி வணங்கி விட்டு ஒரு திருத்தாண்டகத்தை அந்த வன்மீக நாதருக்கு அணிந்து.' பாடல் வருமாறு:

**"கண்டு தொழுது விழுந்து**
**கரசர ணாதி அங்கம்**
**கொண்ட புளகங்க ளாக**
**எழுந்தன்பு கூரக் கண்கள்**
**தண்டுளி மாரி பொழியத்**
**திருமூலட் டானர் தம்மைப்**
**புண்டரி கக்கழல் போற்றித்**
**திருத்தாண் டகம்பு னைந்து."**

இந்தப் பாடல் குளகம். கண்டு-அவ்வாறு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் வன்மீக நாதரைத் தரிசித்துவிட்டு. தொழுது-தரையில் விழுந்து அந்தநாதரை வணங்கி. கர-தம்முடைய திருக்கரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். சரண—திருவடிகள்; ஒருமை பன்மை மயக்கம். ஆதி-முதலிய. அங்கம்-உறுப்புக்கள்; ஒருமை பன்மை மயக்கம். கொண்ட—அடைந்த. புளகங்கள் ஆக- புளகாங்கிதமாகிய மயிர்க்கூச்சுண்டாகுமாறு. எழுந்து-தரையிலிருந்து எழுந்து நின்று

கொண்டு. அன்பு-பக்தி. கூர-மிகுதியாக உண்டாக. க்:சந்தி. கண்கள்-தம்முடைய விழிகள். தண்-குளிர்ச்சியைப் பெற்ற. துளி-துளிகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். மாரி-மழையை. பொழிய-சொரிய. த்:சந்தி. திருமூலட்டானர் தம்மை-திருமூலட்டானராகிய வன்மீக நாதரை. மூலட்டானர்-மூலத்தானத்தில் எழுந்தருளியிருப்பவர். தம்: அசை நிலை. ப்:சந்தி. புண்டரிக-செந்தாமரைமலர்களைப்போன்ற வையும்; ஒருமை பன்மை மயக்கம்; வினையாலணையும் பெயர். க்:சந்தி. கழல்-வெற்றிக்கழலைப் பூண்டு விளங்குபவையுமாகிய திருவடிகளை; ஆகுபெயர். போற்றி-வாழ்த்தி வணங்கி விட்டு. த்:சந்தி. திருத் தாண்டகம்-ஒரு திருத்தாண்டகத்தை. புனைந்து-அந்த வன்மீக நாதருக்கு அணிந்து.

திருவாரூரைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

" முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவன்இருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே. "

திருநாவுக்கரசு நாயனார் திருவாரூரைப்பற்றிக் காந்தாரப் பண்ணிலும், கௌசிகப் பண்ணிலும், குறிஞ்சிப் பண்ணிலும் அமைந்த திருப்பதிகங்களையும், திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம், போற்றித் திருத்தாண்டகம் என்பவை அடங்கிய திருப்பதிகங்களையும் பாடியருளி யிருக்கிறார்.

அவற்றுள் காந்தாரப் பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

"நரியைக் குதிரைசெய் வானும்
நரகரைத் தேவுசெய் வானும்
விரதம்கொண் டாடவல் லானும்
விச்சின்றி நாறுசெய் வானும்
முரசதிர்ந் தானைமுன் ஓட
முன்பணிந் தன்பர்கள் ஏத்த
அரவரைச் சாத்திநின் றானும்
ஆரூர் அமர்ந்தஅம் மானே."

காந்தாரப்பண்ணில் அவர் பாடியருளிய பழமொழிப் பாசுரம் ஒன்று வருமாறு:

"என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்
டென்னையோர் உருவம் ஆக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த் திட்டென்
உள்ளம் கோயில் ஆக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண்
டருள்செய்த ஆரூ ரர்தம்
முன்பிருக்கும் விதி யின்றி
முயல்விட்டுக் காக்கைப்பின் போன வாறே."

சீகாமரப்பண் அமைந்த பாசுரம் ஒன்று வருமாறு:

"சூலப்படை யானைச் சூழாக வீழருவிக்
கோலத்தோட் குங்குமம்சேர் குன்றெட் டுடையானைப்
பாலொத்த மென்மொழியாள் பங்கனைப் பாங்காய
ஆலத்தின் கீழானை நான்கண்ட தாரூரே."

சீகாமரப்பண் அமைந்த மற்றொரு பதிகத்தில் உள்ள ஒரு பாசுரம் வருமாறு:

"காண்டலே கருத்தாய்நி னைந்திருந்
தென்மனம் புகுந்தாய் கழலடி
பூண்டுகொண் டொழிந் தேன்
புறம்போயினால் அறையோ
ஈண்டு மாடங்கள் நீண்ட மாளிகை

மேலெழு கொடி வானிளம் மதி
தீண்டி வந்துலவும் திருவாரூர் அம்மானே."

குறிஞ்சிப் பண்ணில் அவர் பாடியருளிய திருவாதிரைத் திருப்பதிகத்தில் வரும் ஒரு பாசுரம் வருமாறு:

"முத்துவிதான மணிப்பொற் கவரிமுறை யாலே
பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்தலை மாலைவிரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரைநாளால் அதுவண்ணம்."

அவர் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

"படுகுழிப் பவ்வத் தன்ன
பண்டியைப் பெய்த வாற்றால்
கெடுவதிம் மனிதர் வாழ்க்கை
காண்டொறும் கேது கின்றேன்
முடுகுவர் இருந்துள் ஐவர்
மூர்க்கரே இவர்க ளோடும்
அடியனேன் வாழ மாட்டேன்
ஆரூர்மூ லட்ட னீரே."

மற்றொரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருநேரிசை வருமாறு:

"குழல்வலம் கொண்ட சொல்லாள்
கோலவேற் கண்ணி தன்னைக்
கழல்வலம் கொண்டு நீங்காக்
கணங்களக் கணங்க ளார
அழல்வலம் கொண்ட கையான்
அருட்கதிர் எறிக்கும் ஆரூர்
தொழல்வலம் கொண்டல் செய்வான்
தோன்றினார் தோன்றி னாரே."

அவர் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

"மற்றிடம் இன்றி மனைதுறந்
தல்லுணா வல்ல மணர்
சொற்றிடம் என்று துரிகபட்

டேனுக்கும் உண்டுகொ லோ
விற்றிடம் வாங்கி விசயனொ
டன்றொரு வேடு வனாய்ப்
புற்றிடம் கொண் டான்தன்
தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே."

மற்றொரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருவிருத்தம் வருமாறு :

"வேம்பினைப் பேசி விடக்கினை
ஓம்பி வினை பெருக்கித்
தூம்பினைத் தூர்த்தங்கோர் சுற்றம்
துணை யென்றிருத்திர் தொண்டீர்
ஆம்பலம் பூம்பொய்கை ஆரூர்
அமர்ந்தான் அடிநிழற் கீழ்ச்
சாம்பலைப் பூசிச் சலமின்றித்
தொண்டுபட் டுய்ம்மின்களே."

அவர் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு :

"விடையும் ஏறுவர் வெண்தலை யிற்பலி
கடைகள் தோறும் திரியுமெம் கண்ணுதல்
உடையும் கீரை உறைவது காட்டிடை
அடைவர் போல்அரங் காகஆ ரூரரே."

மற்றொரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருக்குறுந் தொகை வருமாறு:

"சொக்க ரைகுழல் வீணை கொடுகொட்டி
பக்க மேபகு வாயன பூதங்கள்
ஒக்க ஆடல் உகந்துடன் கூத்தராய்
அக்கி னோடர வார்ப்பர்ஆ ரூரரே."

அவர் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"கொங்குவார் மலர்க்கண்ணிக் குற்றா லன்காண்
கொடுமழுவன் காண்கொல்லை வெள்ளேற் றான்காண்
எங்கள்பால் துயர்கெடுக்கும் எம்பி ரான்காண்
ஏழ்கடலும் ஏழ்மலையும் ஆயி னான்காண்

பொங்குமா கருங்கடல்நஞ் சுண்டான் தான்காண்
பொற்றூண்காண் செம்பவளத் திரள்போல் வான்காண்
செங்கண்வா டராமதியோ டுடன்வைத் தான்காண்
திருவாரூ ரான்காண் என்சிந்தை யானே."

வேறொரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருத்தாண்டகம் வருமாறு :

"எழுது கொடியிடையார் ஏழை மென்றோள்
இளையர்கள் நம்மை இகழா முன்னம்
பழுது படநினையேல் பாவி நெஞ்சே
பண்டுதான் என்னோடு பகைதான் உண்டோ
முழுதுலகில் வானவர்கள் முற்றும் கூடி
முடியால் உறவணங்கி முற்றம் பற்றி
அழுது திருவடிக்கே பூசை செய்ய
இருக்கின்றான் ஊர்போலும் ஆரூர் தானே."

வேறொரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"மெய்ப்பால்வெண் ணீறணிந்த மேனி யானை
வெண்பளிங்கி னுட்பதித்த சோதி யானை
ஒப்பானை ஒப்பிலா ஒருவன் தன்னை
உத்தமனை நித்திலத்தை உலகம் எல்லாம்
வைப்பானைக் களைவானை வருவிப் பானை
வல்வினையேன் மனத்தகத்தே மன்னி னானை
அப்பாலைக் கப்பாலைக் கப்பா லானை
ஆரூரில் கண்டடியேன் அயர்த்த வாறே."

பின்னும் ஒரு திருப்பதிகத்தில் உள்ள ஒரு திருத்தாண்டகம் வருமாறு :

"முள்வாய தொழிற்பஞ் சேந் திரிய வஞ்ச
முகரிகாள் முழுதுமிவ் வுலகை ஓடி
நாள்வாய நம்முடைய மம்ம ரானை
நடாத்துகின்றீர்க் கமையாதே யானேல் வாரீர்

நீள்வான மூகம்தனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணைப் பாதாளக் கருவை ஆரூர்
ஆள்வானைக் கடுகச்சென் றடைவேன் நும்மால்
ஆட்டுணேன் ஓட்டந்தீங் கலையேன் மின்னே."

மற்றொரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"நீற்றினையும் நெற்றிமேல் இட்டார் போலும்
நீங்காமே வெள்ளெலும்பு பூண்டார் போலும்
காற்றினையும் கடிதாக நடந்தார் போலும்
கண்ணின்மேற் கண்ணொன் றுடையார் போலும்
கூற்றினையும் குரைகழலால் உதைத்தார் போலும்
கொல்புலித்தோ லாடைக் குழகர் போலும்
ஆற்றினையும் செஞ்சடைமேல் வைத்தார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே."

வேறொரு திருப்பதிகத்தில் உள்ள ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"திருமணியைத் தித்திக்கும் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமணியைக் குழல்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தின் அருங்கலத்தைப் பாவம் தீர்க்கும்
அருமணியை ஆரூரில் அம்மான் தன்னை
அறியா தடிநாயேன் அயர்த்த வாறே."

மற்றொரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஒருருவே மூவுருவம் ஆன நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையும் கண்ணழலால் விழித்த நாளோ

மருவனாய் மண்ணும்விண்ணும் தெரித்த நாளோ
மான்மறிக்கை ஏந்தியோர் மாதோர் பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குறிஞ்சிப் பண்ணில் பாடியருளிய திருவிருக்குக் குறள் ஒன்று வருமாறு:

"சித்தம் தெளிவீர்காள்-அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ-முத்தி ஆகுமே."

இந்தத் தலத்தைப் பற்றிக் கொல்லிப்பண்ணில் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"பறக்கும்எம் கிள்ளைகாள் பாடும்எம் பூவைகாள்
அறக்கண்என் னத்தகும் அடிகளா ரூரரை
மறக்ககில் லாமையும் வளைகள்நில் லாமையும்
உறக்கம் இல்லாமையும் உணர்த்தவல் லீர்களே."

கொல்லிக் கௌவாணப் பண்ணில் அந்த நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந்
துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந்
தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே."

அந்த நாயனார் தக்கேசிப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்

பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாம்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலும் ஆமே. ''

வேறொரு திருப்பதிகத்தில் காந்தாரப்பண் அமைந்த பாசுரம் ஒன்று வருமாறு:

'' கரையும் கடலும் மலையும்
காலையும் மாலையும் எல்லாம்
உரையில் விரவி வருவான்
ஒருவன் உருத்திர லோகன்
வரையின் மடமகள் கேள்வன்
வானவர் தானவர்க் கெல்லாம்
அரையன் இருப்பதும் ஆரூர்அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். ''

புறநீர்மைப் பண்ணில் அந்த நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' அந்தியும் நண்பகலும் அஞ்சுப தம்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே. ''

செந்துருத்திப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

'' விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன்
விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றும் செய்த தில்லை
கொத்தை ஆக்கினீர்
எற்றுக் கடிகேன் என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்

மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால்
வாழ்ந்து போதீரே.''

அடுத்து உள்ள 223-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'''காண்ட லேகருத் தாய்நினைந்'' தென்று தொடங்கும் கலைத் தன்மையைப் பெற்ற ஒரு திருப்பதிகத்தை தூண்டாத திருவிளக்கைப் போன்ற சோதியாகிய வன்மீக நாதருடைய சந்நிதியில் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நின்று கொண்டு அந்த வன்மீக நாதரைத் துதித்துப் பக்தியினால் உருக்கத்தை அடைந்து சேர்ந்திருக்கும் அடிக்கும் மணியைக் கட்டித் தொங்கவிட்டிருக்கும் கோபுர வாசலைப் பெற்ற திருக்கோயிலைச் சுற்றி வலமாக வந்து அந்த நாதரை வணங்கி பக்தியைக் கொண்ட திருவுள்ளத்தோடு உயரமாக உள்ள அழகிய கோபுர வாசலுக்கு வெளியே அந்த நாயனார் எழுந்தருளினார்.' பாடல் வருமாறு :

'''காண்ட லேகருத் தாய்நினைந்'
தென்னும் கலைப் பதிகம்
தூண்டா விளக்கன்ன சோதிமுன்
நின்று துதித் துருகி
ஈண்டு மணிக்கோயில் சூழ
வலஞ்செய் திறைஞ்சி அன்பு
பூண்ட மனத்தொடு நீள்திரு
வாயிற் புறத்த ணைந்தார்.''

'காண்டலே கருத்தாய் நினைந்து' என்னும்-'காண்டலே கருத்தாய் நினைந்து' என்று தொடங்கும். கலை-கலைத் தன்மையைப் பெற்ற. ப்:சந்தி. பதிகம்-ஒரு திருப்பதிகத்தை. தூண்டா-தூண்டாத. விளக்கு-திருவிளக்கை; தீபத்தை. அன்ன-போன்ற. சோதிமுன்-சோதியாகிய வன்மீக நாதருடைய சந்நிதியில், நின்று-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நின்று கொண்டு. துதித்து-அந்த வன்மீக நாதரைத் தோத்திரம் செய்து. உருகி-பக்தியினால் உருக்கத்தை

அடைந்து. ஈண்டு-சேர்ந்திருக்கும். மணி-அடிக்கும் மணி யைக் கட்டித் தொங்க விட்டிருக்கும். க்:சந்தி. கோயில்-கோபுர வாசலை முன்னால் பெற்ற திருக்கோயிலை. சூழ-சுற்றி. வலம் செய்து-வலமாக வந்து. இறைஞ்சி-அந்த நாதரை வணங்கி. அன்பு-பக்தியை. பூண்ட-கொண்ட. மனத்தொடு-திருவுள்ளத்தோடு. நீள்-உயரமாக உள்ள. திரு-அழகிய. வாயில்-கோபுர வாசலுக்கு. புறத்து-வெளி யில். அணைந்தார்-அந்த நாயனார் எழுந்தருளினார்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட பாசுரம் திருநாவுக்கரசு நாயனார் சீகாமரப் பண்ணில் திருவாரூரைப் பற்றிப் பாடி யருளியது. அந்தப் பாசுரம் வருமாறு:

"காண்ட லேகருத் தாய்நினைந் திருந்
தேன்மனம் புகுந்தாய் கழலடி
பூண்டு கொண் டொழிந்தேன்
புறம் போயினால் அறையோ
ஈண்டு மாடங்கள் நீண்ட மாளிகை
மேலெழு கொடி வானிளம்மதி
தீண்டி வந்துலவும்
திருவாரூர் அம்மானே."

பிறகு வரும் 224-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் சிவப்பாக உள்ள பெரிய மாணிக்கம் ஒளியை வீசும் அழகிய ஆலயத்தினுடைய முற்றத்திற்கு முன்னால் விளங்கும் தேவாசிரயன் என்னும் காவணத்தை அந்த நாயனார் அடைந்து, "கொய்யுமா மலர்ச் சோலைக் குயில் கூவ மயிலாலும் ஆரூராரைக், கையி னால் தொழா தொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வ னேன்." என்று தொடங்கி அடைவதற்கு அருமையாக உள்ள கழிவிரக்கத்தோடு ஒரு திருப்பதிகத்தை அந்த நாய னார் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு அந்தத் திருவா ரூரில் உள்ள தம்முடைய திருமடத்தில் தங்கிக் கொண்டிருந் தார்.' பாடல் வருமாறு :

"செய்யமா மணிஒளிரும் திருமுன்றில்
முன்தேவா சிரயன் சார்ந்து
'கொய்யுலாம் மலர்ச் சோலைக்
குயில்கூவ மயிலாலும் ஆரூராரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வனேன்' என்
றெய்தரிய கையறவால் திருப்பதிகம்
அருள்செய்தங் கிருந்தார் அன்றே."

செய்ய-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் சிவப்பாக உள்ள. மா-பெரிய. மணி-மாணிக்கம். ஒளிரும்-ஒளியை வீசும். திரு-அழகிய. முன்றில்-ஆலயத்தினுடைய முற்றத்திற்கு. முன்றில்-இல்முன்; முன்பின்னாகத் தொக்க தொகை. முன்-முன்னால் விளங்கும். தேவாசிரயன்-தேவாசிரயன் என்னும் காவணத்தை. சார்ந்து-அந்த நாயனார் அடைந்து. 'கொய்யுலாம் மலர்ச் சோலைக் குயில்கூவ மயிலாலும் ஆரூராரைக், கையினால் தொழா தொழிந்து கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வனேன்' என்று-'கொய்யுலாம் மலர்ச் சோலைக் குயில் கூவ மயிலாலும் ஆரூராரைக் கையினால் தொழா தொழிந்து கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வனேன்' என்று தொடங்கி. எய்தரிய-அடைவதற்கு அருமையாக உள்ள. எய்தரிய-எய்த அரிய; தொகுத்தல் விகாரம். கையறவால்-கழிவிரக்கத்தோடு; உருபு மயக்கம். திருப்பதிகம்-ஒரு திருப்பதிகத்தை. அருள் செய்து-அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. அங்கு-அந்தத் திருவாரூரில் உள்ள தம்முடைய திருமடத்தில். இருந்தார்-தங்கிக் கொண்டிருந்தார். அன்று, ஏ:இரண்டும் ஈற்றசை நிலைகள்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட பாசுரம் திருஆரூரைப் பற்றிக் காந்தாரப் பண்ணில் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியது. அந்தப் பாசுரம் வருமாறு:

"மெய்யெலாம் வெண்ணீறு கண்ணித்த
மேனியன் தாள்தொ ழாதே
உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி
உழிதந்தென் உள்ளம் விட்டுக்
கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலும் ஆரூ ரரைக்
கையினால் தொழா தொழிந்து
கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே."

இது ஒரு பழமொழியை உள்ளடக்கியது.

பிறகு வரும் 225-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திருநாவுக்கரசு நாயனார் தம்முடைய திருமார்பு நிரம்பச் சொரியும் கண்களிலிருந்து மழையைப் போலப் பொழிந்து வழியும் அழகிய வடிவத்தையும், இனிமையாக உள்ள தம்முடைய திருவாக்கில் சேர்ந்து அமையும் அழகிய தம்முடைய திருவாயிலிருந்து வெளியாகும் இனிய சுவையைப் பெற்று விளங்கும் செந்தமிழ் மொழியில் அமைந்திருக்கும் மாலைகளாகிய பல திருப்பதிகங்களையும் திருவதிகை வீரட்டானேசுவரருடைய சிவந்த தங்கத்தைப் போன்ற திருவடிகளையே சார்பாகப் பெற்ற திருவுள்ளத்தையும் உழவாரம் என்னும் ஒப்பற்ற ஆயுதத்தையும் கொண்டு தாமும் ஆக விளங்கி இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் நல்ல வாழ்வைப் பெறுமாறு அந்தத் திருவாரூரில் உள்ள ஓர் அழகிய தெருவில் உழவாரத் திருப்பணியையும், வேறு பல திருப்பணிகளையும் புரிந்து கொண்டு அந்த வன்மீக நாதரை வணங்கித் துதித்துப் புகழ்ந்து பாடியருளி நடப்பாரானார்.' பாடல் வருமாறு:

**"மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும்**
**திருவடிவும் மதுர வாக்கில்**
**சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின்**
**மாலைகளும் செம்பொற் றாளே**

சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார். ''

மார்பு-திருநாவுக்கரசு நாயனார் தம்முடைய திருமார்பு. ஆர-நிரம்புமாறு. ப்:சந்தி. பொழி-மழையைப் போலப் பொழிந்து வழியும். கண்-தம்முடைய கண்களிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். நீர்-புனல். மழை-மழையைப் போல. வாரும்-வழியும். திரு-அழகிய. வடிவும்-வடிவத்தையும். மதுர-இனிமையாக உள்ள. வாக்கில்-தம்முடைய திருவாக்கில். சேர்வாகும்-சேர்ந்து அமையும். திரு-அழகிய. வாயில்-தம்முடைய திருவாயிலிருந்து வெளியாகும். தீம். இனிய சுவையைப் பெற்று விளங்கும். தமிழின்-செந்தமிழ் மொழியில் அமைந்திருக்கும். மாலைகளும்-மாலைகளாகிய பல திருப்பதிகங்களையும். செம்-சிவப்பாக இருக்கும். பொன்-தங்கத்தைப் போன்ற. தாளே-திருவதிகை வீரட்டானேசுவரருடைய திருவடிகளையே; ஒருமை பன்மை மயக்கம். சார்வான-சார்பாகப் பெற்ற; தமக்கு உரிய துணையாகப் பெற்ற. திருமனமும்-திருவுள்ளத்தையும். உழவார-உழவாரம் என்னும். த்:சந்தி. தனி-ஒப்பற்ற. ப்:சந்தி. படையும்-ஆயுதத்தையும். தாமும்' என்றது 'திருநாவுக்கரசு நாயனாரும்' என்பதை. ஆகி-ஆக விளங்கி. ப்:சந்தி. பார்-இந்தப் பூ மண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகுபெயர். வாழ-நல்ல வாழ்வைப் பெறுமாறு. த்:சந்தி. திரு-ஓர் அழகிய. 'செல்வர்கள் வாழும்' எனவும் ஆம்; திணை மயக்கம். வீதி-அந்தத் திருவாரூரில் உள்ள தெருவில். ப்:சந்தி. பணி-உழவாரத் திருப்பணியையும் வேறு பல திருப்பணிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். செய்து-புரிந்து கொண்டு. பணிந்து-அந்த வன்மீக நாதரை வணங்கி. ஏத்தி-துதித்து. ப்:சந்தி. பரவி-புகழ்ந்து பாடியருளி. ச்:சந்தி. செல்வார்-நடப்பாரானார்.

திருவாரூரைப் பற்றிக் காந்தாரப் பண்ணில் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"ஆயிரம் தாமரை போலும்
ஆயிரம் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும்
ஆயிரம் தோளுடை யானும்
ஆயிர ஞாயிறு போலும்
ஆயிரம் நீள்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானும்
ஆரூர் அமர்ந்தஅம் மானே."

அடுத்து வரும் 226-ஆம் கவியின் கருத்து வருமாறு :

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நெடுங்காலமாக விளங்கும் புகழைப் பெற்ற திருவாரூரில் நிலாவும் மாணிக்கத்தை உமிழும் பாம்புப் புற்றைத் தாம் எழுந்தருளியிருக்கும் இடமாகக் கொண்ட திருநடனம் புரிபவராகிய வன்மீக நாதரைத் தம்முடைய திருவுள்ளத்தில் சேர்ந்திருந்த பக்தியோடு ஒவ்வொரு பூசை காலத்திலும் வன்மீக நாதர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலை அடைந்து தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டுவிட்டு ஒரு குற்றமும் இல்லாத தம்முடைய திருவாயின் பான்மையினால், "பாடிளம் பூதத்தினான்" என்று தொடங்கும் ஒரு திருப்பதிகத்தையும், அந்தத் திருப்பதிகம் முதலாக உள்ள பல திருப்பதிகங்களையும் அந்த நாயனார் பாடியருளித் தாம் விரும்பிய பேராவல் பெருகி எழத் தம்முடைய திருவுள்ளம் உருக்கத்தை அடைந்து தம்முடைய திருவுள்ளம் கரைந்து கரைந்து உருக்கத்தைப் பெற்று விரும்பி நடப்பாரானார்.' பாடல் வருமாறு:

"**நீடுபுகழ்த் திருவாரூர் நிலவுமணிப்**
**புற்றிடம்கொள் நிருத்தர் தம்மைக்**
**கூடியஅன் பொடுகாலங் களில்அணைந்து**
**கும்பிட்டுக் கோதில் வாய்மைப்**

'பாடிளம்பூ தத்தினான்' எனும்பதிகம்
முதலான பலவும் பாடி
நாடியஆர் வம்பெருக நைந்துமனம்
கரைந்துருகி நயந்து செல்வார்."

நீடு-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நெடுங்காலமாக விளங்கும். புகழ்-புகழைப் பெற்ற. த்:சந்தி. திருவாரூர்-திருவாரூரில். நிலவு-நிலாவும்; எழுந்தருளியிருக்கும். மணி-நாகமாணிக்கத்தை உமிழும். ப்:சந்தி. புற்று-பாம்புப் புற்றை. இடம்-தாம் எழுந்தருளியிருக்கும் இடமாக. கொள்-கொண்ட. நிருத்தர்தம்மை - திருநடனம் புரிந்தருளுபவராகிய வன்மீக நாதரை. தம்: அசைநிலை. வன்மீக நாதரை இருந்தாடழகர் என்பர். க்:சந்தி. கூடிய-தம்முடைய திருவுள்ளத்தில் சேர்ந்திருந்த. அன்பொடு-பக்தியோடு. காலங்களில்-ஒவ்வொரு பூசைக் காலத்திலும். அணைந்து-வன்மீகநாதர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலை அடைந்து. கும்பிட்டு-தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டு. க்:சந்தி. கோது-ஒரு குற்றமும். இல்-இல்லாத; கடைக்குறை. வாய்மை-தம்முடைய திருவாயின் பான்மையினால். ப்:சந்தி. 'பாடிளம்பூதத்தினான்' எனும்- 'பாடிளம் பூதத்தினான்' என்று தொடங்கும், எனும்:இடைக்குறை. பதிகம்-ஒரு திருப்பதிகத்தை. முதலான-முதலாக உள்ள. பலவும்-பல திருப்பதிகங்களையும். பாடி-அந்த நாயனார் பாடியருளி. நாடிய-தாம் விரும்பிய. ஆர்வம்-பேராவல். பெருக-பெருகி எழ. நைந்து-உருக்கத்தை அடைந்து. மனம்-தம்முடைய திருவுள்ளம். கரைந்து-கரைந்து கரைந்து. உருகி-உருக்கத்தைப் பெற்று. நயந்து-விரும்பி. செல்வார்-நடப்பாரானார்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட பாசுரம் காந்தாரப்பண் அமைந்தது. அந்தப் பாசுரம் வருமாறு:

" பாடிளம் பூதத்தி னானும்
பவளச்செவ் வாய்வண்ணத் தானும்
கூடிள மென்முலை யாளைக்
கூடிய கோலத்தி னானும்
ஓடிள வெண்பிறை யானும்
ஒளிதிகழ் சூலத்தி னானும்
ஆடிளம் பாம்பசைத் தானும்
ஆரூர் அமர்ந்தஅம் மானே."

காந்தாரப் பண்ணில் அவர் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" ஊர்திரை வேலையுள் ளானும்
உலகிறந் தொண்பொரு ளானும்
சீர்தரு பாடலுள் ளானும்
செங்கண் விடைக்கொடி யானும்
வார்தரு பூங்குழ லாளை
மருவி உடன்வைத் தவனும்
ஆதிரை நாளுகந் தானும்
ஆரூர் அமர்ந்தஅம் மானே."

சீகாமரப் பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

" கடம்ப டந்நடம் ஆடினாய்களை
கண்ணெனக்கொரு காதல் செய்தடி
ஒடுங்கி வந்தடைந் தேன்ஒழிப்
பாய் பிழைப்ப வெலாம்
முடங்கினால்முது நீர்ம வங்கிள
வாளை செங்கயல் சேல்வரால்களி
றடைந்த தண் கழனி
அணியாரூர் அம்மானே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

" கெண்டையந் தடங்கண் நல்லார்
தம்மையே கெழும வேண்டிக்

குண்டராய்த் திரிதந் தைவர்
குலைத்திடர்க் குழியில் நூக்கக்
கண்டுநான் தரிக்க கில்லேன்
காத்துக்கொள் கறைசேர் கண்டா
அண்டவா னவர்கள் போற்றும்
ஆரூர்மூ லட்ட னீரே. ''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

'' குலம்பலம் பாவரு குண்டர்முன்
னே நமக் குண்டுகொலோ
அலம்பலம் பாவரு தண்புனல்
ஆரூர் அவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி
யான்திரு மூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. ''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந் தொகை வருமாறு:

'' எப்போ தும்மிறை யும்மற வாதுநீர்
முப்போ தும்பிர மன்தொழ நின்றவன்
செப்போ தும்பொனின் மேனிச் சிவனவன்
அப்போதைக் கஞ்சல் என்னும்ஆ ரூரனே. ''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

'' காரேறு நெடுங்குடுமிக் கயிலா யன்காண்
கறைக்கண்டன் காண்கண்ணார் நெற்றியான்காண்
போரேறு நெடுங்கொடிமேல் உயர்த்தி னான்காண்
புண்ணியன்காண் எண்ணரும்பல் குணத்தினான்காண்
நீரேறு சுடர்ச்சூலப் படையி னான்காண்
நின்மலன் காண் நிகரேதும் இல்லாதான்காண்

சீரேறு திருமாலோர் பாகத் தான்காண்
திருவாரூ ரான்காண் என்சிந்தையானே.''

மற்றொரு திருத்தாண்டகம் வருமாறு:

''கோவணமோ தோலோ உடையா
வதுசொல்வேறோ வேழமோ ஊர்வதுதான்
பூவணமோ புறம்பயமோ அன்றா யிற்றான்
பொருந்தாதார் வாழ்க்கை திருந்தா மையோ
தீவணத்த செஞ்சடைமேல் திங்கள் சூடித்
திசைநான்கும் வைத்துகந்த செந்தீ வண்ணர்
ஆவணமோ ஒற்றியோ அம்மானார் தாம்
அறியேன் மற்றூராமா றாரூர்தானே.''

வேறொரு திருத்தாண்டகம் வருமாறு:

''நீதியாய் நிலனாகி நெருப்பாய் நீராய்
நிறைகாவாய் இவையிற்றின் நியம மாகிப்
பாதியாய் ஒன்றாகி இரண்டாய் மூன்றாய்ப்
பரமாணு வாய்ப்பழுத்த பண்க ளாகிச்
சோதியாய் இருளாகிச் சுவைக ளாகிச்
சுவைகலந்த அப்பா லாய்வீடாய் வீட்டின்
ஆதியாய் அந்தமாய் நின்றான் தன்னை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே.''

பின்னும் ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

''பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை அரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்துதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை அடங்கச் செய்யும்
எம்மான்றன் அடித்தொடர்வான் உழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே.''

மற்றொரு திருத்தாண்டகம் வருமாறு :

" முடியார் மதியரவம் வைத்தார் போலும்
மூவுலகும் தாமேயாய் நின்றார் போலும்
செடியார் தலைப்பலிகொண் டுழல்வார் போலும்
செல்கதிதான் கண்ட சிவனார் போலும்
அடியார்நஞ் சுண்டிருண்ட கண்டர் போலும்
கங்காள வேடக் கருத்தர் போலும்
அடியார் அடிமை உகப்பார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே."

வேறு ஒரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருத்தாண்டகம் வருமாறு :

" முந்திய வல்வினைகள் தீர்ப்பான் தன்னை
மூவாத மேனிமுக் கண்ணி னானைச்
சந்திரனும் வெங்கதிரும் ஆயி னானைச்
சங்கரனைச் சங்கக் குழையான் தன்னை
மந்திரமும் மறைப்பொருளும் ஆனான் தன்னை
மறுமையும் இம்மையும் ஆனான் தன்னை
அந்தரனை ஆரூரில் அம்மான் தன்னை
அறியா தடிநாயேன் அயர்த்த வாறே."

வேறு ஒரு திருப்பதிகத்தில் உள்ள ஒரு திருத்தாண்டகம் வருமாறு :

" பிறப்போ டிறப்பென்றும் இல்லாதான் காண்
பெண்ணுருவோ டாணுருவம் ஆயி னான்காண்
மறப்ப டும்என் சிந்தைமருள் நீக்கினான் காண்
வானவரும் அறியாத நெறிதந் தான்காண்
நறப்படுபூ மலர்தூபம் தீபம் நல்ல
நறுஞ்சாந்தம் கொண்டேத்தி நாளும் வானோர்
சிறப்போடு பூசிக்கும் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெம் செல்வன் தானே."

மேலும் ஒரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருத்தாண்டகம் வருமாறு :

" புண்ணியமும் நன்னெறியும் ஆவ தெல்லாம்
நெஞ்சமே இதுகண்டாய் பொருந்தக் கேள்நீ
நுண்ணிய வெண் ணூல்கிடந்த மார்பாஎன்றும்
நுந்தாத ஒண்சுடரே என்றும் நாளும்
விண்ணியங்கு தேவர்களும் வேதம் நான்கும்
விரைமலர்மேல் நான்முகனும் மாலும் கூடி
எண்ணரிய திருநாமம் உடையாய் என்றும்
எழிலாரூ ராஎன்றே ஏத்தா நில்லே."

போற்றித் திருத்தாண்டகம் ஒன்று வருமாறு :

" மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்நெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி."

மற்றொரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருத்தாண்டகம் வருமாறு :

" ஓங்கி உயர்ந்தெழுந்து நின்ற நாளோ
ஒருகம்போல் ஏழுகமாய் நின்ற நாளோ
தாங்கியசீர்த் தலையான வானோர் செய்த
தக்கன்தன் பெருவேள்வி தகர்த்த நாளோ
நீங்கியநீர்த் தாமரையான் நெடுமா லோடு
நில்லாய்எம் பெருமானே என்றங் கேத்தி
வாங்கிமதி வைப்பதற்கு முன்னோ பின்னோ
வளராரூர் கோயிலாக் கொண்ட நாளே."

இந்தளப் பண்ணில் இந்தத் தலத்தைப் பற்றிச் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

" சொல்லிடில் எல்லை இல்லை
சுவையிலாப் பேதை வாழ்வு

நல்லதோர் கூரை புக்கு
நலமிக அறிந்தே னல்லேன்
மல்லிகை மாடம் நீடு
மருங்கொடு நெருங்கி எங்கும்
அல்லிவண் டியங்கும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே. ”

கொல்லிக் கௌவாணப் பண்ணில் உள்ள ஒரு பாசுரம் வருமாறு :

“ வஞ்சயமாய் அடியான்மேல்
வருங்கூற்றின் உரம்கிழிய
முஞ்சயமார் பாதத்தால்
முனிந்துகந்த மூர்த்திதனை
மின்செயும்வார் சடையானை
விடையானை அடைவின்றி
என்செயநான் பிரிந்திருக்கேன்
என் ஆரூர் இறைவனையே. ”

தக்கேசிப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு :

“ கார்க்குன்ற மழையாய்ப் பொழிவானைக்
கலைக்கெலாம்பொரு ளாய்உடன் கூடிப்
பார்க்கின்ற உயிர்க்குப் பரிந்தானைப்
பகலும் கங்குலும் ஆகிநின் றானை
ஓர்க்கின்ற செவியைச் சுவைதன்னை
உணரும் நாவினைக் காண நின்றகண்ணை
ஆர்க்கின்ற கடலை மலைதன்னை
ஆரு ரானை மறக்கலு மாமே. ”

காந்தாரப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

“ சொல்லிற் குலாவன் றிச் சொல்லேன்
தொடர்ந்தவர்க் கும்துணை அல்லேன்
கல்லில் வலிய மனத்தேன்
கற்ற பெரும்புல வாணர்

அல்லல் பெரிதும் அறுப்பான்
அருமறை ஆறங்கம் ஓதும்
எல்லை இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர்.''

புறநீர்மைப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

''முன்னை முதற்பிறவி மூதறி யாமையினால்
பின்னை நினைந்தனவும் பேதுற வும்மொழியச்
செந்நெல் வயற்கழனித் தென்திரு வாரூர்புக்
கென்னுயிர்க் கின்னமுதை என்றுகொல் எய்துவதே.''

செந்துருத்திப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

''பேயோ டேனும் பிறிவொன் றின்னா
தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதான் அன்றோ
கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும்
உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே.''

''தேனமர் சோலைத் திருவாரூரின்
ஞானம் தன்னை நல்கிய நன்மையும்.''
''ஆரூர் அமர்ந்த அரசே போற்றி.''
''ஆரூர்எம் பிச்சைத் தேவா.''

''திருவாரூர் பாடிநாம் தென்னேணம் கொட்டாமோ.''
''ஆரூரன் செம்பெருமான்.''
''ஓங்கெயில் சூழ்திருவாரூர்உ டையானே.''
என்று மாணிக்க வாசகரும்,

''பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்

சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே.''

என்று பூந்துருத்தி நம்பிகாட நம்பியும் பாடியருளிய திரு விசைப் பாக்களையும்,

"அந்தணராம் இவர் ஆரூர்உறைவ தென்றேன்."
"அரிவை பாகத் தண்ணல் ஆரூர்."
"உத்தமன் அந்தண் ஆரூர்."
"நஞ்சாரும் மிடற்றண்ணல் ஆரூர்."
"ஆரூர் வளமலி கமல வாள்முகத்
திளம யிற்சாயல்ஏந்திழை தானே."
"அம்மான் அனலாடி ஆரூர்க்கோன்."
"ஆரூர் அமர்ந்துறை அமுதன்."
"கூற்றெனப் பெயரிய கொடுந்தொழில் ஒருவன்
ஆற்றல் செற்ற அண்ணல் ஆரூர்."
"நண்ணார் ஊர்முன்றெரித்த நாசஞ்சேர் திண்
சிலையான் தண்ஆரூர்."
"அலைபுனல் ஆரூர் அமர்ந்துறை அமுதன்."
"அறைகழல் எந்தை ஆரூர்."
"சுடுபொடி அணிந்த துளங்கொளி அகலத்
தண்ணல் ஆரூர்."
"அணிதிகழ் அகலத்தண்ணல் ஆரூர்ஆர்கலி
விழவின்."
"திருமட மலைமகட்கொருகூறு கொடுத்துத்தன்
அன்பின் அமைத்தவன் ஆரூர்."
"தீயினவன், கண்ணாளன் ஆரூர்."
என்று சேரமான் பெருமாள் நாயனாரும்,
"ஆரூர்க்கோன் ஆனாயனாய அமுதமே ஆனாய்."
"அரனே அணியாரூர் மூலட்டானத்தானே."

" செம்பொற் புரிசைத் திருவாரூராய்."

என்று பரணதேவ நாயனாரும்,

" மாறுமின்போல் சடைவைத்தவன் ஆரூர்."

என்று பட்டினத்துப் பிள்ளையாரும்,

" மலர்க்கண் விண்ணாயகனிடைப் பெற்றவன்
ஆரூர் விறற்றண்டியே."

" திருவாரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடை யலும்."

" அரசினை ஆரூர் அமரர் பிரானை."

" செல்வம் நிகழ்திரு வாரூர்
மதில்வட்டத் துட்பிறந்தார்
செல்வன் திருக்கணத் துள்ளவரே."

" அலகில் பெருங்குணத் தாரூர் அமர்ந்த அரன்."

" பொழிநீடரு திரு வாரூரில்
வாசியும் பொன்னும் கொண்டோன்."

" ஆரூர்ப் புனித அரன்."

என்று நம்பியாண்டார் நம்பியும்,

" திருவாரூர் வரும்தண்டி யடிகள்."

" கணநாதர் எனவாழும் கருத்தர் கன்னிச்
செங்கண்யரால் வளர்வாவி திகழும் ஆரூர்ச்
சிறந்துளார் எமையாளப் பிறந்து ளாரே."

" திருவாரூர்ப் பாவையுண் மண்டளி."

என்று உமாபதி சிவமும்,

" நிலம கட்கழ கார்திரு நீணுதற்
றிலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் டாமரை போன்மலர்ந்
தலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால்."

" புரந்தரன்மால் அயன்முதலோர் புகழ்ந்திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார் மேவியுறை திருவாரூர்."

" பொன்தயங்கு மதிலாரூர்ப் பூங்கோயில் மர்ந்த
பிரான்."

"தேராரும் நெடுவீதித் திருவாரூர்."
"நங்கள்பிரான் திருவாரூர் நகர்வாழ்வார்."
"எந்தை யிருப்பதும் ஆரூர்."
"ஆரூர் அமர்ந்த அருமணியே."
"வாழிய மாமறைப் புற்றிடம்கொள்
மன்னவன் னருளா லோர்வாக்குத்
தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்."
"ஆட்கொள வந்த மறையவனே
ஆரூர் அமர்ந்த அருமணியே."
"அணியாரூர் மணிப்புற்றின்
மைவாழும் திருமிடற்று வானவர்."
"ஆவி நல்குவர் ஆரூரை ஆண்டவர்."
"ஆரூர்ஆண்ட மைவிரவு கண்டரை."
"தேரும் கொடியும் மிடைமம் மறுகில்
திருவா ரூரார் நீரே அல்லால்
ஆரென் துயரம் அறிவார்."
"சென்றும் பர்களும் பணியும் செல்வத்
திருவா ரூர்வாழ் பெருமா னடிகள்."
"தாவில்சீர்ப் பெருமை ஆரூர்
மறை யவர் தலைவ."
"மன்னுசீர் வயலாரூர் மன்னவரை."
"நீடுபுகழ்த் திருவாரூர் நிலவுமணிப்
புற்றிடம்கொள் நித்தர்."
"அணியாரூர் மணிப்புற்றில்
அமர்ந்து வாழும் நீண்ட சுடர் மாமணியை."
"திருவாரூர் நிகழ்பெருமை வகுத்துரைப்பீர்."
"சித்தம் நிலாவும் தென்திருவாரூர் நகராளும்
மைத்தழை கண்டர்."
"கொய்ம்மலர் வாவித் தென் திருவாரூர் கும்பிட்டே."
"மாமதில் ஆரூர் மன்னரை."

" ஆரூர் நகராளும்
துப்புறழ் வேணிக் கண்ணுதலாரை."
" புற்றிடம் கொண்டாரை வந்திறைஞ்சிப்
பொன்மதில் ஆரூர் புகழ்ந்துபோற்றி."
" அங்கணர் ஆரூர் வணங்கிப்போந்த அரசு."
" சிரபுர வேந்தரும் சிந்தை யின்கட்
டென்றிரு வாரூர் வணங்கு தற்கு
விரவிய காதலிற் சென்று போற்றி."
" அள்ளற்கழனி ஆரூர் அடைவோம்."
" வானுயர் செங்கதிர் மண்டலத்து
மருங்கணை யும்கொடி மன்னும்ஆரூர்
தானொரு பொன்னுல கென்னத்தோன்றும்
தயங்கொளி முன்கண்டு."
" தங்கள் பிரான் அரசாளும் ஆரூர்."
" பொன்மதில் ஆரூர்க்
கடிகொள் பேரணிப் பொலிவை யார்
முடிவுறக் காண்பார்."
" அல்லல்தீர்ப்பவர் மீண்டும்
ஆரூர்தொழ அணைந்தார்."
" புவன ஆரூரினிற் புறப்பு போந்து."
" திருவாரூர் தொழநினைந்து சென்று புக்கார்."
" நம்பர்மகிழ் திருவாரூர் வணங்கிப் போந்து."
" வன்றொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல்எடுக்க
இன்று குறை யாகின்ற தென்செய்கென்."
" நம்பர் ஆரூர் அணைந்தார் நாவலூர் நாவலனார்."
" அண்டர்பிரான் திருவாரூர்
அடங்கவும் நெல்மலையாக்கி."
" அணியாரூர் மறுகதனில்
ஆளியங்கப் பறையறைந்த பணியாலே."
" நம்பியா ரூரர்திரு
வாரூரில் நயந்துறைநாட்

செம்பொற்புற் றிடம்கொண்டு
வீற்றிருந்த செழுந்தேனை.''

'' தேவர் ஒதுங்கத் திருத்தொண்டர்
மிடையும் செல்வத் திருவாரூர்
காவல் கொண்டு தனியாளும்
கடவுட் பெருமான்.''

'' மன்றினிடையே நடம்புரிவார்
மருவு பெருமைத் திருவாரூர்
சென்று குறுகிப் பூங்கோயிற்
பெருமான் செம்பொற் கழல்பணிந்து.''

'' நீடு செல்வத் திருவாரூர்.''

'' செறிபுன் சடையார் திருவாரூர்த்
திருப்பங் குனியுத் தரத்திரு நாள்.''

'' தெய்வப் பெருமாள் திருவாரூர் முந்தி வணங்கி.''

'' செஞ்சாலி வயல்மருதத் திருவாரூர்.''

'' செல்வம்மலி திருவாரூர்.''

'' அணி ஆரூர் மணிப்புற்றில்
அமர்ந்தருளும் பரம்பொருளை.''

'' மன்னும் திருவாரூரின் கண்
அவர்தாம் மிகவும் மகிழ்ந்துறைவது.''

'' மின்னொளிர் செஞ்சடை யானை
வேதமுத லானானை
மன்னுபுகழ்த் திருவாரூர் மகிழ்ந்தானை.''

'' பின்னொரு நாள் திருவாரூர்
தனைப் பெருக நினைந்தருளி.''

'' ஆரூர் தொழ நினைந்தே.''

'' வன்றொண்டர் திருவாரூர்
மயங்குமா லையிற்புகுந்து
துன்றுசடைத் தூவாயர்
தமைமுன்னம் தொழவணைந்தார்.''

"திருவாரூர் வீற்றிருந்த பெருமானைத்
திருமூலட்டா னம்சேர் பிஞ்ஞகனை."
"திருவாரூர் ஒரு வீதியிலே சிவலோகம்
முழுதும் காண உளதாமால்."
"திருவாரூர் மன்னவ னார்அம்
மறை யவனார் பால் வந்துற்றார்."
"மலர்புகழ்த் திருவாரூரின் மகிழ்ந்து."
"அண்டர் போற்றும் திருவாரூர்."
"சீரும்திருவும் பொலியும் திருவாரூர்."
"வந்து சேரர் பெருமானார்
மன்னும் திருவா ரூரெய்த."
"செல்வத் திருவாரூர் மேவும்
செம்பொற் புற்றில் இனிதமர்ந்த
வில்வெற் புடையார் கழல்வணங்கி
வீதி விடங்கப் பெருமானை
மல்லற் பவனி சேவித்து."
"பரிசனங்கள் சூழத் திருவா ரூர் இறைஞ்சி."
"திருநாவலூர்வேந்தர் சேரர்குல வேந்தருடன்
வருவாரைத் திருவாரூர் வாழ்வார்க ளெதிர்கொள்ள."
"திருவாரூர் நகராளும் தேவர்பிரான்."
"திருவாரூர் தனைநினைந்து சென்றுதொழுவேன்."
"தேரூரும் நெடுவீதித் திருவாரூர்."
"என்னுயிருக் கின்னுயிராம்
எழிலாரூர்ப் பெருமானை."
"மென்கரும்பும் செயக் கொண்ட
சாலியும்சூழ் திருவாரூர்."
"மருவாரும் குழலுமையாள்
மணவாளன் மகிழ்ந்தருளும் திருவாரூர்."
"திருக்கயிலை வீற்றிருந்த
சிவபெருமான் திருக்கணத்தார்

பெருக்கியசீர்த் திருவாரூர்
பிறந்தார்கள்.''
'' அமரர்நா டாளா தாரூர்
ஆண்டவர் ஆரூர்.''
'' ...வன்றொண்டர்
ஈர மதுவார் மலர்ச் சோலை
எழிலா ரூரில் இருக்கும் நாட்
சேரர் பெருமாள் தனை நினைந்து
தெய்வப் பெருமாள் கழல் வணங்கி.''

என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 227-ஆம் கவியின் கருத்து வருமாறு:

' திருநாவுக்கரசு நாயனார் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களாகிய சாத்திரங்களில் உள்ள பெருமையைப் பெற்று விளங்கும் உண்மைகளை உணர்ந்திருக்கும் நமி நந்தியடிகள் நாயனார் புரிந்து வரும் திருத்தொண்டுகளினுடைய நன்மை யைப் பெற்ற தன்மையாகிய நிலையினால் அந்த நமி நந்தி அடிகள் நாயனாரை பரமேசுவரராகிய வன்மீக நாதரைத் தாம் பாடியருளிய ஒரு திருவிருத்தத்துக்குள் வைத்துப் பாடி யருளித் தேனைப் பொழியும் கொன்றை மலர் மாலையை அணிந்தவராகிய அகிலேசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவாரூர் அரனெறி என்னும் சிவத் தலத்தில் அந்த அகிலேசுவரர் விளங்கும் பான்மையான விதத்தையும் அந்த நாயனார் வாழ்த்தி வணங்கிவிட்டு அழகையுடைய ஒரு திருவீதியில் தமக்கு உரிய உழவாரப் பணியையும், வேறு பல திருப்பணிகளையும் புரிந்துகொண்டு அந்தத் திருவாரூரில் தங்கிக் கொண்டிருக்கும் காலத்தில்.'

பாடல் வருமாறு:

'' நான்மறைநூற் பெருவாய்மை நமிநந்தி
அடிகள் திருத்தொண்டின் நன்மைப்

பான்மைநிலை யால் அவரைப்
பரமர்திரு விருத்தத்துள் வைத்துப்பாடித்
தேன்மருவும் கொன்றையார் திருவாரூர்
அரனெறியில் திகழும் தன்மை
ஆனதிற மும்போற்றி அணிவீதிப்
பணிசெய்துங் கமரும் நாளில்.''

இந்தப் பாடல் குளகம். நான்மறை-திருநாவுக்கரசு நாயனார் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர் வண வேதம்என்னும் நான்கு வேதங்களாகிய. மறை: ஒருமை பன்மை மயக்கம். நூல்-சாத்திரங்களில் சொல்லப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். பெரு-பெருமையைப் பெற்று விளங்கும். வாய்மை-உண்மைகளைத் தெரிந்து கொண்டிருக் கும்; ஒருமை பன்மை மயக்கம். நமி நந்தி அடிகள்-நமி நந்தி அடிகள் நாயனார். திருத்தொண்டின்-புரிந்து வரும் திருத் தொண்டுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நன்மை-நன்மையைப் பெற்ற. ப்:சந்தி. பான்மை-தன்மையாகிய. நிலையால்-நிலைமையினால். அவரை-அந்த நமி நந்தி அடிகள் நாயனாரை. ப்:சந்தி. பரமர்-பரமேசுவரராகிய வன்மீக நாதரை. திருவிருத்தத்துள்-தாம் பாடியருளிய ஒரு திருவிருத்தத்துக்குள். வைத்துப்பாடி-வைத்துப் பாடியருளி. த்:சந்தி. தேன் மருவும்-தேனைப் பொழியும். கொன்றை யார்-கொன்றை மலர் மாலையை அணிந்தவராகிய அகிலே சுவரர். கொன்றை: ஆகுபெயர். திருவாரூர்-திருவாரூரில் உள்ள. அரனெறியில்-அரனெறி என்னும் சிவத்தலத்தில். திக ழும்-அந்த அகிலேசுவரர் விளங்கும். தன்மை ஆன-பான்மை யாகவுள்ள. திறமும்-விதத்தையும். போற்றி-அந்த நாயனார் வாழ்த்தி வணங்கிவிட்டு. அணி-அழகைப் பெற்ற. வீதி-திருவாரூரில் உள்ள ஒரு திருவீதியில். ப்:சந்தி. பணி-தமக்கு உரிய உழவாரத் திருப்பணியையும், வேறு பல திருப்பணி களையும்; ஒருமை பன்மை மயக்கம். செய்து-புரிந்து

கொண்டு. அங்கு-அந்தத் திருவாரூரில். அமரும்-தங்கிக் கொண்டிருக்கும். நாளில்-காலத்தில்.

திருநாவுக்கரசு நாயனார் தாம் பாடியருளிய திருவாரூர்த் திருவிருத்தத்தில் நமி நந்தியடிகள் நாயனாரை வைத்துப் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

" ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன்
 ஆரூர் அகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி
 உத்திரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாதன்
 அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை
 நீணா டறியுமன்றே. "

அந்த நாயனாரை வைத்துப் பாடியருளிய மற்றொரு திருவிருத்தம் வருமாறு:

" துடிக்கின்ற பாம்பரை ஆர்த்துத்
 துளங்கா மதியணிந்து
முடித்தொண்ட ராகி முனிவர்
 பணிசெய்வ தேயுமன்றிப்
பொடிக்கொண்டு பூசிப் புகும்தொண்டர்
 பாதம் பொறுத்த பொற்பால்
அடித்தொண்டன் நந்திஎன் பான்உளன்
 ஆரூர் அமுதினுக்கே. "

பின்னும் அந்த நாயனாரை வைத்துப் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

" கொடிகொள் விதானம் கவரி
 பறைசங்கம் கைவிளக்கே
இடிவில் பெருஞ்செல்வம் எய்துவர்
 எய்தியும் ஊனமில்லா

அடிகளும் ஆரூர் அகத்தினர்
ஆயினும் அம்தவளப்
பொடிகொண் டணிவார்க் கிருளொக்கும்
நந்தி புறப்படிலே. ''

அடுத்து வரும் 228-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு: ' அந்தத் திருநாவுக்கரசு நாயனார் கங்கை யாற்றினுடைய புனல் தங்கியிருக்கும் சடாபாரத்தைத் தம்முடைய திருமுடியில் பெற்றவராகிய மனத்துணை நாதேசுவரர் நிலாவித் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவலிவலத்தையும் அந்த நாயனார் எண்ணி அந்தத் திருவலிவலத்திற்கு எழுந்தருளி கச்சு அமைந்திருக்கும் கொங்கைகளைப் பெற்றவளும் மங்கைப் பருவத்தை அடைந்தவளும் உமாதேவியுமாகிய மாதரசியைத் தம்முடைய வாமபாகத்தில் எழுந்தருளச் செய்தவராகிய அந்த மனத்துணை நாதேசுவரருடைய வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளை வணங்கிவிட்டு மகிழ்ச்சியை அடைந்து ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளி கருமை நிறம் பொருந்தியிருக்கும் நீலமான கறையைக் கொண்ட திருக்கழுத்தைப் பெற்றவராகிய கேடிலியப்பர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கீழ்வேளூர், திருக்கன்றாப்பூர் என்னும் சிவத்தலங்களைச் சேர்ந்து அந்தக் கேடிலியப்பரையும், நடுதறியப்பரையும் பாடியருளித் திருப்தியை அடையாத விருப்பத்தோடு திருவாரூருக்கு மறுபடியும் அந்த நாயனார் வந்து சேர்ந்தார்.'' பாடல் வருமாறு:

'' நீராரும் சடைமுடியார் நிலவுதிரு
வலிவலமும் நினைந்து சென்று
வாராரும் முலைமங்கை உமைபங்கர்
கழல்பணிந்து மகிழ்ந்து பாடிக்
காராரும் கறைக்கண்டர் கீழ்வேளூர்
கன்றாப்பூர் கலந்து பாடி

**ஆராத காதலினால் திருவாரூர்**
**தனில்மீண்டும் அணைந்தார் அன்றே. "**

நீர்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் கங்கையாற்றி னுடைய புனல். ஆரும்-தங்கியிருக்கும். சடை-சடா பாரத்தை. முடியார்-தம்முடைய திருமுடியிற் பெற்றவ ராகிய மனத்துணை நாதேசுவரர். நிலவு-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். திருவலிவலமும்-திருவலி வலத்தையும். நினைந்து-அந்த நாயனார் எண்ணி. சென்று-அந்தத் திருவலிவலத்திற்கு எழுந்தருளி. வார்-கச்சு. ஆரும்-கட்டப் பெற்றிருக்கும். முலை-கொங்கைகளைப் பெற்றவளும்; ஒருமை பன்மை மயக்கம்; ஆகுபெயர். மங்கை-மங்கைப் பருவத்தை அடைந்தவளும். உமை-உமா தேவியும் ஆகிய மாதரசியை. பங்கர்-தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்தவராகிய அந்த மனத்துணை நாதேசுவரருடைய. கழல்-வெற்றிக் கழலைப் பூண்டு விளங் கும் திருவடிகளை; ஆகுபெயர். பணிந்து-வணங்கிவிட்டு. மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. பாடி-ஒரு திருப்பதிகத்தை அந்த நாயனார் பாடியருளி. க்:சந்தி. கார்-மேகத்தைப் போன்ற நீல நிறம். ஆரும்-பொருந்தியிருக்கும். கறை-கறையைக் கொண்ட. க்:சந்தி. கண்டர்-திருக்கழுத்தைப் பெற்றவராகிய கேடிலியப்பர். கீழ்வேளூர்-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருக்கீழ்வேளூருக்கும். கன்றாப்பூர்-திருக்கன்றாப்பூருக்கும். கலந்து-எழுந்தருளிச் சேர்ந்து. பாடி-அந்தக் கேடிலியப்பரையும், நடுதறியப்பரை யும் திருப்பதிகங்களால் பாடியருளி. ஆராத-திருப்தியை அடையாத. காதலினால்-விருப்பத்தோடு; உருபு மயக்கம். திருவாரூர்தனில்-திருவாரூருக்கே; உருபுமயக்கம்; தனில் இடைக்குறை. தன்:அசைநிலை. மீண்டும்-மறுபடியும். அணைந்தார்-அந்த நாயனார் வந்து சேர்ந்தார். அன்று, ஏ:இரண்டும் ஈற்றசை நிலைகள்.

திருவலிவலம்: இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் மனத்துணை நாதேசுவரர். அம்பிகை வாளையங்கண்ணியம்மை. தல விருட்சம் புன்னை மரம். இது திருவாரூருக்குத் தென்கிழக்குத் திசையில் ஆறு மைல் தூரத்தில் உள்ளது. இதற்கு வடக்குத் திசையில் கன்றாப்பூர் இருக்கிறது. இது சூரியனும், காரண முனிவரும், ஒரு கரிக்குருவியும் வழிபட்ட தலம். மனத்துணை நாதேசுவரருடைய சந்நிதி ஒரு கட்டுமலையின்மேல் உள்ளது. ஆலயத்தைச் சுற்றிக் கிழக்குப் பக்கத்தைத் தவிர மற்ற எல்லாப் பக்கங்களிலும் மாலையிட்டதைப் போல ஓடை ஒன்று விளங்குகிறது. இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"நல்லான்காண் நான்மறைகளாயி னான்காண்
நம்பன்காண் நணுகாதார் புரமூன் றெய்த
வில்லான்காண் விண்ணவர்க்கு மேலானான்காண்
மெல்லியலாள் பாகன்காண் வேத வேள்விச்
சொல்லான்காண் சுடர்மூன்று மாயினான்காண்
தொண்டாகிப் பணிவார்க்குத் தொல வானீய
வல்லான்காண் வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான் காண வனென் மனத்துளானே."

இந்தத் தலத்தைப் பற்றிப் பழந்தக்கராகப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

"ஒல்லை யாறிஉள்ளம் ஒன்றிக்
கள்ளம் ஒழிந்து வெய்ய
சொல்லை யாறித்தூய்மை செய்து
காம வினை அகற்றி
நல்லவாறே உன்றன் நாமம்
நாவில் நவின் றேத்த

வல்லவாறே வந்து நல்காய்
வலிவலம் மேய வனே.''

அந்த நாயனார் வியாழக்குறிஞ்சிப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுதல்
ஏவியல் கணைபிணை எதிர்விழி உமையவள்
மேவிய திருவுரு உடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலமுறை இறையே.''

திருநாவுக்கரசு நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய மற்றொரு திருத்தாண்டகம் வருமாறு :

'' ஊனவன்காண் உடல்தனக்கோர் உயிரானான் காண்
உள்ளவன்காண் இல்லவன்காண் உமையாட் கென்றும்
தேனவன்காண் திருவவன்காண் திசையா னான்காண்
தீர்த்தன்காண் பார்த்தன்றன் பணியைக் கண்ட
கானவன்காண் கடலவன்காண் மலையா னான்காண்
களியானை யீருரிவை கதறப் போர்த்த
வானவன்காண் வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே.''

இந்தத் தலத்தைப் பற்றித் தக்கேசிப் பண்ணில் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

'' ஊனங்கத் துயிர்ப் பாய்உல கெல்லாம்
ஓங்கா ரத்துரு ஆகிநின் றானை
வானங் கத்தவர்க் கும்அளப் பரிய
வள்ள லைஅடி யார்கள்தம் உள்ளத்
தேனங் கத்தமு தாகஉள் ளூறும்
தேச னைத்திளைத் தற்கினி யானை
மானங் கைத்தலத் தேந்தவல் லானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே.''

பிறகு வரும் 229-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

• அந்தத் திருவாரூரில் மேவிய திருவாதிரைத் திருநாளில் வீதிவிடங்கப் பெருமானுடைய திருவுலாவில் தேவர்களோடு முனிவர்களும் அவருடைய சந்நிதியில் அவரை வணங்கும் அடியவர்களோடு அவரை வணங்கிவிட்டு அந்தர் மத்திய பாதலமாகிய மூன்று உலகங்களில் வாழ்பவர்களும் களிப்பு மிகுதியாக உண்டாகுமாறு எழுந்தருளி வரும் பெருமையை யும் முறைமையையும் ஆகிய எல்லாவற்றையும் பார்த்து விட்டு அந்த வீதிவிடங்கப் பெருமானை வாழ்த்தி வணங்கி ஒப்பற்ற திருநாவுக்கரசு நாயனார் விரும்பும் காலத்தில் நம்ப ராகிய அந்த வீதிவிடங்கப் பெருமான் வழங்கிய திருவருளி னால்.' பாடல் வருமாறு :

**" மேவுதிரு வாதிரைநாள் வீதிவிடங்**
**கப்பெருமான் பவனி தன்னில்**
**தேவருடன் முனிவர்கள்முன் சேவிக்கும்**
**அடியார் களுடன்சே வித்து**
**மூவுலகும் களிகூர வரும்பெருமை**
**முறைமையெலாம் கண்டு போற்றி**
**நாவினுக்குத் தனியரசர் நயக்கும்நாள்**
**நம்பர்திரு அருளி னாலே."**

இந்தப் பாடல் குளகம். மேவு-அந்தத் திருவாரூரில் வந்த. திருவாதிரை நாள்-திருவாதிரைத் திருநாளில். வீதி விடங்கப் பெருமான்-வீதிவிடங்கப் பெருமானுடைய. பவனி தன்னில்-திருஉலாவில்; தன்:அசைநிலை. தேவருடன்-தேவர்களோடு; ஒருமை பன்மை மயக்கம். முனிவர்கள்-முனிவர்களும். முன்-அவருடைய சந்நிதியில். சேவிக்கும்-வணங்கும். அடியார்களுடன்-அடியவர்களோடு. சேவித்து-அவரை வணங்கிவிட்டு. மூவுலகும்-அந்தர் மத்திய பாதலம் என்னும் மூன்று உலகங்களிலும் வாழ்பவர்கள். உலகு:ஒருமை பன்மை மயக்கம். அந்தர் உலகத்தில் வாழ்பவர்கள் தேவர் கள். மத்திய உலகத்தில் வாழ்பவர்கள் ஆடவர்களும் பெண் மணிகளும். பாதல உலகத்தில் வாழ்பவர்கள் நாகராஜாக்

கள். உலகும்: இடஆகுபெயர். களி-களிப்பு. கூர-மிகுதியாக உண்டாகுமாறு. வரும்-எழுந்தருளி வரும். பெருமை-பெருமையையும். முறைமை-முறைமையையும். எலாம்-ஆகிய எல்லாவற்றையும்; இடைக்குறை. கண்டு-பார்த்துவிட்டு. போற்றி-அந்த வீதிவிடங்கப் பெருமானை வாழ்த்தி வணங்கிவிட்டு. நாவினுக்குத் தனியரசர்-ஒப்பற்றவராகிய திருநாவுக்கரசு நாயனார். நயக்கும்-விரும்பும். நாள்-காலத்தில். நம்பர்-தன்னை வணங்கும் அடியவர்களுக்குப் பல வகையாகிய நம்பிக்கைகளை உண்டாக்குபவராகிய அந்த வீதிவிடங்கப் பெருமானார். திரு அருளினால்-வழங்கிய திருவருளினால், ஏ: ஈற்றசை நிலை.

அடுத்து வரும் 230-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருப்புகலூரில் வீற்றிருந்தருளும் சிவபெருமானாகிய அக்கினீசுவரனுடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்து விளங்கும் திருவடிகளைத் தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டுவிட்டு அந்த ஈசுவரரைத் துதிக்கும் விருப்பத்தைப் பெற்ற திருவுள்ளத்தில் உண்டாகிப் பொங்கி எழும் காதலைப் புரியும் விருப்பம் மிகுதியாக உண்டாகச் சம்மதிப்பவராகி அந்த நாயனார் திருவாரூருக்கு எழுந்தருளி ஒருவாறு வன்மீக நாதரை வணங்கிவிட்டுப் பிறகு அந்தத் திருவாரூரை விட்டுவிட்டு தம்முடைய திருவுள்ளத்தில் செல்ல வேண்டும் என்னும் விருப்பத்தை வைத்துக் கொண்டு இமயமலை அரசனுடைய புதல்வியும், மடப்பத்தைக் கொண்டவளும், பொம்மையைப் போல என்றும் நீங்காத அழகை உடையவளும் ஆகிய பார்வதி தேவியைத் தம்முடைய வாமபாகத்தில் எழுந்தருளச் செய்த சிவபெருமான்கள் திருக்கோயில்கள் உள்ள வேறு பல தலங்களுக்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானார்களை வணங்கிவிட்டு மீண்டும் திருவாரூருக்கே எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

" திருப்புகலூர் அமர்ந்தருளும் சிவபெருமான்
சேவடிகள் கும்பிட் டேத்தும்
விருப்புடைய உள்ளத்து மேவிஎழும்
காதல்புரி வேட்கை கூர
ஒருப்படுவார் திருவாரூர் ஒருவாறு
தொழுதகன்றங் குள்ளம் வைத்துப்
பொருப்பரையன் மடப்பாவை இடப்பாகர்
பதிபிறவும் பணிந்து போந்தார்."

திருப்புகலூர்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருப்புகலூரில். அமர்ந்தருளும்-வீற்றிருந்தருளும். சிவபெருமான்-சிவபெருமானாகிய அக்கினீசுவரனுடைய. சேவடிகள்-செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்து விளங்கும் திருவடிகளை. கும்பிட்டு-தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டுவிட்டு. ஏத்தும்-அந்த அக்கினீசுவரரைத் துதிக்கும். விருப்புஉடைய-விருப்பத்தைப் பெற்ற. உள்ளத்து-தம்முடைய திருவுள்ளத்தில். மேவி-உண்டாகி. எழும்-பொங்கி எழும். காதல்-காதலை. புரி-செய்யும். வேட்கை-விருப்பம்; செல்ல வேண்டும் என்ற விருப்பம். கூர-மிகுதியாக உண்டாக. ஒருப்படுவார்-அந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தீர்மானித்தவராகி; முற்றெச்சம். திருவாரூர்-திருவாரூருக்கு எழுந்தருளி. ஒருவாறு-ஒருவகையாக. தொழுது-வன்மீக நாதரை வணங்கிவிட்டு. அகன்று-அந்தத் திருவாரூரைவிட்டு நீங்கி. அங்கு-அந்தத் திருவாரூரில். உள்ளம்-தம்முடைய திருவுள்ளத்தை. வைத்து-வைத்துவிட்டு. ப்:சந்தி. பொருப்பரையன்-இமயமலை அரசனுடைய புதல்வியும்; ஆகுபெயர். மட-மடப்பத்தைப் பெற்றவளும்; ஆகுபெயர். ப்:சந்தி. பாவை-பொம்மையைப் போல என்றும் அழியாத அழகை உடையவளும் ஆகிய; உவம ஆகுபெயர். இடப்பாகர்-பார்வதி தேவியைத் தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்வித்த சிவபெருமானார்களை. பதி-அவர்கள் திருக்

கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பிறவும்-மற்றவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி. பணிந்து-அந்தத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானார்களை வணங்கிவிட்டு. போந்தார்-மீண்டும் திருவாரூருக்கே எழுந்தருளினார்.

திருப்புகலூர்: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் அக்கினீசுவரர், கோணப்பிரான் என்பவை. அம்பிகை கருந்தாழ்குழலி அம்மை. தீர்த்தம் அக்கினி தீர்த்தம். தலவிருட்சம் கொன்றைமரம். இது நன்னிலத்திலிருந்து கிழக்குத் திசையில் நான்கு மைல் தூரத்தில் உள்ளது. இது அக்கினி தேவன் வழிபட்ட தலம். தெற்குப் பக்கத்தைத் தவிர மற்ற எல்லாப் பக்கங்களிலும் கருங்கல்லினால் கட்டப் பெற்ற அகழி உள்ளது. கோணப்பிரானுடைய திருவுருவம் சற்றுச் சாய்ந்திருக்கிறது. இந்த ஆலயத்தில் சந்திரசேகரர் சந்நிதி சிறப்புடையது. அந்தச் சந்நிதிக்கு நேரில் அக்கினி பகவானுடைய திருவுருவம் இருக்கிறது. திருநாவுக்கரசு நாயனார் முத்தியை அடைந்த தலம் இது. இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் வாதாபி கணபதியினுடைய திருவுருவத்திற்கு அருகில் திருநாவுக்கரசுநாயனாருடைய திருவுருவம் உள்ளது. முன்புள்ள பிராகாரத்தில் கிழக்குப்பக்கத்தில் கோணப்பிரான் சிங்க உருவமாய் திருநாவுக்கரசு நாயனாரை விழுங்கும் காட்சி கல்லிற் காட்டப் பெற்றிருந்தது. இப்போது அதைச் செதுக்கிவிட்டார்கள். திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம் இந்தத் திருக்கோயிலுக்குள் இருக்கிறது. அக்கினீசுவரருக்குப் பல வகையாகிய மலர் மாலைகளைக் கட்டி வழங்கும் திருத்தொண்டினைப் புரிந்து வந்த முருக நாயனாருடைய திருவவதாரத் தலம் இது. சுந்தரமூர்த்தி நாயனார் பள்ளி கொண்டு உறங்கிய போது அவர் தம்முடைய தலைக்கு அணையாக வைத்துக் கொண்டிருந்த செங்கற்

கள் எல்லாவற்றையும் செம்பொற்கற்களாக மாறியிருப் பதைப் பார்த்து,

"தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்பினும் தொண்டர்த் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலும்ஆம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே."

என்று பாடியருளினார். இந்தத் தலத்துக்கு உரிய தேவாரத்தில், "புன்னைப் பொழிபுக லூரண்ணல் செய்வன கேண்மின்களோ" என்றும், "புன்னைத் தாது பொழிற் புகலூரரை" என்று வருவனவற்றால் இந்தத் தலத்தின் விருட்சம் புன்னைமரம் என்பதும், "கரம் நாலைந்துடைத், தோணற்பிரானை வலிதொலைத் தோன்தொல்லை நீர்ப் புகலூர்க், கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடு வினையே." என்பதனால் சிவபெருமானுடைய திருநாமம் கோணப்பிரான் என்பதும், "பெருந்தாழ் சடைமுடி மேற் பிறைசூடிக், கருந்தாழ் குழலியும் தாமும் கலந்து" என்று வருவதனால் அம்பிகையின் திருநாமம் கருந்தாழ் குழலி என்பதும், வர்த்தமானீச்சுரத்தைப் பற்றிய ஒரு திருப்பதிகத்தில், "தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலும் சாந்தமும் புகையும், கொண்டு கொண்டடி பரவிக்குறிப்பறி முருகன் செய் கோலம்" என்று வருவ தனால் முருக நாயனாருடைய திருப்பணியின் சிறப்புப் புலனாகும். இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகணி இல்லேன்

கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.''

இந்தத் திருப்பதிகத்தில் உள்ள இறுதித் திருத்தாண்டகம் வருமாறு :

"ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏவக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.''

இது அந்த நாயனார் இறைவன் திருவடிகளைச் சேருவதற்குமுன் பாடியருளியது.

இந்தத் தலத்தைப் பற்றி நட்டபாடைப் பண்ணில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"குறிகலந்தஇசை பாடலி னான்நசை
யாலிவ் வுலகெல்லாம்
நெறிகலந்ததொரு நீர்மைய னாய்எரு
தேறிப் பலிபேணி
முறிகலந்ததொரு தோலரை மேலுடை
யானிடம் மொய்ம் மலரின்
பொறிகலந்த பொழில் சூழ்ந்தய
லேபுயல்ஆரும் புகலூரே.''

அந்த நாயனார் செவ்வழிப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"வெங்கள் விம்மு குழல் இளையர்
ஆடல்வெறி விரவுநீர்ப்
பொங்கு செங்கட் கருங்க யல்கள்
பாயும் புகலூர்தனுள்
திங்கள் சூடித் திரிபுரம்மொ
ரம்பால் எரியூட்டிய
எங்கள் பெம்மான் அடிபரவ
நாளும் இடர் கழியுமே."

இந்தத் தலத்தைப் பற்றிச் சுந்தர மூர்த்தி நாயனார் கொல்லிப் பண்ணில் பாடியருளிய மற்றொரு பாசுரம் வருமாறு:

"மிடுக்கிலா தானை விமனேவிறல்
விசய னேவில்லுக் கிவனென்று
கொடுக்கிலா தானைப் பாரியே என்று
கூறினும் கொடுப் பார்இலை
பொடிக்கொள் மேனிஎம் புண்ணி
யன்புக லூரரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்கு மேல் அமர்உலகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே."

பிறகு வரும் 231-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தக் காலத்தில் ஆளுடைய பிள்ளையாராகிய திரு ஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்புகலியாகிய அந்தச் சீகாழியிலிருந்தும் பற்களைப் பெற்ற பாம்புகளாகிய அணி கலன்களை அணிந்தவராகிய சிவபெருமானார் எழுந்தருளி யுள்ள திருத்தலங்கள் பலவற்றிற்கும் எழுந்தருளி அந்தத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கிவிட்டு மேலே எழுந்தருள்பவராகி புன்னை மரங் களில் பூத்த மலர்கள் நறுமணம் கமழும் பூம்புகலூருக்கு எழுந்தருளி அக்கினீசுவரரை வணங்கிவிட்டு ஒப்பு இல்லாத சீர்த்தியைப் பெற்றவரும், மின்னலைப் போல அமைந்

திருக்கும் புரிகளை உடைய முந்நூலாகிய பூணூலை அணிந் திருக்கும் முருக நாயனாருடைய திருமடத்திற்கு எழுந் தருளும் காலத்தில்.' பாடல் வருமாறு:

"அந்நாளில் ஆளுடைய பிள்ளையார்
திருப்புகலி அதன்கண் நின்றும்
பன்னாகப் பூணணிவார் பயின்றதிருப்
பதிபலவும் பணிந்து செல்வார்
புன்னாகம் மணம்கமழும் பூம்புகலூர்
வந்திறைஞ்சிப் பொருவில் சீர்த்தி
மின்னாரும் புரிமுந்நூல் முருகனார்
திருமடத்தில் மேவும் காலை."

இந்தப் பாடல் குளகம். அந்நாளில்-அந்தக் காலத்தில். ஆளுடைய பிள்ளையார்-ஆளுடைய பிள்ளையாராகிய திரு ஞான சம்பந்த மூர்த்தி நாயனார். திருப்புகலி-திருப்புகலி யாகிய. அதன்கண் நின்றும்-அந்தச் சீகாழியிலிருந்தும். 'பல்-பல' எனலும் ஆம்; 'பற்களை உடைய'; ஒருமை பன்மை மயக்கம். நாக-நாகப் பாம்புகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பூண்-அணிகலன்களை; ஒருமை பன்மை மயக்கம். அணிவார்-அணிந்தவராகிய சிவபெருமா னார். பயின்ற-எழுந்தருளியுள்ள. திரு-அழகிய. ப்:சந்தி. பதி-தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பலவும்-பலவற்றிற்கும் எழுந்தருளி. பணிந்து-அந்தத் தலங்களில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெரு மான்களை வணங்கிவிட்டு. செல்வார்-மேலே எழுந்தருள்பவராகி; முற்றெச்சம். புன்னாகம்-புன்னைமரத்தில் மலர்ந்திருக்கும் மலர்கள்; ஆகுபெயர். மணம்கமழும்-நறுமணத்தை வீசும். பூம்புகலூர்-பூம்புகலூ ருக்கு. வந்து-எழுந்தருளி. இறைஞ்சி-அக்கினீசுவரரை வணங்கிவிட்டு. ப்:சந்தி. பொரு-ஒப்பு. இல்-இல்லாத; கடைக்குறை. சீர்த்தி-சீர்த்தியைப் பெற்றவரும்; வினை

யாலணையும் பெயர். மின்-மின்னலைப் போல. ஆரும்-ஒளியை வீசி அமைந்திருக்கும். புரி-புரிகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். முந்நூல்-மூன்று நூல்கள் அடங்கிய பூணூலை. நூல்: ஒருமை பன்மை மயக்கம். முருகனார்-அணிந்திருக்கும் முருக நாயனாருடைய. திரு-அழகிய. மடத்தில்-திருமடத்திற்கு; உருபு மயக்கம். மேவும்-எழுந்தருளும். காலை-காலத்தில்.

பிறகு வரும் 232-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி அழகைப் பெற்ற திருவாரூர் ஆலயத்தில் உள்ள நாக மாணிக்கத்தை உமிழும் பாம்புப் புற்றில் வீற்றிருந்து வாழும் நீளமாக உள்ள ஒளியை வீசும் பெருமையைப் பெற்ற மாணிக்கத்தைப் போன்றவன்மீக நாதரை அந்த நாயனார் தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டு நெடுங்காலமாகப் புகழ் பெற்று விளங்கும் திருப்புகலூரை நோக்கித் திரும்பி எழுந்தருளினார் எனத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் கேள்விப்பட்டருளி அவரை எதிர் கொண்டு வரவேற்கும் விருப்பத்தோடும் கூடியுள்ள பெருமையைப் பெற்ற திருத் தொண்டர்கள் கூடியுள்ள கூட்டம் தம்மைப் பக்கத்தில் சுற்றிவர எழுந்தருளி அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு எதிரில் எழுந்தருளினார்.'

பாடல் வருமாறு:

**"ஆண்டஅர செழுந்தருளி அணியாரூர்**
**மணிப்புற்றில் அமர்ந்து வாழும்**
**நீண்டசுடர் மாமணியைக் கும்பிட்டு**
**நீடுதிருப் புகலூர் நோக்கி**
**மீண்டருளி னாரென்று கேட்டருளி**
**எதிர்கொள்ளும் விருப்பி னோடும்**
**ஈண்டுபெருந் தொண்டர் குழாம்**
**புடைசூழ எழுந்தருளி எதிரேசென்றார்."**

ஆண்ட-திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட. அரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். எழுந்தருளி அணி-எழுந்தருளி அழகைப் பெற்ற. ஆரூர்-திருவாரூர் திருக்கோயிலில் உள்ள. மணி-நாகமாணிக்கத்தை உமிழும். ப்: சந்தி. புற்றில்-பாம்புப் புற்றில். அமர்ந்து-வீற்றிருந்து. வாழும்-எழுந்தருளியிருக்கும். நீண்ட-நீளமாக உள்ள. சுடர்-ஒளியை வீசும். மா-பெருமையைப் பெற்ற. மணியை-மாணிக்கத்தைப் போன்ற வன்மீகநாதரை. க்: சந்தி. கும்பிட்டு-அந்த நாயனார் தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டு. நீடு-நெடுங் காலமாகப் புகழ் பெற்று விளங்கும். திருப்புகலூர்-திருப்புகலூரை. நோக்கி-பார்த்து. மீண்டு-திருப்பி. அருளினார்-எழுந்தருளினார். என்று-என. கேட்டருளி-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் கேள்விப்பட்டருளி. எதிர் கொள்ளும்-அவரை எதிர் கொண்டு வரவேற்கும். விருப்பினோடும்-விருப்பத்தோடும். ஈண்டு-கூட்டமாகக் கூடியுள்ள. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். தொண்டர்-திருத்தொண்டர்கள்; ஒருமை பன்மை மயக்கம். குழாம்-கூடியுள்ள கூட்டம். புடை-தம்மைப் பக்கத்தில். சூழ-சுற்றி வர. எழுந்தருளி-அந்த நாயனார் எழுந்தருளி. எதிர்-திருநாவுக்கரசு நாயனாருக்கு எதிரில். ஏ: அசை நிலை. சென்றார்-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் எழுந்தருளினார்.

சிவபெருமானுக்கு மாணிக்கம் உவமை: "அருள் செய்யும் மணியான்.", "மஞ்சனே மணியே.", "மாணிக்கத் தொத்தினை.", "மாறிலா மணியே.", "என் பொன் என் மணி என்ன ஏத்துவார்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "சுண்ண வெண்ணீற்றானே மணியானே.", "கோலக்காவிற் குரு மணியை.", "மருகல் உறையும் மாணிக்கத்தை.", "துருத்தி மேய தூ மணியை.", "ஆலவாய் எம் அருமணியை.", "மணியே பொன்னே

மைந்தா.'', ''மஞ்சனே மணியும் ஆனாய்.'', ''முத்தினை மணியைப் பொன்னை.'', ''முத்தினை மணியைப் பவளத் தொளிர் தொத்தினை.'', ''கதிர் மாமணித் தேசனை.'', ''மன்மணியை.'', ''திருமணியைத் தித்திக்கும் தேனை.'', ''முத்தினை மணிதன்னை மாணிக்கத்தை.'', ''ஒரு மணியை உலகுக்கோர் உறுதி தன்னை.'', ''பெறற்கரிய மாணிக் கத்தை.'', ''வயிரமுமாய் மாணிக்கம் தானே ஆகி.'', ''இப்பொன் நீ இம்மணி நீ.'', ''பொன்னானாய் மணியா னாய்'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''அருமணியை முத்தினை.'', ''மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக் கமே.'', ''வாளார் கண்ணி பங்கா மழபாடியுள் மாணிக் கமே.'', ''மைம்மாம் பூம் பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே.'', ''வண்டார் பூம் பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே.'', ''மண்ணார் பூம் பொழில் சூழ் மழபாடி யுள் மாணிக்கமே.'', ''மாளா நாளருளும் மழபாடியுள் மாணிக்கமே.'', ''மைந்தார் சோலைகள் சூழ் மழபாடியுள் மாணிக்கமே.'', ''மையார் பூம் பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே.'', ''மறிசேர் அங்கையனே மழபாடியுள் மாணிக்கமே.'',''முத்தினை மாமணி தன்னைவயிரத்தை.'', ''மலைத்த செந்நெல்வயல்வாழ் கொளிபுத்தூர் மாணிக் கத்தை.'', ''மடைக்கண் நீல மலர் வாழ் கொளிபுத்தூர் மாணிக்கத்தை.'', ''வந்தென் உள்ளம் புகும் வாழ் கொளி புத்தூர் மாணிக்கத்தை.'', ''மடந்தை பாகனை வாழ்கொளி புத்தூர் மாணிக்கத்தை.'', ''வளைத்த வில்லியை வாழ் கொளிபுத்தூர் மாணிக்கத்தை.'', ''செங்கண் வேடனாய் என்னொடும் வந்து மருவினான்தனை வாழ் கொளிபுத்தூர் மாணிக்கத்தை.'', ''மண்ணி வந்து வந்திழி வாழ் கொளி புத்தூர் மாணிக்கத்தை.'', ''வாளை பாய் வயல் வாழ் கொளிபுத்தூர் மாணிக்கத்தை.'', ''மருந்தனான்றனை வாழ் கொளிபுத்தூர் மாணிக்கத்தை.'', ''மைகொள் கண்டனை வாழ் கொளிபுத்தூர் மாணிக்கத்தை.'', ''வளம் கிளர்

பொழில்வாழ் கொளிபுத்தூர் மாணிக்கத்தை.'', ''மாதினை மதித்தங் கோர் பால் கொண்ட மணியை.'', ''வானோர் மாமணி மாணிக்கத்தை.'', ''பூவில் வாசத்தைப் பொன்னினை மணியை.'', ''மங்கை பங்கனை மாசிலா மணியை.'', ''மணியினைப் பணிவார் வினை கெடுக்கும் வேதனை.'', ''மாசிலா மணியே மறைப் பொருளே.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க.'', ''கூடல் இலங்குருகுமணிபோற்றி.'', ''ஆடகச் சீர் மணிக்குன்றே.'', ''என்னைக் கழுமணியே.'', ''தொடற்கரியாய் சுடர் மாமணியே.'', ''மணி நீ ஒளித்தாய்க்கு.'', ''என் பொல்லா மணியை.'', ''புகழப் பெறுவதென்று கொலோ என் பொல்லா மணியை.'', ''புரிந்து நிற்பதென்று கொலோ என் பொல்லா மணியைப் புணர்ந்தே.'', ''புணையப் பெறுவ தென்று கொலோ என் பொல்லா மணியைப் புணர்ந்தே.'', ''வம்பனேன் தன்னை ஆண்ட மாமணியே.'', ''என் சிந்தை வைத்த சிகாமணி.'', ''அம்பலத்தாடுகின்ற என் பொல்லா மணியை.'', ''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே.'', ''எளியையாய் ஆண்ட ஈசனே மாசிலாமணியே.'', ''முத்தனையானே மணியனையானே.'', ''மாசில் மணியின் மணி வார்த்தை.'', ''இந்து சிகாமணி.'', ''காத்தாட் கொள்ளும் குருமணியே.'', ''ஏதா மணியே.'' என்று மாணிக்கவாசகரும், ''திரள்மணிக்குன்றே.'', ''சுடர் மணி விளக்கின் உள்ஒளி விளங்கும் தூய நற் சோதியுட் சோதீ.'', ''நிகரிலா மணியே.'' என்று திருமாளிகைத் தேவரும், ''மற்றவர் அறியா மாணிக்க மலையை.'', ''என்மாறிலா மணியை.'', ''கொண்டம் கண்டத்தெம் குரு மணியை.'', ''புராண சிந்தாமணி.'' என்று சேந்தனாரும், ''ஆரணம் பொழியும் பவளவாய் மணியே.'', ''வளரொளிமணி நெடுங் குன்றே.'', ''பன்னகா பரணா பவள வாய்மணியே.'', ''பாடிலா மணியே.'', ''முழுமணித் திரள்.'' என்று கருவூர்த்

தேவரும், "மாணிக்கத்துள்ளே மரகதச் சோதியாய், மாணிக்கத்துள்ளே மரகத மாடமாய்.", "பயன் எளிதாம்பருமாமணி.", "மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனை." என்று திருமூலரும், "மணியினை மாமறைக் காட்டு மருந்தினை." என்று நம்பியாண்டார் நம்பியும், "பொன்னார் மேனி மணிவெற்பை.", "வாய்ந்த மிழலை மாமணியை.", "மன்னும் செல்வ மறைக்காட்டு மணியின் பாதம் மனத்தின் கண் உன்னி.", "மலைவல்லி தழுவக் குழைந்த மணிமேனிப் பெருவாழ்வினை.", "மலைச் சிகரச் சிகாமணியின் மருங்குற.", "திருக்கோடி காவமர்ந்த தேவர்சிகாமணி தன்னை.", "மழபாடி வயிர மணித் தூண்.", "பசுபதீச்சரத்தினிதிருந்த மணியை.", "கண்ணாரும் அருமணியைக் கர்ரோணத்தாரமுதை.", "திருநல்லம் நீடு மாமணியை.", "பாம்பு மருவு நெடுஞ்சடை மவுலி மாணிக்க வண்ணர்.", "நீடு திரு வாஞ்சியத்தில் அமர்ந்த முக்கண் நீலமிடற்றருமணியை.", "வேதவனத் தருமணியை மீண்டும் புக்குப் பாதமுறப்பணிந்தெழுந்து.", "நீடு மறைக் காட்டருமணியை.", "மன்னும் இராமேச்சுரத்து மாமணியை." என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 233-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு :

'நீர்க் காக்கைகள் மிகுதியாக உள்ள தடாகமும், பொய்கையும் விளங்கும் சீகாழியில் வாழும் மக்களுக்கு அரசராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் எதிரில் எழுந்தருளும் விருப்பத்தை உண்டாக்கும் செய்தியைக் கேள்விப்பட்டருளி பொங்கி எழும் பளிங்கைப் போன்ற நீர் நிரம்பிய நீர் நிலைகளைப் பெற்ற திருப்புகலூரை நோக்கி எழுந்தருளும் வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் மகிழ்ச்சியை அடைந்து அந்தத் திருப்புகலூருக்கு எழுந்தருளினார். கூட்டமாகக் கூடிக் கொண்டு வரும் விபூதியைத் தங்களுடைய திருமேனிகள் முழுவதும் பூசிக் கொண்ட திருத்தொண்டர்களினுடைய

கூட்டம் இரண்டு பக்கங்களிலும் சேர்ந்து கொண்டு வந்த சமயத்தில் இரண்டு சந்திரர்கள் எழும் சமுத்திரங்கள் ஒன்றாகச் சேர்ந்து அடைந்தன என்பதைப் போல அமைந்திருந்தன.' பாடல் வருமாறு:

**'' கரண்டம்மலி தடம் பொய்கைக்**
**காழியர்கோன் எதிரணையும் காதல்கேட்டு**
**வரன்றுமணிப் புனற்புகலூர் நோக்கிவரும்**
**வாகீசர் மகிழ்ந்து வந்தார்;**
**திரண்டுவரும் திருநீற்றுத் தொண்டர்குழாம்**
**இருதிறமும் சேர்ந்த போதில்**
**இரண்டுநில வின்கடல்கள் ஒன்றாகி**
**அணைந்தனபோல் இசைந்த அன்றே. ''**

கரண்டம்-நீர்க் காக்கைகள்; ஒருமை பன்மை மயக்கம். மலி-மிகுதியாக உள்ள. தடம்-தடாகத்தையும். பொய்கை-மனிதர் ஆக்காத நீர் நிலையையும் கொண்ட. க்:சந்தி. காழியர்-சீகாழியில் வாழும்மக்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். கோன்-அரசராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். எதிர்-தமக்கு எதிரில். அணையும்-எழுந்தருளும். காதல்-விருப்பத்தை உண்டாக்கும் செய்தியை; ஆகுபெயர். கேட்டு-கேள்விப்பட்டருளி. வரன்று-வாரிக்கொண்டு வந்து. மணி-மாணிக்கங்களை; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. புனல் நீர் நிரம்பிய ஆறு; ஆகுபெயர். புகலூர்-ஓடும் திருப்புகலூரை. நோக்கி-அடைவதற்கு எண்ணி. வரும்-எழுந்தருளும். வாகிசர்-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. வந்தார்-அந்தத் திருப்புகலூருக்கு எழுந்தருளினார். திரண்டுவரும்-கூட்டமாகக் கூடிக் கொண்டுவரும். திருநீற்று-விபூதியைத் தங்களுடைய திருமேனிகள் முழுவதும் பூசிக்கொண்ட. த்:சந்தி. தொண்டர்-திருத்தொண்டர்களினுடைய; ஒருமை பன்மைமயக்கம்.

குழாம்-கூட்டம். இரு-இரண்டு. திறமும்-பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். சேர்ந்த-சேர்ந்து கொண்டுவந்த. போதில்-சமயத்தில். இரண்டு நிலவின்-இரண்டு சந்திரர்கள் எழும்; ஒருமை பன்மை மயக்கம். கடல்கள்-இரண்டு சமுத்திரங்கள். ஒன்று ஆகி-ஒன்றாகச் சேர்ந்து. அணைந்தன - அடைந்தன. போல்-என்பதைப் போல. இசைந்த-அமைந்திருந்தன. அன்று, ஏ: இரண்டும் ஈற்றுஅசை நிலைகள். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் அவரோடு பல திருத்தொண்டர்களும். திருநாவுக்கரசு நாயனாரும் அவ ரோடு பல தொண்டர்களும் தங்களுடைய திருமேனிகளின் முழுவதும் விபூதியைப் பூசிக்கொண்டு வந்தது, இரண்டு சந்திரன்கள் எழுந்த இரண்டு கடல்களைப் போலத் தோன்றியது.

அடுத்து வரும் 234-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கு எதிரில் எழுந்தருளி அந்த நாயனாரை வணங்க, சிரபுரமாகிய சீகாழியில் திருவவதாரம் செய் தருளிய தெய்வத் தன்மையைப் பெற்ற திருவாயினுடைய தன்மையையும், பெருமையையும் பெற்ற திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாராகிய ஆண்குழந்தையார் அந்தத் திருநாவுக்கரசருக்கு எதிரில் அவரைப் பணிந்து விட்டு, "அப்பர் சுவாமிகளே, தேவரீர் எழுந்தருளும் தினத்தில் திரு வாரூரில் நடந்த பெருமையை வகைப்படுத்தித் திருவாய் மலர்ந்தருளிச் செய்வீராக" என அந்தத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய, அருமை யாகிய சிவபெருமானுடைய திருநாமமாகிய ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்களும் அடங்கிய பஞ்சாட்சரத்தை உச்சரித்துப் பழகிய திருவாயின் தன்மையைப் பெற்ற அந்தத் திருநாவுக்கரசு நாயனாரும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்கு எதிரில் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு:

" திருநாவுக் கரசர் எதிர்சென் றிறைஞ்சச்
சிரபுரத்துத் தெய்வ வாய்மைப்
பெருஞான சம்பந்தப் பிள்ளையார்
எதிர்வணங்கி, 'அப்பரே, நீர்
வரும்நாளில் திருவாரூர் நிகழ்பெருமை
வகுத்துரைப்பீர்' என்று கூற
அருநாமத் தஞ்செழுத்தும் பயில்வாய்மை
அவரும்எதிர் அருளிச் செய்தார். "

திருநாவுக்கரசர்-அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார். எதிர்-திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்கு எதிரில். சென்று-எழுந்தருளி. இறைஞ்ச-அந்த நாயனாரை வணங்க. ச்:சந்தி. சிரபுரத்து-சிரபுரமாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய. த்:சந்தி. தெய்வ-தெய்வத் தன்மையைப் பெற்ற. வாய்மை - திருவாயினுடைய தன்மையையும். ப்:சந்தி. பெரு-பெருமையையும் பெற்ற. ஞானசம்பந்தப் பிள்ளையார்-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாராகிய ஆண் சிறுவர். எதிர்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு எதிரில். வணங்கி-பணிந்து விட்டு. அப்பரே-அப்பர் சுவாமி களே. நீர்-தேவரீர். வரும்-எழுந்தருளும். நாளில்-தினத் தில். திருவாரூர்-அந்தத் திருவாரூரில். நிகழ் - நடை பெற்ற. பெருமை-பெருமையை. வகுத்து-வகைப்படுத்தி. உரைப்பீர்-திருவாய் மலர்ந்தருளிச் செய்வீர்களாக. என்று-என. கூற-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிச்செய்ய. அரு-அருமையாகிய. நாமத்து-சிவபெருமானுடைய திருநாமமாகிய. அஞ்சு எழுத்தும்-ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்களும் அடங்கிய பஞ்சாட்சரத்தை. எழுத்து:ஒருமை பன்மை மயக்கம். பயில்-உச்சரித்துப் பழகிய. வாய்மை-திருவாயின் தன்மையைப் பெற்ற. அவரும்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாரும். எதிர்-திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்கு எதிரில். அருளிச் செய்தார்-திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

அடுத்து வரும் 235-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

' ''அடியேனுடைய உள்ளத்தில் விளங்கும் தென் திசையில் இருக்கும் திருஆரூர் என்னும் பெரிய சிவத்தலத்தை ஆட்சி புரிந்தருளும் மையைப் போன்ற கரியநிறம் தழைக்கும் திருக் கழுத்தைப் பெற்றவராகிய தியாகராஜப் பெருமானாருக்குரிய திருவாதிரைத் திருநாளில் மகிழ்ச்சியை அடையும் செல்வம் இந்தத் தகுதியை உடையது என்று என்ன அடியேன் கூறுவேன்?' என அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரிடம், ''முத்துவிதான மணிப் பொற் கவரி'' என்று தொடங்கித் திருவாய் மலர்ந்தருளிச் செய்யும் மாலையாகிய ஒரு திருப்பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு:

**'' ' சித்தம் நிலாவும் தென்திரு ஆரூர் நகராளும்**
**மைத்தழை கண்டர் ஆதிரை நாளின் மகிழ்செல்வம்**
**இத்தகை மைத்தென் றென்மொழிகேன்' என்**
**றருள் செய்தார்,**
**'முத்து விதான மணிப்பொற் கவரி' மொழிமாலை. ''**

சித்தம்-அடியேனுடைய உள்ளத்தில். நிலாவும்-விளங்கும். தென்-தெற்குத் திசையில் இருக்கும். திரு ஆரூர்-திருஆரூர் என்னும். நகர்-பெரிய சிவத்தலத்தை. ஆளும்-ஆட்சி புரிந்தருளும். மை- மையைப் போன்ற கரிய நிறம். கரிய நிறம் என்றாலும் இங்கே நீல நிறத்தையே கொள்ள வேண்டும். நீலநிறத்தையும் கரிய நிறம் என்று கூறுதல் ஒரு மரபு; ''நீல நிறக்காக்கை'' என வருதலைக் காண்க. த்:சந்தி. தழை-தழைத்திருக்கும். கண்டர்-திருக்கழுத்தைப் பெற்றவராகிய தியாகராஜப் பெருமானாருக்கு உரிய. ஆதிரை நாளின்-திருவாதிரைத் திருநாளில் மகிழ்-மகிழ்ச்சியை அடையும். செல்வம்-நிதியம். இத்தகை மைத்து-இந்தத் தகைமையைப் பெற்றது. என்று-என. என்-என்ன. மொழிகேன்-அடியேன் கூறுவேன். என்று-என அந்தத் திருநாவுக்கரசு

நாயனார் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரிடம். 'முத்து விதமான மணிப் பொற்கவரி' மொழி- 'முத்துவிதான மணிப் பொற்கவரி, என்று தொடங்கித் திருவாய் மலர்ந் தருளிச் செய்யும். மாலை-மாலையாகிய ஒரு திருப்பதி கத்தை. அருள்செய்தார்-திருவாய் மலர்ந்தருளிச் செய் தார்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட திரு ஆரூர்த் திருவாதி ரைத் திருப்பதிகம் குறிஞ்சிப் பண் அமைந்தது. அதில் வரும் முதற் பாசுரமே இந்தப் பாடலில் குறிப்பிட்ட பாசுரம். அது வருமாறு:

"முத்து விதான மணிப்பொற்
கவரி முறை யாலே
பத்தர்க ளோடு பாவையர்
சூழப் பலிப் பின்னே
வித்தகக் கோல வெண்டலை
மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை
நாளால் அதுவண்ணம்."

இந்தத் திருப்பதிகத்தில் வரும் இறுதிப் பாசுரம் வருமாறு:

"பாரூர் பௌவத் தானைப்
பத்தர் பணிந்தேத்தச்
சீரூர் பாடல் ஆடல்
அறாத செம்மாப்பார்ந்
தேரூர் ஒழியா துலகம்
எங்கும் எடுத்தேத்தும்
ஆரூ ரன்றன் ஆதிரை
நாளால் அதுவண்ணம்."

பிறகு வரும் 236-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தச் சொற்கள் அடங்கிய மாலையாகிய செந்தமிழ் மொழியில் அமைந்த திருப்பதிகத்தைத் திருஞானசம்பந்த

மூர்த்தி நாயனார் கேள்விப்பட்டருளி அழகைப் பெற்ற சண்பையாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய வரும், மையைப் போலக் கரிய நிறம் மலரும் திருக்கழுத்தைப் பெற்ற தேவர்களினுடைய தலைவராகிய பிரமபுரீசருடைய புதல்வரும் ஆகிய அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் கொய்கின்ற செந்தாமரை மலர்களும், வெண்டாமரை மலர்களும், நீலோற்பல மலர்களும், குமுத மலர்களும், அல்லி மலர்களும், ஆம்பல் மலர்களும், பிற நீர்ப்பூக்களும் மலர்ந்திருக்கும் வாவியைப் பெற்ற தென் திசையில் உள்ள திருவாரூருக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளித் தியாகராஜப் பெருமானாரைத் தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டு, "அடியேனும் வந்து இந்தத் திருவாரூரில் தேவரீருடன் தங்கியிருப்பேன்" எனத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரிடம் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு:

" அம்மொழி மாலைச் செந்தமிழ்
கேளா அணிசண்பை
மைம்மலர் கண்டத் தண்டர்
பிரானார் மகனாரும்
'கொய்ம்மலர் வாவித் தென்திரு
வாரூர் கும்பிட்டே
உம்முடன் வந்திங் குடன்அமர்
வேன்'என் றுரைசெய்தார். "

அம்மொழி-அந்தச் சொற்கள் அடங்கிய. மொழி: ஒருமை பன்மை மயக்கம். மாலை-மாலையாகிய. ச்:சந்தி. செந்தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த திருப்பதிகத்தை: ஆகுபெயர். கேளா-திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தம்முடைய செவிகளில் ஏற்றருளி. அணி-அழகைப் பெற்ற. சண்பை-சண்பையாகிய சீகாழியில் திருவவதாரம் செய்

தருளியவரும்; ஆகுபெயர். மை-மையைப் போலக் கரிய நிறம். ம்:சந்தி. மலர்-மலர்ந்த. கரிய நிறம் என்றாலும் இங்கே நீல நிறத்தையே கொள்க. நீலநிறத்தையும் கரிய நிறம் என்பது புலவர் மரபு. கண்டத்து-திருக் கழுத்தைப் பெற்ற. அண்டர்-தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பிரானார்-தலைவராகிய பிரமபுரீசரு டைய. மகனாரும்-புதல்வராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும். கொய்-பறிக்கும். ம்:சந்தி. மலர்-செந்தா மரை மலர்களும், வெண்டாமரை மலர்களும், நீலோற்பல மலர்களும், குமுத மலர்களும், அல்லி மலர்களும், ஆம்பல் மலர்களும், செங்கழுநீர் மலர்களும், பிற நீர்ப்பூக்களும் மலர்ந் திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். வாவி-வாவியைப் பெற்ற. வாவி-வாபீ என்ற வட சொல்லின் திரிபு. த்:சந்தி. தென்-தெற்குத் திசையில் உள்ள. திருவாரூர்-திருவாரூருக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி. கும்பிட்டு- தியாகராஜப் பெருமானாரைத் தம்முடைய திருக்கரங் களைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டுவிட்டு. ஏ:அசைநிலை. உம்முடன்-தேவரீரோடு. வந்து-அடியேனும் வந்து. இங்கு-இந்தத் திருவாரூரில். உடன்-தேவரீருடன். அமர்வேன்-தங்கியிருப்பேன். என்று- என. உரை செய்தார்-திருநாவுக்கரசு நாயனார் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரிடம் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரைச் சிவபெருமானா ருக்குப் புதல்வர் என்று கூறுதல்: "இமையப்பாவை திருமுலைப்பால், தேகம் உய்ய உண்டவர் தாம் திருமா மகனார் ஆதலினால் காசு வாசியுடன் பெற்றார்.", "புரமெரித்தார் திருமகனார் பூந்துருத்தி தொழுதகன்றார்.", "வானவர் நாயகர் மகனார்.", "சேவில் திகழ்ந்தவர் மைந்தரான திருஞான சம்பந்தர்.", "இறைவர் திரு மைந்தர் தமை எதிர்கோன் ஏற்றார்.",

"நஞ்சணி கண்டர்தம் திருமகனார்.", "செய்ய மேனியர் திருமகனார்.", "சூகரமும் அன்னமுமாய்த் தேடினார் இருவர்க்கும் தெரிவரியார் திருமகனார்.", "ஆறு சூடினார் திருமகனார் அணைந்தார்." என்று சேக்கிழாரும், "மாழை நோக்கி மலைமகள் புதல்வன்.", "மலைமகள் புதல்வகலை பயில் நாவ." என்று நம்பியாண்டார் நம்பியும் பாடியருளிய வற்றைக் காண்க.

பிறகு உள்ள 237-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'பெரிய திருமதிலைப் பெற்ற திருவாரூரை ஆட்சி புரிந்தருளும் அரசராகிய தியாகராஜப் பெருமானாரை அந்தத் திருவாரூருக்கு எழுந்தருளி அந்தத் தியாகேசப் பெருமானாரைப் பணியும் பொருட்டுச் செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும் நீரோடையைப் பெற்றிருக்கும் சண்பையாகிய சீகாழியில் வாழும் மக்களுக்குத் தலைவனாகிய திருஞான சம்பந்தமூர்த்தி எழுந்தருள தம்முடைய திருநாக்கில் மருவுகின்ற சாற்களுக்குத் தலைவராகிய திருநாவுக்கரசு நாயனாரும் பேராவலோடு மலர்கள் மலர்ந்து நறுமணம் கமழும் குளிர்ச்சியைப் பெற்ற வயல்கள் சுற்றியிருக்கும் திருப்புகலூருக்குள் நுழைந்தார்.' பாடல் வருமாறு:

**" மாமதில் ஆரூர் மன்னரை**
**அங்கு வணங்கச்செந்**
**தாமரை ஓடைச் சண்பையர்**
**நாதன் தான்ஏக**
**நாமரு சொல்லின் நாதரும்**
**ஆர்வத் தொடு புக்கார்**
**பூமலர் வாசத் தண்பணை**
**சூழும் புகலூரில்."**

மா-பெரிய. மதில்-திருமதில் சுற்றியிருக்கப் பெற்ற ஆரூர்-திருவாரூரை. மன்னரை-ஆட்சி புரிந்தருளும் அரசராகிய தியாகராஜப் பெருமானாரை. அங்கு-அந்தத் திருவாரூருக்கு எழுந்தருளி. வணங்க-அந்தத் தியாகேசப் பெருமா

னாரைப் பணியும் பொருட்டு. ச்:சந்தி. செந்தாமரை-செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம் ஓடை-நீரோடையைப் பெற்று விளங்கும். ச்:சந்தி. சண்பையர்-சண்பையாகிய சீகாழியில் வாழும் மக்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். நாதன்தான்-தலைவனாகிய திருஞான சம்பந்தன். தான்:அசைநிலை. ஏக-எழுந்தருள. நா-தம்முடைய திருநாக்கில். மரு-எழுகின்ற. சொல்லின்-சொற்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். நாதரும்-தலைவராகிய திருநாவுக்கரசு நாயனாரும். ஆர்வத்தொடு-பேராவலோடு. பூ-மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மலர்-மலர்ந்து. வாச-நறுமணம் கமழும். த்:சந்தி. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. பணை-வயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். அந்த வயல்களாவன: சம்பா நெற்பயிர்கள் விளையும் வயல், குறுவை நெற்பயிர்கள் விளையும் வயல், கரும்புச் செடிகள் விளைந்து நிற்கும் வயல் முதலிய பல வயல்களும். சூழும்-சுற்றியிருக்கும். புகலூரில் - திருப்புகலூருக்குள். புக்கார்-நுழைந்தார்.

பிறகு வரும் 238-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு :

'அந்த அழகிய பழமையான சிவத்தலமாகிய திருப்புகலூரை அடைந்த திருநாவுக்கரசு நாயனாரும் தம்முடைய திருவுள்ளத்தில் நிரம்பியிருந்தே பக்தி தெவிட்டிப் போகும் தெளிவாகிய நீர் வெள்ளத்தைப் போல உண்டாகித் தரையில் வழிந்து இறங்கும் தாரை தாரையாகத் தம்முடைய விழிகள் சொரியும் நீர் தம்முடைய திருமேனி முழுவதும் நிரம்பி வழியப் பசுமையான தலையைப் பெற்ற நாகப்பாம்புகளாகிய அணிகலன்களை அணிபவராகிய அக்கினீசுவரரை அந்த நாயனார் வணங்கலானார்.' பாடல் வருமாறு:

"அத்திரு மூதூர் மேவிய
நாவுக் கரசும்தம்
சித்தம் நிறைந்தே அன்பு
தெவிட்டும் தெளிவெள்ளம்

மொய்த்திழி தாரைக் கண்பொழி
நீர்மெய்ம் முழுதாரப்
பைந்தலை நாகப் பூண்அணி
வாரைப் பணிவுற்றார்.''

அத்திரு-அந்த அழகிய. மூதூர்-பழமையான சிவத்தலமாகிய திருப்புகலூருக்கு. மேவிய-எழுந்தருளிய. நாவுக்கரசும்-திருநாவுக்கரசு நாயனாரும்; திணைமயக்கம். தம்-தம்முடைய. சித்தம்-திருவுள்ளத்தில். நிறைந்தே-நிரம்பியிருந்தே. அன்பு-பக்தி. தெவிட்டும்-தெவிட்டிப் போகும் அளவுக்கு. தெளி-தெளிவாகிய. வெள்ளம்-நீர் வெள்ளத்தைப் போல, மொய்த்து-உண்டாகி. இழி-தரையில் வழிந்து இறங்கும். தாரை-தாரை தாரையாக. தாரை-நீர் ஒழுக்கு. க்:சந்தி. கண்-தம்முடைய விழிகள்; ஒருமை பன்மை மயக்கம். பொழி-சொரியும். நீர்-புனல். மெய்-தம்முடைய திருமேனி. ம்:சந்தி. முழுது-முழுவதும். ஆர-நிரம்பி வழிய. ப்:சந்தி. பைம்-பசுமையாக இருக்கும். தலை-தலையைப் பெற்ற. நாக-நாகப் பாம்புகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பூண்-அணிகலன்களை; ஒருமை பன்மை மயக்கம். அணிவாரை-புனைபவராகிய அக்கினீசுவரரை. ப்:சந்தி. பணிவுற்றார்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் வணங்கலானார்.

பிறகு உள்ள 239-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தேவர்களுடைய தலைவனை, தெற்குத் திசையில் விளங்கும் திருப்புகலூரில் நிலைபெற்று விளங்கிய தேனைப் போல இனிக்கும் அக்கினீசுவரரை பாசுரங்களாக நடக்கும் மாலையாகிய செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு திருப்பதிகத்தை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி பக்தியோடு அமைந்த ஒவ்வொரு பூஜாகாலத்திலும் விருப்பத்தோடு திருக்கோயிலுக்கு அந்த நாயனார் எழுந்தருளி அந்த அக்கினீசுவரரைத் தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டுவிட்டு, இடைவிடுதல் இடையறாத உழவாரத் திருப்பணியையும் வேறு

திருப்பணிகளையும் புரிந்து கொண்டு அந்தத் திருப்புகலூரில் தங்குகிறவரானார்.' பாடல் வருமாறு :

" தேவர் பிரானைத் தென்புக
லூர்மே வியதேனைப்
பாவியல் மாலைச் செந்தமிழ்
பாடிப் பரிவோடு
மேவிய காலம் தோறும்
விருப்பிற் கும்பிட்டே
ஓவுதல் ஓவு திருப்பணி
செய்தங் குறைகின்றார் "

தேவர்-தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பிரானை-தலைவனை. த்:சந்தி. தென்-தெற்குத் திசையில் விளங்கும். புகலூர்-திருப்புகலூரில். மேவிய-விரும்பி எழுந்தருளிய. தேனை-தேனைப்போல இனிக்கும் அக்கினீசுவரரை; உவம ஆகுபெயர். ப்:சந்தி. பா-பாசுரங்களாக; ஒருமை பன்மை மயக்கம். இயல்-நடக்கும். மாலை-மாலையாகிய. ச்:சந்தி. செந்தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு திருப்பதிகத்தை; ஆகுபெயர். பாடி-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி. ப்:சந்தி. பரிவோடு-பக்தியோடு. மேவிய-அமைந்த. காலம்தோறும்-ஒவ்வொரு பூஜா காலத்திலும். இவை ஆறு காலங்கள். விருப்பில்-விருப்பத்தோடு; உருபு மயக்கம் கும்பிட்டு-திருக்கோயிலுக்கு அந்த நாயனார் எழுந்தருளி அந்த அக்கினீசுவரரைத் தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டுவிட்டு. ஏ:அசைநிலை. ஓவுதல்-இடைவிடுதல். ஓவு-இடையறாத. திருப்பணி-உழவாரத் திருப்பணியையும் வேறு திருப்பணிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். செய்து-அந்த நாயனார் புரிந்து கொண்டு. அங்கு-அந்தத் திருப்புகலூரில். உறைகின்றார்-தங்குகிறவரானார். திருப்புகலூரைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் இந்தளப் பண்ணில் அமைந்த ஒரு திருப்பதிகத்தையும், திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம்

ஆகியவை அடங்கிய திருப்பதிகங்களையும் பாடியருளி யுள்ளார். அவற்றுள் இந்தளப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு;

"செய்யர் வெண்ணூலர் கருமான் மறிதுள்ளும்
கையர் கனைகழல் கட்டிய காலினர்
மெய்யர் மெயந்நின் றவர்க்கல்லா தவர்க்கென்றும்
பொய்யர் புகலூர்ப் புரிசடை யாரே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

"நீருமாயத் தீயும் ஆகி
நிலனுமாய விசும்பும் ஆகி
ஏருடைக் கதிர்கள் ஆகி
இமையவர் இறைஞ்ச நின்று
ஆய்வதற் கரிய ராகி
அங்கங்கே ஆடு கின்ற
ாதவர்க்குத் தேவ ராவார்
திருப்புக லூர னாரே."

அவர் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

"தன்னைச் சரணென்று தாளடைந்
தேன்றன் அடியடையப்
புன்னைப் பொழிற்புக லூரண்ணல்
செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினை
கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்கலொட் டான்சிவ
லோகத் திருத்திடுமே."

அவர் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

"மின்னி னேரிடை யாள்உமை பங்கனைத்
தன்னை நேரொப் பிலாத தலைவனைப்
புன்னைக் கானற் பொழிற்புக லூரனை
என்னு ளாகவைத் தின்புற் றிருப்பனே."

அவர் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"அங்கமே பூண்டாய் அனலா டினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடை யினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவ."

இது அந்த நாயனார் தம்முடைய உயிர் நீங்குவதற்கு முன்பு பாடியருளியது.

சிவபெருமானுக்குத் தேன் உவமை: "தேனொத்தினியான்." "தேனுமாய் அமுதுமாய்த் தெய்வமும் தானாய்." "தேனினும் இனியர் பாலன நீற்றர்.", "தேனுமாய் அமுதாகி நின்றான்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "ஆலங்காட்டில் அம்தேனை.", "தேனும் இன்னமுதும் ஆனார் திருச்செம்பொன் பள்ளியாரே.", "தேனொத்தெனக்கினியான்.", "தேனைத் திருஅண்ணாமலையனை.", "அண்ணிக்கும் தேனர் போல் திருநாகேச்சுரவரே.", "தேனைப் பாலினைத் திங்களை ஞாயிற்றை.", "தேனைப் பாலைத் திகழொளியை.", "திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலை.", "அடியேனதுள்ளே நின்ற தேனமுதை.", "அமிர்து சண்டாய் அம்தேன் தெளிகண்டாய்.", "தித்திக்கும் தேனைப் பாலைத் தீங்கரும்பின் இன்சுவையை.", "சரும்பு தருகட்டியை இன்னமிர்தைத் தேனை.", "தேனாய் அமுதானாய் நீயே.", "தேன்வனே திருச்சோற்றுத் துறையுளானே.", "தேனதாகித் தீங்கரும்பின் இன்சுவையை.", "தேனே வானோர் செழுஞ்சுடரே.", "உமையாட்கென்றும் தேனவன்காண்.", "கலந்தார்க்கென்றும் தேனவனை.", "என் உள்ளத்துள்ளே ஊறும் அத்தேனை அமுதத்தை.", "தேனத்தை வார்த்த தெளிவே

போற்றி.'', ''அடியார் மனத்துள் புக்க தேனவனை,'', ''திருவானைக் காவிலுறை தேனை.'', ''தேனைப் பாலைச் செழுநீர்த் திரளை.'', ''தேறல் தெளியானை.'', ''அரும் பிருந்த கட்டிதனைக் கனியைத் தேனை.'', ''தேனகத்தில் இன்சுவையை.'', ''உருகு மனத்தடியவர்கட் கூறும் தேனை.'', ''தித்தித்தென் மனத்துள்ளே ஊறும் தேனை.'', ''உணர்ந்தார்க் கென்றும் தேனவன்காண்.'', ''கருதுவார் இதயத்துக் கமலத் தூறும் தேனவன்காண்.'', ''ஏத்து வார்க்குத் தேனவனை.'', ''அன்பர்க் கின்பரும் அமுதைத் தேனை.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''ஒண்சுடரே தேனே இன்னமுதே.'', ''தீங்கரும்பின் ஊறலிருந்தேனை.'', ''அடியார்கள் தம் உள்ளத் தேனங்கத் தமுதாக உள்ளூறும் தேசனை.'', ''தேனிடை இன்னமுதை.'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், ''தேசனே தேனார் அமுதே.'', 'தேனை ஆனெயைக் கரும்பினின் தேறலை.'', ''தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே.'', ''தேனைப் பாலைக் கன்னலின் தெளியை.'', ''தேனே அமுதே சிந்தைக் கரியாய்.'', ''தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கு மானே.'', ''என் மனத்தே ஊறும் மட்டே.'', ''வினை யேன் மனத்துத் தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து.'', ''தேன்வந்தமுதின் தெளிவின் ஒளிவந்த.'', ''தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்தினிய கோன்.'', ''தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்.'', ''தெளிவந்த தேறலை.'', ''தேனைப் பழச்சுவை ஆயினானை.'', ''அந்த இடைமருதில் ஆனந்தத் தேன்.'', ''தேன் தங்கித் தித்தித் தமுதூறி.'', ''தேறலின் தெளிவே சிவபெருமானே.'', ''பெருந்தேன் பில்க எப்போ தும் ஏதாமணியே.'', ''கோற்றேன் எனக்கென்கோ.'', ''தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்.'' என்று மாணிக்க வாசகரும், ''சித்தத்துள் தித்திக்கும் தேனே.'', ''மகேந்திர மாமலை மேல் இருந்த தேனே.''

என்று திருமாளிகைத் தேவரும், "தேனே அமுதே என் சித்தமே.", "பாலும் அமுதமும் தேனுமாய்." என்று சேந்தனாரும், "கன்னலே தேனே அமுதமே." என்று கருவூர்த் தேவரும், "தேனைப் பாலைத் தில்லை மல்கு செம்பொனின் அம்பலத்துக் கோனை." என்று கண்டராதித்தரும், "தேனே அனையன் நம் தேவர் பிரானே.", "வருந்தேன் நுகராது வாய்புகு தேனை அருந்தேனை.", "தேனார் பராபரம்.", "தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற் போல ஊனுக்குள் ஈசன் ஒளித்திருந்தானே." என்று திருமூலரும், "செம்பொனை மணியினைத் தேனினைப் பாலினை." என்று நக்கீர தேவ நாயனாரும், "அம்பலத்தே நின்று கூத்துகந்த தேனே." என்று பட்டினத்துப் பிள்ளையாரும், "தேன்றலை ஆன்பா லதுகல தாலன்ன சீரனை." என்று நம்பியாண்டார் நம்பியும், "மன்றுள் ஆடும் மது." என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 240-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் சீர்த்தியை வழங்கும் திருச்செங்காட்டங் குடிக்கும், நெடுங்காலமாகப் புகழ்பெற்று விளங்கும் திருநள்ளாற்றுக்கும், மரங்கள் நிரம்ப வளர்ந்து நிற்கும் பூம்பொழில் சுற்றியிருக்கும் சாத்தமங்கைக்கும் எழுந்தருளி அங்கே விளங்கும் திருக்கோயிலாகிய அயவந்தியில் கச்சு விளங்கும் மென்மையான கொங்கைகளைப் பெற்ற மலர்க்கண் அம்மையைத் தன்னுடைய வாமபாகத்தில் எழுந்தருளச் செய்திருக்கும் அயவந்தீசுவரனை வணங்கிவிட்டுத் திருமருகலுக்கும் எழுந்தருளி தம்முடைய திருவுள்ளத்தில் எழுந்து பொங்கும் பக்தியினால் அந்தத் திருத்தலத்திற்கு எழுந்தருளி மாணிக்க வண்ணேசுவரரைப் பணிந்து அந்த நாயனார் பேரானந்தத்தை அடைந்தார்.' பாடல் வருமாறு:

**"சீர்தரு செங்காட்டங் குடிநீடும் திருநள்ளா**
**றார்தரு சோலைசூழ்தரு சாத்தை அயவந்தி**

**வார்திகழ் மென்முலை யாளொருபாகன் திருமருகல்**
**ஏர்தரும் அன்பால் சென்றுவணங்கி இன்புற்றார்.''**

சீர்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் சீர்த்தியை. தரு-வழங்கும். செங்காட்டங்குடி-திருச்செங்காட்டங்குடிக்கும். நீடும்-நெடுங்காலமாகப் புகழ் பெற்று விளங்கும். திருநள்ளாறு-திருநள்ளாற்றுக்கும். ஆர்தரு-பலவகையாகிய மரங்கள் நிரம் வளர்ந்து நிற்கும். அந்த மரங்களாவன: தேக்கு மரம், வேங்கை மரம், வாகை மரம், மருத மரம், பலவகையான வாழை மரங்கள், தென்னை மரம், பனை மரம், மா மரம், பலாமரம், கடப்ப மரம், தமால மரம், பவளமல்லிகை மரம், வில்வ மரம், விளா மரம், புளிய மரம், பூவரச மரம், அரச மரம், ஆல மரம், வேப்ப மரம், வாதநாராயண மரம், நெட்டிலிங்க மரம், அசோகமரம், சுரபுன்னை மரம், புன்னை மரம், சரக்கொன்றை மரம், புலி நகக் கொன்றை மரம் முதலியவை. சோலை-பூம் பொழில். சூழ்தரு-சுற்றியிருக்கும். சாந்தை-சாத்த மங்கைக்கும் எழுந்தருளி. அயவந்தி-அத்தத்தலத்தில் விளங்கும் திருக்கோயிலாகிய அயவந்தியில். வார்-கச்சு. திகழ்-விளங்கும். மென்-மென்மையைப் பெற்ற. முலையாள்-கொங்கைகளைப் பெற்றவளாகிய மலர்க்கண் அம்மையை. முலை: ஒருமை பன்மை மயக்கம். ஒரு பாகன்-தன்னுடைய ஒப்பற்ற வாமபாகத்தில் எழுந்தருளச் செய்திருக்கும் அயவந்தீசுவரனை வணங்கிவிட்டு. திருமருகல்-திருமருகலுக்கும் எழுந்தருளி. ஏர்தரும்-தம்முடைய திருவுள்ளத்தில் எழுந்து பொங்கும். அன்பால்-பக்தியினால். சென்று-அந்தச் சிவத்தலத்திற்கு எழுந்தருளி. வணங்கி-மாணிக்க வண்ணேசுவரரைப் பணிந்து. இன்புற்றார்-அந்த நாயனார் பேரானந்தத்தை அடைந்தார்.

திருச்செங்காட்டங்குடி: இது சோழநாட்டில்உள்ள சிவத்தலம். இங்கே கோயில்கொண்டிருப்பவர் கணபதியீசுவரர். அம்பிகை திருக்குழல் நாயகி அம்மை. தலவிருட்சம் ஆத்தி மரம். இது திருக்கண்ணபுரத்திற்க் கிழக்குத் திசையில் ஒரு மைல்

தூரத்தில் உள்ளது. விநாயகப் பெருமான் கஜமுகாசுரன் என்னும் அசுரனைச் சங்காரம் செய்தருளிய தலம் இது. அந்த அசுரனுடைய இரத்தம் பெருகி ஓடிச் செங்காடாகி இருந்தமையினால் இந்தத் தலத்திற்குத் திருச்செங்காட்டங்குடி என்னும் பெயர் அமைந்தது. கஜமுகாசுரனைச்சங்காரம் செய்தருளிய பழி நீங்கும் பொருட்டு விநாயகப் பெருமான் கணபதியீசுவரரைப் பூசித்தார். அதனால் இங்கே உள்ள திருக்கோயிலுக்குக் கணபதீச்சுரம் என்னும் பெயர் வந்தது. சிறுத் தொண்ட நாயனார் தம்முடைய ஒரே புதல்வனாகிய சீராளனை வைரவ வேடம் பூண்டு எழுந்தருளிய சிவபெருமானுக்கு வெட்டிக் கறியாக்கி வழங்கினார்; பிறகு அந்தக் கணபதீசுவரர் வழங்கிய திருவருளால் அந்தச் சிறுவன் பிழைத்து எழுந்தான். இந்தச் செய்தியை,

"பொடிநுகரும் சிறுத்தொண்டற்
கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய வீற்றிருந்தான்
கணபதீச் சுரத்தானே."

என்று தேவாரத்தில் வருவதனாலும்,

"ஏடலர்ழ் அலங்கல் திண்டோள்
இபமுகத் தவுணன் மார்பில்
நீடிய குருதிச் செந்நீர்
நீத்தமாய் ஒழுகும் வேலைப்
பாடுற வருங்கான் ஒன்றிற்
பரத்தலின் அதுவே செய்ய
காடெனப் பெயர்பெற் றின்னும்
காண்டக இருந்த தம்மா."

"மீண்டுசெங் காட்டில் ஓர்சார்
மேவிமெய்ஞ் ஞானத் தும்பர்
தாண்டவம் புரியும் தாதை
தன்னுருத் தாபித் தேத்திப்
பூண்டபே ரன்பிற் பூசை
புரிந்தனன் புவியு ளோர்க்குக்

காண்டகும் அனைய தானம்
கணபதீச்சுரம தென்பர். ''

என்று கந்த புராணத்தில் வரும் செய்யுட்களாலும் அறிந்து கொள்ளலாம்.

பழைய ஆத்திமரம் உற்சவர் சந்நிதிக்கு எதிரில் இருக்கிறது. சிறுத்தொண்ட நாயனார், அவருடைய புதல்வர், அவருடைய தர்மபத்தினியார், சந்தன நங்கையார், ஆகியவர்களுடைய சிலை வடிவங்கள் திருக்கோயிற் பிராகாரத்தில் கிழக்குப் பக்கத்தில் உற்சவர் சந்நிதிக்கு எதிரில் உள்ளன. திருக்கோயிலுக்குத் தெற்குத் திசையில் சூரிய தீர்த்தம் இருக்கிறது. இந்தத் தலத்தைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு :

'' கூராரல் இரைதேர்ந்து குளமுலவி வயல்வாழும்
தாராவே மடநாராய் தமியேற் கொன்றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்றன் அருளொருநாள்
பெறலாமே.',

திருநள்ளாறு : இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் தர்ப்பாரண்யேசுவரர். அம்பிகை போக மார்த்த பூண்முலை அம்மை. தீர்த்தம் நள தீர்த்தம். இது காரைக்காலுக்கு மேற்குத் திசையில் மூன்று மைல் தூரத்தில் உள்ளது. இது சப்தவிடங்கத் தலங்களில் ஒன்று.

'' நாகம் பூண்டு கூத்தாடும் நள்ளாறனே'' என்று தேவாரத்தில் வருவதைக் காண்க. தர்ப்பாரண்யேசுவரர் என்னும் திருநாமத்துக்கு ஏற்றவாறு சிவலிங்கப் பெருமானுடைய திருவுருவம் தர்ப்பை புற்களின் கொழுந்துகள் சேர்ந்ததைப் போல விளங்குகிறது. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் மதுரை மாநகரில் சமணர்களோடு வாதம் புரிந்தருளும் போது தீயில் இட்டும் எரியாமல் இருந்த பச்சைத் திருப்பதிகத்தில் வரும் முதற் பாசுரம் பழந் தக்கராகத்தில் அமைந்தது. அந்தப் பாசுரம் வருமாறு :

"போகம் ஆர்த்த பூண்முலையாள்
 தன்னோடும் பொன்னகலம்
பாகம் ஆர்த்த பைங்கண்வெள்ளேற்
 றண்ணல் பரமேட்டி
ஆகம் ஆர்த்த தோலுடையன்
 கோவண ஆடையின்மேல்
நாகம் ஆர்த்த நம்பெருமான்
 மேயது நள்ளாறே."

சனிபகவானுக்குச் சிறப்பாக அமைந்த திருக்கோயிலும் இந்தத் தலத்தில் உள்ளது. அந்தச் சனிபகவான் திருக்கோயிலையே மக்கள் பகவான் கோயில் என்று வழங்குகிறார்கள்.

நளச்சக்கரவர்த்தி வழிபட்டுக் கலியின் பீடை நீங்கப் பெற்ற தலம் இது. பிராகாரத்தில் பெரிய வைரவருடைய விக்கிரகம் உள்ளது. இந்தத் தலத்திற்கு வடமேற்குத் திசையில் நள தீர்த்தம் இருக்கிறது. விநாயகப் பெருமானுக்குச் சொர்ண விநாயகர் என்பது திருநாமம். இந்தத் தலத்தைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு :

"விளங்கிழை மடந்தைமலை மங்கையொரு பாகத்
துளங்கொள் இருத்திய ஒருத்தனிடம் என்பர்
வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய் நள்ளாறே."

திருச்சாத்த மங்கை: இது சாந்தை என மருவி வழங்கும். இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே உள்ள திருக்கோயிலுக்கு அயவந்தி என்று பெயர். இங்கே கோயில் கொண்டிருப்பவர் அயவந்தீசுவரர். அம்பிகை மலர்க் கண் அம்மை. இது திருநள்ளாற்றிற்குத் தென் மேற்குத் திசையில் ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. திருநீல நக்க நாயனார் திருவவதாரம் செய்தருளிய தலம் இது. இந்த நாயனார் அயவந்தீசுவரரைத் தரிசனம் செய்யும் பொருட்டுத் தம்முடைய தர்ம பத்தினியாரோடு ஆலயத்துக்கு எழுந்தருளிய போது ஒரு சிலந்திப்பூச்சி சிவலிங்கப் பெருமான்மேல் விழுந்தது.

அந்தப் பூச்சியை அந்த நாயனாருடைய பத்தினியார் பக்தி மிகுதியினால் தம்முடைய வாயினால் ஊதி அகற்றினார். அதைக் கண்ட அந்த நாயனார் அவ்வாறு தம்முடைய பத்தினியார் செய்தது உசிதமற்ற செயலென்று எண்ணித் தம்முடைய பத்தினியாரை விலக்கிவிட்டார். அயவந்தீசுவரர் அந்த நாயனாருடைய கனவில் தோன்றி அவருடைய பத்தினியார் ஊதிய இடத்தையல்லாமல் மற்ற இடங்கள் சிலந்தியினால் உண்டான கொப்புளங்களைப் பெற்றவையாக இருப்பதைக் காட்டியருளி அந்த மாதரசியாருடைய பக்தியை வெளிப்படுத்தி அந்த மாதரசியாரை மீண்டும் அந்த நாயனாரோடு சேர்த்தருளிய தலம் இது. "நிறையினார் நீலநக்கன் நெடுமாநகர் என்று தொண்டர், அறையும் ஊர் சாத்த மங்கை'' என்றும்,

" பொடிதனைப் பூசு மார்பிற்
புரிநூலொரு பாற்பொருந்தக்
கொடியன சாய லாளோ
டுடனாவதும் கூடுவதே
கடிமணம் மல்கி நாளும்
கமழும்பொழிற் சாத்தமங்கை
அடிகள் நக்கன் பரவ
அயவந்தி அமர்ந்தவனே.",

என்றும் தேவாரத்தில் வருவனவற்றைக் காண்க.

திருமருகல் : இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் மாணிக்கவண்ணேசுவரர். அம்பிகை வண்டுவார் குழல் அம்மை. இது திருப்புகலூரிலிருந்து தென் கிழக்குத் திசையில் மூன்றரை மைல் தூரத்தில் உள்ளது. பாம்பு தீண்ட அந்த விடத்தினால் இறந்து போன ஒரு செட்டிப் பிள்ளையைத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்,

" சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்

மடையார் குவளைம் மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவருள் மெலிவே''

என்ற பாசுரத்தைப் பெற்ற ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளி மீண்டும் உயிர் பெற்று எழுமாறு புரிந்தருளிய தலம் இது. இறைவன் சந்நிதி கிழக்குப் பார்த்தது. அந்தச் சந்நிதிக்கு எதிரில் திருக்குளம் இருக்கிறது. அம்பிகைக்கு வெள்ளிக் கவசத்தைச் சாத்துகிறார்கள். அம்பிகையின் சந்நிதிக்கு நேரே, 'விஷம் தீர்த்த பிள்ளையார்' என்ற திருநாமத்தோடு ஒரு விநாயகர் திருவீதியில் எழுந்தருளி இருக்கிறார்.

இந்தத் தலத்தைப் பற்றித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய மற்றொரு பாசுரம் வருமாறு:

'' சிந்தாய் எனுமால் சிவனே எனுமால்
முந்தாய் எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை இலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவளே சறவே.''

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடி அருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

''ஒது பைங்கிளிக் கொண்பால் அமுதூட்டிப்
பாது காத்துப் பலபல கற்பித்து
மாது தான்மரு கற்பெரு மானுக்குத்
தூது சொல்ல விடத்தான் தொடங்குமே.''

அடுத்து வரும் 241-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'திருநாவுக்கரசு நாயனார் திருமருகல் என்னும் சிவத் தலத்தில் அவ்வாறு எழுந்தருளித் தங்கியிருந்த சில தினங்கள் கழிந்த பிறகு திருவாரூராகிய பெரிய சிவத்தலத்தை ஆட்சி புரிந்தருளும் பவளத்தைப் போலச் சிவந்த சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேல் பெற்றவரும், தம்முடைய நெற்றியில் ஒற்றைக் கண்ணை உடையவருமாகிய தியாக ராஜப் பெருமானாரை அந்த நாயனார் வணங்கி விட்டுத் திருவாரூரில் தங்கிக் கொண்டிருந்தார்; இதன் பிறகு உண்மை

யாகிய பரம்பொருள் சிவபெருமானே என்னும் ஞானத்தைப் பெற்றவரும், வேணுபுரமாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய அடியேங்களுடைய தலைவரும், பொன்னால் ஆகிய புரிகளைக் கொண்ட மூன்று நூல்கள் அடங்கிய பூணூலை அணிந்த திருமார்பைப் பெற்றவரும் ஆகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் திருப்புகலூருக்கு எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

**" அப்படிச் சின்னாள் சென்றபின்**
**ஆரூர் நகராளும்**
**துப்புறழ் வேணிக் கண்ணுத**
**லாரைத் தொழுதிப்பால்**
**மெய்ப்பொருள் ஞானம் பெற்றவர்**
**வேணு புரத்தெங்கள்**
**பொற்புரி முந்நூல் மார்பரும்**
**வந்தார் புகலூரில்."**

'அப்படி-திருநாவுக்கரசு நாயனார் திருமருகல் என்னும் சிவத்தலத்தில் அவ்வாறு எழுந்தருளித் தங்கிக்கொண்டிருந்த. ச்:சந்தி. சில்-சில. நாள்-தினங்கள்; ஒருமை பன்மை மயக்கம். சென்ற-கழிந்த. பின்-பிறகு. ஆரூர்-திருவாரூராகிய. நகர்-பெரிய சிவத்தலத்தை. ஆளும்-ஆட்சி புரிந்தருளும். துப்பு-பவளத்தை. உறழ்-போலச் சிவந்த. வேணி-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவரும்; ஆகு பெயர். க்:சந்தி. கண்ணுதலாரை-தம்முடைய நெற்றியில் ஒற்றைக் கண்ணை உடையவருமாகிய தியாகராஜப் பெருமானாரை; த்:சந்தி. தொழுது-அந்த நாயனார் வணங்கி விட்டு. இப்பால்-திருவாரூரில் தங்கிக் கொண்டிருந்தார்; இதன் பிறகு. மெய்-உண்மையாகிய. ப்:சந்தி. பொருள்-பரம் பொருள் சிவ பெருமானே என்னும். ஞானம்-ஞானத்தை. பெற்றவர்-பெற்றவரும். வேணுபுரத்து-வேணுபுரமாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய. எங்கள்-அடியேங்களுடைய தலைவரும்; இது சேக்கிழார் தம்மையும் பிற திருத்தொண்

டர்களையும் சேர்த்துக் கூறியது. பொன்-தங்கத்தால் ஆகிய. புரி-புரிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். முந்நூல்-மூன்று நூல்கள் அடங்கிய பூணூலை. நூல்: ஒருமை பன்மை மயக்கம். மார்பரும்-திருமார்பைப் பெற்றவரும் ஆகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும். புகலூரில்-திருப்புகலூருக்கு; உருபு மயக்கம். வந்தார்-எழுந்தருளினார்.

பிறகு வரும் 242-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அவ்வாறு திருப்புகலூருக்கு எழுந்தருளத் தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழுந்த விருப்பத்தினால் வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை அடைந்து அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை எதிர் கொண்டு வரவேற்று அந்தத் திருப்புகலூரில் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்தத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரோடு தங்கிக் கொண்டிருக்கும் காலத்தில் வள்ளலாராகிய சிறுத்தொண்ட நாயனார் அந்த இரண்டு நாயன்மார்களிடத்திற்கும் எழுந்தருள இகழ்வதற்கு அருமையாக இருக்கும் சீர்த்தியைப் பெற்ற திருநீலநக்க நாயனாரும் திருப்புகலூருக்கு எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

"பிள்ளையார் எழுந்தருளப்
பெருவிருப்பால் வாகீசர்
உள்ளம்மகிழ்ந் தெதிர்கொண்டங்
குடன்உறையும் நாளின்கண்
வள்ளலார் சிறுத்தொண்டர்.
மற்றவர்பால் எழுந்தருள
எள்ளரும்சீர் நீலநக்கர்
தாமும்எழுந் தருளினார்."

பிள்ளையார்-ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். எழுந்தருள-அவ்வாறு திருப்புக

லூருக்கு எழுந்தருள. ப்:சந்தி. பெருகு-தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழுந்த. விருப்பால்-விருப்பத்தினால்; 'விருப்பத்தோடு' எனலும் ஆம்; உருபு மயக்கம். வாகீசர்-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார். உள்ளம்-தம்முடைய திருவுள்ளத்தில். மகிழ்ந்து மகிழ்ச்சியை அடைந்து. எதிர்-கொண்டு-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை எதிர் கொண்டு வரவேற்று. அங்கு-அந்தத் திருப்புகலூரில். உடன்-அந்த இரண்டு நாயன்மார்களோடும். உறையும்-தங்கிக் கொண்டிருக்கும். நாளின் கண்-காலத்தில். வள்ளலார்-வள்ளலாராகிய. சிறுத்தொண்டர்-சிறுத் தொண்ட நாயனார். மற்று: அசை நிலை. அவர் பால் எழுந்தருள-அந்த இரண்டு நாயன்மார்களிடத்திற்கும் எழுந்தருள. அவர்: ஒருமை பன்மை மயக்கம். எள்ளரும்-இகழ்வதற்கு அருமையாக இருக்கும். எள்ளரும்-எள்ள அரும்; தொகுத்தல் விகாரம். சீர்-சீர்த்தியைப் பெற்ற. நீலநக்கர் தாமும்-திருநீல நக்க நாயனாரும். தாம்: அசை நிலை. எழுந்தருளினார்-திருப்புகலூருக்கு எழுந்தருளினார்.

பிறகு உள்ள 243-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு திருப்புகலூரில் எழுந்தருளும் அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடும் திருநாவுக்கரசு நாயனாரோடும் அந்தச் சிவத்தலமாகிய திருப்புகலூரில் வாழும் வேதியராகும் ஓங்கியிருக்கும் புகழைப் பெற்ற முருக நாயனாருடைய திருமடத்தில் அவரோடு கூடி தங்களுடைய பக்கத்தில் வரும் சீர்த்தியைப் பெற்ற அடியவர்கள் பலரோடும் பழகிய நட்பு அகலுவதற்கு அருமையாக உள்ள திருத்தொண்டுகளினுடைய நிலைமை அடைந்த திருநாவுக்கரசு நாயனார் தெரிந்து கொண்டு தங்கியிருப்பவரானார்.' பாடல் வருமாறு:

''ஆங்கணையும் அவர்களுடன்
அப்பதியில் அந்தணராம்
ஓங்குபுகழ் முருகனார்
திருமடத்தில் உடனாகப்

**பாங்கில்வரும் சீரடியார்**
**பலருமுடன் பயில்கேண்மை**
**நீங்கரிய திருத்தொண்டின்**
**நிலைஉணர்ந்து நிகழ்கின்றார்."**

ஆங்கு-அவ்வாறு. அணையும்-திருப்புகலூரில் எழுந்தருளும். அவர்களுடன்-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடும், திருநாவுக்கரசு நாயனாரோடும். அப்பதியில்-அந்தச் சிவத்தலமாகிய திருப்புகலூரில் வாழும். அந்தணராம்-வேதியராக விளங்கும். ஓங்கு-ஓங்கியிருக்கும். புகழ்-புகழைப் பெற்ற. முருகனார்-முருக நாயனாருடைய. திரு-அழகிய. மடத்தில்-திருமடத்தில். உடனாக-அந்த இரண்டு நாயன்மார்களோடும் கூடி. ப்:சந்தி. பாங்கில் வரும்-தங்களுடைய பக்கத்தில் வரும். சீர்-சீர்த்தியைப் பெற்ற. அடியார்-அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பலருமுடன்-பலரோடும். பயில்-பழகும். கேண்மை-நட்பு. நீங்கரிய-தம்மை விட்டு அகலுவதற்கு அருமையாக உள்ள. திருத் தொண்டின்-திருத் தொண்டுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிலை-நிலையை. உணர்ந்து-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தெரிந்து கொண்டு. நிகழ்கின்றார்-திருப்புகலூரில் தங்கியிருப்பவரானார்.

பிறகு வரும் 244-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத் திருப்பதிகங்களாகிய சொற்சுவை பொருட்சுவை என்னும் சுவைகளாகிய செழுமையைப் பெற்று விளங்கும் செந்தமிழ் மொழியில் அமைந்தவற்றினுடைய வகைகளை வாழ்த்தி மகிழ்ச்சியை அடைந்து இமயமலைஅரசனுடைய புதல்வியும், மடப்பத்தைக் கொண்டவளும், பொம்மையைப் போல என்றைக்கும் மாறாத அழகைப் பெற்றவளும் ஆகிய பார்வதி தேவியை தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்திருப்பவராகிய அக்கினீசுவரருடைய தங்கத்தைப் போன்ற திருவடிகளில் விருப்பத்தைப் பெற்ற திருத்தொண்டர்களி

னுடைய பெருமையை விரிவாக எடுத்துக் கூறி அந்தத் திருப்புகலூரில் ஒன்றாகச் சேர்ந்திருக்கும் திருவுள்ளங்களைப் பெற்றவர்களாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், முருக நாயனார் என்னும் இரண்டு நாயன்மார்களோடு சேர்ந்து தங்குவதனால் உண்டாகும் பிரயோசனத்தை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பெறும் பாக்கியத்தை அடைந்தார்.' பாடல் வருமாறு :

**" திருப்பதிகச் செழுந்தமிழின்**
**திறம்போற்றி மகிழ்வுற்றுப்**
**பொருப்பரையன் மடப்பாவை**
**இடப்பாகர் பொற்றாளில்**
**விருப்புடைய திருத்தொண்டர்**
**பெருமையினை விரித்துரைத்தங்**
**கொருப்படுசிந் தையினார்கள்**
**உடனுறைவின் பயன்பெற்றார்."**

திருப்பதிக-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத் திருப்பதிகங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. செழும்-சொற்சுவை பொருட்சுவை என்னும் சுவைகளாகிய செழுமையைப் பெற்று விளங்கும். தமிழின்-செந்தமிழ் மொழியில் அமைந்தவற்றினுடைய; ஆகுபெயர். திறம்-வகைகளை; ஒருமை பன்மை மயக்கம். போற்றி-வாழ்த்தி மகிழ்வுற்று-மகிழ்ச்சியை அடைந்து. ப்:சந்தி. பொருப்பரையன்-இமயமலை அரசனுடைய புதல்வியும்; ஆகு பெயர். மட-மடப்பத்தைக் கொண்டவளும்; ஆகுபெயர். ப்:சந்தி. பாவை-பெரம்மையைப் போல என்றைக்கும் மாறாத அழகைப் பெற்றவளும்; உவம ஆகுபெயர். இடப் பாகர்-ஆகிய கருந்தாழ் குழலி அம்மையைத் தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளுமாறு செய்திருப்பவராகிய அக்கினீசுவரருடைய. பொன்-தங்கத்தைப் போன்ற. தாளில்-திருவடிகளில்; ஒருமை பன்மை மயக்கம். விருப் புடைய-வணங்கும் விருப்பத்தைப் பெற்ற. திருத்தொண்

டர்-திருத்தொண்டர்களாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், முருக நாயனார் என்பவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பெருமையினை-பெருமையை. விரித்து உரைத்து-விரிவாக எடுத்துக் கூறி. அங்கு-அந்தத் திருப்புக லூரில். ஒருப்படு-ஒன்றாகச் சேர்ந்திருக்கும். சிந்தையி னார்கள்-திருவுள்ளங்களைப் பெற்றவர்களாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், முருக நாயனார் என்னும் இரண்டு நாயன்மார்களோடும். சிந்தை: ஒருமை பன்மை மயக்கம். உடன் உறைவின்-சேர்ந்து தங்கியிருப் பதனால் உண்டாகும். பயன்-பிரயோசனத்தை. பெற்றார்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பெறும் பாக்கியத்தை அடைந்தார்.

அடுத்து உள்ள 245-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரோடும் திருப்புகலூரில் தங்கிக் கொண் டிருந்த அந்தக் காலத்தில் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தமக்கு ஏற்றவாறு அமைந்திருக்கும் உழவாரத் திருத் தொண்டையும், வேறு திருத்தொண்டுகளையும், முறையான வழியில் புரிந்து கொண்டுவர மின்னலைப் போல் ஒளியை வீசும் சிவந்த சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்ற தலைவராகிய சிவபெருமானார் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் எத்தனையோ பலவற்றிற்கும் முன்பாகவே எழுந்தருளி அந்தத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை அந்த நாயனார் துதித்து விட்டு எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவனாகிய அக்கினீசுவரனுடைய திருவடிகளை வணங்குவதற்காகத் தங்கத்தைப் பதித்திருக்கும் அழகைப் பெற்ற மாடங்கள் உயரமாக நிற்கும் பூம்புகலூருக்கு எழுந்தருளி அந்த அக்கினீ சுவரரை வணங்கி விட்டுத் திருப்புகலூரிலிருந்தும் புறப் பட்டுச் சென்றார்.' பாடல் வருமாறு:

> " அந்நாளில் தமக்கேற்ற
> திருத்தொண்டின் நெறியாற்ற
> மின்னார்செஞ் சடைஅண்ணல்
> மேவுபதி எனைப்பலவும்
> முன்னாகச் சென்றேத்தி
> முதல்வன்தாள் தொழுவதற்குப்
> பொன்னாரும் மணிமாடப்
> பூம்புகலூர் தொழுதகன்றார். "

அந்நாளில்-அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடும் முருக நாயனாரோடும் திருப்புகலூரில் தங்கிக் கொண்டிருந்த அந்தக் காலத்தில். தமக்கு ஏற்ற-தமக்கு ஏற்றவாறு அமைந்திருக்கும். திருத்தொண்டின்-உழவாரத் திருத்தொண்டினையும் வேறு திருத்தொண்டுகளையும்; ஒருமை பன்மை மயக்கம். நெறி-முறையான வழியில். ஆற்ற-புரிந்து கொண்டு வர. மின்-மின்னலைப் போல. ஆர்-ஒளியை நிரப்ப வீசும். செம்-சிவப்பாக இருக்கும். சடை-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்ற. அண்ணல்-தலைவராகிய சிவபெருமானார். மேவு-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். பதி-சிவத் தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எனை-எத்தனையோ. ப்:சந்தி. பலவும்-பலவற்றிற்கும். முன்னாக-முன்பாகவே. ச்:சந்தி. சென்று-எழுந்தருளி. ஏத்தி-அந்தத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை அந்த நாயனார் துதித்து விட்டு. முதல்வன்-எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவனாகிய அக்கினீசுவரனுடைய. தாள்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். தொழுவதற்கு-வணங்குவதற்காக. ப்:சந்தி. பொன்-தங்கத்தை. ஆரும்-பதித்து அமைந்திருக்கும். மணி-அழகைப் பெற்ற. மாட-மாடங்கள் உயரமாக இருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பூம்புகலூர்-பூம்புகலூருக்கு எழுந்தருளி. தொழுது-அந்த

அக்கினீசுவரரை வணங்கி விட்டு. அகன்றார்-திருப்புகலூரி லிருந்தும் புறப்பட்டுச் சென்றார்.

பிறகு வரும் 246-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திருநீல நக்க நாயனார் சுவாமிகள், சிறுத் தொண்ட நாயனார், முருக நாயனார், பெருமையைப் பெற்ற பான்மையைக் கொண்ட அடியவர்களாகிய மற்றவர்களும் விடையைப் பெற்றுக் கொண்டு தங்கள் தங்களுடைய உள்களுக்கு எழுந்தருள ஒருமைப்பட்ட இயல்பைக் கொண்ட திருவுள்ளத்தைப் பெற்ற ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரோடு திருநாவுக்கரசு நாயனாரும் தங்கியிருக்கும் கங்கையாற்றின் நீரைத் தம்முடைய தலையில் உள்ள சிவந்த சடாபாரத்தில் மறைத்து வைத்திருப்பவராகிய பிரமபுரீசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருஅம்பர்ப் பெருந்திருக்கோயிலுக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி அந்தப் பிரமபுரீசுவரரைப் பணிந்தார்.' பாடல் வருமாறு:

**"திருநீல நக்கடிகள் சிறுத்தொண்டர் முருகனார்**
**பெருநீர்மை அடியார்கள் பிறரும்விடை கொண்டேக**
**ஒருநீர்மை மனத்துடைய பிள்ளையா ருடன்அரசும்**
**வருநீர் செஞ்சடைக்கரந்தார் திருஅம்பர் வணங்கினார்."**

திருநக்கடிகள்-திரு நீலநக்க நாயனார் சுவாமிகள். சிறுத்தொண்டர்-சிறுத் தொண்ட நாயனார். முருகனார்-முருக நாயனார். பெரு-பெருமையைப் பெற்ற. நீர்மை-பான்மையைக் கொண்ட. அடியார்கள்-அடியவர்களாகிய. பிறரும்-மற்றவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். விடை கொண்டு-திருநாவுக்கரசு நாயனாரிடம் விடையைக் கொண்டு. ஏக-தங்கள் தங்களுடைய ஊர்களுக்கு எழுந்தருள. திருநீல நக்க நாயனார் சாத்தமங்கைக்கு எழுந்தருளினார். சிறுத் தொண்ட நாயனார் திருச்செங்காட்டங் குடிக்கு எழுந்தருளினார். முருக நாயனார் திருப்புகலூருக்கு எழுந்தருளினார். ஒருநீர்மை-ஒரு வழியில் அமைந்த பான்மையில்.

மனத்துடைய-வைத்துணரும் திருவுள்ளத்தைப் பெற்ற. பிள்ளையாருடன்-ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு; "ஒரு நெறிய மனம் வைத் துணர் ஞான சம்பந்தன்." என்று அந்த நாயனாரே தம்மை கருதிப்படுவதைக் காண்க. அரசும்-திருநாவுக்கரசு நாயனா ரும்:திணை மயக்கம். வரு-தங்கியிருக்கும். நீர்-கங்கையாற்றின் புனலை. செம்-சிவப்பாக இருக்கும். சடை-தம்முடைய தலையில் உள்ள சடாபாரத்தில்.க்:சந்தி. கரந்தார்-மறைத்து வைத்திருப்பவராகிய பிரம புரீசுவரர். திருஅம்பர்-திருக் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருஅம்பர்ப் பெருந் திருக் கோயிலுக்கு. வணங்கினார்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி அந்தப் பிரமபுரீசுவரரைப் பணிந்தார்.

திரு அம்பர் : இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இது அம்பர்ப் பெருந்திருக்கோயில் எனவும் வழங்கும். இங்கே கோயில் கொண்டிருப்பவர் பிரம புரீசுவரர். அம்பிகை பூங்குழல் அம்மை. தீர்த்தம் பிரம தீர்த்தம். தலவிருட்சம் புன்னை மரம். இது அம்பர் மாகாளத் துக்குக் கிழக்குத் திசையில் முக்கால் மைல் தூரத்தில் உள்ளது. இது சோமாசிமாற நாயனார் முத்தியைப் பெற்ற சிவத்தலம். பிரமபுரீசுவரருடைய சந்நிதி ஒரு கட்டு மலை யின் மேல் உள்ளது. பிரமபுரீசுவரருக்குப் பின் பக்கத்தில் பார்வதி பரமேசுவரருடைய திருவுருவங்கள் தீட்டப் பெற்றி ருக்கின்றன. இங்குள்ள ஆலயத்திற்குப் பெருந்திருக்கோயில் என்பது பெயர். "அம்பர் நகர்ப் பெருங்கோயில் அமர்கின் றான்காண்" என்று திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி யதைக் காண்க. இந்தத் தலத்தில் உள்ள திருக்கோயிலைக் கோச்செங்கட் சோழ மன்னர் கட்டுவித்தார். இந்த மன்னர் திருவானைக்காமுதல் அம்பர்ப் பெருந்திருக்கோயில் ஈறாக உள்ள 64 மாடக் கோயில்களைக் கட்டுவித்தார். மாடக் கோயில் என்பது கட்டுமலையையும், யானைகள் ஏற

ஏற முடியாமல் இருக்கும் சந்நிதியையும் உடையது. இந்தத் தலத்தைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு :

"எரிதர அனல்கையில் ஏந்தி எல்லியின்
நரிதிரி கானிடை நட்டம் ஆடுவர்
அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரோ."

இந்தத் தலத்தைப் பற்றிக் காந்தார பஞ்சமப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

"அழகரை அடிகளை அம்பர் மேவிய
நிழல்திகழ் சடைமுடி நீல கண்டரை
உமிழ்திரை உலகினில் ஓதுவீர் கொண்மின்
தமிழ்கெழு விரகினன் தமிழ்செய் மாலையே."

பிறகு வரும் 247-ஆம் கவியின் கருத்து வருமாறு :

'திருநாவுக்கரசு நாயனார் செங்குமுத மலர்கள் மலரும் வாவியைப் பெற்ற திருக்கடவூருக்கு அடைந்தருளி சினம் பொங்கி எழுந்த வெம்மையைக் கொண்ட யமனை தம்முடைய திருவடியினால் உதைத்துத் தரையில் விழச் செய்த தங்கத்தைப் போன்ற அமிர்தகடேசுவரருடைய திருவடிகளை அந்த நாயனார் வணங்கித் துதித்து விட்டுக் குங்குலியக் கலய நாயனார் வாழும் திருக்கடவூரில் உள்ள அவருடைய திருமடத்தில் குறைகள் அறுமாறு அந்தத் திருமடம் உள்ள அந்தக் குங்குலியக் கலய நாயனாருடைய திருமாளிகையில் சிவபெருமானுடைய அடியவர்களோடு அந்த நாயன்மார்கள் திருவமுது செய்தருளினார்கள்.'

பாடல் வருமாறு :

"செங்குமுத மலர்வாவித்
திருக்கடவூர் அணைந்தருளிப்
பொங்கியவெம் கூற்றடர்த்த
பொன்னடிகள் தொழுதேத்திக்

குங்குலியக் கலயனார்
திருமடத்தில் குறைவறுப்ப
அங்கவர்பால் சிவனடியா
ருடன்அமுது செய்தார்கள்.''

செங்குமுதம்-திருநாவுக்கரசு நாயனார் செங்குமுத மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மலர்-மலர்ந்திருக்கும். வாவி-வாவியைப் பெற்ற. வாவி:வாபீ என்னும் வட சொல் திரிபு. த்:சந்தி. திருக்கடவூர்-திருக்கடவூருக்கு. அணைந்தருளி -அந்த நாயனார் அடைந்தருளி. ப்:சந்தி. பொங்கிய-மார்க் கண்டேயரிடத்தில் சினம் பொங்கி எழுந்த. வெம்-கொடுமை யைக் கொண்ட. கூற்று-யமனை. அடர்த்த-உதைத்துத் தரையில் விழுமாறு செய்தருளிய. பொன்-தங்கத்தைப் போன்ற. அடிகள்-அமிர்தகடேசுவரருடைய திருவடிகளை. தொழுது-அந்த நாயனார் வணங்கி. ஏத்தி-துதித்து விட்டு. க்:சந்தி. குங்குலியக்கலயனார்-குங்குலியக் கலய நாயனார் வாழும் திருக்கடவூரில் உள்ள. திரு மடத்தில்-அந்த நாயனா ருடைய அழகிய திருமடத்தில். குறைவு-குறைகள்; ஒருமை பன்மை மயக்கம். அறுப்ப-அறுமாறு. அங்கு-அந்தத் திரு மடம் உள்ள. அவர் பால்-அந்தக் குங்குலியக்கலய நாயனா ருடைய திருமாளிகையில். சிவனடியாருடன்-சிவ பெருமா னுடைய அடியவர்களாகிய சிறுத் தொண்ட நாயனாரோடும் முருக நாயனாரோடும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனா ரோடும்; ஒருமை பன்மை மயக்கம். அமுது செய்தார்கள்-அந்த நாயன்மார்கள் திருவமுது செய்தருளினார்கள்.

திருக்கடவூர்: இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் அமிர்தகடேசுவரர். இவரை அமுதீசர் எனவும் வழங்குவர். அம்பிகை அபிராமி அம்மை. தீர்த்தங்கள் சிவகங்கை, அமுதபுஷ்கரிணி என்பவை. இது சீகாழியிலிருந்து தென் கிழக்குத் திசையில் 14 மைல் தூரத்தில் உள்ளது. மேற்குப் பார்த்த சந்நிதி. இது அட்ட வீரட்டங்களில் ஒன்று. மார்க்கண்டேயருக்காக

யமனை அமிர்தகடேசுவரர் தம்முடைய திருவடியால் உதைத்தருளித் தரையில் விழச் செய்த தலம் இது. காலசங்கார மூர்த்திக்குத் தனியாக ஒரு சந்நிதி உண்டு. குங்குலியக் கலய நாயனாரும், காரி நாயனாரும் வாழ்ந்திருந்து முக்தியை அடைந்த தலம் இது. இங்கே எழுந்தருளியிருக்கும் விநாயகர் கள்ளவாரணப் பிள்ளையார். இந்தத் திருக்கோயிலில் வில்வாரணியேசுவரர், பாபஹரேசுவரர், புண்ணிய வர்த்தனேசுவரர் என்னும் திருநாமங்களோடு சிவலிங்கப் பெருமான்கள் உள்ளனர்.

இந்தச் சிவத்தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை என்பவை அடங்கிய திருப்பதிகங்களைப் பாடியருளியிருக்கிறார். அவற்றுள் ஒரு திருநேரிசை வருமாறு :

"மண்ணிடைக் குரம்பை தன்னை
மதித்துநீர் மையல் எய்தில்
விண்ணிடைத் தருமராசன்
வேண்டினால் விலக்கு வார்ஆர்
பண்ணிடைச் சுவைகள் பாடி
ஆடிடும் பத்தர்க் கென்றும்
கண்ணிடை மணியர் போலும்
கடவூர்வீ ரட்ட னாரே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு :

"குழைத்திகழ் காதினன் வானவர்
கோனைக் குளிர்ந்தெழுந்து
பழக்கமொ டர்ச்சித்த மாணிதன்
ஆருயிர் கொள்ளவந்த
தழற்பொதி மூவிலை வேலுடைக்
காலனைத் தானலற
உழக்கிய சேவடி யான்கட
வூருறை உத்தமனே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு :

"மண்ணு ளாரை மயக்குறும் ஆனையார்
எண்ணு ளார்பலர் ஏத்திடும் ஆனையார்
விண்ணு ளார்பல ரும்மறி ஆனையார்
கண்ணுள் ஆனைகண் டீர்கட வூரரே."

இந்தத் தலத்தைப் பற்றிக் காந்தார பஞ்சம பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"சடையுடை யானும் நெய்
யாடலானும் சரிகோவண
உடையுடை யானுமை யார்ந்த
ஒண்கண் உமைகேள்வனும்
கடையுடை நன்னெடு மாடம்
ஓங்கும் கடவூர்தனுள்
விடையுடை அண்ணலும்
வீரட்டானத் தானல்லனே."

இந்தத் தலத்தைப் பற்றி நட்டராகப் பண்ணில் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"பொடியார் மேனியனே புரி
நூல்ஒரு பாற்பொருந்த
வடியார் மூவிலைவேல் வளர்
கங்கையின் மங்கையொடும்
கடியார் கொன்றையனே கட
வூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகேள் என்அமுதே எனக்
கார்துணை நீயலதே."

அடுத்து வரும் 248-ஆம் கவியின் கருத்து வருமாறு;

'திருநாவுக்கரசு நாயனார் சீர்த்தி நிலைபெற்று விளங்கும் திருக்கடவூர்த் திருமயானத்திற்கும் எழுந்தருளிப் பிரம புரீசரை அந்த நாயனார் பணிந்து விட்டு அழகு நிலை

பெற்றுத் திகழும் இனிய சுவையைப் பெற்ற இசைப் பாடல்கள் பலவற்றைப் பாடியருளி அந்தச் சிவத்தலத்தில் இனிமையோடு தங்கிக் கொண்டிருந்து கரிய நிறம் நிலைபெற்று விளங்கும் நீலக் கறையைப் பெற்ற திருக்கழுத்தை உடையவராகிய பிரமபுரீசருடைய வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் இரண்டு திருவடிகளையும் வணங்கி விட்டு அந்தத் திருக்கடவூர்த் திருமயானத்தை விட்டுப் புறப்பட்டு இரதம் நின்று கொண்டிருக்கும் அழகிய திருவீதியைப் பெற்ற திருவாக்கூருக்கு அந்த நாயனார் எழுந்தருளி அடைந்தார்.' பாடல் வருமாறு:

" சீர்மன்னும் திருக்கடவூர்த்
திருமயா னமும்வணங்கி
ஏர்மன்னும் இன்னிசைப்பாப்
பலபாடி இனிதமர்ந்து
கார்மன்னும் கறைக்கண்டர்
கழலிணைகள் தொழுதகன்று
தேர்மன்னும் மணிவீதித்
திருவாக்கூர் சென்றணைந்தார்."

சீர்-சீர்த்தி. மன்னும்-நிலைபெற்று விளங்கும். திருக்கடவூர்த் திருமயானமும்-திருக்கடவூரில் உள்ள திருமயானத்திற்கும் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி. வணங்கி-பிரம புரீசரை அந்த நாயனார் பணிந்துவிட்டு. ஏர்-அழகு. மன்னும்-நிலை பெற்றுத் திகழும். இன்-இனிய சுவையைப் பெற்ற. இசைப்பா-இசைப் பாடல்கள்; ஒருமை பன்மை மயக்கம். சங்கீதத்தைப் பெற்ற உருப்படிகள். பல-பலவற்றை. பாடி-அந்த நாயனார் பாடியருளி. இனிது-இனிமையோடு. அமர்ந்து-திருக்கடவூரில் தங்கிக் கொண்டிருந்து. கார்-கரிய நிறம். மன்னும்-நிலை பெற்றுப் பொலியும். கறை-நீலக் கறையைப் பெற்ற. க்:சந்தி. கண்டர்-திருக்கழுத்தைப் பெற்றவராகிய பிரமபுரீசருடைய. கழல்-வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும். இணைகள்-இரண்டு

திருவடிகளையும்; ஆகு பெயர். தொழுது-வணங்கி விட்டு. அகன்று-அந்தத் திருக்கடவூர்த் திருமயானத்தை விட்டுப் புறப்பட்டு. தேர்-இரதம். மன்னும்-நின்று கொண்டிருக்கும். மணி-அழகைப் பெற்ற. வீதி-திருவீதியைக் கொண்ட. த்:சந்தி. திருவாக்கூர்-திருவாக்கூருக்கு. சென்று-அந்த நாயனார் எழுந்தருளி. அணைந்தார்-அடைந்தார்.

திருக்கடவூர் மயானம்: இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் பிரமபுரீசுவரர். அம்பிகை மலர்க்குழல் மின்அம்மை. தீர்த்தம் காசி தீர்த்தம். இது இந்தக் காலத்தில் திருமெய்ஞ்ஞானம் என்று வழங்கும். இது திருக்கடவூருக்குக் கிழக்குத் திசையில் ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது. இந்தத் தலத்திற்குத் தெற்குத் திசையில் அரை மைல் தூரத்தில் ஒரு கிணறு இருக்கிறது. அது மிகவும் சிறப்பைப் பெற்றது. அந்தக் கிணற்றிலிருந்து தான் திருக்கடவூர் அமிர்தகடேசுவரருக்கு ஒவ்வொரு நாளும் திருமஞ்சனத்துக்கு உரிய நீரை எடுத்துக் கொண்டு செல்கிறார்கள். பங்குனி மாதம் வரும் சுக்கில பட்சத்தில் அசுவினி நட்சத்திரத்தில் இந்தக் கிணற்று நீரில் நீராடுவது நல்ல பயனைத் தரும் என்று ஆன்றோர் கூறுவர். மற்றக் காலங்களில் அவ்வாறு அமிர்தகடேசுவரருக்கு உரிய திருமஞ்சனத்திற்கு இந்தக் கிணற்றில் உள்ள நீரைப் பயன்படுத்துவதை அல்லாமல் வேறு எந்தக் காரியத்திற்கும் இதைப் பயன்படுத்துவது இல்லை. அமிர்தகடேசுவரர் பிரம தேவனை நீறாக்கி அவனை மீண்டும் உயிர் பெறச் செய்தருளி அவனுக்குப் படைக்கும் தொழிலை வழங்கியருளிய தலம் இது. இதைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு :

"சூலம் ஏந்துவர் தோலுடை ஆடையர்
ஆலம் உண்டமு தேமிகத் தேக்குவர்
கால காலர் கடவூர் மயானத்தார்
மாலை பார்பர் பெருமான் அடிகளே."

இந்தத் தலத்தைப் பற்றிக் காந்தாரப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

" வரிய மறையார் பிறையார்
மலையோர் சிலையா வணக்கி
எரிய மதில்கள் எய்தார்
எறியும் முசலம் உடையார்
கரிய மிடறும் உடையார்
கடவூர் மயானம் அமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவார்
அவர்எம் பெருமான் அடிகளே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு :

" உன்னி வானவர் ஓதிய சிந்தையில்
கன்னல் தேன்கட வூரின் மயானத்தார்
தன்னை நோக்கித் தொழுதெழுவார்க் கெலாம்
பின்னை என்னார் பெருமான் அடிகளே."

இந்தத் தலத்தைப் பற்றிக் கொல்லிக் கௌவாணப் பண்ணில் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

" மருவார் கொன்றை மதிசூடி
மாணிக்கத்தின் மலை போல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமான் அடிகளே."

திரு ஆக்கூர் : இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம் இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் சுயம்புநாதேசுவரர், தான்தோன்றியப்பர் என்பவை.

அம்பிகை வாள் நெடுங்கண்ணி அம்மை. இது மயிலாடு துறைக்குக் கிழக்குத் திசையில் 10 மைல் தூரத்தில் உள்ளது. இந்தத் தலத்தில் உள்ள திருக்கோயிலுக்குத் தான்தோன்றி மாடம் என்று பெயர். சிறப்புலி நாயனாருடைய திருவவதாரத்தலம் இது. இந்தத் தலத்தில் வாழும் வேளாளர்களைத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாராட்டிப் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

"வாளார்கண் செந்துவர்வாய்
மாமலையான் தன்மடந்தை
தோளாகம் பாகமாப்
புல்கினான் தொல்கோயில்
வேளாளர் என்றவர்கள்
வள்ளன்மையான் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில்
தான்றோன்றி மாடமே"

ஓர் அரசர் 1000 அந்தணர்களுக்கு சுயம்புநாதேசுவரர் இட்ட கட்டளையின்படி சந்தர்ப்பணை செய்வித்தருளினார் என்றும், அந்த அந்தணர்களில் சுயம்புநாதேசுவரரும் ஒருவராக எழுந்தருளி யாருக்கும் தெரியாதவாறு திருவமுது செய்தருளினார் என்றும், பிறகு அவர் மன்னனுக்கு வெளிப்பட்டருளினார் என்றும் ஆன்றோர் கூறுவர். ஒரு சந்நிதியில் ஆயிரத்தொருவருடைய உற்சவ விக்கிரகம் உள்ளது.

இந்தத் தலத்தைப் பற்றிச் சீகாமரப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

"அக்கிருந்த ஆரமும் ஆடரவும் ஆமையும்
தொக்கிருந்த மார்பினான் தோலுடையான் வெண்ணீற்றான்
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தார் ஆக்கூரில் தான்றோன்றி மாடமே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

" ஓதிற் றொருநூலும் இல்லை போலும்
உணரப் படாததொன் றில்லை போலும்
காதிற் குழையிலங்கப் பெய்தார் போலும்
கவலைப் பிறப்பிடும்பை காப்பார் போலும்
வேதத்தோ டாறங்கம் சொன்னார் போலும்
விடம்சூழ்ந் திருண்ட மிடற்றார் போலும்
ஆதிக் களவாகி நின்றார் போலும்
ஆக்கூரில் தான்தோன்றி அப்ப னாரே."

"ஆக்கூர் மறையோம்பு மாடத்து மாமறையோ நான்கு." என்று கபில தேவ நாயனார் பாடியருளியதைக் காண்க.

பிறகு வரும் 249-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தம்மை அடைந்தவர்களாகிய பக்தர்களுடைய தஞ்சமாக விளங்கும் இடமாக இருப்பவரும், திருவாக்கூரில் உள்ள தான் தோன்றி மாடம் என்னும் திருநாமத்தைப் பெற்ற திருக் கோயிலில் பக்தி மிகுதியாக உண்டாகி அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பேராவல் உண்டாகுமாறு தான்றோன்றியப்பரை வணங்கி விட்டு ஒரு குற்றமும் இல்லாத செந்தமிழ் மொழியில் அமைந்த தொடுத்த மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை அந்தத் தான்றோன்றியப்பருக்குச் சாத்தி விட்டு, நீளமாக இருந்து அசைந்து ஆடும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய சிவபெருமானார் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தலங்கள் பலவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமான்களைப் பணிந்து விட்டு உடனே தம்மை அடைந்தவர்களாகிய பக்தர்களுடைய தலைவனாகிய நேத்திரார்ப்பணேசுவரன் எழுந்தருளியிருக்கும் திருவீழிமிழலையை.' பாடல் வருமாறு:

" சார்ந்தார்தம் புகலிடத்தைத்
தான்தோன்றி மாடத்துக்

கூர்ந்தார்வம் உறப்பணிந்து
கோதில்தமிழ்த் தொடைபுனைந்து
வார்ந்தாடும் சடையார்தம்
பதிபலவும் வணங்கியுடன்
சேர்ந்தார்கள் தம்பெருமான்
திருவீழி மிழலையினை.''

இந்தப் பாடல் குளகம். சார்ந்தார் தம்-தம்மை அடைந்தவர்களாகிய பக்தர்களினுடைய; சார்ந்தார்: ஒருமை பன்மை மயக்கம். தம்: அசை நிலை. புகல் இடத்தை-தஞ்சமாக விளங்கும் இடமாக இருப்பவராகிய திருவாக்கூரில் உள்ள தான்றோன்றி மாடம் என்னும் திருநாமத்தைப் பெற்ற திருக்கோயிலில். த்: சந்தி. தான்றோன்றி மாடத்து-தான்றோன்றி மாடத்தில். க்: சந்தி. கூர்ந்து-பக்தி மிகுதியாக உண்டாகி. ஆர்வம்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பேராவல். உற-உண்டாகுமாறு. ப்: சந்தி. பணிந்து-அந்தத் தான்றோன்றியப்பரை வணங்கி விட்டு. கோது-ஒரு குற்றமும். இல்-இல்லாத; கடைக்குறை. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த த்:சந்தி தொடை-தொடுத்தலைப் பெற்றமாலையாகிய ஒரு திருப்பதிகத்தை. புனைந்து-அந்தத் தான்றோன்றியப்பருக்குச் சாத்தி விட்டு. வார்ந்து-நீளமாக அமைந்து. ஆடும்-அசைந்து ஆடிக் கொண்டிருக்கும். சடையார் தம்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய சிவபெருமானார். தம்: அசை நிலை. பதி-திருத்தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பலவும்-பலவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி, வணங்கி-அந்தத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமான்களைப் பணிந்து விட்டு. உடன்-உடனே. சேர்ந்தார்கள் தம்-தம்மை அடைந்தவர்களாகிய பக்தர்களினுடைய. தம்: அசை நிலை. பெருமான்-தலைவனாகிய நேத்திரார்ப்பணேசுவரன் எழுந்தருளியிருக்கும். திருவீழிமிழலையினை-திருவீழிமிழலையை.

திருவீழிமிழலை: இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள்

நேத்திரார்ப்பணேசுவரர், வீழியழகேசுவரர், வீழிநாதர் என்பவை. அம்பிகை சுந்தராம்பிகை. தீர்த்தம் விஷ்ணு தீர்த்தம். தலவிருட்சம் வீழிச் செடி. இது குத்தாலத்திலிருந்து தெற்குத் திசையில் ஆறு மைல் தூரத்தில் உள்ளது. இந்தத் தலத்தில் எந்த இடத்திலும் வீழிச் செடிகள் நிறைந்து வளர்ந்து நிற்பதால் திருவீழிமிழலை என்னும் பெயர் இந்தத் தலத்திற்கு வந்தது. திருக்கோயிலுக்கு எதிரில் ஒரு பெரிய திருக்குளம் உள்ளது. மூலவராகிய சிவலிங்கப் பெருமானா ருக்குப் பின்புறத்தில் பார்வதி பரமேசுவரர்களினுடைய திரு வுருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சக்கராயுதத்தைப் பெற விரும்பித் திருமால் வீழிநாதரைப் பூஜை புரியும் போது ஒரு நாள் ஒரு மலர் குறைவாக இருக்க அந்தத் திருமால் தம்முடைய விழியையே தோண்டி வீழிநாதருக்குச் சாத்தித் தாம் பெற விரும்பிய சக்கராயுதத்தைப் பெற்ற தலம் இது. திருமணக் கோலத்தோடு எழுந்தருளியிருக்கும் உற்சவ மூர்த்தியினுடைய திருவடிகளில் திருமால் தம்முடைய கண்ணைப் பறித்து அருச்சனை புரிந்த அடையாளமும் இருக்கிறது.

"நீற்றினை நிறையப் பூசி
நித்தல் ஆயிரம்பூக் கொண்டு
வேற்றுமை ஒருநாள் ஒன்று
குறையக்கண் ணிறைய இட்ட
ஆற்றலுக் காழி நல்கி
அவன்கொணர்ந் திழிச்சும் கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழி
மிழலையுள் விகிர்த னாரே"

என்று திருக்குறுக்கை வீரட்டத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசையில் திருமால் தம்மு டைய கண்ணைப் பிடுங்கி வீழநாதரை அருச்சித்த செய்தி உள்ளது.

வீழிநாதர் எழுந்தருளியிருக்கும் இடம் விண்ணிழி விமானம் என வழங்கும். திருமால் சக்கராயுதம்

பெற்ற செய்தியைத் தெரிவிக்கும் புறநீர்மைப் பண் அமைந்த ஒரு பாசுரத்தைத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளினார். அந்த பாசுரம் வருமாறு :

" தன்தவம் பெரிய சலந்தரன் உடலம்
தடிந்தசக் கரமெனக் கருளென்
றன்றரி வழிபட் டிழிச்சிய விமானத்
திறையவன் பிறையணி சடையன்
நின்றநாள் காலை இருந்தநாள் மாலை
கிடந்தமண் மேல்வரு கலியை
வென்றவே தியர்கள் விழாவறா வீழி
மிழலையான் என் வினை கெடுமே."

அந்த நாயனார் நட்டபாடைப் பண்ணில் அந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

" பண்ணும்பதம் ஏழும்பல ஓசைத்தமி ழவையும்
உண்ணின்றதொர் சுவையும்முறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புனல் உயிரும்வரு காற்றும்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம் மிழலையே."

நட்ட பாடைப் பண்ணில் அமைந்த திருவிராகம் ஒன்று வருமாறு :

" மருவலர் புரமெரி யினின்மடி
தரவொரு கணைசெல நிறுவிய
பெருவலி யினன்நலம் மலிதரு
கரனுர மிகுபிணம் அமர்வன
இருளிடை யடையுற வொடுநட
விசையுறு பரனினி துறைபதி
தெருவினில் வருபெரு விழவொலி
மலிதர வளர்திரு மிழலையே."

குறிஞ்சிப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு :

" கண்ணிற் கனலாலே காமன் பொடியாகப்
பெண்ணுக் கருள்செய்த பெருமான் உறைகோயில்

மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்
விண்ணிற் புயல் காட்டும் வீழிமிழலையே.

மேகராகக் குறிஞ்சிப் பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு :

" ஏரிசையும் வடவாவின் கீழிருந்தங்
கீரிருவர்க் கிரங்கி நின்று
நேரியநான் மறைப்பொருளை உரைத் தொளிசேர்
நெறியளித்தோன் நின்ற கோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட் சொல்லும் மிழலை யாமே."

காந்தார பஞ்சமப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

" கேள்வியர் நாடொறும் ஓதும்நல்
வேதத்தர் கேடிலா
வேள்விசெய் அந்தணர் வேதியர்
வீழி மிழிலையார்
வாழியர் தோற்றமும் கேடும்வைப்
பாருயிர் கட்கெலாம்
ஆழியர் தம்மடி போற்றிஎன்
பார்கட் கணியரே."

சாதாரிப் பண் அமைந்த திருவிராகப் பாசுரம் ஒன்று வருமாறு :

" சீர்மருவு தேரினொடு தேசமலி
செல்வமறை யோர்கள் பணியத்
தார்மருவு கொன்றையணி தாழ்சடையி
னான்அமர்ச யங்கொள் பதிதான்
பார்மருவு பங்கயமு யர்ந்தவயல்
சூழ்பழனம் நீட அருகே
கார்மருவு வெண்கனக மாளிகை
கவின்பெருகு வீழி நகரே."

அதே பண் அமைந்த மற்றொரு திருவிராகப் பாசுரம் வருமாறு :

" மட்டொளி விரிதரு மலர்நிறை
சுரிகுழல் மடவரல்
பட்டொளி மணியல்குல் உமையமை
உருவொரு பாகமாக்
கட்டொளிர் புனலொடு கடியர
வுடனுறை முடிமிசை
விட்டொளி உதிர்பிதிர் மதியவர்
பதிவீழி மிழலையே."

சாதாரிப் பண் அமைந்த ஒரு திருமுக்கால் வருமாறு:

" வெண்மதி தவழ்மதில் மிழலையு ளீர்சடை
ஒண்மதி அணியுடை யீரே
ஒண்மதி அணியுடை யீர்உமை உளர்பவர்
கண்மதி மிகுவது கடனே."

பழம் பஞ்சுரப் பண் அமைந்த ஈரடிப் பாசுரம் ஒன்று வருமாறு:

" வேலினேர்தரு கண்ணி னாருமை
பங்கன் அங்கணன் மிழலை மாநகர்
ஆல நீழலின் மேவினான் அடிக்கன்பர் துன்பிலரே."

பழம் பஞ்சுரப் பண் அமைந்த திருவியகப் பாசுரம் ஒன்று வருமாறு:

" துன்று கொன்றைநம் சடையதே
தூய கண்டம்நஞ் சடையதே
கன்றின் மானிடக் கையதே
கல்லின் மானிடக் கையதே
என்னும் ஏறுவ திடபமே
என்னி டைப்பலி யிடவமே
நின்ற தும்மிழலை உள்ளுமே
நீரெனைச் சிறிதும் உள்ளுமே."

புறநீர்மைப் பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

"புள்ளித்தோல் ஆடை பூண்பது நாகம்
பூசு சாந்தம் பொடிநீறு
கொள்ளித்தீ விளக்குக் கூளிகள்
கூட்டம் காளியைக் குணம்செய் கூத்துடை யோன்
அள்ளற்கார்ஆமை அகம்வான் மதியம்
ஏய்க்கமுட் டாழைகள் ஆனை
வெள்ளைக்கொம் பீனும் விரிபொழில் வீழி
மிழலையான் எனவினை கெடுமே."

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் இந்தத் தலத்தில் தங்கியிருந்தபொழுது பஞ்சம் உண்டாக, வீழிநாதர் அந்த நாயன்மார்கள் இரண்டு பேர்களுக்கும் படிக்காசு வழங்கியருளி அவர்கள் வாயிலாக அடியவர்களுக்கு அமுது படைத்த தலம் இது. அவ்வாறு படிக்காசுவைத்தபலிபீடங்கள் கிழக்குத் திசையிலும் மேற்குத் திசையிலும் உள்ளன. மேற்குத்திசையில் உள்ளபலிபீடத்துக்கு அருகில் படிக்காசுப் பிள்ளையார் என்ற திருநாமத்தோடு ஒரு விநாயகர் எழுந்தருளியிருக்கிறார். அந்த விநாயகருக்கு அருகில் திருநாவுக்கரசு நாயனாருடைய விக்கிரகமும், திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய விக்கிரகமும் உள்ளன. வீழிநாதர் தாம் சீகாழியில் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தைத் திருஞான சம்பந்த மூர்த்திநாயனாருக் குக் காட்டியருளிய தலம் இது. இந்தத் தலத்தில் வாழும் அந்தணர்களைப் பாராட்டிச் சுந்தர மூர்த்தி நாயனார் சீகாமரப்பண் அமைந்த ஒரு பாசுரத்தைப் பாடியருளியுள்ளார். அந்தப் பாசுரம் வருமாறு:

"பரந்த பாரிடம் ஊரிடைப்பலி
பற்றிப் பார்த்துணும் சுற்றம் ஆயினீர்
தெரிந்த நான்மறை யோர்க்கிடம்
ஆகிய திருமிழலை

இருந்துநீர் தமிழோ டிசை கேட்கும்
இச்சையாற் காசு நித்தம்நல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீர்
அடியேற்கும் அருளுதிரே.''

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய மற்றொரு திருநேரிசை வருமாறு:

''நிலையிலா ஊர்மூன் றொன்ற
நெருப்பெரி காற்றம் பாகச்
சிலையும் நாணதுவும் நாகம்
கொண்டவர் தேவர் தங்கள்
தலையினால் தரித்த என்பும்
தலைமயிர் வடமும் பூண்ட
விலையிலா வேடர் வீழி
மிழலையுள் விகிர்த னாரே.''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

'' அந்தமும் ஆதியும் ஆகிநின்
றீர்அண்டம் எண்திசைக்கும்
பந்தமும் வீடும் பரப்புகின்
றீர்பசு ஏற்றுகந்தீர்
வெந்தழல் ஓம்பும் மிழலையுள்
ளீர்என்னைத் தென்றிசைக்கே
உந்திடும் போது மறக்கினும்
என்னைக் குறிக்கொண்மினே.''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

'' கரைந்து கைதொழு வாரையும் காதலன்
வரைந்து வைதெழு வாரையும் வாடலன்
நிரந்த பாரிடத் தோடவர் நித்தலும்
விரைந்து போவது விரிமிழ லைக்கே.''

மற்றொரு திருக்குறுந்தொகை வருமாறு:

"என்பொ னேஇமை யோர்தொழு பைங்கழல்
நன்பொ னேநலம் தீங்கறி வொன்றிலேன்
செம்பொ னேதிரு வீழி மிழலையுள்
அன்ப னேஅடி யேனைக் குறிக்கொளே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"மைவான மிடற்றானை அவ்வான் மின்போல்
வளர்சடைமேல் மதியானை மழையா யெங்கும்
பெய்வானைப் பிச்சாட வாடு வானைப்
பிலவாய பேய்க்கணங்கள் ஆர்க்கச் சூலம்
பொய்வானைப் பொய்யிலா மெய்யன் தன்னைப்
பூதலமும் மண்டலமும் பொருந்தும் வாழ்க்கை
செய்வானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே."

மற்றொரு திருத்தாண்டகம் வருமாறு:

"அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற் றுள்ளார்
ஆரூரார் பேரூரார் அழுந்தூர் உள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்க ளூரார்
சாந்தை அயவந்தி தங்கி னார்தாம்
நஞ்சைத் தமக்கமுதா உண்ட நம்பர்
நாகேச் சரத்துள்ளார் நாகை யூரார்
வெஞ்சொற் சமண்சிறையில் என்னை மீட்டார்
வீழி மிழலையே மேவி னாரே."

பிறகு உள்ள 250-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திருவீழி மிழலைக்கு எழுந்தருளி அடைய மேவிய திருநாவுக்கரசு நாயனாரையும் சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய பிள்ளையாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரையும் சேர்ந்து கொண்ட தம்முடைய திருவுள்ளத்தில் எழுந்த விருப்பத்தோடு சக்கராயுதத்தை ஏந்த வல்லவனாகிய திருமால் பன்றி வடிவத்தை எடுத்து

நிலத்தைத் தோண்டிப் பார்த்துத் தேடியும் காண முடியாத திருவடிகளை உடைய வீழிநாதருடைய அடியவர்களாகிய அவர்களோடும் வேதியர்கள் தம்மை எதிர்கொண்டு வரவேற்றுப் பணிய அந்தத் திருநாவுக்கரசு நாயனாரும் அந்த வேதியர்களைப் பணிந்து விட்டு வீழி நாதருடைய ஆலயத்துக்குள் நுழைந்தார்.' பாடல் வருமாறு:

'' வீழி மிழலை வந்தணைய
மேவும் நாவுக் கரசினையும்
காழி ஞானப் பிள்ளையையும்
கலந்த உள்ளக் காதலினால்
ஆழி வலவன் அறியாத
அடியார் அடியார் அவர்களுடன்
வாழி மறையோர் எதிர்கொண்டு
வணங்க வணங்கி உள்புக்கார்.''

வீழிமிழலை-திருவீழிமிழலைக்கு. வந்து - எழுந்தருளி. அணைய-அடைய. மேவும்-வந்து சேரும். நாவுக்கரசினையும்-திருநாவுக்கரசு நாயனாரையும். அரசு: திணை மயக்கம். காழி-சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய. ஞான-சிவ ஞானத்தைப் பெற்ற. ப்:சந்தி. பிள்ளையையும்-ஆளுடைய பிள்ளையாகிய திருஞான சம்பந்தனையும். கலந்த-சேர்ந்து கொண்ட. உள்ள-தம் முடைய திருவுள்ளத்தில்.க்:சந்தி.காதலினால்-எழுந்த விருப்பத்தோடு; உருபுமயக்கம். ஆழி-சக்கராயுதத்தை ஏந்த. வலவன்-வல்லவனாகிய திருமால்; இடைக்குறை. அறியாத-பன்றியினுடைய வடிவத்தை எடுத்துக் கொண்டு நிலத்தைத் தோண்டிப் பார்த்துத் தேடியும் தெரிந்து கொள்ளாத. அடியார்-திருவடிகளைக் கொண்ட வீழிநாதருடைய. அடி: ஒருமை பன்மை மயக்கம். அடியார்-அடியவர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். அவர்களுடன்-அவர்களோடும். வாழி: அசை நிலை. மறையோர்-திருவீழிமிழலையில் வாழும் வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எதிர் கொண்டு-தம்மை எதிர் கொண்டு வரவேற்று.

வணங்க-பணிய. வணங்கி-தாமும் அந்த வேதியர்களைப் பணிந்து விட்டு. உள்-வீழிநாதருடைய ஆலயத்துக்குள். புக்கார்-அந்த நாயனார் நுழைந்தார்.

பிறகு உள்ள 251-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'திருவீழியில் உள்ள மாடங்கள் உயர்ந்து நிற்கும் ஒரு திருவீதியில் அலங்காரங்களைப் புரிந்து அப்தத் திருவீழி மிழலையில் வாழும் வேதியர்கள் தங்களுடைய திரு மாளிகைக்கு முன்பு உள்ள வாசல்களில் அழகைப் பெற்ற திருவிளக்குக்களை வைத்தும், உயரமாக உள்ள வாழை மரங்களையும், தழைகளைக் கொண்ட கமுக மரங்களையும் வரிசை வரிசையாக நட்டு வைத்து நீர் நிரம்பிய தங்கத்தால் ஆன பூர்ணகும்பத்தைத் தங்களுடைய கைகளில் எடுத்துக் கொண்டு அந்த வேதியர்கள் பெருமை பெருகி எழும் வாகீச ராகிய திருநாவுக்கரசு நாயனாரும், ஆளுடைய பிள்ளையா ராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், பல திருத் தொண்டர்களும் அவர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியை அடைந்து விண்ணிழிந்த விமானத்தைப் பெற்ற வீழிநாதரு டைய திருக்கோயிலுக்கு முன்பு உயரமாக நிற்கும் கோபுர வாசலுக்கு எழுந்தருளி அந்த நாயனார் அடைந்தார்.' பாடல் வருமாறு:

'' மாட வீதி அலங்கரித்து
மறையோர் வாயில் மணிவிளக்கு
நீடுகதலி தழைப்பூகம் நிரைத்து
நிறைபொற் குடம் எடுத்துப்
பீடு பெருகும் வாகீசர்
பிள்ளை யாரும் தொண்டர்களும்
கூட மகிழ்ந்து விண்ணிழிந்த
கோயில் வாயில் சென்றணைந்தார்.''

மாட-திருவீழி மிழலையில் உள்ள மாடங்கள் உயரமாக நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். வீதி-ஒரு திருவீதியில். அலங்கரித்து-அலங்காரங்களைப் புரிந்து. அந்த அலங்காரங்

களாவன: தோரணங்களைத் தொங்க விடுதல், மேற்கட்டியைக் கட்டுதல் முதலியவை. மறையோர்-அந்தத் திருவீழிமிழலையில் வாழும் வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வாயில்-தங்களுடைய திருமாளிகைகளுக்கு முன்பு உள்ள வாசல்களில்; ஒருமை பன்மை மயக்கம். மணி-அழகைப் பெற்ற. விளக்கு-திரு விளக்குகளை ஏற்றி வைத்தும்; ஒருமை பன்மை மயக்கம். நீடு-உயரமாக உள்ள. கதலி-வாழை மரங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். தழை-தழைகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். தழைகள்-இலைகள். ப்:சந்தி. பூகம்-கமுக மரங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். நிரைத்து-வரிசை வரிசையாக நட்டுவைத்து. நிறை-நீர் நிரம்பிய. பொன்-தங்கத்தால் ஆகிய. குடம்-பூரண கும்பத்தை. எடுத்து-தங்களுடைய கைகளில் எடுத்துக் கொண்டு. ப்:சந்தி. பீடு-அந்த வேதியர்கள் பெருமை பெருகும். பெருகும்-பெருகி எழும். வாகீசர்-வாக்குக்கு அரசராகிய திருநாவுக்கரசு நாயனாரும். பிள்ளையாரும்-ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும். தொண்டர்களும்-வேறு திருத்தொண்டர்களும். கூட-அவர்களுடன் சேர்ந்துகொண்டு. மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. விண் இழிந்த-விண்ணிழிந்த விமானத்தைப் பெற்ற. கோயில்-வீழிநாதருடைய திருக்கோயிலுக்கு. வாயில்-முன்பு உயரமாக நிற்கும் கோபுரவாசலுக்கு. சென்று-எழுந்தருளி. அணைந்தார்-அந்த நாயனார் அடைந்தார்.

பிறகு உள்ள 252-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி வீழிநாதருடைய திருக்கோயிலுக்குள் நுழைந்து திருவீழி மிழலையில் வீற்றிருந்தருளிய சிவப்பாக இருக்கும் தங்கமலையாகிய மேருமலை என்னும் வில்லை ஏந்தியவராகிய வீழிநாதர் மகிழ்ச்சியை அடைந்து எழுந்தருளியுள்ள திருக்கோயிலை அந்த நாயனார் வலமாக வந்து பிரதட்சிணம் செய்து அந்த

ஆலயத்தின் அழகிய முற்றத்தில் வீழிநாதரைப் பணிந்து விட்டு முன்னால் அடைந்து மூன்று கண்களைப் பெற்ற செவ் வந்தி வானத்தைப் போலச் சிவந்து விளங்கும் சடாபாரத் தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவரும், வெற்றியை அடையும் இடப வாகனத்தை ஓட்டுபவரும் ஆகிய வீழி நாதருடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளின் கீழ்த் தரையில் அந்த நாயனார் விழுந்து வணங்கிவிட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு விம்மி விம்மி அழுதருளினார்.' பாடல் வருமாறு:

'' சென்றுள் புகுந்து திருவீழி
 மிழலை அமர்ந்த செங்கனகக்
குன்ற வில்லியார் மகிழ்ந்த
 கோயில் வலமா வந்துதிரு
முன்றில் வணங்கி முன்னெய்தி
 முக்கட் செக்கர்ச் சடைமவுலி
வென்றி விடையார் சேவடிக்கீழ்
 விழுந்தார் எழுந்தார் விம்மினார். ''

சென்று-அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் எழுந் தருளி. உள்-வீழிநாதருடைய திருக்கோயிலுக்குள். புகுந்து-நுழைந்து. திருவீழி மிழலை-திருவீழிமிழலையில். அமர்ந்த-வீற்றிருந்தருளிய. செம்-சிவப்பாக இருக்கும். கனகக்குன்ற-பொன்மலையாகிய மேருமலை என்னும். வில்லியார்-வில்லைத் தம்முடைய திருக்கரத்தில் ஏந்தியவராகிய வீழி நாதர். மகிழ்ந்த-மகிழ்ச்சியை அடைந்து எழுந்தருளி யுள்ள. கோயில்-திருக்கோயிலை. வலமா வந்து-வலமாக வந்து பிரதட்சிணம் செய்து. திருமுன்றில்-அந்த ஆலயத் தில் உள்ள அழகிய முற்றத்தில். முன்றில்-இல்முன்; முன் பின்னாகத் தொக்க தொகை. வணங்கி-வீழிநாதரைப் பணிந்துவிட்டு. முன்-முன்னால். எய்தி-அடைந்து. முக் கண்-மூன்று கண்களையும்; ஒருமை பன்மை மயக்கம். செக்கர்-செவ்வந்தி வானத்தைப் போலச் சிவந்த. ச்:சந்தி.

சடை-சடாபாரத்தைக் கொண்ட. ம வு லி - தலையையும் பெற்றவரும்; வினையாலணையும் பெயர். வென்றி-வெற்றியைப் பெற்ற. விடையார்-இடப வாகனத்தை ஓட்டுபவரும் ஆகிய வீழிநாதருடைய. சேவடிக்கீழ்-செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளின் கீழ். அடி: ஒருமை பன்மை மயக்கம். விழுந்தார்-அந்த நாயனார் தரையில் விழுந்து வணங்கி விட்டு; முற்றெச்சம். எழுந்தார் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்றுகொண்டு; முற்றெச்சம். விம்மினார்-விம்மி விம்மி அழுதருளினார்.

திருவீழிமிழலை: இந்தத் தலத்தைப் பற்றி முன்பே ஓரிடத்தில் எழுதினோம்; ஆண்டுக் கண்டுணர்க.

அடுத்து வரும் 253-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் வீழிநாதருடைய திருக்கோயிலுக்குள் எழுந்தருளித் தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டு வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் அந்த வீழிநாதருடைய திருவடிகளை வாழ்த்தி வணங்கி விட்டுத் தம்முடைய திருவுள்ளத்தில் சேர்ந்திருந்த பக்தியினால் தம்முடைய திருவுள்ளம் கரைந்து கரைந்து உருக்கத்தை அடையத் தம்முடைய திருமேனியின் மேல் வழிந்து இறங்கும் தம்முடைய விழிகளிலிருந்து அருவியைப் போல நீர் வழிந்து தரையில் விழத் தாம் அந்த வீழிநாதரைப் புகழும் இனிய சுவையைப் பெற்ற சொற்கள் அடங்கிய மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை, ''செய்ய சடையார் தமைச் சேரார் தீங்கு நெறிசேர் கின்றார்'' என்றுதொடங்கி யாவரும் உஜ்ஜீவனத்தை அடையும் வழியை உணர்த்தும் ஒரு திருத்தாண்டகத்தை அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு அந்தத் திருவீழி மிழலையிலிருந்து அகலாத விருப்பம் தம்முடைய திருவுள்ளத்தில் சிறப்பை அடைந்து ஓங்கி எழ.' பாடல் வருமாறு:

"கைகள் குவித்துக் கழல்போற்றிக்
கலந்த அன்பு கரைந்துருக
மெய்யில் வழியும் கண்ணருவி
விரவப் பரவும் சொல்மாலை
'செய்ய சடையார் தமைச்சேரார்
தீங்கு நெறிசேர் கின்றார்' என்
றுய்யும் நெறித்தாண் டகம்மொழிந்தங்
கொழியாக் காதல் சிறந்தோங்க."

இந்தப் பாடல் குளகம். கைகள்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் வீழிநாதருடைய திருக்கோயிலுக்குள் எழுந்தருளித் தம்முடைய திருக்கரங்களை, குவித்து-தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டு. க்:சந்தி. கழல்-வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் அந்த வீழிநாதருடைய திருவடிகளை; ஆகுபெயர். போற்றி-வாழ்த்தி வணங்கி விட்டு. க்:சந்தி. கலந்த-தம்முடைய திருவுள்ளத்தில் சேர்ந்திருந்த. அன்பு-பக்தியினால். கரைந்து-தம்முடைய திருவுள்ளம் கரைந்து கரைந்து. உருக-உருக்கத்தை அடைய. மெய்யில்-தம்முடைய திருமேனியின் மேல். வழியும்-வழிந்து இறங்கும். கண்-தம்முடைய விழிகளிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். அருவி-மலையிலிருந்துகுதிக்கும் அருவியைப் போல. விரவ-நீர் வழிந்து தரையில் விழ. ப்:சந்தி. பரவும்-அந்த வீழிநாதரைப் புகழ்ந்து பாடியருளும். சொல்-இனிய சுவையைப் பெற்ற சொற்கள் அடங்கிய; ஒருமை பன்மை மயக்கம். மாலை-மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை. 'செய்ய சடையார் தமைச் சேரார் தீங்கு நெறி சேர்கின்றார்' என்று-'செய்ய சடையார் தமைச் சேரார் தீங்குநெறி சேர்கின்றார்' என்று தொடங்கி. உய்யும்-யாவரும் உஜ்ஜீவனத்தை அடையும். நெறி-வழியை உணர்த்தும். த்:சந்தி. தாண்டகம்-ஒரு திருத்தாண்டகத்தை. மொழிந்து-அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. அங்கு-

அந்தத் திருவீழிமிழலையிலிருந்து. ஒழியா-அகலாத. சந்தி காதல்-விருப்பம். சிறந்து - தம்முடைய திருவுள்ளத்தில் சிறப்பை அடைந்து. ஓங்க-ஓங்கி எழ.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட திருத்தாண்டகம் ஒன்று வருமாறு :

"போரானை ஈருரிவைப் போர்வை யானைப்
புலியதனே உடையாடை போற்றி னானைப்
பாரானை மதியானைப் பகலா னானைப்
பல்லுயிராய் நெடுவெளியாய்ப் பரந்து நின்ற
நீரானைக் காற்றானைத் தீயா னானை
நினையாதார் புரமெரிய நினைந்த தெய்வத்
தேரானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே."

இந்தத் திருப்பதிகத்தில் உள்ள இறுதித் திருத்தாண்டகம் வருமாறு :

"அறுத்தானை அயன் தலைகள் அஞ்சில் ஒன்றை
அஞ்சாதே வரையெடுத்த அரக்கன் தோள்கள்
இறுத்தானை எழுநரம்பின் இசைகேட் டானை
இந்துவினைத் தேயத்தானை இரவிதன் பல்
பறித்தானைப் பகீரதற்காய் வானோர் வேண்டப்
பரந்திழியும் புனற்கங்கை பனிபோ லாங்குச்
செறித்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே."

அடுத்து உள்ள 254-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'முன்பு ஒரு காலத்தில் பிரமதேவனும் திருமாலும் அன்னப் பறவையினுடைய வடிவத்தை எடுத்துக் கொண்டு மேலே பறந்து தேடிப் பார்த்தும், பன்றியினுடைய உருவத்தை எடுத்துக் கொண்டு நிலத்தைத் தோண்டித் தேடிப் பார்த்தும் தம்முடைய திருமுடியையும் திருவடிகளையும் பார்க்க முடியாத தங்கத்தைப் போன்ற திருமேனியைப் பெற்ற மாணிக்க மலையைப் போன்றவரை, மலர்கள்

மிதக்கும் நீர் நிரம்பிய குளம் முதலிய நீர் நிலைகளைப் பெற்ற திருவீழிமிழலையில் வீழிநாதரை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் வாழ்த்தி வணங்கி விட்டுப் பல தினங்கள் அந்தத் திருவீழிமிழலையை விட்டுப் பிரிந்து போகாத நிலையினால் பல தடவைகளும் அந்த வீழிநாதரைத் தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டு அந்தத் திருவீழிமிழலையில் தங்கியிருப்பவராகி இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய அந்த வேதியர்கள் வாழும் அந்தத் திருத்தலமாகிய திருவீழிமிழலையில் உண்மையாகிய அருமையாக இருக்கும் தவத்தைப் புரிந்த அந்தத் திருநாவுக்கரசு நாயனார் ஆகிய சுவாமிகள் தங்கிக் கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு :

" முன்னாள் அயனும் திருமாலும்
முடிவும் முதலும் காணாத
பொன்னார் மேனி மணிவெற்பைப்
பூநீர் மிழலை யினிற்போற்றிப்
பன்னாள் பிரியா நிலைமையினால்
பயிலக் கும்பிட் டிருப்பாராய்
அந்நாள் மறையோர் திருப்பதியில்
இருந்தார் மெய்ம்மை அருந்தவர்கள்."

முன்-முன்பு. நாள்-ஒரு காலத்தில். அயனும்-பிரம தேவனும். திருமாலும்-விஷ்ணு மூர்த்தியும். முடிவும்-அன்னப் பறவையினுடைய வடிவத்தை எடுத்துக் கொண்டு மேலே பறந்து தேடிப் பார்த்தும் தம்முடைய திருமுடியையும். முதலும்-பன்றியினுடைய உருவத்தை எடுத்துக் கொண்டு நிலத்தைத் தோண்டித் தேடிப் பார்த்தும் தம்முடைய திருவடிகளையும். முதல்:எல்லாவற்றிற்கும் மூலமான திருவடிகள்; ஒருமை பன்மை மயக்கம். காணாத-பார்க்க முடியாத. பொன்-தங்கத்தை. ஆர்-போல நிரம்பிய

வண்ணத்தைப் பெற்ற. மேனி-திருமேனியைக் கொண்ட மணி-மாணிக்க. வெற்பை-மலையைப் போன்றவரை; உவம ஆகுபெயர். ப்:சந்தி. பூ-மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். நீர்-மிதந்து வரும் நீர் நிரம்பிய. மிழலையினில்-குளம், ஆறு, குட்டை, வாவி முதலிய நீர் நிலைகளைப் பெற்ற திருவீழி மிழலையில். போற்றி-வீழிநாதரை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் வாழ்த்தி வணங்கி விட்டு. ப்:சந்தி. பல்-பல. நாள்-தினங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பிரியா-அந்தத் திருவீழி மிழலையை விட்டுப் பிரிந்து போகாத. நிலைமையினால்-நிலையினால் பயில-பல தடவைகளும் பழகியிருக்குமாறு. க்:சந்தி. கும்பிட்டு-அந்த வீழிநாதரைத் தம்முடைய திருக் கரங்களைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டு. இருப்பாராய்-அந்தத் திருவீழிமிழலையில் தங்கியிருப்பவராக. அந்நான் மறையோர்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய அந்த வேதியர்கள் வாழும். மறையோர்: ஒருமை பன்மை மயக்கம். திருப்பதியில்-அந்தத் திருத்தல மாகிய திருவீழிமிழலையில். மெய்ம்மை-உண்மையாகிய. அரும்-புரிவதற்கு அருமையாக இருக்கும். தவர்கள்-தவத் தைப் புரிந்த அந்தத் திருநாவுக்கரசு நாயனாராகிய சுவாமிகள். இருந்தார்-தங்கிக் கொண்டிருந்தார்.

பிறகு வரும் 255-ஆம் கவியின் கருத்து வருமாறு :

'சீர்த்தியினால் விளக்கத்தைப் பெற்று வாழும் திருத் தொண்டராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவீழி மிழலையில் தங்கிக்கொண்டிருந்து சிலதினங்கள் கடந்தபிறகு மழை பெய்யாமல் சுருக்கத்தை அடைந்து நீர்வளத்தைப் பெற்ற பொன்னைக் கொழிக்கும் காவிரிஆறும் நீர்வரும் பருவம் மாறிப்போனவுடன் அந்தக் காவிரி ஆற்றில் ஓடும் புனலினால் உண்டாகிய உணவுகள் குறைந்துபோய் இந்தப் பூமண்டலத்தில் வாழும் நிலைபெற்ற பல உயிர்கள் யாவும்

இந்த உலகத்தில் மிகுதியாக இருந்த இல்லாமையாகிய துன்பத்தினால் துன்பத்தை மிகுதியாக அடையும் தரித்திரம் எங்கும் பரவியது.' பாடல் வருமாறு:

'' சீரின் விளங்கும் திருத்தொண்டர்
இருந்து சிலநாட் சென்றதற்பின்
மாரி சுருங்கி வளம்பொன்னி
நதியும் பருவம் மாறுதலும்
நீரின் இயன்ற உணவருகி
நிலவும் பலமன் னுயிர்களெலாம்
பாரின் மலிந்த இலம்பாட்டில்
படர்கூர் வறுமை பரந்ததால். ''

சீரின்-சீர்த்தியினால். விளங்கும்-விளக்கத்தைப் பெற்று வாழும். திருத்தொண்டர்-திருத்தொண்டராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். இருந்து-திரு வீழி மழலையில் தங்கிக் கொண்டிருந்து. சிலநாள்-சில தினங்கள்; ஒருமை பன்மை மயக்கம். சென்றதற் பின்-கடந்ததற்குப் பிறகு. மாரி-மழை, சுருங்கி-பெய்யாமல் சுருக்கத்தை அடைந்து வளம்-நீர் வளத்தைப் பெற்ற. பொன்னி-பொன்னைக் கொழிக்கும் காவிரியாகிய; 'பொன்னி பொன் கொழிக்கும்.'' என வருதலைக் காண்க. நதியும்-ஆறும். பருவம்-நீர்வரும் காலம். மாறுதலும்-மாறிப் போனவுடன். நீரின்-அந்தக் காவிரி ஆற்றில் ஓடும் புனலினால். இயன்ற-உண்டாகிய. உணவு-உணவுப்பொருள் களாகிய நெற்கள், நீர், பலவகை வியஞ்சனங்கள் முதலியவை; ஒருமை பன்மை மயக்கம். அருகி-குறைந்து போய்; கிடைப்பதற்கு அருமையாகப் போய். நிலவும்-அந்தப் பூமண்டலத்தில் வாழும். பல-பலவாகிய. மன்-நிலை பெற்ற. உயிர்கள்-மக்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர்வாழ் பிராணிகள், புழுக்கள், பூச்சிகள் முதலிய உயிர்கள். எலாம்-யாவும்; இடைக்குறை. பாரில்-இந்த உலகத்தில் மலிந்த-மிகுதியாகஇருந்த. இலம்பாட்டில்-இல்லாமையாகிய

துன்பத்தினால். படர்-துன்பத்தை. கூர்-மிகுதியாக அடையும். வறுமை-தரித்திரம். பரந்தது-நாடு எங்கும் பரவியது. ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு உள்ள 256-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இந்த உலகத்தில் எல்லா இடங்களிலும் பஞ்சமாகிப் போக இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள் வருத்தத்தை அடைய அவர்கள் தங்களுடைய உள்ளங்கள் வருந்தும் காலத்தில் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கும், திருநாவுக்கரசு நாயனாருக்கும் தம்முடைய திருக்கரங்களில் மான்குட்டியையும், மழுவாயுதத்தையும் சேர்ந்து பார்க்குமாறு அவர்களுடைய சொப்பனத்தில் எழுந்தருளிச் சிவந்த சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய திருவீழி மிழலையைத் தாம் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இடமாகப் பெற்றவராகிய வீழிநாதர் திருவாய் மலர்ந்தருளிச் செய்வார்.' பாடல் வருமாறு:

**'' வையம் எங்கும் வற்கடமாய்ச்**
**செல்ல உலகோர் வருத்தமுற**
**நையும் நாளில் பிள்ளையார்**
**தமக்கும் நாவுக் கரசருக்கும்**
**கையில் மானும் மழுவுமுடன்**
**காணக் கனவில் எழுந்தருளிச்**
**செய்ய சடையார் திருவீழி**
**மிழலை உடையார் அருள்செய்வார்.''**

வையம்-இந்த உலகத்தில் உள்ள. எங்கும்-எல்லா ஊர்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். வற்கடமாய்-பஞ்சம் உண்டாகி. ச்:சந்தி. செல்ல-போக. உலகோர்-இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். வருத்தம்-வருத்தத்தை. உற-அடைய. நையும்-அவர்கள் தங்களுடைய் உள்ளங்கள் வருந்தும். நாளில்-அந்தப் பஞ்சகாலத்தில், பிள்ளையால் தமக்கும்-ஆளுடைய பிள்ளையாராகிய திரு

ஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கும். தம்:அசை நிலை. நாவுக்கரசருக்கும்-திருநாவுக்கரசு நாயனாருக்கும். கையில்-தம்முடைய திருக்கரங்களில்; ஒருமை பன்மை மயக்கம். ஊனும்-மான் குட்டியையும். மழுவும்-மழுவாயுதத்தையும். உடன்-சேர்ந்த. காண-தரிசிக்குமாறு. க்:சந்தி. கனவில்-அந்த இரண்டு நாயன்மார்களும் துயிலும் போது கண்ட சொப்பனத்தில். எழுந்தருளி-எழுந்தருளி வந்து. ச்:சந்தி. செய்ய-சிவந்த, சடையார்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய. திருவீழிமிழலை-திருவீழிமிழலையை. உடையார்-தாம் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இடமாகப் பெற்றவராகிய வீழி நாதர். அருள் செய்வார்-பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்பவரானார்.

அடுத்து வரும் 257-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு;

' "இந்தப் பஞ்சகாலத்தினுடைய நிலைமையினால் உங்களுடைய உள்ளங்களில் வாட்டத்தை அடையாமல் இருப்பீர்கள் என்றாலும் பொருந்துமாறு இரண்டு நாயன்மார்களாகிய உங்களை வணங்குபவர்களாகிய மக்களுக்கு நீங்கள் வழங்குமாறு யாம் வழங்குகின்றோம்" எனத் தம்முடைய திருக்கோலத்தை அந்த இரண்டு நாயன்மார்களும் தரிசிக்குமாறு அவர்களுடைய கனவில் எழுந்தருளி அமையும் பெருமையைப் பெற்ற திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் ஆகிய அந்த இரண்டு நாயன்மார்களுக்கும் இந்த உலகத்தில் வாழும் மக்கள் யாவரும் தெரிந்து கொள்ளுமாறு திருவீழிமிழலையில் உள்ள திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தலைவராகிய வீழிநாதர் படிக்காசுகளை வைத்தருளினார்.' பாடல் வருமாறு:

" 'காலநிலைமை யால் உங்கள்
கருத்தில் வாட்டம் உறீர்எனினும்
ஏல உம்மை வழிபடுவார்க்
களிக்க அளிக்கின்றோம்.' என்று

**கோலம் காண எழுந்தருளிக்**
**குலவும் பெருமை இருவர்க்கும்**
**ஞாலம் அறியப் படிக்காசு**
**வைத்தார் மிழலை நாயகனார்.''**

*கால*-இந்தப் பஞ்ச காலத்தினுடைய. *நிலைமையால்*—நிலைமையினால்; நிலை பெற்று இருக்கும் தன்மையினால். உங்கள்-உங்களுடைய. கருத்தில்-உள்ளங்களில்; ஒருமை பன்மை மயக்கம். வாட்டம்-வாட்டத்தை. உறீர்-அடையாமல் இருப்பீர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எனினும்—என்றாலும்; இடைக்குறை. ஏல-ஏற்கனவே. உம்மை—இரண்டு நாயன்மார்களாகிய உங்களை. வழிபடுவார்க்கு—மக்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். அளிக்க-வழங்கும் பொருட்டு. அளிக்கின்றோம்-யாம் வழங்குகிறோம். என்று—என. கோலம்-தம்முடைய திருக்கோலத்தை. காண-அந்த இரண்டு நாயன்மார்களும் தரிசிக்குமாறு. எழுந்தருளி—கனவில் எழுந்தருளி. க்:சந்தி. குலவும்-அமையும். பெருமை-பெருமையைப் பெற்ற. இருவர்க்கும்-அந்த இரண்டு நாயன்மார்களுக்கும். ஞாலம்-இந்த உலகத்தில் வாழும் மக்கள் யாவரும்; இட ஆகு பெயர். அறிய-தெரிந்து கொள்ளுமாறு. ப்:சந்தி. படிக்காசு-திருக்கோயிற் படிகளில் காசுகளை. படி: ஒருமை பன்மை மயக்கம். காசு: ஒருமை பன்மை மயக்கம். மிழலை-திருவீழிமிழலையில் உள்ள திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும்; ஆகு பெயர். நாயகனார்-தலைவராகிய வீழிநாதர். வைத்தார்-வைத்தருளினார்.

பிறகு வரும் 258-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'திருவீழிமிழலையில் உள்ள திருக்கோயிலில் விளங்கும் விண்ணின்றிழிந்த விமானத்திற்குக் கிழக்குத் திசையிலும் மேற்குத் திசையிலும் இருக்கும் பலி பீடங்களில் பெருமையைப் பெற்றவரும், புகலியாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளியவரும், ஆண்மையையும் தகுதியையும் பெற்றவரும் ஆகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கும் திரு-

வதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனாருக்கும் அவர்கள் எழுந்தருளும் ஒவ்வொரு தினத்திலும் பொற்காசுகளை ஆலயத்தின் படிகளில் வீழிநாதர் வைத்தருள குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு திணைகளைப் பெற்ற இந்த நிலவுலகத்தில் வாழும் கணக்கு இல்லாத அடியார்களோடு திருவமுது செய்து கொண்டு அந்தத் திருவீழிமிழலையில் அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார். ஆகிய இரண்டு நாயன்மார்களும் தங்கிக் கொண்டிருந்தார்கள்.' பாடல் வருமாறு :

'' விண்ணின் றிழிந்த விமானத்தின்
கிழக்கும் மேற்கும் பீடத்தில்
அண்ணல் புகலி ஆண்டகையார்
தமக்கும் ஆண்ட அரசினுக்கும்
நண்ணும் நாள்கள் தொறும்காசு
படிவைத் தருள நானிலத்தில்
எண்ணில் அடியா ருடன்அமுது
செய்தங் கிருந்தார் இருவர்களும்.''

விண்ணின்றிழிந்த விமானத்தின்-திருவீழி மிழலையில் உள்ள திருக்கோயிலில் விளங்கும் விண்ணிழி விமானத்திற்கு. கிழக்கும்-கிழக்குத் திசையிலும். மேற்கும்-மேற்குத் திசையிலும் இருக்கும். பீடத்தில்-பலிபீடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். அண்ணல்-பெருமையைப் பெற்றவரும். புகலி-புகலியாகிய சீகாழியில் திருவவதாரம் புரிந்தருளியவரும்; ஆகுபெயர். ஆண்-ஆண்மையையும். தகையார் தமக்கும்-தகுதியையும் பெற்றவரும் ஆகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்கும். தம்:அசைநிலை. ஆண்ட-திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட. அரசினுக்கும்-திருநாவுக்கரசு நாயனாருக்கும். அரசு:திணை மயக்கம். நண்ணும்-அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளும். நாள்கள் தொறும்-வேறு வேறு நாள் ஒவ்வொன்

றிலும். காசு-பொற்காசுகளை; ஒருமை பன்மை மயக்கம். படி-ஆலயத்தின் படிகளில்; ஒருமை பன்மை மயக்கம். வைத்தருள-வீழிநாதர் வைத்தருள. நானிலத்தில்-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு திணைகளைப் பெற்ற இந்த நிலவுலகத்தில். எண்-கணக்கு. இல்-இல்லாத; கடைக்குறை. அடியாருடன்-அடியவர்களோடு; ஒருமை பன்மை மயக்கம். அமுது செய்து-திருவமுது செய்து கொண்டு. அங்கு-அந்தத் திருவீழி மிழலையில். இருவர் களும்-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் ஆகிய இரண்டு நாயன்மார்களும். இருந்தார்-தங்கிக்கொண்டிருந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 259-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும், ''இருட்டைப் போலக் கரிய நிறத்தைப் பெற்ற திருக்கழுத்தைக் கொண்ட தேவர்களுடைய தலைவனாகிய வீழிநாதன் வழங்கிய திருவருளினால் அடியேங்கள் இருவரும் பெற்ற படிக்காசுகளைக் கொண்டு பல வழிகளில் அமைந்த உணவுப் பொருள்களாகிய வளப்பம் பெருகி எழுமாறு பரமேசுவரனுடைய அடியவர்களாக இருப்பவர்கள் எல்லாரும் இங்கே வந்து சேர்ந்து உணவுகளை உண்பீர்களாக'' என்று பகல், இரவு என்னும் இரண்டு வேளைகளிலும் பறைகளை அடிக்கச் செய்தும் வார்த்தைகளால் திருவாய் மலர்ந்தருளிச் செய்தும் அவர்களுக்குச் சோற்றைப் படைக்கச் செய்தார்கள்; அதனால் துயரத்தை மிகுதியாக உண்டாக்கிய தாித்திரத்தை அந்த இரண்டு நாயன்மார்களும் போக்கிவிட்டார்கள்.' பாடல் வருமாறு:

''அல்லார் கண்டத் தண்டர்பிரான்
அருளால் பெற்ற படிக்காசு
பலவா றியன்ற வளம்பெருகப்
பரமன் அடியா ரானார்கள்

**எல்லாம் எய்தி உண்க' என**
**இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்**
**சொல்லால் சாற்றிச் சோறிட்டார்;**
**துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்.''**

*அவ்-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும் இருட்டைப் போல. ஆர்-கரிய நிறத்தைப் பெற்ற. கண்டத்து-திருக்கழுத்தைக் கொண்ட. அண்டர்- தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பிரான்-தலைவனாகிய வீழிநாதன். அருளால்-வழங்கிய திருவருளினால். பெற்ற-அடியேங்கள் இருவரும் பெற்ற. அடியேங்கள் என்றவர்கள் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும். படி-வீழிநாதருடைய ஆலயத்தின் படிகளில்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. காசு-வைத்தருளிய பொற்காசுகளைக் கொண்டு; ஒருமை பன்மை மயக்கம். பலவாறு-பலவழி களில்; ஒருமை பன்மை மயக்கம். இயன்ற-கடைகளிலிருந்து பெற்றுக்கொண்டுவந்த. வளம்-உணவுப் பொருள்களாகிய அரிசிகள், காய்கறிகள், வெல்லம், புத்துருக்கு நெய், தயிர், பால், ஏலம், கற்கண்டு, திராட்சைப்பழம் முதலிய வகைகள்; ஒருமை பன்மை மயக்கம். பெருக-பெருகி எழுமாறு. ப்:சந்தி. பரமன் - பரமேசுவரனுடைய. அடியார்-அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆனார்கள்-ஆக இருப்பவர்கள். எல்லாம்-எல்லாரும். எய்தி-இந்த வீழிநாதர் திருக்கோயிலை அடைந்து. உண்க-உண்பீர்களாக. என-என்று; இடைக் குறை. இரண்டு பொழுதும்-பகல் இரவு என்னும் இரண்டு வேளைகளிலும். பொழுது: ஒருமை பன்மை மயக்கம். பறை நிகழ்த்தி-பறைகளை அடிக்கச்செய்து. பறை:ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சொல்லால்-வார்த்தைகளாலும்; ஒருமை பன்மை மயக்கம். சாற்றி-அந்த இரண்டு நாயன்மார்களும் திருவாய் மலர்ந்தருளிச் செய்து. ச்:சந்தி. சோறு-அந்த அடிய*

வர்களுக்கு அன்னத்தை. இட்டார்-படைக்கச் செய்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். படைத்தவர்கள் சமையற்காரர்கள். துயர்-அதனால் பசி என்னும் துயரத்தை. கூர்-மிகுதியாக உண்டாக்கும். வறுமை-தரித்திரத்தை. தொலைத்திட்டார்- அந்த இரண்டு நாயன்மார்களும் போக்கிவிட்டார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 260-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பரமேசுவரரும் திருவீழிமிழலையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவரும் ஆகிய வீழிநாதரிடத்தில் இமாசல அரசனுடைய புதல்வியும், பொம்மையைப் போல என்றும் மாறாத அழகைப் பெற்றவளும் ஆகிய பெரிய நாயகி அம்மையாருடைய அழகிய கொங்கைகளிலிருந்து கறந்து சிவ ஞானத்தைக் குழைத்து ஒரு பொற்கிண்ணத்தில் வைத்து ஊட்டிய பாலை இந்தத் தமிழ்நாட்டில் வாழும் மக்கள் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம் குடித்தருளியவர் தம்முடைய அழகிய பெருமையைப் பெற்ற புதல்வர் ஆகையால் அந்தத்திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்வீழிநாதர் படியில் வைத்த பொற்காசை வட்டத்துடன் பெற்றார்; தம்முடைய திருக்கரங்களால் உழவாரத் திருத்தொண்டினையும் வேறு பல தொண்டுகளையும் புரிந்து வரும் பான்மையினால் வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் வட்டம் கொடுக்க வேண்டியிராத பொற்காசை வீழிநாதருடைய ஆலயத்தில் உள்ள படியில் பெற்று மகிழ்ச்சியை அடைந்தார்.' பாடல் வருமாறு:

"ஈசர் மிழலை இறையவர்பால்
இமைப் பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாம்
திருமா மகனார் ஆதலினால்
காசு வாசி யுடன்பெற்றார்;
கைத்தொண் டாகும் படிமையினால்

வாசி இல்லாக் காசுபடி
பெற்று வந்தார் வாகீசர்.''

ஈசர்-பரமேசுவரரும். மிழலை-திருவீழிமிழலையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும்; ஆகுபெயர். இறையவர்பால்-எங்கும் நிறைந்திருப்பவராகிய வீழிநாதரிடத்தில். இமைய-இமாசல அரசனுடைய புதல்வியும்; ஆகுபெயர். இமைய: திணைமயக்கம். ப்:சந்தி. பாவை-பொம்மையைப் போல என்றும் மாறாத அழகைப் பெற்றவளும்; உவமஆகுபெயர். திருமுலைப்பால்-ஆகிய பெரியநாயகி அம்மையாருடைய அழகிய கொங்கைகளிலிருந்து கறந்து சிவஞானத்தைக் குழைத்து ஒரு பொற்கிண்ணத்தில் வைத்து ஊட்டிய பாலை. தேசம்-இந்தச் செந்தமிழ் நாட்டில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். உய்ய-உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம். உண்டவர்தாம்-குடித்தருளியவர். தாம்: அசைநிலை. திருமாமகனார்-தம்முடைய அழகிய பெருமையைப் பெற்ற புதல்வர். ஆதலினால்-ஆகையால். காசு-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் வீழிநாதர் தம்முடைய ஆலயத்தின் படியில் வைத்த பொற்காசை. வாசியுடன்-வட்டம் கொடுக்கும் தன்மையோடு. பெற்றார் - அடைந்தார்; பெற்றுக் கொண்டார். கை-தம்முடைய திருக்கரங்களால்; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தொண்டு-உழவாரத் திருத்தொண்டும், வேறு பல தொண்டுகளும்; ஒருமை பன்மை மயக்கம். ஆகும்-ஆக இருக்கும். படிமையினால்-பான்மையினால். வாசி-வட்டம் கொடுக்க. இல்லா-வேண்டியிராத. க்:சந்தி. காசு-பொற்காசை. படி-வீழிநாதருடைய ஆலயத்தில் உள்ள படியில். வாகீசர்-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார். பெற்று-பெற்றுக்கொண்டு. உவந்தார்-மகிழ்ச்சி அடைந்தார். வந்தார்-ஒவ்வொரு நாளும் வந்தார் எனலும் ஆம்.

அடுத்து உள்ள 261-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'கங்கையாற்றைத் தம்முடைய தலையின்மேல் உள்ள சடாபாரத்தின் மேல் புனைந்தருளும் பெருமையைப் பெற்ற வராகிய வீழிநாதர் தம்முடைய ஆலயத்தில் உள்ள படியில் வைத்தருளிய பொற்காசினால் முடிவு இல்லாத திருவருட் செல்வத்தைப் பெற்ற அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருமடத்திலும், திருநாவுக்கரசு நாயனா ருடைய திருமடத்திலும் அன்னத்தை ஒவ்வொரு நாளிலும் திருத்தொண்டர்கள் மகிழ்ச்சியை அடைந்து உண்ண உண்ணத் தீராமல் மேலும் மேலும் ஏறும் அந்த இரண்டு நாயன்மார்களுடைய பெருமையை இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் வாழ்த்துமாறு அந்த இரண்டு நாயன்மார் களும் ஆனந்தத்தை அடைந்து திருவீழிமிழலையில் தங்கிக் கொண்டிருக்கும் அந்தக் காலத்தில்.' பாடல் வருமாறு:

**" ஆறு சடைமேல் அணிந்தருளும்**
**அண்ணல் வைத்த படிக்காசால்**
**ஈறி லாத பொருளுடைய**
**இருவ ருடைய திருமடங்கள்**
**சோறு நாளும் தொண்டர்மகிழ்ந்**
**துண்ண உண்ணத் தொலையாதே**
**ஏறு பெருமை புவிபோற்ற**
**இன்புற் றிருக்கும் அந்நாளில். "**

இந்தப் பாடல் குளகம். ஆறு-கங்கையாற்றை. சடை மேல்-தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தின் மேல். அணிந்தருளும்-புனைந்தருளும். அண்ணல்-பெருமை யைப் பெற்றவராகிய வீழிநாதர். வைத்த-தம்முடைய ஆலயத்தில் உள்ள படியில் வைத்தருளிய. படி-மற்றொரு படியில் வைத்தருளிய. க்:சந்தி. காசால்-பொற்காசினால். ஈறு-முடிவு. இலாத-இல்லாத; இடைக்குறை. பொருள்-திருவருட் செல்வத்தை. உடைய-பெற்ற. இருவருடைய திரு மடங்கள்-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் என்னும் இரண்டு நாயன்மார்க

ளுடைய திரு மடங்களிலும். சோறு-அன்னத்தை. நாளும்-ஒவ்வொரு நாளும். தொண்டர் - திருத்தொண்டர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. உண்ண - உண்ணவும். உண்ண-மேலும் உண்ணவும். த்:சந்தி. தொலையாது-தீராமல். ஏ:அசைநிலை. ஏறு-மேலும் மேலும் ஏறிவரும். பெருமை-அந்த இரண்டு நாயன் மார்களுடைய பெருமையை. புவி-இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். போற்ற-வாழ்த்தி வணங்குமாறு. இன்புற்று-அந்த இரண்டு நாயன்மார்களும் பேரானந்தத்தை அடைந்து. இருக்கும்-அந்தத் திருவீழி மிழலையில் தங்கிக் கொண்டிருக்கும். அந்நாளில்-அந்தக் காலத்தில்.

பிறகு உள்ள 262-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தத் திருவீழிமிழலையில் உண்டான பஞ்ச காலத்தி னுடைய தவறாகிய வறுமை அகன்று எல்லா இடங்களிலும் முழங்கும் மேகங்கள் மழையைச் சொரிந்த நீர் சேர்ந்து இந்த உலகம் முழுவதும் குளிர்ச்சியை அடைந்து உணவுப் பொருள்களாகிய நெற்கள், வெல்லம், பால், வெண்ணெய், பலவகையான கறியமுதுகள் முதலியவை பெருக உண்டாகி நன்மைகள் சிறப்பாக அமைய இந்தச் சுபிட்ச காலத்திற்கு மூலகாரணர்களாகிய பக்தர்களாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் என்னும் இரண்டு நாயன்மார்களும் செந்தமிழ் மொழியில் அமைந்த மாலைகளாகிய பல திருப்பதிகங்களையும், அந்த வீழிநாத ருக்கு அணிந்து நீலகண்டராகிய சிவபெருமானார் எழுந் தருளித் தங்கியிருக்கும் வேறு சிவத்தலங்களுக்கும் எழுந் தருளி அந்தத் தலங்களில் திருக்கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான்களைப் பணிவதற்கு அந்த இரண்டு நாயன் மார்களும் எண்ணத்தை அடைந்தார்கள்.' பாடல் வருமாறு:

"காலம் தவறு தீர்ந்தெங்கும்
கலிவான் பொழிந்த புனல்கலந்து
ஞாலம் எல்லாம் குளிர்தூங்கி
உணவு பெருகி நலம்சிறப்ப
மூல அன்பர் இருவர்களும்
மொழிமா லைகளும் பலசாத்தி
நீல கண்டர் உறைபதிகள்
பிறவும் வணங்க நினைவுற்றார்."

காலம்-அந்தத் திருவீழிமிழலையில் உண்டான பஞ்ச காலத்தினுடைய. தவறு-தவறாகிய வறுமையும் தீர்ந்து பசியும் அகன்று. எங்கும்-எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். கலி-முழங்கும். வான்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பொழிந்த-மழையைச் சொரிந்ததனால் கிடைத்த. புனல்-நீர். கலந்து-சேர்ந்து. ஞாலம்- இந்த உலகம். எல்லாம்-முழுவதும். குளிர்-குளிர்ச்சியைப் பெற்றதனால். தூங்கி-அமைதியைப் பெற்று. உணவு-உணவுப் பொருள்களாகிய நெற்கள், வெல்லம், பால், வெண்ணெய், பாசிப் பயறு, தயிர், பலவகையான கறியமுதுகள் முதலியவை; ஒருமை பன்மை மயக்கம். பெருகி-பெருக உண்டாகி. நலம்-நன்மைகள்; ஒருமை பன்மை மயக்கம். சிறப்ப-சிறப்பாக அமைய. மூல-இந்தச் சுபிட்ச காலத்திற்கு மூலகாரணர்களாகிய; திணை மயக்கம். அன்பர்-பக்தர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். இருவர்களும்-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் என்னும் இரண்டு நாயன்மார்களும். மொழி-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலைகளும்-மாலைகளாகிய திருப்பதிகங்களும். பல - பலவற்றை. சாத்தி-அந்த வீழிநாதருக்கு அணிந்து. நீல கண்டர்-நீலகண்டராகிய சிவபெருமானார். உறை-எழுந்தருளித் தங்கியிருக்கும். பதிகள்-வேறு சிவத்தலங்களுக்கும் எழுந்தருளி. பிறவும்-வேறாகவும். வணங்க-உள்ள அந்தத்

தலங்களில் திருக்கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் களைப் பணிவதற்கு நினைவுற்றார்- அந்த இரண்டு நாயன் மார்களும் எண்ணத்தை அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

திருவீழிமிழலையைப் பற்றி நட்டபாடைப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"பண்ணும்பதம் ஏழும்பல
ஓசைத் தமிழவையும்
உண்ணின்றதொர் சுவையும்உறு
தாளத்தொலி பலவும்
மண்ணும்புனல் உயிரும்வரு
காற்றும்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானான்இடம்
வீழிம்மிழலையே."

அந்த நாயனார் நட்டபாடைப் பண்ணிப் பாடியருளிய திருவிராகப் பாசுரம் ஒன்று வருமாறு:

"தடநில வியமலை நிறுவியொர்
தழலுமிழ் தருபட அரவுகொ
டடல்அசு ரரொடம ரர்கள்அலை
கடல்சடை வுழியெழு மிகுசின
விடம்அடை தருமிட றுடையவன்
விடைமிசை வருமவன் உறைபதி
திடமலி தருமறை முறையுணர்
மறையவர் நிறைதிரு மிழலையே."

அந்த நாயனார் தக்கராகப்பண் அமைந்த ஒரு திருப் பதிகத்தைப் பாடியருளியிருக்கிறார், அந்தத் திருப்பதி கத்தில் வரும் ஒரு பாசுரம் வருமாறு:

"அரையார் விரிகோவண ஆடை
நரையார் விடையூர் திநயந்தான்

விரையார் பொழில்வீ ழிம்மிழலை
உரையால் உணர்வார் உயர்வாரே. "

அந்த நாயனார் குறிஞ்சிப்பண் அமையப் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" கண்ணிற் கனலாலே காமன் பொடியாகப்
பெண்ணுக் கருள்செய்த பெருமான் உறைகோயில்
மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்
விண்ணிற் புயல்காட்டும் வீழி மிழலையே. "

அந்த நாயனார் குறிஞ்சிப் பண்ணில் பாடியருளிய ஒரு திருவிருக்குக்குறள் வருமாறு:

" வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசில் மிழலையீர், ஏசல் இல்லையே. "

அந்த நாயனார் வியாழக்குறிஞ்சிப் பண்ணில் பாடியருளிய ஒரு திருவிராகப் பாசுரம் வருமாறு:

' அலர்மகள் மலிதர அவனியில் நிகழ்பவர்
மலர்மலி குழலுமை தனையிடம் மகிழ்பவர்
நலமலி உருவுடை யவர்நகர் மிகுபுகழ்
நிலமலி மிழலையை நினையவ லவரே. "

அந்த நாயனார் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்
கீரிருவர்க் கிரங்கி நின்று
நேரியநான் மறைப்பொருளை உரைத்தொளிசேர்
நெறியளித்தோன் நின்ற கோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட்சொல்லும் மிழலை யாமே. "

அந்த நாயனார் காந்தாரப் பஞ்சமப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"கேள்வியர் நாடொறும் ஓதும்நல்
வேதத்தர் கேடிலா
வேள்விசெய் அந்தணர் வேதியர்
வீழிமி ழலையார்
வாழியர் தோற்றமும் கேடும்வைப்
பாருயிர் கட்கெலாம்
ஆழியர் தம்மடி போற்றியென்
பார்கட் கணியரே."

அந்த நாயனார் சாதாரிப் பண்ணில் பாடியருளிய ஒரு திருவிராகப் பாசுரம் வருமாறு:

"சீர்மருவு தேசினொடு தேசமலி
செல்வமறை யோர்கள் பணியத்
தார்மருவு கொன்றையணி தாழ்சடையி
னான்அமர்ச யங்கொள் பதிதான்
பார்மருவு பங்கயமு யர்ந்தவயல்
சூழ்பழனம் நீட அருகே
கார்மருவு வெண்கனக மாளிகை
கவின் பெருகு வீழிநகரே."

அந்த நாயனார் சாதாரிப் பண்ணில் பாடியருளிய மற்றொரு திருவிராகப் பாசுரம் வருமாறு:

"மட்டொளி விரிதரு மலர்நிறை
சுரிகுழல் மடவரல்
பட்டொளி மணியல்குல் உமையமை
உருவொரு பாகமாக்
கட்டொளிர் புனலொடு கடியா
வுடனுறை முடிமிசை
விட்டொளி உதிர்பிதிர் மதியவர்
பதிவீழி மிழலையே."

அந்த நாயனார் சாதாரிப் பண்ணில் பாடியருளிய ஒரு திருமுக்கால் வருமாறு:

" வெண்மதி தவழ்மதில் மிழலையு ளீர்சடை
ஒண்மதி அணியுடை யீரே
ஒண்மதி அணியுடை யீர்உமை உணர்பவர்
கண்மதி மிகுவது கடனே. "

அந்த நாயனார் பழம்பஞ்சுரப் பண்ணில் பாடியருளிய ஓர் ஈரடிப் பாசுரம் வருமாறு:

" வேலின் நேர்தரு கண்ணினாள் உமை
பங்கன் அங்கணன் மிழலை மாநகர்
ஆல நீழலின் மேயினான் அடிக்
கன்பர் துன்பிலரே. "

அந்த நாயனார் பழம் பஞ்சுரப் பண்ணில் பாடியருளிய ஒரு திருவியமகப் பாசுரம் வருமாறு:

" துன்று கொன்றைநஞ் சடையதே
தூய கண்டம்நஞ் சடையதே
கன்றின் மானிடம் கையதே
கல்லின் மானிடக் கையதே
என்றும் ஏறுவ திடவமே
என்னி டைப்பலி யிடவமே
நின்ற தும்மிழலை உள்ளுமே
நீரெனைச் சிறிதும் உள்ளுமே. "

புற நீர்மைப் பண்ணில் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

" புள்ளித்தோல் ஆடை பூண்பது நாகம்
பூசு சாந்தம் பொடிநீறு
கொள்ளத்தீ விளக்குக் கூளிகள் கூட்டம்
காளியைக் குணம்செய்கூத் துடையோன்
அள்ளற்கா ராமை அகடுவான் மதியம்
ஏய்க்கமுட் டாழைகள் ஆனை
வெள்ளைக்கொம் பீனும் விரிபொழில்
வீழி மிழலையான் எனவினை கெடுமே. "

இந்தத் தலத்தைப்பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

"நிலையிலா ஊர்மூன் றொன்ற
நெருப்பெரி காற்றம் பாகச்
சிலையுநா ணதுவும் நாகம்
கொண்டவர் தேவர்தங்கள்
தலையினால் தரித்த என்பும்
தலைமயிர் வடமும்பூண்ட
விலையிலா வேடர் வீழி
மிழலையுள் விகிர்தனாரே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

"வான்சொட்டச் சொட்டநின் றட்டும்
வளர்மதி யோடயலே
தேன்சொட்டச் சொட்டநின் றட்டும்
திருக்கொன்றை சென்னிவைத்தீர்
மான்பெட்டை நோக்கி மணாளீர்
மணிநீர் மிழலையுள்ளீர்
நான்கட்ட நும்மை மறக்கினும்
என்னைக் குறிக்கொண்மினே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"பூதியணி பொன்னிறத்தர் பூண நூலர்
பொங்கரவர் சங்கார்வெண் குழையோர் காதர்
கேதிசரம் மேவினார் கேதா ரத்தார்
கெடில வடஅதிகை வீரட் டத்தார்
மாதுயரம் தீர்த்தென்னை உய்யக் கொண்டார்
மழபாடி மேய மழுவா ளனார்
வேதிகுடி உள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவி னாரே."

மற்றொரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

'' ஆலைப் படுகரும்பின் சாறு போல
அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமத் தான்காண்
சீலமுடை அடியார் சிந்தை யான்காண்
திரிபுரம்மூன் றெரிபடுத்த சிலையி னான்காண்
பாலினொடு தயிர்நறுநெய் ஆடி னான்காண்
பண்டரங்க வேடன்கான் பலிதேர் வான்காண்
வேலை விடமுண்ட மிடற்றி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே.''

பின்னும் ஒரு திருப்பதிகத்தில் உள்ள ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

'' நீறணிந்த திருமேனி நிமலர் போலும்
நேமிநெடு மாற்கருளிச் செய்தார் போலும்
ஏறணிந்த கொடியுடைஎம் இறைவர் போலும்
எயில்மூன்றும் எரிசரத்தால் எய்தார் போலும்
வேறணிந்த கோலமுடை வேடர் போலும்
வியன்வீழி மிழலையுறை விகிர்தர் போலும்
ஆறணிந்த சடாமகுடத் தழகர் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே.''

சுந்தரமூர்த்தி நாயனார் சீகாமரப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' ஊனை உற்றுயிர் ஆயினீர்ஒளி
மூன்றுமாய்த் தெளிநீரொ டானஞ்சின்
தேனை ஆட்டுகந்தீர் செழுமாடத்
திருமிழலை
மானை மேவிய கையினீர்மழு
ஏந்தினீர் மங்கை பாகத்தீர் விண்ணில்
ஆன வீழிகொண்டீர்
அடியேற்கும் அருளுதிரே.''

பின்பு வரும் 263-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'ஒரு வரம்பு இல்லாத சீர்த்தியைப் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனார் வாய்ப்பாக அமைந்த திரு வீழிமிழலையில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமையைப் பெற்ற மாணிக்கத்தைப் போன்றவராகிய வீழிநாதரை அந்த நாயனார் பணிந்து விட்டு அந்த வீழிநாதரிடம் பிரிய முடியாத விடையைப் பெற்றுக் கொண்டு மலர்கள் மலர்ந்த குளிர்ச்சியைப் பெற்ற நீர் நிலைகள் சுற்றியிருக்கும் திருவாஞ்சியத்திற்கு எழுந்தருளி வாஞ்சி லிங்கேசுவரரை வாழ்த்தி வணங்கிவிட்டுப் பரிசுத்தராகிய சிவபெருமானார் எழுந்தருளி வாழும் பல தலங்களுக்கு எழுந்தருளி தம்முடைய திருவுள்ளத்தில் அமைந்த பக்தியோடு அந்தத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை அந்த நாயனார் வணங்கிவிட்டு இசையைப் பெற்றவையும், சொற்சுவை பொருட்சுவை ஆகிய வளப்பத்தைப் பெற்ற செந்தமிழ் மொழியில் அமைந்த திருப்பதிகங்களை அந்தச் சிவ பெருமான்களுக்கு அணிந்து விட்டு மேலே எழுந்தருளி செல்வர்கள் வாழும் திருமறைக்காடாகிய வேதாரணியத்தை அந்த நாயனார் அடைந்தார்.' பாடல் வருமாறு:

"வாய்ந்த மிழலை மாமணியை
வணங்கிப் பிரியா விடைகொண்டு
பூந்தண் புனல்சூழ் வாஞ்சியத்தைப்
போற்றிப் புனிதர் வாழ்பதிகள்
ஏய்ந்த அன்பி னால்இறைஞ்சி
இசைவண் தமிழ்கள் புனைந்துபோய்ச்
சேர்ந்தார் செல்வத் திருமறைக்கா
டெல்லை இல்லாச் சீர்த்தியினார்."

இந்தப் பாடலில் விற்பூட்டுப் பொருள்கோள் அமைந்துள்ளது. எல்லை-ஒரு வரம்பு. இல்லா-இல்லாத. ச்:சந்தி. சீர்த்தியினார்-சீர்த்தியைப் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனார். வாய்ந்த-வாய்ப்பாக அமைந்த. மிழலை-திரு

வீழிமிழலையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும்; ஆகுபெயர். மா-பெருமையைப் பெற்ற. மணியை-மாணிக்கத்தைப் போன்றவராகிய வீழிநாதரை; உவம ஆகு பெயர். வணங்கி-அந்த நாயனார் பணிந்துவிட்டு. ப்:சந்தி. பிரியா-அவரைப் பிரிய முடியாத விடைகொண்டு-விடையை அந்த வீழிநாதரிடம் பெற்றுக்கொண்டு. பூம் மலர்கள் மலர்ந்த; ஒருமை பன்மை மயக்கம். அந்த மலர்களாவன: செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், ஆம்பல் மலர், அல்லி மலர், செங்கழுநீர் மலர், குமுத மலர் முதலிய நீர்ப் பூக்கள். தண்-குளிர்ச்சியைப் பெற்ற. புனல்- குளம், ஏரி, ஆறு, குட்டை, வாவி, கிணறு முதலிய நீர் நிலைகள்; ஆகு பெயர். சூழ்-சுற்றியிருக்கும். வாஞ்சியத்தை-திருவாஞ்சி யத்திற்கு எழுந்தருளி; உருபு மயக்கம். ப்:சந்தி. போற்றி-வாழ்த்தி வணங்கி விட்டு. ப்:சந்தி. புனிதர்-பரிசுத்தராகிய சிவபெருமானார். வாழ்-எழுந்தருளிவாழும். பதிகள்-பல தலங்களுக்கு எழுந்தருளி. ஏய்ந்த-தம்முடைய திருவுள்ளத்தில் அமைந்த. அன்பினால்-பக்தியோடு; உருபு மயக்கம். இறைஞ்சி-அந்தத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை அந்த நாயனார் வணங்கிவிட்டு. இசை-சங்கீதத்தைப் பெற்ற. வண்-சொற்சுவை பொருட் சுவை ஆகிய வளப்பத்தைப் பெற்ற. தமிழ்கள்-செந்தமிழ் மொழியில் அமைந்த திருப்பதிகங்களை; ஆகுபெயர். புனைந்து-அந்தச் சிவபெருமான்களுக்கு அணிந்து விட்டு. போய்-மேலே எழுந்தருளி. ச்:சந்தி. செல்வ-செல்வர்கள் வாழும்; திணை மயக்கம். த்:சந்தி. திருமறைக்காடு-திருமறைக் காடாகிய வேதாரணியத்தை. சேர்ந்தார்-அந்த நாயனார் அடைந்தார்.

திருவாஞ்சியம்: இந்தத் தலம் சோழநாட்டில் உள்ளது. இங்கே கோயில் கொண்டிருப்பவர் வாஞ்சிலிங்கேசுவரர்; வாஞ்சி நாதர் எனவும் வழங்குவர். அம்பிகையின் திரு நாமங்கள் மங்களநாயகி, வாழவந்த நாயகி என்பவை.

தலவிருட்சம் சந்தன மரம். தீர்த்தம் குப்த கங்கை. இது நன்னிலத்திற்கு மேற்குத் திசையில் ஆறரை மைல்தூரத்தில் உள்ளது. இந்தத் தலம் புத்தாறு என்னும் ஆற்றினுடைய வடகரையில் உள்ளது. திருமால் வாஞ்சி நாதரைப் பூசை புரிந்து தம்மைவிட்டுப் பிரிந்து சென்ற திருமகளை அடையப் பெற்ற தலம் இது. திரு வாஞ்சியம்-திருவைத் திருமால் வாஞ்சித்த இடம். வாஞ்சித்த-விரும்பிய. தலவிருட்சமாகிய சந்தனமரம்ஆலயத்தின் பிராகாரத்தில்உள்ளது.குப்தகங்கை என்னும் தீர்த்தம் திருக்கோயிலுக்கு வடதிசையில் இருக்கிறது. கார்த்திகை மாதத்தில் வரும் ஞாயிற்றுக் கிழமைகளில் இந்தத் தீர்த்தத்தில் நீராடுவது சிறப்பு என்பர். இந்தத் தலத்தில் இறக்கும் மக்களுக்கு யமவாதனை இல்லை என்று ஆன்றோர் கூறுயர். இந்தத் திருக்கோயிலில் யமனுக்கு ஒருசந்நிதி உள்ளது. காசிக்குநிகராகப் பாராட்டப் பெறும் தமிழ் நாட்டில் உள்ள ஆறு தலங்களுக்குள் இதுவும் ஒன்று.

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

"அங்கம் ஆறும் அருமறை நான்குடன்
தங்கு வேள்வியர் தாம்பயிலுந்நகர்
செங்கண் மாலிட மார்திரு வாஞ்சியம்
தங்கு வார்நம் அமரர்க் கமரரே."

இந்தத் தலத்தைப் பற்றிய பியந்தைக் காந்தாரப் பண்ணில் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"வாழை யின்கனி தானும்
மதுவிம்மு வருக்கையின் சுளையும்
கூழை வாரைம் தம்மிற்
கூறிது சிறிதெனக் குழறித்
தாழை வாழையந் தண்டாற்
செருக்கெய்து தருக்கு வாஞ்சியத்துள்

ஏழை பாகனை அல்லால்
இறையெனக் கருதுதல் இலமே. ''

திருமறைக்காடு: இந்தத் தலம் சோழநாட்டில் உள்ள வேதாரணியம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் வேதாரணியேசுவரர், மறைக்காட்டீசுவரர், வேதவனத்தார் என்பவை. அம்பிகை யாழைப் பழித்தமொழி அம்மை. தீர்த்தங்கள் வேததீர்த்தம், மணி கர்ணிகை என்பவை. தலவிருட்சம் வன்னி மரம். இது நாகபட்டினத்திற்குத் தெற்குத் திசையில் முப்பது மைல் தூரத்தில் உள்ளது. இது சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. தியாகராஜப் பெருமானாருக்கு எதிரில் சுந்தரமூர்த்தி நாயனாருடைய விக்கிரகமும், பரவை நாச்சியாருடைய விக்கிரகமும் உள்ளன. வேதங்கள் பூசித்துத் திருக்காப்புச் செய்த கதவைத் திருநாவுக்கரசு நாயனாரும், திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் முறையே திறக்கவும் மூடவும் பாடியருளிய தலம் இது. இந்தத் தலத்தைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

'' கண்ணி னால்உமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே
இதுநன் கிறை வைத்தருள் செய்க எனக்குன்
கதவம் திருக்காட்டிக் கொள்ளும் கருத்தாலே. ''

சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரமூர்த்தி நாயனாரோடு எழுந்தருளி வேதாரணியேசுவரரைத் தரிசனம் செய்து வணங்கிய தலம் இது. வேதாரணியேசுவரருக்குப் பின்பக்கத்தில் சிவபெருமானும் அம்பிகையும் திருமணக் கோலத்தோடு நிற்கிறார்கள். இந்தத் திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் தட்சிணாமூர்த்திக்கு நான்கு திருமுகங்கள் உள்ளன. தலவிநாயகர் சிந்தாமணி கணபதி. வெளிப்பிராகாரத்தில் வீரஹத்தி விமோசன விநாயகர் சந்நிதி உள்ளது. 'வேதாரணியம் விளக்கழகு' என்பது ஒரு பழமொழி. இந்தத் தலத்தில் எழுந்தருளி யிருக்கும் துர்க்கை

யம்மை சிறப்புடையவர். இந்தத் திருக்கோயிலில் உள்ள திருவிளக்கில் உள்ள நெய்யை ஓர் எலி வந்து நக்கிக் குடிக்கும் பொழுது அந்த விளக்கின் சுடர் அதனுடைய மூக்கிற் பட்டது. அப்போது அந்த எலி தன்னுடைய மூக்கை எடுத்துக் கொள்ளத் திருவிளக்கு பிரகாசமாக எரிந்தது. அந்தத் திருவிளக்கு மங்கும் சமயத்தில் அந்த எலி இவ்வாறு செய்தமையால் வேதாரணியேசுவரர் அதற்கு மூன்று உலகங்களையும் ஆட்சி புரியுமாறு திருவருளை வழங்கினார். அந்த எலி மறுபிறப்பில் மகாபலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்து அரசாட்சியைப் புரிந்தது. இந்தச் செய்தியைத் திருநாவுக்கரசு நாயனார் திருக்குறுக்கையைப் பற்றிப் பாடியருளிய திருநேரிசைகளில் எட்டாவது திருநேரிசையில்,

"நிறைமறைக்காடு தன்னில்
நீண்டெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச்
சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும்
நீண்டவா னுலகும் எல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலும்
குறுக்கை வீரட்ட னாரே."

என்று சிறப்பித்திருக்கிறார்.

"மறையடி வழுத்திய மறைவனத் தொருநாள்
மணிச்சுடர் நறுநெய் கவர்மதிக் கருப்பைக்
கிருவகை ஏழுனும் திருவுல கனைத்தும்
கொடுத்தவன்."

என்று கல்லாடத்தில் வருவதைக் காண்க.

மற்றொரு பாசுரம் வருமாறு:

"பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலரால்வழி பாடுசெய் மாமறைக் காடர்

உலகேழுடை யாய்கடை தோறுமுன் னென்கொல்
தலைசேர்பலி கொண்டதில் உண்டது தானே.''

இந்தத் தலத்தைப் பற்றி தட்டபாடைப் பண்ணில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு திருவிராகப் பாசுரம் வருமாறு:

'' கறைமலி திரிசிகை படையடல்
கனல்மழு வெழுதர வெறிமறி
முறைமுறை ஒலிதம ருகமுடை
தலைமுகிழ் மலிகணி வடமுகம்
உறைதரு கரனுல கினிலுயர்
ஒளிபெறு வகைநினை வொடுமலர்
மறையவன் மறைவழி வழிபடு
மறைவனம் அமர்தரு பரமனே. ''

அந்த நாயனார் இந்தளப்பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' கலம்கொள் கடலோதம்உலா வும்கரைமேல்
வலம்கொள் பவர்வாழ்த் திசைக்கும் மறைக்காடா
இலங்கை உடையான் அடர்ப்பட் டிடரெய்த
அலங்கல் விரலூன் றியருள் செய்தவாறே. ''

அந்த நாயனார் பியந்தைக் காந்தாரப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' பொங்கு வெண்மணற் கானற்
பொருகடல் திரைதவழ் முத்தம்
கங்கு லார்கு நள் போழும்
கலிமறைக் காடமர்ந் தார்தாம்
திங்கள் சூடின ரேனும்
திரிபுரம் எரித்தன ரேனும்
எங்கும் எங்கள் பிரானார்
புகழல திகழ்பழி இலரே. ''

அந்த நாயனார் சாதாரிப் பண்ணில் பாடியருளிய ஒரு திருவிராகப் பாசுரம் வருமாறு:

"வாசமலர் மேவியுறை வானும்நெடு
மாலுமறி யாத நெறியைக்
கூசுதல்செ யாதஅம ணாதரொடு
தேரர்குறு காத அரனூர்
காசுமணி வார்கனகம் நீடுகட
லோடுதிரை வார்துவலை மேல்
வீசுவலை வாணரவை வாரிவிலை
பேசுமெழில் வேத வனமே."

இந்தத் தலத்தைப்பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

"கீதராய்க் கீதம் கேட்டுக்
கின்னரம் தன்னை வைத்தார்
வேதராய் வேதம் ஓதி
விளங்கிய சோதி வைத்தார்
ஏதராய் நட்டம் ஆடி
இட்டமாய்க் கங்கை யோடு
மாதையோர் பாகம் வைத்தார்
மாமறைக் காட னாரே."

அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருநேரிசை வருமாறு:

"நாணஞ்சு கைய னாகி
நன்முடி பத்தி னோடு
பாணஞ்சு முன்னி றந்து
பாங்கிலா மதிய னாகி
நீணஞ்சு தானு ணரா
நின்றெடுத் தானை அன்று
ஏணஞ்சு கைகள் செய்தார்
எழில்மறைக் காட னாரே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

"ஓத மால்கடல் பாலி உலகெலாம்
மாத ரார்வலம் கொள்மறைக் காடரைக்
காதல் செய்து கருதப் படுமவர்
பாதம் ஏத்தப் பறையும்நம் பாவமே."

அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருக்குறுந் தொகை வருமாறு:

"பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலம் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதம் எல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே."

இந்தத் தலத்தைப் பற்றிக் காந்தாரப் பண்ணில் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"யாழைப் பழித்தன்ன மொழிமங்கை ஒருபங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறை வைத்தான்இடம் பேணில்
தாழைப்பொழி லூடேசென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும் மறைக் காடே."

பிறகு வரும் 264-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நறுமணம் கமழும் மலர்கள் மலர்ந்திருக்கும் புன்னை மரத்தில் உள்ள மலர்கள் வீசும் நறுமணம் சுற்றியிருக்கும் பூம்பொழிலுக்குப் பக்கத்தில் உள்ள உப்பளத்தினுடைய முற்றம் ஒவ்வொன்றிலும் சிறிய மடப்பத்தைப் பெற்ற பெண்மணிகள் முத்துக்களைக் கொழித்து எடுக்கும் திருமறைக்காடாகிய வேதாரணியத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் மேரு மலையாகிய வில்லை ஏந்திய வராகிய வேதாரணியேசுவரர் மகிழ்ச்சியை அடைந்து எழுந்தருளியிருந்த திருக்கோயிலுக்குள் நுழைந்து அந்த ஆலயத்தை வலமாக வந்து தெற்குத் திசையில் உள்ள புகலியாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய அரசராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும் அந்த வேதாரணியேசுவரருடைய அழகிய சந்நிதிக்கு எழுந்தருளி அந்த இரண்டு நாயன்மார்களும் அடைந்தார்கள்.' பாடல் வருமாறு:

"மன்றல் விரவு மலர்ப்புன்னை
மணம்சூழ் சோலை உப்பளத்தின்
முன்றில் தோறும் சிறுமடவார்
முத்தம் கொழிக்கும் மறைக்காட்டுக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த
கோயில் புகுந்து வலம்கொண்டு
சென்று சேர்ந்தார் தென்புகலிக்
கோவும் அரசும் திருமுன்பு."

மன்றல்-நறுமணம். விரவு-வீசிக் கமழும். மலர்-மலர்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. புன்னை-புன்னை மரத்தில் பூத்திருக்கும் மலர்கள்; ஆகு பெயர். மணம்-நறுமணத்தை. சூழ்-சுற்றி வீசும். சோலை-பூம்பொழிலுக்குப் பக்கத்தில் உள்ள. உப்பளத்தின்-உப்புக் களை வாரி எடுக்கும் பாத்தியினுடைய. முன்றல்-முற்றம்.

முன்றில்-இல்முன்; முன்பின்னாகத் தொக்கதொகை. தோறும்-ஒவ்வொன்றிலும். சிறு-சிறிய. மடவார்-மடப்பத்தைப் பெற்ற உப்பு வாணிகர்களுடைய பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். முத்தம்-சிப்பிகள் உமிழும் முத்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். கொழிக்கும்-சலித்து எடுக்கும். மறைக்காட்டு-திருமறைக் காடாகிய வேதாரணியத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும்; ஆகுபெயர். க்:சந்தி. குன்ற-பொன்மலையாகிய மேரு பர்வதமாகிய. வில்லியார்-வில்லை ஏந்தியவராகிய வேதாரணியேசுவரர். மகிழ்ந்த-மகிழ்ச்சியை அடைந்து எழுந்தருளியிருந்த. கோயில் - திருக்கோயிலுக்குள். புகுந்து-நுழைந்து. வலம்கொண்டு-அந்த ஆலயத்தை வலமாக வந்து. தென்-தமிழ்நாட்டில் தென்திசையில் விளங்கும். புகலி-புகலியாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய. க்:சந்தி. கோவும்-அரசராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும். அரசும்-திருநாவுக்கரசு நாயனாரும்; திணைமயக்கம். திருமுன்பு-அந்த வேதாரணியேசுவரருடைய அழகிய சந்நிதிக்கு. சென்று-எழுந்தருளி. சேர்ந்தார்-அந்த இரண்டு நாயன்மார்களும் அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 265-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'கடலினுடைய அலைகள் வீசும் உப்பங்கழிகளுக்கும், கடற்கரைச் சோலைக்கும் பக்கத்தில் பல வகையான மரங்கள் நெருங்கி வளர்ந்திருக்கும் அந்தச் சிவத்தலமாகிய வேதாரணியத்தில் பாம்புகளைத் தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தில் அணிந்திருக்கும் வேதியராகிய வேதாரணியேசுவரரை இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் ஆகிய எல்லா வேதங்களும் அருச்சனையைப் புரிந்து வலிமையைப் பெற்று அந்த வேதாரணியேசுவரருடைய திருக் கோயிலின் திருவாயிலில் உள்ள திருக்கதவைப் பூட்டிவைத்த அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரையிலும் அந்தத் திருக்கதவு மூடியே நிற்

கின்ற அடிக்கும் மணியைக் கட்டித் தொங்க விட்டிருக்கும் உயரமான கோபுரவாசலுக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி வேதாரணியேசுவரரைப் பணிவாரானார்.' பாடல் வருமாறு:

'' பரவை ஓதக் கழிக்கானற்
பாங்கு நெருங்கும் அப்பதியில்
அரவச் சடைஅந் தணனாரை
அகில மறைகள் அர்ச்சனைசெய்
துரவக் கதவம் திருக்காப்புச்
செய்த அந்நாள் முதல்இந்நாள்
வரையும் அடைத்தே நிற்கின்ற
மணிநீள் வாயில் வணங்குவார். ''

பரவை-கடலினுடைய. ஓத-அலைகள் வீசும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கழி-உப்பங்கழிகளுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. கானல்-கடற்கரைச்சோலைக்கும். பாங்கு-பக்கத்தில். நெருங்கும்-பலவகையாகிய மரங்கள் நெருங்கி வளர்ந்து நிற்கும். அப்பதியில்-அந்தச் சிவத்தலமாகிய வேதாரணியத்தில். அரவ-பாம்புகளை; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சடை-தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தில் அணிந்திருக்கும். அந்தணனாரை-வேதியராகிய வேதாரணியேசுவரரவரை. அகில மறைகள்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் ஆகிய எல்லா வேதங்களும். அர்ச்சனை செய்து-அருச்சனையைப் புரிந்து விட்டு. உரவ-வலிமையைப் பெற்ற. க்:சந்தி. கதவம்-அந்த வேதாரணியேசுவரருடைய திருக்கோயிலின் திருவாசலில் உள்ள திருக்கதவை. திருக்காப்புச் செய்த-அழகிய பூட்டினால் பூட்டி வைத்த. அந்நாள் முதல்-அந்தக் காலம் முதல். இந்நாள்-இந்தக் காலம். வரையும்-வரையிலும். அடைத்தே-அந்தத் திருக்கதவு மூடியே. நிற்கின்ற-நின்று கொண்டிருக்கின்ற.

மணி-அடிக்கும் மணியைக் கட்டித் தொங்க விட்டிருக்கும். நீள்-உயரமான. வாயில்- கோபுரவாசலுக்கு அந்தத் திரு நாவுக்கரசு நாயனார் எழுந்தருளி. வணங்குவார்-வேதா ரணியேசுவரரைப் பணிவாரானார்.

சிவபெருமானாரை அந்தணர் என்று கூறும் இடங்களை முன்பே ஓரிடத்தில் காட்டினோம்; ஆண்டுக் கண்டுணர்க.

பிறகு வரும் 256-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'பழையவையாகிய இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் ஆகிய நான்கு வேதங்களும் அழகிய பூட்டினால் பூட்டி வைத்திருந்த வேதாரணியே சுவரருடைய ஆலயத்திற்கு முன்னால் உள்ள கோபுர வாசலில் உள்ள பூட்டைப் பூட்டி வைத்த சங்கிலியை நீக்கு வதற்கு வல்லமையைப் பெற்ற பக்தர்கள் வந்து சேராமை யால் அந்த வாசலுக்குப் பக்கத்தில் ஒரு திட்டி வாசலின் வழி யாகக் கோயிலுக்குள் அடைந்து துன்பங்களைப் போக்கி யருள்கிறவராகிய வேதாரணியேசுவரரைச் சிவாசாரியர்கள் அருச்சனை புரிவார்கள்; பக்தர்கள் வணங்குவார்கள்; இவ் வாறு ஆக இருக்கும் நிலையைப் பார்த்து வரம்பு இல்லாத பெருமையையும் புகழையும் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனார் இந்தச் செய்தியை அந்த வேதாரணியத்தில் வாழும் மக்கள் கூறக் கேட்டுத் தெரிந்து கொண்டார்." பாடல் வருமாறு:

" தொல்லை வேதம் திருக்காப்புச்
செய்த வாயில் தொடர்வகற்ற
வல்ல அன்பர் அணையாமை
மருங்கோர் வாயில் வழிஎய்தி
அல்லல் தீர்ப்பார் தமையருச்சிப்
பார்கள் தொழுவார் ஆம்படிகண்
டெல்லை இல்லாப் பெரும்புகழார்
இதனை அங்குக் கேட்டறிந்தார். "

தொல்லை-பழையவையாகிய. வேதம்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும்; ஒருமை பன்மை மயக்கம். திருக்காப்புச் செய்த-அழகிய பூட்டினால் பூட்டி வைத்திருந்த. வாயில்-வேதாரணியேசுவரருடைய ஆலயத்திற்கு முன்னால் உயரமாக நிற்கும் கோபுரவாசலில் உள்ள; ஆகுபெயர். தொடர்வு-பூட்டைப் பூட்டி வைத்திருந்த சங்கிலியை. அகற்ற-நீக்குவதற்கு. வல்ல-வல்லமையைப் பெற்ற. அன்பர்-பக்தர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அணையாமை-வந்து சேராமையால். மருங்கு-அந்தச் கோபுர வாசலுக்குப் பக்கத்தில். ஓர் வாயில்-ஒரு திட்டி வாசலின். வழி-வழியாக எய்தி-கோயிலுக்குள் சென்று அடைந்து. அல்லல்-பிறவி, பிணி, வறுமை, பசி முதலிய துன்பங்களை; ஒருமை பன்மை மயக்கம். தீர்ப்பார் தமை-போக்கியருளுபவராகிய வேதாரணியேசுவரரை. தமை-இடைக்குறை. தம்: அசை நிலை. அருச்சிப்பார்கள்-சிவாசாரியர்கள் அருச்சனை புரிவார்கள். தொழுவார்-பக்தர்கள் வணங்குவார்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆம்படி-இவ்வாறாக இருக்கும் நிலையை, கண்டு-பார்த்தருளி. எல்லை-வரம்பு. இல்லா-இல்லாத. ப்:சந்தி. பெருப்-பெருமையையும். புகழார்-புகழையும் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனார். இதனை-இந்தச் செய்தியை. அங்கு-அந்த வேதாரணியத்தில். க்:சந்தி. கேட்டு-வாழும் மக்கள் கூறக்கேட்டு. அறிந்தார்-அந்த நாயனார் தெரிந்து கொண்டார்.

பிறகு வரும் 267-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு இருந்த அந்த இயல்பைத் தெரிந்து கொண்டருளி சமுத்திரத்தில் அமிழாமல் மிதந்த தோணியைப் பெற்ற தோணிபுரமாகிய சீகாழியை ஆட்சி புரிந்தருளும் மன்னராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் புகழ் ஓங்கி வளரும் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம்,

அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும் அருச்சனை புரிந்த தேவர்களினுடைய தலைவனாகிய வேதாரணியேசுவரனைத் திருமறைக் காட்டில் உள்ள ஆலயத்துக்குள் நுழைந்து, '' தங்கி நிற்காமல் அடியேங்களாகிய இரண்டு நாயன்மார்களும் தேவரீரை நேரில் தரிசித்துத் தேவரீரை வணங்கும் பொருட்டுத் தேவரீருடைய அழகிய சந்நிதிக்கு முன்னால் உள்ள கோபுர வாசற் கதவைப் பூட்டியுள்ள அழகிய பூட்டைத் திறந்தருளுவீராக'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் வேண்டிக் கொள்ள, அந்தக் கதவு திறக்காமல் இருந்தமையால் அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனாரைப் பார்த்து, '' அப்பர் சுவாமிகளே, இந்தக் கதவைப் பூட்டியிருக்கும் பூட்டைத் திறக்குமாறு ஒரு பாசுரத்தைத் தேவரீர் பாடியருள்வீராக'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய நெடுங்காலமாகப் புகழோடு வாழ்ந்து வரும் திருநாவுக்கரசு நாயனார்.' பாடல் வருமாறு:

'' ஆங்கப் பரிசை அறிந்தருளி
ஆழித் தோணி புரத்தரசர்
ஓங்கு வேதம் அருச்சனைசெய்
உம்பர் பிரானை உள்புக்குத்
' தேங்கா திருவோம் நேர்இறைஞ்சத்
திருமுன் கதவம் திருக்காப்பு
நீங்கப் பாடும் அப்பர்' என
நீடும் திருநா வுக்கரசர்.''

இந்தப் பாடல் குளகம். ஆங்கு-அவ்வாறு இருந்த. அப்பரிசை-அந்த இயல்பை; என்றது கோயிலின் வாசற் கதவு பூட்டப்பட்டிருந்ததை. அறிந்தருளி-தெரிந்து கொண்டருளி. ஆழி-சமுத்திரத்தில் அமிழாமல் மிதந்த. த்:சந்தி. தோணிபுரத்து-தோணியைப் பெற்ற தோணிபுரமாகிய

சீகாழியை. அரசர்-ஆட்சி புரிந்தருளும் மன்னராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், ஓங்கு-புகழ் ஓங்கி வளரும். வேதம்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும்; ஒருமை பன்மை மயக்கம். அருச்சனை செய்-அருச்சனை புரிந்த. உம்பர்-தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பிரானை-தலைவனாகிய வேதாரணியேசுவரனை. உள்-திருமறைக் காட்டில் உள்ள ஆலயத்துக்குள். புக்கு-நுழைந்து. த்:சந்தி. தேங்காது-தங்கி நின்று கொண்டிராமல். இருவோம்-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் என்னும் அடியேங்களாகிய இரண்டு நாயன்மார்களும். நேர்-தேவரீரை நேரில். தேவரீர் என்றது வேதாரணியேசுவரரை. இறைஞ்ச-வணங்கும் பொருட்டு. த்:சந்தி. திருமுன்-தேவரீருடைய அழகிய சந்நிதிக்கு முன்னால். கதவம்-உள்ள கோபுர வாசற் கதவை. திருக்காப்பு-பூட்டியிருக்கும் அழகிய பூட்டை. நீங்க-திறக்குமாறு. அப்பர்-அப்பர் சுவாமிகளே; விளி. ப்:சந்தி. பாடும்-தேவரீர் பாடியருள்வீராக. என-என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் வேண்டிக் கொள்ள; இடைக்குறை. நீடும்-நெடுங் காலமாகப் புகழோடு வாழ்ந்து வரும். திருநாவுக்கரசர்-திருநாவுக்கரசு நாயனார்.

பிறகு உள்ள 268-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'தம்முடைய திருவுள்ளத்தில் தோன்றிய இயல்பினால் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் "அப்பர் சுவாமிகளே, தேவரீர் இந்தக் கதவைத் திறக்குமாறு ஒரு பாசுரத்தைப் பாடியருள்வீராக." என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய அதனால், "பண்ணினேரும் மொழியாள்" என்று தொடங்கி ஒரு பாசுரத்தை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருள, அந்தப் பிரயோசனத்தை நுகரும் பொருட்டு தெளிவைப் பெற்ற கங்கையாற்றின் நீரைத் தம்முடைய தலையின் மேல் உள்ள சடா

பாரத்தில் அணிந்து கொண்டவராகிய வேதாரணியேசுவரர் அந்த வாசற் கதவைப் பூட்டியிருந்த அழகிய பூட்டைத் திறப்பதற்குத் தாமதம் செய்ய அந்த அழகிய வாசற் கதவைப் பூட்டிய பூட்டை, "வேதாரணியேசுவரரே தேவரீர் நினைக்காமல் இருக்கிறீரே, இரக்கம் ஓரளவும் இல்லாதவரே" என்ற கருத்தை வைத்து அந்தத் திருநாவுக் கரசு நாயனார் பாடியருளி வேதாரணியேசுவரரை வணங் கினவுடன்.' பாடல் வருமாறு :

"உண்ணீர் மையினால் பிள்ளையார்
உரைசெய் தருள அதனாலே,
'பண்ணி னேரும் மொழியாள்' என்றெடுத்துப்
பாடப் பயன் துய்ப்பான்
தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு
நீக்கத் தாழ்க்கத் திருக்கடைக்காப்
'பெண்ணீர், இரக்கம் ஒன்றில்லீர்'
என்று பாடி இறைஞ்சுதலும்."

இந்தப் பாடல் குளகம். உள்-தம்முடைய திருவுள்ளத் தில் தோன்றிய. நீர்மையினால்-பான்மையால். பிள்ளை யார்-ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். உரை செய்தருள—'அப்பர் சுவாமிகளே, தேவரீர் இந்தக் கதவைத் திறக்குமாறு ஒரு பாசுரத்தைப் பாடியருள்வீராக' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. அதனால்-அவ்வாறு அவர் திருவாய் மலர்ந்து அருளிச் செய்த அந்த வார்த்தைகளினால்; ஒருமை பன்மை மயக்கம். ஏ: அசை நிலை. 'பண்ணினேரும் மொழியாள்' என்று- 'பண்ணினேரும் மொழியாள்' என. எடுத்து-தொடங்கி. ப்:சந்தி. பாட-ஒரு பாசுரத்தை அந்தத் திருநாவுக்கரசு நாய னார் பாடியருள. ப்:சந்தி. பயன்-அந்தப் பாசுரத்தின் பிரயோசனத்தை. துய்ப்பான்-நுகரும் பொருட்டு. தெண்— தெளிவைப் பெற்ற. நீர்-கங்கையாற்றின் புனலை. அணிந் தார்-தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தில்

அணிந்து கொண்டவராகிய வேதாரணியேசுவரர். திருக்காப்பு-அந்தத் திருக்கோயிலின் கோபுர வாசற் கதவைப் பூட்டியிருந்த பூட்டை. நீக்க-திறப்பதற்கு. த்:சந்தி. தாழ்க்க-தாமதம் செய்தருள. த்:சந்தி. திருக்கடைக்காப்பு-அந்த அழகிய கோபுர வாசற் கதவைப் பூட்டிய பூட்டை. எண்ணீர்-வேதாரணியேசுவரரே, தேவரீர் நினைக்காமல் இருக்கிறீரே. இரக்கம் ஒன்று-இரக்கம் ஓரளவும். இல்லீர்-இல்லாதவரே. என்று-என்ற கருத்தை வைத்து.பாடி-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி. இறைஞ்சுதலும்-வேதாரணியேசுவரரை வணங்கியவுடன்.

திருநாவுக்கரசு நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு :

" விண்ணினார் விண்ணின் மிக்கார்
வேதங்கள் விரும்பி ஓதப்
பண்ணினார் கின்னரங்கள்
பத்தர்கள் பாடி ஆடக்
கண்ணினார் கண்ணி னுள்ளே
சோதியாய் நின்ற எந்தை
மண்ணினார் வலங்கொண் டேத்தும்
மாமறைக் காட னாரே. "

அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருநேரிசை வருமாறு:

" நாள்முடிக் கின்ற சீரான்
நடுங்கியே மீது போகான்
கோள்பிடித் தார்த்த கையான்
கொடியன்மா வலியன் என்று
நீள்முடிச் சடையர் சேரும்
நீள்வரை எடுக்க லுற்றான்
தோள்முடி நெரிய வைத்தார்
தொன்மறைக் காட னாரே. "

அந்த நாயனார் பாடியருளிய திருக்குறுந் தொகை ஒன்று வருமாறு:

" துஞ்சும் போதும் துயிலின்றி ஏத்துவார்
வஞ்சின் றிவலம் கொள்மறைக் காடரோ
பஞ்சின் மெல்லடிப் பாவை பலிகொணர்ந்
தஞ்சி நிற்பதும் ஐந்தலை நாகமே."

அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருக் குறுந் தொகை வருமாறு:

" வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்தம் இல்லி அணிமறைக் காடரோ
எந்தை நீஅடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

" மூரி முழங்கொலிநீர் ஆனான் கண்டாய்
முழுத்தழல்போல் மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடி யார்க்கின்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையுறைஎம் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே."

இந்தத் தலத்தைப் பற்றி நட்டபாடைப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு திருவிராகப் பாசுரம் வருமாறு:

" இயல்வழி தரவிது செலவுற
இளமயில் இறகுறு தழையொடு
செயல்மரு வியசிறு கடமுடி
யடைகையர் தலைபறி செய்துதவம்
முயல்பவர் துவர்படம் உடல்பொதி
பவரறி வருபரன் அவனணி

வயலினில் வளைவளம் மருவிய
மறைவனம் அமர்தரு பரமனே."

அந்த நாயனார் பியந்தைக் காந்தாரப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"கூனி ளம்பிறை சூடிக்
கொடுவரித் தோலுடை யாடை
ஆனி லங்கிளர் ஐந்தும்
ஆடுவர் பூண்பதும் அரவம்
கான லங்கழி ஓதம்
கரையொடு கதிர்மணி ததும்பத்
தேன்ந லம்கமழ் சோலைத்
திருமறைக் காடமர்ந் தாரே."

அந்த நாயனார் சாதாரிப் பண்ணிப் பாடியருளிய ஒரு திருவிராகப் பாசுரம் வருமாறு:

"காரியன்மெல் லோதிந்தி மாதைமுடி
வார்சடையில் வைத்து மலையார்
நாரியொரு பாலமகிழும் நம்பருறை
வென்பர்நெடு மாட மறுகில்
தேரியல்வி ழாவினொலி திண்பணிலம்
ஒண்படகம் நாளும் இசையால்
வேரிமலி வார்குழல்நன் மாதரிசை
பாடலொலி வேத வனமே."

இந்தத் தலத்தைப்பற்றிக் காந்தாரப் பண்ணில் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"முளைவளரிள மதிஉடையவன்
முன்செய்த வல்வினைகள்
களைகளைந்தெனை ஆளலுறு
கண்டன்னிடம் செந்நெல்
வளைவளைவயற் கயல்பாய்தரு
குணவார்மணற் கடல்வாய்

வளைவளையொடு கலஞ்சலம்
கொணர்ந்தெற்றும் மறைக்காடே.''

பிறகு வரும் 269-ஆம் பாடலின் கருத்து வருமாறு: 'வேதவனமாகிய திருமறைக்காட்டில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் உண்மையாகிய பரம் பொருள் ஆகிய வேதாரணியேசுவரர் வழங்கிய திருவருளால் வேதாரணியேசுவரருடைய கோபுர வாசலில் திகழும் அடிக்கும் மணிகளைக் கொண்ட கதவை விருப்பத்தைப் பெற்ற பக்தர்களுக்கு முன்னால் அந்தக் கதவைப் பூட்டியிருந்த அழகிய பூட்டு விலக அறுபத்து நான்கு கலைகளின் தன்மையைப் பெற்ற வார்த்தைகளுக்குத் தலைவரும் ஞான முனிவரும் ஆகிய திருநாவுக்கரசு நாயனாரோடு அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் வேதாரணியேசுவரரைத் தரையில் விழுந்து வணங்கினார்; இந்த மண்ணுலகத்தில் கடல்அலைகளின் ஓசையைக் காட்டிலும் மிகுதியாகத் தேவர்களினுடைய ஆரவார ஒலியும் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களின் இனிய கானமும் எழுந்து கேட்டது.' பாடல் வருமாறு:

**'' வேத வனத்தின் மெய்ப்பொருளின்**
**அருளால் விளங்கு மணிக்கதவம்**
**காதல் அன்பர் முன்புதிருக்**
**காப்பு நீங்கக் கலைமொழிக்கு**
**நாதர் ஞான முனிவருடன்**
**தொழுது விழுந்தார் ஞாலத்துள்**
**ஓத ஒலியின் மிக்கெழுந்த**
**தும்பர் ஆர்ப்பும் மறையொலியும்.''**

வேத வனத்தின்-வேத வனமாகிய திருமறைக் காட்டில். மெய்ப் பொருளின்-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் உண்மையாகிய பரம் பொருள் என்று பாராட்டப்

பெறும் வேதாரணியேசுவரர். இனி:வேண்டா வழி வந்த சாரியை. அருளால்-வழங்கிய திருவருளினால். விளங்கு-வேதாரணியேசுவரருடைய கோபுர வாசலில் திகழும். மணி-அடிக்கும் மணிகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கதவம்-கதவை. காதல்-விருப்பத்தைப் பெற்ற. அன்பர்-பக்தர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். முன்பு-முன்னால். திருக்காப்பு-அந்தக் கோபுர வாசற் கதவைப் பூட்டியிருந்த அழகிய பூட்டு. நீங்க-விலக. க்:சந்தி. கலை-அறுபத்து நான்கு கலைகளின் தன்மையைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். அந்தக் கலைகள் இன்ன என்பதை வேறோரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. மொழிக்கு-வார்த்தைகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். நாதர்-தலைவரும். ஞான-சிவஞானத்தைப் பெற்ற. முனிவருடன்-முனிவரும் ஆகிய திருநாவுக்கரசு நாயனாரோடு. தொழுது-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் வேதாரணியேசுவரரை. விழுந்தார்-தரையில் விழுந்து வணங்கினார். ஞாலத்துள்-இந்த மண்ணுலகத்தில். ஓத-கடல் அலைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஒலியின்-ஓசையைக் காட்டிலும். மிக்கு-மிகுதியாக. உம்பர்-தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஆர்ப்பும்-ஆரவார ஒலியும். மறை-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஒலியும்-இனிய கானமும். எழுந்தது-எழுந்து கேட்டது.

அடுத்து உள்ள 270-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'பக்தர்கள் கூடியிருந்த கூட்டம் களிப்பில் சிறப்பை அடைந்து விளங்க திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனாரும் சிவ பெருமானாகிய பசுமாட்டின் கன்றுக் குட்டியைப் போன்ற திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் ஆனந்தமாகிய நீர் வெள்ளத்

தில் மூழ்கி விட்டுப் பிறகு அதிலிருந்து எழுந்து வேதாரணி யேசுவரருடைய திருக்கோயிலுக்குள் நுழைந்து தங்களுடைய தலைவனாகிய வேதாரணியேசுவரனை அவனுடைய சந்நிதியில் இரண்டு நாயன்மார்களும் வணங்கி விட்டு வாழ்த்துக்களைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்து மீண்டும் அந்த ஈசுவரரை வாழ்த்தி விட்டுச் செந்தமிழ் மொழியில் அமைந்த மாலைகளாகிய திருப்பதிகங்களைப் பாடியருளி தங்களுடைய திருமேனிகளில் உள்ள எலும்புகளும் கரையு மாறு தங்களுடைய திருவுள்ளங்களில் உருக்கத்தை அடைந்து அந்த ஈசுவரரை மீண்டும் வணங்கி விட்டு அருமையான நிலையில் கோயிலுக்கு வெளியில் வந்து அந்த இரண்டு நாயன்மார்களும் சேர்ந்தார்கள்.' பாடல் வருமாறு :

**'' அன்பர் ஈட்டம் களிசிறப்ப**
**ஆண்ட அரசும் சிவக்கன்றும்**
**இன்ப வெள்ளத் திடைமூழ்கி**
**எழுந்துள் புகுந்து தம்பெருமான்**
**முன்பு பணிந்து போற்றிசைத்துப்**
**பரவி மொழிமா லைகள்பாடி**
**என்பு கரைய உள்ளுருகி**
**இறைஞ்சி அரிதிற் புறத்தணைந்தார்.''**

அன்பர்-அந்த வேதாரணியத்தில் வாழும் பக்தர்கள்: ஒருமை பன்மை மயக்கம். ஈட்டம்-கூடியிருந்த கூட்டம். களி-களிப்பில். சிறப்ப-சிறப்பை அடைந்து விளங்க. ஆண்ட-திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட. அரசும்-திருநாவுக்கரசு நாயனாரும்; திணை மயக்கம். சிவ-சிவபெருமானாகிய பசுமாட்டினுடைய. க்:சந்தி. கன்றும்-கன்றுக் குட்டியைப் போன்ற திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும். இன்ப வெள்ளத்திடை-ஆனந்தமாகிய நீர் வெள்ளத்தில். மூழ்கி-முழுகி விட்டு. எழுந்து-பிறகு அதிலிருந்து எழுந்து. உள்-வேதாரணியேசுவரருடைய திருக் கோயிலுக்குள். புகுந்து-நுழைந்து. தம்-தங்களுடைய

என்றது திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் என்னும் இரண்டு நாயன்மார்களுடைய என்பதை. பெருமான்-தலைவனாகிய வேதாரணியேசுவரனை. முன்பு-அவனுடைய சந்நிதியில். பணிந்து-இரண்டு நாயன்மார்களும் வணங்கி விட்டு. போற்று-வாழ்த்துக்களை; ஒருமை பன்மை மயக்கம்; முதனிலைத் தொழிற் பெயர். இசைத்து-திருவாய் மலர்ந்தருளிச் செய்து. ப்;சந்தி. பரவி-மீண்டும் அந்த ஈசுவரரை வாழ்த்திவிட்டு. மொழி-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலைகள்-மாலைகளாகிய பல திருப்பதிகங்களை. பாடி-அந்த இரண்டு நாயன்மார்களும் பாடியருளி. என்பு-தங்களுடைய திருமேனிகளில் உள்ள எலும்புகளும்; ஒருமை பன்மை மயக்கம். கரைய-கரையுமாறு. உள்-தங்களுடைய திருவுள்ளங்களில்; ஒருமை பன்மை மயக்கம். உருகி-பக்தியினால் உருக்கத்தை அடைந்து. இறைஞ்சி-அந்த ஈசுவரரை மீண்டும் வணங்கி விட்டு. அரிதின்-பிரிவதற்கு அருமையாகிய நிலையில். புறத்து-கோயிலுக்கு வெளியில். அணைந்தார்-அந்த இரண்டு நாயன்மார்களும் சேர்ந்தார்கள்.

பிறகு வரும் 271-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு வேதாரணியேசுவரருடைய திருக்கோயிலுக்கு வெளியே எழுந்தருளியவர் அந்த வெளியிடத்தில் நின்று கொண்டு வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் பரிசுத்தராகிய அந்த வேதாரணியேசுவரர் வழங்கிய திருவருளினால் திருக்கோயிலினுடைய கோபுர வாசலில் உள்ள இந்தக் கதவு திறந்தும் மூடியும் நடக்கும் வழியை திருந்துமாறு இமயமலை அரசனுடைய புதல்வியாகிய பெரிய நாயகி தன்னுடைய அழகிய கொங்கைகளிலிருந்து ஒரு பொற் கிண்ணத்தில் கறந்த பாலை சிவஞானத்தை அதனோடு குழைத்து ஊட்ட அதைத் திருவமுது செய்தருளியவரும், புகலியாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளியவரும், அந்தணர்களில் கவுண்டின்ய கோத்திரத்தில் உதித்தவரும்

ஆகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரிடம், "அழகு நிரம்பியுள்ள கதவை மூடுமாறு தேவரீரும் பாடியருள் வீராக" என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந் தருளிச் செய்ய.' பாடல் வருமாறு :

**"புறம்பு நின்று வாகீசர்**
**புனிதர் அருளால் இக்கதவம்**
**திறந்தும் அடைத்தும் செல்லும்நெறி**
**திருந்த மலையாள் திருமுலையில்**
**கறந்த ஞானம் குழைத்தமுது**
**செய்த புகலிக் கவுணியரை**
**'நிறைந்த கதவம் அடைக்கும்வகை**
**நீரும் பாடி அருளும்' என."**

இந்தப் பாடல் குளகம். புறம்பு-அவ்வாறு வேதாரணி யேசுவரருடைய திருக்கோயிலுக்கு வெளியில் எழுந்தருளி யவர்; வினையாலணையும் பெயர். நின்று-அந்த வெளிப் பக்கத்தில் நின்று கொண்டு. வாகீசர்-வாகீசராகிய திரு நாவுக்கரசு நாயனார். புனிதர்-பரிசுத்தராகிய அந்த வேதா ரணியேசுவரர். அருளால்-வழங்கிய திருவருளினால், இக் கதவம்-திருக்கோயிலினுடைய கோபுரவாசலில்உள்ள இந்தக் கதவு. திறந்தும்-திறந்து இருந்தும். அடைத்தும்-மூடியும். செல்லும்-நடக்கும். நெறி-வழியை. திருந்த-திருந்துமாறு. மலையாள்-இமயமலை அரசனுடைய புதல்வியாகிய பெரிய நாயகி. மலை:திணை மயக்கம். திரு-அழகிய. முலையில்-தன்னுடைய கொங்கைகளிலிருந்து; உருபு மயக்கம்; ஒருமை பன்மை மயக்கம். கறந்த-ஒரு பொற் கிண்ணத்தில் கறந்த பாலை; பெயரெச்ச வினையாலணையும் பெயர். ஞானம்-சிவஞானத்தை. குழைத்து-அதனோடு குழைத்து ஊட்ட. அமுது செய்த-அதைத் திருவமுது செய்தவரும்; பெயரெச்ச வினையாலணையும் பெயர். புகலி-புகலியாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளியவரும்; இடஆகுபெயர். க்:சந்தி. கவுணியரை-அந்தணர்களில் கவுண்டின்ய கோத்திரத்தில்

உதித்தவரும் ஆகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனா ரிடம்; உருபு மயக்கம். நிறைந்த-அழகு நிரம்பியுள்ள; 'உறுதி நிரம்பியுள்ள' எனலும் ஆம். கதவம்-இந்தக் கதவை. அடைக்கும் வகை-மூடுமாறு. நீரும்-தேவரீரும். பாடியருளும் -ஒரு பாசுரத்தைப் பாடியருளுவீராக. என-என்று திருநாவுக் கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய.

பிறகு உள்ள 272-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'சண்பையாகிய சீகாழியை ஆட்சி புரியும் தமிழ் விரக ராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் அந்தத் திரு நாவுக்கரசு நாயனார் நல்ல பண்போடு திருவாய் மலர்ந் தருளிச் செய்த வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு ஒரு திருப் பதிகத்தைப் பாடியருளும் அந்தச் சமயத்தில் ஒரு திருக்கண் பொலிவோடு இருந்த நெற்றியைப் பெற்ற கருமையாகிய திருக்கழுத்தைக் கொண்டவராகிய வேதாரணியேசுவரர் வழங்கிய திருவருளினால் வேகமாக அப்பொழுதே உறுதி யாக உள்ள தங்கத்தைப் பதித்த அந்தக் கோபுர வாசலில் உள்ள கதவு திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தொடங் கிய அழகிய பாசுரத்தினால் அழகிய பூட்டினால் பூட்டிக் கொண்டது.' பாடல் வருமாறு:

"சண்பை ஆளும் தமிழ்விரகர்
தாமும் திருநா வுக்கரசர்
பண்பின் மொழிந்த உரைகொண்டு
பதிகம் பாடும் அவ்வளவில்
கண்பொற் பமைந்த நுதற்கான
கண்டர் அருளால் கடிதுடனே
திண்பொற் கதவம் திருக்காப்புச்
செய்த தெடுத்த திருப்பாட்டில்."

சண்பை-சண்பையாகிய சீகாழியை. ஆளும்-ஆட்சி புரிந்தருளும். தமிழ்விரகர் தாமும்-முத்தமிழ் விரகராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும்; தாம்: அசைநிலை. திருநாவுக்கரசர்-திருநாவுக்கரசு நாயனார். பண்பின்-நல்ல

குணத்தோடு. மொழிந்த-திருவாய் மலர்ந்தருளிச் செய்த. உரை-வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கொண்டு-ஏற்றுக் கொண்டு. பதிகம்-ஒரு திருப்பதிகத்தை. பாடும்-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளும், அவ்வளவில்-அந்தச் சமயத்தில். கண்-ஒரு திருவிழி. பொற்பு-தோற்றப் பொலிவோடு. அமைந்த-பொருந்தியிருந்த. நுதல்-நெற்றியைப் பெற்ற காள கண்டர்-திருமால் பள்ளி கொண்டருளிய பாற்கடலில் எழுந்த ஆலகால விடத்தை விழுங்கியமையால் கருமையாகிய திருக்கழுத்தைக் கொண்ட வேதாரணியேசுவரர். அருளால்-வழங்கிய திருவருளினால். கடிது-வேகமாக. உடனே-அப்பொழுதே; அந்தத் திருப்பதிகத்தைத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய அப்பொழுதே. திண் - உறுதியைப் பெற்ற. பொன்-தங்கத்தைப் பதித்த. கதவம்-அந்தக் கோபுர வாசலில் உள்ள கதவு. எடுத்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தொடங்கிய. திருப்பாட்டில்-அழகிய பாசுரத்தினால்; உருபு மயக்கம். திருக்காப்புச் செய்தது-அழகிய பூட்டினால் பூட்டிக் கொண்டது.

அவ்வாறு அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இந்தளப் பண்ணில் பாடியருளிய திரு பதிகத்தில் வரும் ஒரு பாசுரம் வருமாறு :

"சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே."

பிறகு வரும் 273-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்தப் பூட்டுப் பூட்டிக் கொண்ட அந்தச் செயலைப் பார்த்து ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனாரும் மகிழ்ச்சியை

அடைந்து, '' இவ்வாறு இந்தப் பூட்டுப் பூட்டிக் கொண்டது நம்முடைய தலைவனாகிய வேதாரணியேசுவரன் தன்னுடைய திருவருளை வழங்கும் பாக்கியத்தை அடைந்தோம்'' என எண்ணி அந்த வேதாரணியேசுவரருடைய திருக்கோயிலில் அந்த ஈசுவரரை வணங்கிய பிறகு ஒரு திருப்பதிகத்தைச் சொற்சுவை, பொருட்சுவை என்னும் இரண்டு சுவைகளும் நிரம்ப அமையுமாறு ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளி அந்த வேதாரணியேசுவரரை வணங்கிப் பணியலானார்; அந்த வேதாரணியேசுவரருடைய திருக்கோயிலுக்கு எதிரில் உள்ள தங்கத்தைப் பதித்த அழகிய கோபுர வாசலின் வழியாக பக்தர்கள் கோயிலுக்கு உள்ளே புகும் வழக்கமாகிய அந்த நிகழ்ச்சி எல்லாக் காலத்திலும் நடைபெற்று வந்தது.' பாடல் வருமாறு :

'' அதுகண் டுடைய பிள்ளையார் தாமும்
ஆண்ட அரசும் மகிழ்ந்
'இதுநம் பெருமான் அருள்செய்யப்
பெற்றோம்' என்றங் கிறைஞ்சியபின்
பதிகம் நிரம்பப் பிள்ளையார்
பாடித் தொழுது பணிவுற்றார்;
எதிர்பொற் றிருவா யிலின்வழக்கம்
என்றும் நிகழ்ச்சி எய்தியதால்.''

அது-அந்தப் பூட்டுப் பூட்டிக் கொண்டதாகிய அந்தச் செயலை. கண்டு-பார்த்து. உடைய பிள்ளையார் தாமும்-ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும். தாம்:அசைநிலை. ஆண்ட-திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட. அரசும்-திருநாவுக்கரசு நாயனாரும்; திணை மயக்கம். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. இது-இவ்வாறு இநதப் பூட்டுப் பூட்டிக் கொண்ட இந்த அற்புதச் செயல். நம்-நம்முடைய, என்றது திருஞான

சம்பந்த மூர்த்தி நாயனார் தம்மையும் திருநாவுக்கரசு நாயனாரையும் சேர்த்துக் கூறியது. பெருமான்-தலைவனாகிய வேதாரணியேசுவரன். அருள் செய்யப் பெற்றோம்-திருவருளை வழங்கும் பாக்கியத்தை நாம் அடைந்தோம். என்று-என எண்ணி. அங்கு-அத்த வேதாரணியேசுவரருடைய திருக்கோயிலில், இறைஞ்சிய-அந்த ஈசுவரரை வணங்கிய, பின்-பிறகு. பதிகம்-ஒரு திருப்பதிகத்தை, நிரம்ப-சொற் சுவை, பொருட்சுவை என்னும் இரண்டு சுவைகளும் நிரம்ப அமையுமாறு, ப்:சந்தி, பிள்ளையார்-ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். பாடி-பாடியருளி. த்:சந்தி. தொழுது-அந்த வேதாரணியேசுவரரை வணங்கி விட்டு, பணிவுற்றார்-தரையில் விழுந்து பணியலானார். எதிர்-அந்த வேதாரணியேசுவரருடைய திருக்கோயிலுக்கு எதிரில் உள்ள, பொன்-தங்கத்தைப் பதித்த திருவாயிலின்-அழகிய கோபுர வாசலின் வழியாக, வழக்கம்-பக்தர்கள் திருக்கோயிலுக்கு உள்ளே நுழையும் வழக்கமாகிய, நிகழ்ச்சி-அந்த நிகழ்ச்சி; சம்பவம். என்றும்-எல்லாக் காலத்திலும். எய்தியது-நடை பெற்று வருவதை அடைந்தது. ஆல்: ஈற்றசை நிலை.

திருமறைக் காட்டைப் பற்றி நட்டபாடைப்பண் அமைந்த ஒரு திருவிராகப் பாசுரத்தைத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளினார். அந்தப் பாசுரம் வருமாறு:

"சிலைதனை நடுவிடை நிறுவியொர்
சினமலி அரவது கொடுதிவி
தலமலி சுரரசு ரங்களொலி
சலசல கடல்கடை வுழிமிகு
கொலைமலி விடமெழ அவருடல்
இலைதர அதுநுகர் பவனெழில்
மனைமலி மதிற்புடை தழுவிய
மறைவனம் அமர்தரு பரமனே."

அந்த நாயனார் இந்தளப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" சங்கம் தரளம் பலைதான் கரைக் கெற்றும்
வங்கக் கடல்சூழ் மறைக்காட் டுறை மைந்தா
மங்கை உமைபங் கமா கவிதென் கொல்
கங்கை சடைமேல் அடைவித்த கருத்தே. "

அந்த நாயனார் சாதாரிப் பண்ணில் பாடியருளிய ஒரு திருவிராகப் பாசுரம் வருமாறு:

" மாலைமதி வாளரவு கொன்றைமலர்
துன்றுசடை நின்று சுழலக்
காலையில் எழுந்தகதிர் தாரகைம
டங்கஅனல் ஆடும் அரனூர்
சோலையின் மரங்கடொறும் மிண்டியின
வண்டுமது வுண்டிசை செய
வேலையொலி சங்குதிரை வங்கசுற
வம்கொணரும் வேத வனமே. "

அடுத்து உள்ள 274-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த வேதாரணியேசுவரர் திருக்கோயிலில் நடந்த அந்த அற்புதமாகிய செயலைப் பார்த்து வேதாரணியேசுவரருடைய அடியவர்கள் எல்லாரும் அதிசயத்தை அடைந்து தங்களுடைய திருமேனிகளில் பொங்கி எழுந்த புளகாங்கிதமாகிய மயிர்க்கூச்சை அடைய தங்களுடைய திருமேனிகளின் மேல் சொரியும் கண்களிலிருந்து வழியும் நீர் பரவிக் கீழே இறங்க எந்த இடத்திலும் தங்களுக்குச் சமானமாக வேறு ஒருவரும் இல்லாத திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் ஆகிய இரண்டு நாயன்மார்களுடைய திருவடிகளையும் அந்த அடியவர்கள் வணங்கினார்கள்; அடியேங்களுடைய தலைவரும், புகலியாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளியவரும், பெருமையையும் தகுதியையும் பெற்றவரும் ஆகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும் தங்கள் தங்களு

டைய திருமடங்களுக்கு எழுந்தருளிய பிறகு.' பாடல் வருமாறு:

"அங்கு நிகழ்ந்த அச்செயல்கண்
டடியார் எல்லாம் அதிசயித்துப்
பொங்கு புளகம் எய்திடமெய்
பொழியும் கண்ணீர் பரந்திழிய
எங்கும் நிகரொன் றில்லாத
இருவர் பாதம் இறைஞ்சினார்
நங்கள் புகலிப் பெருந்தகையும்
அரசும் மடத்தில் நண்ணியபின்."

இந்தப் பாடல் குளகம். அங்கு-அந்த வேதாரணியேசு வரருடைய திருக்கோயிலில். நிகழ்ந்த-நடந்த. அச்செயல்-அந்த அற்புதமாகிய செயலை. கண்டு-பார்த்து. அடியார்-வேதாரணியேசுவரருடைய அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாரும். அதிசயித்து - வியப்பை அடைந்து. ப்:சந்தி. பொங்கு-தங்களுடைய திருமேனி களில் பொங்கி எழுந்த. புளகம்-புளகாங்கிதமாகிய மயிர்க் கூச்சை. எய்திட-அடைய. மெய்-தங்களுடைய திருமேனி களின் மேல்; ஒருமை பன்மை மயக்கம். பொழியும்-சொரியும். கண்-கண்களிலிருந்து வழியும்; ஒருமை பன்மை மயக்கம். நீர்-புனல். பரந்து-பரவி. இழிய-தரையில் இறங்கி வழிய. எங்கும்-எந்த ஊரிலும். நிகர்-தங்களுக்குச் சமானமாக. ஒன்று-ஒருவரும்; திணை மயக்கம். இல்லாத-இல்லாதவர்க ளாகிய; பெயரெச்ச வினையாலணையும் பெயர். இருவர்-திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாய னார் ஆகிய இரண்டு நாயன்மார்களுடைய. பாதம்-திருவடி களை; ஒருமை பன்மை மயக்கம் இறைஞ்சினார்-அந்த அடியவர்கள் வணங்கினார்கள்; ஒருமை பன்மை மயக்கம். நங்கள்-அடியேங்களுடைய; இது சேக்கிழார் தம்மையும் வேறு திருத் தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. புகலி-

புகலியாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளியவரும். இட ஆகு பெயர். ப:சந்தி. பெரும்-பெருமையையும்; தகையும்-தகுதியையும் பெற்றவரும் ஆகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும். அரசும்-திருநாவுக்கரசு நாயனாரும்; திணை மயக்கம். மடத்தில்-தங்கள் தங்களுடைய திருமடங்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். நண்ணிய-எழுந்தருளிய. பின்-பிறகு.

பிறகு உள்ள 275-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அருமையாகிய முறையில் அந்த வேதாரணியேசுவரருடைய திருக்கோயிலுக்கு முன்னால் உயரமாக நிற்கும் கோபுரவாசலில் உள்ள கதவைத் திறக்குமாறு திருநாவுக்கரசு நாயனார் பாடியருள அந்தக் கதவு மூடுமாறு அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய எளிய தன்மையை எண்ணி, 'நம்பராகிய வேதாரணியேசுவரருடைய திருவுள்ளக் கருத்தைத் தெரிந்து கொள்ளாமல் சோர்வை அடைந்து விட்டேன்' என்று கவலையை அடைந்து மிகவும் அச்சத்தை அடைந்து தம்முடைய திருமடத்தில் தம்முடைய குற்றத்தை எண்ணிச் சிந்தித்து தாம் அடையும் உணர்ச்சியோடு உண்மையிலிருந்தும் தவறாத வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் உறக்கத்தை அடைந்தார்' பாடல் வருமாறு :

**" அரிதில் திறக்கத் தாம் பாட**
**அடைக்க அவர்பா டியஎளிமை**
**கருதி, 'நம்பர் திருவுள்ளம்**
**அறியா தயர்ந்தேன்' எனக்கவன்று**
**பெரிதும் அஞ்சித் திருமடத்தில்**
**ஒருபால் அணைந்து பேழ்கணித்து**
**மருவும் உணர்வில் துயில்கொண்டார்**
**வாய்மை திறம்பா வாகீசர். "**

அரிதில்-அருமையாகிய முறையில். திறக்க-அந்த வேதாரணியேசுவரர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்கு

முன்னால் உயரமாக நிற்கும் கோபுர வாசலில் உள்ள கதவைத் திறக்குமாறு. த்: சந்தி. 'தாம்' என்றது திருநாவுக்கரசு நாயனாரை. பாட-பாடியருள. அடைக்க-அந்தக் கதவு மூடுமாறு. அவர்-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். பாடிய-பாடியருளிய. எளிமை-சுலபமாகிய தன்மையை. கருதி-எண்ணி. நம்பர்-தம்முடைய பக்தர்களுக்குப் பலவகையாகிய நம்பிக்கைகளை உண்டாக்குபவராகிய வேதாரணியேசுவரருடைய. அந்த நம்பிக்கைகள் இன்ன என்பதை வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக்கண்டுணர்க. திருவுள்ளம்-திருவுள்ளக் கருத்தை; ஆகுபெயர். அறியாது-தெரிந்து கொள்ளாமல், அயர்ந்தேன்-அடியேன் சோர்வை அடைந்து விட்டேன். 'மறந்து போய் விட்டேன்' எனலும் ஆம். என-என்று; இடைக்குறை. க்: சந்தி. கவன்று-தம்முடைய திருவுள்ளத்தில் கவலையை அடைந்து. பெரிதும்-மிகவும். அஞ்சி-அச்சத்தை அடைந்து. த்: சந்தி. திருமடத்தில்-தம்முடைய அழகிய திருமடத்தில். பேழ்கணித்து-தம் முடைய குற்றத்தை எண்ணிச் சிந்தித்து. மருவும்-தாம் அடையும், உணர்வில்-உணர்ச்சியோடு; உருபு மயக்கம். வாய்மை-உண்மையைப் பேசுவதிலிருந்து. திறம்பா-தவறாத. வாகீசர்-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார். துயில் கொண்டார்-உறக்கத்தை மேற்கொண்டார்; அடைந்தார்.

பிறகு வரும் 276-ஆம் கவியின் கருத்து வருமாறு :

'செல்வர்கள் நிலை பெற்று வாழும் திருமறைக்காடாகிய வேதாரணியத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மாணிக்கத்தைப் போன்றவராகிய வேதாரணியேசுவரருடைய திருவடிகளைத் தம்முடைய திருவுள்ளத்தில் தியானித்தபடியே அந்தத் திருநாவுக்கரசு நாயனார் உறங்கும் சமயத்தில் உமாதேவியைத் தம்முடைய ஒரு பாகமாகிய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்தவராகிய அந்த வேதாரணியேசுவரர் தங்கத்தைப் போன்ற தம்முடைய திருமேனி முழுவதும் வெண்மையாகிய விபூதியை அணிந்து

கொண்ட திருக்கோலத்தினுடைய தோற்றப் பொலிவி னோடும் எழுந்தருளி அந்தத் திருநாவுக்கரசு நாயனாரிடம், "யாம் திருவாய்மூரில் வீற்றிருப்போம்;எம்மைத் தொடரும் பொருட்டு வருவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு :

**"மன்னும் செல்வ மறைக்காட்டு**
**மணியின் பாதம் மனத்தின்கண்**
**உன்னித் துயிலும் பொழுதின்கண்**
**உமையோர் பாகம் உடையவர்தாம்**
**பொன்னின் மேனி வெண்ணீறு**
**புனைந்த கோலப் பொலிவினொடும்**
**துன்னி அவர்க்கு, 'வாய்மூரில்**
**இருப்போம்; தொடர வா' என்றார்."**

செல்வம்-செல்வர்கள்; திணை மயக்கம். மன்னும்-நிலை பெற்று வாழும். மறைக்காட்டு-திருமறைக் காடாகிய வேதாரணியத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும்; ஆகுபெயர். மணியின்-மாணிக்கத்தைப் போன்றவ ராகிய வேதாரணியேசுவரருடைய; உவம ஆகு பெயர். பாதம்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். மனத்தின் கண்-தம்முடைய திருவுள்ளத்தில். உன்னி-தியானித்தபடியே. த்:சந்தி. துயிலும்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் உறங்கும். பொழுதின் கண்-சமயத்தில். உமை-உமா தேவியை. ஓர் பாகம்-தம்முடைய ஒரு பாகமாகிய வாம பாகத்தில். உடையவர் தாம்-எழுந்தருளச் செய்தவராகிய அந்த வேதாரணியேசுவரர். தாம்: அசைநிலை. பொன்னின்-தங்கத்தைப் போன்ற. மேனி-தம்முடைய திருமேனி முழு வதும். வெண்-வெள்ளை நிறத்தைப் பெற்ற நீறு-விபூதியை புனைந்த-அணிந்து கொண்ட; பூசிக் கொண்ட. கோல-திருக் கோலத்தினுடைய. ப்:சந்தி. பொலிவினொடும்-தோற்றப் பொலிவோடும். துன்னி-எழுந்தருளி. அவர்க்கு-அந்தத் திருநாவுக்கரசு நாயனாரிடம்; உருபு மயக்கம். வாய்மூரில்-

திருவாய்மூரில். இருப்போம்-யாம் வீற்றிருப்போம். தொடர—தொடரும் பொருட்டு. 'தொடர்ந்து' எனலும் ஆம்; எச்சத் திரிபு. வா-நீ வருவாயாக. என்றார்-என்று வேதாரணியேசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

திருவாய்மூர் : இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் வாய்மூர் நாதேசுவரர். அம்பிகை பாலினும் நன்மொழி அம்மை. இது திருக்கோளிலியிலிருந்து தென் கிழக்குத் திசையில் மூன்று மைல் தூரத்தில் உள்ளது. இது சப்தவிடங்கத் தலங்களுக்குள் ஒன்று. சூரியன் வழிபட்ட தலம் இது. திருக்கோயில் கிழக்குத் திசையைப் பார்த்தது. திருக்கோயிலுக்கு எதிரில் சூரிய தீர்த்தம் இருக்கிறது. திருநாவுக்கரசு நாயனார் வேதாரணியத்தில் தங்கியிருந்த பொழுது வாய்மூர்நாதேசுவரர் அவர் துயிலும் பொழுது அவருடைய கனவில் எழுந்தருளி, "நீ திருவாய்மூருக்கு வருவாயாக" என்று கட்டளையிட்டருளினார். அதனைக் கேட்டு அந்த நாயனார்

"எங்கே என்னை இருந்திடம் தேடிக் கொண்
டங்கே வந்தடை யாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார் அதென்கொலோ."

என்று பாடியருளியபடியே திருவாய்மூருக்கு அந்த நாயனார் எழுந்தருளிய சமயத்தில் அந்த நாயனாருக்குப் பின்பு திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் எழுந்தருள இரண்டு நாயன்மார்களும் சேர்ந்து கொண்டு எழுந்தருளி வாய்மூர் நாதேசுவரரைத் தரிசனம் செய்த தலம் இது.

திருநாவுக்கரசு நாயனார் திருவாய்மூரைப் பற்றிப் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு :

"திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே."

திருநாவுக்கரசு நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"பாலின் மொழியாளோர் பாகம் கண்டேன்
பதினெண் கணமும் பணியக் கண்டேன்
நீல நிறமுண்ட கண்டம் கண்டேன்
நெற்றி நுதல்கண்டேன் பெற்றம் கண்டேன்
காலைக் கதிர்செய் மதியம் கண்டேன்
கரந்தை திருமுடிமேல் தோன்றக் கண்டேன்
மாலைச் சடையும் முடியும் கண்டேன்
வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே."

பிறகு வரும் 277-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'திருநாவுக்கரசு நாயனார் துயிலிலிருந்து எழுந்து உணர்வு உண்டாக, "அடியேனைத் திருவாய்மூருக்கு நீ வருவாயாக என்று திருவாய் மலர்ந்தருளி விட்டுத் திருவாய்மூர்நாதேசுவரர் அப்பால் எழுந்தருளிச் சென்று விட்டார்; என்ன காரணமோ?" என்று அந்த நாயனார் பாடியருளி, "இந்தக் கட்டளை அடியேனுடைய தலைவனாகிய வாயமூர்நாதேசுவரன் வழங்கிய திருவருளானால் அடியேனும் அவ்வாறு திருவாய்மூருக்குச் செல்வேன்" என்று எழுந்து வேதவனமாகிய வேதாரணியத்தைத் தம்முடைய பின்பு இருக்கச் செய்து அந்த நாயனார் வேகமாக எழுந்தருள அந்த நாயனாருக்கு முன்னால் எல்லாத் தேவர்களுக்கு முதல் மூர்த்தியாகிய வாய்மூர்நாதேசுவரர் முன்னால் காட்டியருளும் அந்த வேடத்தோடு எழுந்தருளிக் காட்சியை வழங்கியருள.' பாடல் வருமாறு:

"போதம் நிகழ, 'வாஎன்று
போனார்; என்கொல்' எனப்பாடி
'ஈதெம் பெருமான் அருளாகி
லியானும் போவேன்.' என்றெழுந்து
வேத வனத்தைப் புறகிட்டு
விரைந்து போக அவர்முன்னே

ஆதி மூர்த்தி முன்காட்டும்
அவ்வே டத்தால் எழுந்தருள.''

இந்தப் பாடல்குளகம். போதம்-திருநாவுக்கரசு நாயனார் துயிலிலிருந்து விழித்துக் கொண்டு எழுந்து உணர்வு. நிகழ-உண்டாக, வா-அடியேனைத் திருவாய்மூருக்கு நீ வருவாயாக. என்று-என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு, போனார்-திருவாய்மூ நாதேசுவரர் அப்பால் எழுந்தருளிச் சென்று விட்டார். என் கொல்-என்ன காரணமோ? கொல்: அசைநிலை. என-என்ற கருத்து; இடைக்குறை. ப்:சந்தி. பாடி-ஒரு பாசுரத்தை அந்த நாயனார் பாடியருளி' ஈது-இந்தக் கட்டளை. எம்பெருமான் - அடியேனுடைய தலைவனாகிய வாய்மூர் நாதேசுவரன். அருளாகில்-வழங்கிய திருவருளானால். இ: குற்றியலிகரம். யானும்-அடியேனும். போவேன்-திருவாய்மூருக்குச் செல்வேன். என்று-என. எழுந்து-எழுந்திருந்து. வேதவனத்தை - வேதவனமாகிய திருமறைக் காட்டை. ப்:சந்தி. புறகு இட்டு-தமக்குப் பின்னால் இருக்கச் செய்து. விரைந்து-வேகத்தை உடையவராகி. போக-அந்த நாயனார் திருவாய்மூருக்கு எழுந்தருள. அவர்-அந்த நாயனாருக்கு. முன்-முன்னால். ஏ:அசைநிலை. ஆதிமூர்த்தி-எல்லாத் தேவர்களுக்கும் முதல் மூர்த்தியாராகிய வாயமூர் நாதேசுவரர். மூர்த்தி: ஒருமை பன்மை மயக்கம். முன்-முன்னால். காட்டும்-காட்டியருளும். அவ்வேடத்தால்-அந்த வேடத்தோடு; உருபு மயக்கம். எழுந்தருள-எழுந்தருளித் தம்முடைய காட்சியை வழங்க.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட திருக்குறுந்தொகைகள் உள்ள திருப்பதிகத்தில் இருக்கும் ஒரு திருக் குறுந்தொகை வருமாறு:

'' மன்னும் மாமறைக் காட்டு மணாளனார்
உன்னி உன்னி உறங்குகின் றேனுக்குத்

தன்னை வாய்மூர்த் தலைவனா மாசொல்லி
என்னை வாவென்று போனார் அதென் கொலோ.''

மற்றொரு பாசுரம் வருமாறு:

'' பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டம் தவிர்ப்பார் அவரைப்போல்
தேடிக் கொண்டு திருவாய்மூர்க் கேயெனா
ஓடிப் போந்திங் கொளித்தவா றென்கொலோ.''

பிறகு வரும் 278-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'சீர்த்தியை நிரம்பப் பெற்ற அந்தச் சிவத்தலமாகிய வேதாரணியத்திலிருந்து எழுந்து மேலே எழுந்தருளும் திருநாவுக்கரசு நாயனார் திருப்தியடையாத பக்தியோடு அருமையாக உள்ள அமிர்தத்தைக் குடிப்பதற்கு அடையாத விதத்தைப் போலக் கங்கையாற்றினுடைய புனல் தங்கியிருக்கும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய வேதாரணியேசுவரர் எழுந்தருள நீண்ட நேரம் அந்த ஈசுவரருக்குப் பின்னால் எழுந்தருளும் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பெரிய ஆண்மையைப் பெற்றவராகிய அந்த வேதாரணியேசுவரரை முன்னால் தொடர்ந்து சென்றும் அந்த ஈசுவரரை அடையப் பெற எண்ணியவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்த ஈசுவரரை அடையும் பாக்கியத்தைப் பெறவில்லை.' பாடல் வருமாறு:

'' சீரார் பதியி னின்றெழுந்து
செல்லும் திருநா வுக்கரசர்
ஆரா அன்பில் ஆரமுதம்
உண்ண எய்தா வாறேபோல்
நீரார் சடையார் எழுந்தருள
நெடிது பின்பு செல்லுமவர்
பேரா ளரைமுன் தொடர்ந்தணையப்
பெறுவார் எய்தப் பெற்திலரால்.''

சீர்-சீர்த்தியை. ஆர்-நிரப்பப் பெற்ற. பதியினின்று—அந்தச் சிவத்தலமாகிய வேதாரணியத்திலிருந்து. எழுந்து—எழுந்து மேலே. செல்லும்-எழுந்தருளும். திருநாவுக்கரசர்-திருநாவுக்கரசு நாயனார். ஆரா-திருப்தியை அடையாத; 'குறையாத' எனலும் ஆம். அன்பில்-பக்தியோடு; உருபு மயக்கம். ஆர்-பெறுவதற்கு அருமையாக உள்ள. அமுதம்-அமிர்தத்தை. உண்ண-குடிப்பதற்கு. எய்தாவாறு-அடையாத விதத்தை. ஏ:அசை நிலை. போல்-போல. நீர்-கங்கையாற்றின் புனல். ஆர்-தங்கியிருக்கும். சடையார்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய வேதாரணியேசுவரர். எழுந்தருள-தமக்கு முன்னால் எழுந்தருள. நெடிது-நீண்ட நேரம். பின்பு-அந்த ஈசுவரருக்குப் பின்னால். செல்லும்-எழுந்தருளும். அவர்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார். பேராளரை-பெரிய ஆண்மையைப் பெற்றவராகிய அந்த வேதாரணியேசுவரரை. முன்-முன்னால். தொடர்ந்து-தொடர்ந்து சென்றும். அணையப் பெறுவார்—அந்த ஈசுவரரை அடையும் பாக்கியத்தைப் பெற எண்ணியவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். எய்தப் பெற்றிலர்-அடையும் பாக்கியத்தைப் பெறவில்லை. ஆல்:ஈற்றசை நிலை.

பிறகு வரும் 279-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அத்தகைய முறையில் வேதாரணியேசுவரர் எழுந்தருளி அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்குச் சமீபத்தில் தம்முடைய தரிசனத்தை வழங்கியருளுபவரைப் போல தங்கத்தினால் அமைந்த திருக்கோயில் ஒன்றை அந்த நாயனாருக்கு எதிரில் காட்டியருளி அந்தத் திருக்கோயிலுக்கு உள்ளே அந்த ஈசுவரர் நுழைந்தருள அவருக்குப் பின்னால் எழுந்தருளும் திருத்தொண்டராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்தப் பக்கத்தில் வேகமாகச் சென்று அந்த ஈசுவரரைத் தொடர்ந்து செல்ல எழுந்தருளிய விதத்தைப் புகழோடு நிலை பெற்று விளங்கும் புகலியாகிய சீகாழியில்

திருவவதாரம் செய்தருளிய வள்ளலாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் கேட்டருளி எழுந்தருளிவந்து வேதாரணியத்தை அடைந்தார்.' பாடல் வருமாறு:

**" அன்ன வண்ணம் எழுந்தருளி**
**அணித்தே காட்சி கொடுப்பார்போல்**
**பொன்னின் கோயில் ஒன்றெதிரே**
**காட்டி அதனுட் புக்கருளத்**
**துன்னும் தொண்டர் அம்மருங்கு**
**விரைந்து தொடரப் போந்தபடி**
**மன்னும் புகலி வள்ளலார்**
**தாமும் கேட்டு வந்தணைந்தார். "**

அன்ன-அத்தகைய. வண்ணம்-முறையில். எழுந் தருளி-வேதாரணியேசுவரர் எழுந்தருளி. அணித்தே-அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்குச் சமீபத்திலேயே. காட்சி-தம்முடைய தரிசனத்தை. கொடுப்பார் போல்-வழங்கி யருளுபவரைப் போல. பொன்னின் - தங்கத் தினால் அமைந்த. கோயில்-திருக்கோயில். ஒன்று-ஒன்றை. எதிர்-அந்த நாயனாருக்கு எதிரில். ஏ:அசை நிலை. காட்டி-காண்பித்தருளி. அதனுள்-அந்தத் திருக்கோயிலுக்கு உள்ளே. புக்கருள-அந்த ஈசுவரர் நுழைந்தருள. த்:சந்தி. துன்னும்-அந்த ஈசுவரருக்குப் பின்னால் எழுந்தருளும். தொண்டர்-திருத் தொண்டராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். அம்மருங்கு-அந்தப் பக்கத்தில். விரைந்து-வேகமாகச்சென்று தொடர-தொடர்ந்து செல்ல. ப்:சந்தி. போந்தபடி-எழுந் தருளிய விதத்தை. மன்னும்-புகழோடு நிலை பெற்று விளங்கும். புகலி-புகலியாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய. வள்ளலார் தாமும்-வள்ளலாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும். தாம்: அசை நிலை. கேட்டு-கேள்விப் பட்டருளி. வந்து-எழுந்தருளி வந்து. அணைந்தார் -வேதாரணியத்தை அடைந்தார்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை வள்ளலார் என்று சிறப்பித்தல்: "பெருகுஞான வள்ளலார்.", "சீர்க் காழி வள்ளலாரை.", "வள்ளலார் திருவருளினை.", "பெருந்தவத்தாற் பெற்றெடுத்த வள்ளலார்.", "வள்ள லார் எழுக என.", "வள்ளலார் மற்ற வளம்பதி மருவுதல் மகிழ்ந்தார்.", "சண்பை வள்ளலார் திருவுள்ளம் மகிழ்ந்து.", "வையகம் உய்யவந்த வள்ளலார்.", "வள்ள லார் அவர்தம் பின்பு மன்னன்மாஏறிச் சென்றான்.", "வள்ளலார் மற்றவரருளின் வாய்மை கூறின் வரம் பெண் ணாம்," என்று சேக்கிழாரும், "கவுணியர்க்கோர் சேயென்ன வந்தங்கவதரித்த வள்ளலை.", "வள்ளல் நீ.", "வள்ளல் மழவன் சிறுமதலைவான் பெரு நோய் தீர்த்த குழகன்." என்று நம்பியாண்டார் நம்பியும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 280-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார், "அடியேனை கூட்டிக் கொண்டு எழுந்தருளிச் சமீபத்தில் இருப்பவரைப் போலக் காட்டியருளி பிறகு மறைந்து போய் விட்டார்" என்று எண்ணிச் சோர்வை அடைந்து "பிழையைப் புரிந்து விட்டுச் சந்தர்ப்பத்தை அடியேன் தெரிந்து கொள்ளாமல் வேதாரணியேசுவரருடைய திருக்கோயிலுக்கு முன்னால் உயரமாக நிற்கும் கோபுர வாசலில் உள்ள கதவைப் பூட்டி யிருந்த பூட்டைத் திறக்குமாறு புரிந்த அடியேனுக்கே அல்லா மல், பக்கத்தில் தாம் மறைந்து போனால் இந்தக். கதவைத் திருத்தொண்டு உறைக்குமாறு பாடி மூடுமாறு புரிந்த தழைத்து ஓங்கும்வார்த்தைகளைப் பேசுபவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அதோ அந்த இடத்தில் எழுந்தரு ளியிருக்கிறார்; அந்த வேதாரணியேசுவரர் இந்தத் திருமறை காட்டில் எந்தப் பக்கத்தில் மறைந்து போவது?" என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய,' பாடல் வருமாறு:

"'அழைத்துக் கொடுபோந் தணியார்போல்
காட்டி மறைந்தார்' எனஅயர்ந்து,
'பிழைத்துச் செவ்வி அறியாதே
திறப்பித் தேனுக் கேயல்லால்
உழைத்தாம் ஒளித்தால் கதவம்தொண்
டுறைக்கப் பாடி அடைப்பித்த
தழைத்த மொழியார் உப்பாலார்
தாமிங் கெப்பால் மறைவ'தென."

இந்தப் பாடல் குளகம். அழைத்துக்கொடு-அந்தத் திரு நாவுக்கரசு நாயனார் அடியேனைக் கூட்டிக்கொண்டு. போந்து-எழுந்தருளி. அணியார்போல்-சமீபத்தில் இருப்ப வரைப் போல. காட்டி-தம்மைக் காண்பித்தருளி. மறைந் தார்-பிறகு மறைந்து போய்விட்டார். என-என்று எண்ணி; இடைக்குறை, அயர்ந்து-அந்த நாயனார் சோர்வை அடைந்து. பிழைத்து-பிழையைப் புரிந்து விட்டு. ச்:சந்தி. செவ்வி-சந்தர்ப்பத்தை. அறியாது - அடியேன் தெரிந்து கொள்ளாமல். ஏ: அசை நிலை. திறப்பித் தேனுக்கே-வேதாரணியேசுவரருடைய திருக்கோயிலுக்கு முன்னால் உயரமாக நிற்கும் கோபுரவாசலில் உள்ள கதவைப் பூட்டி யிருந்த பூட்டைத் திறக்குமாறு புரிந்த அடியேனுக்கே. அல் லால்-அல்லாமல். உழை-பக்கத்தில். த்: சந்தி. 'தாம்' என்றது வேதாரணியேசுவரரை. ஒளித்தால் - மறைந்து போனால். கதவம்-இந்தக் கதவை. தொண்டு-திருத் தொண்டை. உறைக்க-அந்த வேதாரணியேசுவரருடைய திருவுள்ளத்தில் உறைக்குமாறு. ப்:சந்தி. பாடி-ஒரு பாசு ரத்தைப் பாடியருளி. அடைப்பித்த-மூடுமாறு புரிந்த. தழைத்த-தழைத்து ஓங்கியுள்ள. மொழியார்-வார்த்தை களைப் பேசுபவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாய னார். மொழி:ஒருமை பன்மை மயக்கம். உப்பாலார்-அதோ அந்தப் பக்கத்தில் எழுந்தருளி யிருக்கிறார். உ:சேய் மைச்சுட்டு. 'தாம்' என்றது வேதாரணியேசுவரரை. இங்கு-

இந்தத் திருமறைக் காட்டில். எப்பால்-எந்தப் பக்கத்தில். மறைவது-மறைந்து போவது. என-என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய; இடைக்குறை.

பிறகு வரும் 281-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'மாடங்கள் உயரமாக நிற்கும் அழகிய புகலியாகிய சீகாழியை ஆட்சி புரிந்தருளும் அரசராகிய அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்குத் திருமாலும் பிரமதேவனும் பன்றியினுடைய வடிவத்தை எடுத்துக்கொண்டு நிலத்தைத் தோண்டித் தேடிப் பார்த்தும், அன்னப் பறவையினுடைய உருவத்தை எடுத்துக் கொண்டு மேலே பறந்து தேடிப் பார்த்தும் திருவடிகளையும் திருமுடியையும் இன்னமும் பார்க்க முடியாதவராகிய வேதாரணியேசுவரர் தமக்கு நேரில் தம்முடைய தரிசனத்தை வழங்கியருள அந்தப் பெருமானாருடைய திருநடனத்தைத் திருநாவுக்கரசு நாயனார் தரிசித்து அந்தப் பெருமானாரை வணங்கித் துதித்து விட்டுத் திருநாவுக்கரசு நாயனாரும் தரிசிக்குமாறு அந்த வேதாரணியேசுவரர் தம்முடைய திருவுருவத்தைத் தரிசிக்குமாறு காண்பித்தருளியவுடனே, ''பாட அடியார்'' என்று தொடங்கிப் பரமேசுவரராகிய அந்த வேதாரணியேசுவரரை ஒரு திருப்பதிகத்தினால் பாடியருளினார்.' பாடல் வருமாறு:

'' மாடம் நீடு திருப்புகலி
  மன்ன ரவர்க்கு மாலயனும்
நேடி இன்னம் காணாதார்
  நேரே காட்சி கொடுத்தருள
ஆடல் கண்டு பணிந்தேத்தி
  அரசும் காணக் காட்டுதலும்
'பாட அடியார்' என்றெடுத்துப்
  பரமர் தம்மைப் பாடினார். ''

மாடம்-மாடங்கள்; ஒருமை பன்மை மயக்கம். நீடு-உயரமாக நிற்கும். திரு-செல்வர்கள் வாழும்; திணை

மயக்கம். 'அழகிய' எனலும் ஆம். ப்:சந்தி. புகலி-புகலி யாகிய சீகாழியை. மன்னர் அவர்க்கு-ஆட்சி புரிந்தருளும் அரசராகிய அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாய னாருக்கு. மால்-திருமாலும். அயனும்-பிரம தேவனும். நேடி-பன்றியினுடைய வடிவத்தை எடுத்துக்கொண்டு நிலத் தைத் தோண்டித் தேடிப் பார்த்தும், அன்னப் பறவையினு டைய உருவத்தை எடுத்துக்கொண்டு மேலே பறந்து தேடிப் பார்த்தும், இன்னம் காணாதார்-திருவடிகளையும் திரு முடியையும் இன்னமும் பார்க்க முடியாதவராகிய வேதா ரணியேசுவரர். நேர்-தமக்கு நேரில். ஏ:அசை நிலை. காட்சி-தம்முடைய தரிசனத்தை. கொடுத்தருள-வழங்கி யருள. ஆடல்-அந்தப் பெருமானாருடைய திரு நடனத்தை. கண்டு-திருநாவுக்கரசு நாயனார் தரிசித்து. பணிந்து-அந்தப் பெருமானாரைத் தரையில் விழுந்து வணங்கிவிட்டு. ஏத்தி-துதித்துவிட்டு. அரசும்-திருநாவுக்கரசு நாயனாரும்; திணை மயக்கம். காண-தரிசிக்குமாறு. க்:சந்தி. காட்டுதலும்-அந்த வேதாரணியேசுவரர் தம்முடைய திருவுருவத்தைத் தரிசிக்குமாறு காண்பித்தருளியவுடனே. 'பாட அடியார்' என்று- 'பாட அடியார்' என. எடுத்து- 'பாட அடியார்' என்று தொடங்கி. ப்:சந்தி. பரமர் தம்மை-பரமேசுவர ராகிய அந்த வேதாரணியேசுவரரை. தம்:அசை நிலை. ப்:சந்தி. பாடினார்-ஒரு திருப்பதிகத்தினால் அந்த நாயனார் பாடியருளினார்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட திருத்தாண்டகம் திரு வாய்மூரைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடி யருளியது. அந்தத் திருத்தாண்டகம் வருமாறு:

"பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணம் கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கைஅனல் கண்டேன் கங்கை யாளைக்

கோட வரவார் சடையிற் கண்டேன்
கொக்கினிதழ் கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாயமூர் அடிகளை நான் கண்ட வாறே.''

இந்தத் திருப்பதிகத்தில் இறுதியில் வரும் திருத்தாண்டகம் வருமாறு:

'' கலங்க இருவர்க் கழலாய் நீண்ட
காரணமும் கண்டேன் கருவாய் நின்று
பலங்கள் தரித்துகந்த பண்பும் கண்டேன்
பாடல் ஒலியெலாம் கூடக் கண்டேன்
இலங்கைத் தலைவன் சிரங்கள் பத்தும்
இறுத்தவனுக் கீந்த பெருமை கண்டேன்
வலங்கைத் தலத்துள் அனலும் கண்டேன்
வாய்மூர் அடிகளை நான் கண்ட வாறே. ''

பிறகு உள்ள 282-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளும் செந்தமிழ் மொழியில் அமைந்த மாலைகளாகிய பல திருப்பதிகங்களை ஏற்றுக்கொண்டு பரமேசுவரராகிய திருவாய்மூர் நாதேசுவரரும் எழுந்தருள, நெடுங்காலமாகப் புகழ்பெற்று விளங்கும் திருவாய்மூருக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி அடைந்து அந்தத் திருவாய்மூரில் நிலைபெற்று விளங்கும் திருக்கோயிலை வலமாக வந்து பிரதட்சிணம் புரிந்து தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தில் பிறைச் சந்திரனை அணிந்திருப்பவராகிய திருவாய்மூர்நாதேசுவரருடைய பெருமையைப் பெற்ற திருத்தொண்டராகிய அந்த நாயனார் அந்தத் திருவாய்மூர் நாதேசுவரரை வணங்கிவிட்டு வாழ்த்துக்களைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்து பிறகு அந்த ஈசுவரரைத் தோத்திரம் புரிந்து தாம் விரும்பும் விருப்பம் வளர்ச்சியை அடைந்து ஓங்கி நிற்க விரும்பி அந்தப் பெரிய

சிவத்தலமாகிய திருவாய்மூரில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரோடு அந்த நாயனார் தங்கிக்கொண்டிருந்தார்." பாடல் வருமாறு:

"பாடும் தமிழ்மா லைகள்கொண்டு
பரமர் தாமும் எழுந்தருள
நீடும் திருவாய் மூரடைந்து
நிலவும் கோயில் வலம்செய்து
சூடும் பிறையார் பெருந்தொண்டர்
தொழுது போற்றித் துதிசெய்து
நாடும் காதல் வளர்ந்தோங்க
நயந்தந் நகரில் உடனுறைந்தார்."

பாடும்-அவ்வாறு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளும். தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலைகள் - மாலைகளாகிய பல திருப்பதிகங்களை. கொண்டு - ஏற்றுக்கொண்டு. பரமர்தாமும் - பரமேசுவரராகிய திருவாய்மூர்நாதேசுவரரும். தாம்: அசை நிலை. எழுந்தருள-எழுந்தருளி வர. நீடும்-நெடுங்காலமாகப் புகழ் பெற்று விளங்கும். திருவாய்மூர் - திருவாய்மூரை. அடைந்து-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி அடைந்து. நிலவும்-அந்தத் திருவாய்மூரில் நிலைபெற்று விளங்கும். கோயில் - திருக்கோயிலை. வலம்செய்து-வலமாகவந்து பிரதட்சிணம் புரிந்து விட்டு. சூடும் பிறையார்-தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தில் பிறைச் சந்திரனை அணிந்திருப்பவராகிய திருவாய்மூர்நாதேசுவரருடைய. பெரும்-பெருமையைப்பெற்று விளங்கும். தொண்டர்-திருத்தொண்டராகிய அந்த நாயனார். தொழுது-அந்தத் திருவாய்மூர்நாதேசுவரரைத் தரையில் விழுந்து வணங்கி விட்டு. போற்றி-வாழ்த்துக்களைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்த பிறகு. த்:சந்தி. துதிசெய்து-தோத்திரம் புரிந்து நாடும்-தாம் விரும்பும். காதல்-விருப்பம். வளர்ந்து-வளர்ச்

சியை அடைந்து. ஓங்க-ஓங்கி நிற்க. நயந்து-விரும்பி. அந் நகரில்- அந்தப் பெரிய சிவத்தலமாகிய திருவாய்மூரில். உடன்- திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு. உறைந்தார்- அந்த நாயனார் தங்கிக் கொண்டிருந்தார்.

திருவாய்மூரைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

"தஞ்சே கண்டேன் தரிக்கிலா தாரென்றேன்
அஞ்சேல் உன்னை அழைக்கவந் தேனென்றார்
உஞ்சேன் என்றுகந்தே யெழுந் தோட்டந்தேன்
வஞ்சே வல்லரே வாய்மூர் அடிகளே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"பாலின் மொழியாளோர் பாகம் கண்டேன்
பதினெண் கணமும் பயிலக் கண்டேன்
நீல நிறமுண்ட கண்டம் கண்டேன்
நெற்றிநுதல் கண்டேன் பெற்றம் கண்டேன்
காலைக் கதிர்செய் மதியம் கண்டேன்
கரந்தை திருமுடிமேல் தோன்றக் கண்டேன்
மாலைச் சடையும் முடியும் கண்டேன்
வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே."

திருவாய்மூரைப் பற்றி நட்டராகப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"பண்ணிற் பொலிந்த வீணையர்
பதினெண் கணமும் உணராநஞ்
சுண்ணப் பொலிந்த மிடற்றினார்
உள்ளம் உருகில் உடனாவார்
சுண்ணப் பொடிநீ றணிமார்பர்
சுடர்பொற் சடைமேல் திகழ்கின்ற

வண்ணப் பிறையோ டிவராணீர்
வாய்மூர் அடிகள் வருவாரே. ''

பிறகு வரும் 283-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனாரும், ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரோடு அந்தத் திருவாய்மூரில் இனிமையோடு தங்கியிருந்துகொண்டு தம்முடைய திருவுள்ளத்தில் கொண்டிருந்த விருப்பம் பொங்கிக்கொண்டு எழ திருவாய்மூரில் எழுந்தருளியிருக்கும் திருவாய்மூர் நாதேசுவர சுவாமிகளினுடைய திருவடிகளை அந்த நாயனார் வாழ்த்தி வணங்கிவிட்டுத் தம்முடைய திருவுள்ளத்தில் மூண்டு எழுந்த பக்தியினால் செந்தமிழ் மொழியில் அமைந்த மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை அந்தத் திருவாய்மூர் நாதேசுவரருக்கு அணிந்து சிவஞானத்தைப் பெற்ற முனிவராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரோடு மறுபடியும் திரும்பி வந்து திருமறைக்காட்டை அடைந்து ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் இல்லாதவராகிய வேதாரணியேசுவரருடைய திருவடிகளை அந்த நாயனார் தரையில் விழுந்து வணங்கினார்.' பாடல் வருமாறு:

'' ஆண்ட அரசும் பிள்ளையா
ருடனே அங்கண் இனிதமர்ந்து
பூண்ட காதல் பொங்கிஎழ
வாய்மூர் அடிகள் அடிபோற்றி
மூண்ட அன்பின் மொழிமாலை
சாத்தி ஞான முனிவரொடு
மீண்டு வந்து திருமறைக்காட்
டெய்தி விமலர் தாள்பணிந்தார். ''

ஆண்ட-திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட. அரசும்-திருநாவுக்கரசு நாயனாரும்; திணை

மயக்கம். பிள்ளையாருடன்-ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு. ஏ:அசை நிலை. அங்கண்-அந்தத் திருவாய்மூரில். இனிது-இனிமையோடு. அமர்ந்து-தங்கியிருந்து கொண்டு. பூண்ட-தம்முடைய திரு உள்ளத்தில் கொண்டிருந்த. காதல்-விருப்பம். பொங்கி எழ-பொங்கிக் கொண்டு எழுந்து நிற்க. வாய்மூர்-திருவாய்மூரில் எழுந்தருளியிருக்கும். அடிகள்-திருவாய்மூர் நாதேச்சுவர சுவாமிகளினுடைய. அடி-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். போற்றி-வாழ்த்தி வணங்கிவிட்டு. மூண்ட-தம் முடைய திருவுள்ளத்தில் மூண்டு எழுந்த. அன்பின்-பக்தி யினால். மொழி-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலை-மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை. சாத்தி-அந்தத் திரு வாய்மூர் நாதேசுவரருக்கு அணிந்து. ஞான-சிவஞானத் தைப் பெற்று. முனிவரொடு-முனிவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு. மீண்டு வந்து-திருவாய் மூரிலிருந்து மறுபடியும் திரும்பிவந்து. திருமறைக்காட்டு-திருமறைக்காடாகிய வேதாரணியத்தை. ஏய்தி-அந்த நாயனார் அடைந்து. விமலர்-ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் இல்லாதவராகிய வேதாரணி யேசுவரருடைய. தாள்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். பணிந்தார்-அந்த நாயனார் தரையில் விழுந்து வணங்கினார்.

திருவாய்மூரைப் பற்றி அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

“அடியார் சிலம்பொலிகள் ஆர்ப்பக் கண்டேன்
அன்னவர்க்கே ஈந்த கருணை கண்டேன்
முடியார் சடைமேல் அரவம் மூழ்க
மூரிப் பிறைபோய் மறையக் கண்டேன்
கொடியா ரதன்மேல் இடபம் கண்டேன்
கோவணமும் கீளும் குலாவக் கண்டேன்

வடியாரும் மூவிலைவேல் கையில் கண்டேன்
வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே.

பிறகு உள்ள 284-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'எல்லாத் தேவர்களுக்கும் ஆதி முதல்வராகிய வேதாரணியேசுவரரை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தரையில் விழுந்து வணங்கி விட்டு அந்தத் திருமறைக் காட்டில் தமக்கு உரியவையாகிய உழவாரத் திருப்பணியையும், வேறு பல திருப்பணிகளையும் புரிந்து கொண்டு தங்கிக் கொண்டிருக்கும் காலத்தில் குளிர்ச்சியைப் பெற்ற வெண்மையாகிய சந்திர வட்டக்குடையைப் பிடித்திருக்கும் சோழ மன்னருடைய புதல்வியாரும், பாண்டிய மன்னனுடைய தேவியாரும் குற்றம் இல்லாத நல்ல பண்புகளைப் பெற்றவரும் ஆகிய பாண்டிமா தேவியாராகும் மங்கையர்க்கரசியாருக்கு முன்னால் அந்தப் பாண்டிய மன்னருடைய முதல் அமைச்சராகிய குலச்சிறை நாயனார் செல்லுமாறு அனுப்பிய சில தூதர்கள் புகலியாகிய சீகாழியை ஆட்சி புரிந்தருளும் அரசராகிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரைப் பார்க்கும் பொருட்டு வந்தார்கள்.' பாடல் வருமாறு:

**" ஆதி முதல்வர் தமைப்பணிந்தங்**
**கான பணிசெய் தமரும்நாள்**
**சீத மதிவெண் குடைவளவர்**
**மகளார் தென்னன் தேவியாம்**
**கோதில் குணத்துப் பாண்டிமா**
**தேவியார் முன் குலச்சிறையார்**
**போத விட்டார் சிலர்வந்தார்**
**புகலி வேந்தர் தமைக்காண."**

ஆதிமுதல்வர் தமை - எல்லாத் தேவர்களுக்கும் ஆதி முதல்வராகிய வேதாரணியேசுவரரை. தம்: அசைநிலை. ப்:சந்தி. பணிந்து-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தரையில் விழுந்து வணங்கிவிட்டு. அங்கு-அந்தத் திருமறைக்

காட்டில். ஆன-தமக்கு உரியவையான. பணி-உழவாரத் திருப்பணியையும் வேறு பல திருப்பணிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். செய்து-புரிந்துகொண்டு. அமரும்-தங்கிக் கொண்டிருக்கும். நாள்-காலத்தில். சீத - குளிர்ச்சியைப் பெற்ற. மதி வெண்குடை-வெண்மையாகிய சந்திர வட்டக் குடையைப் பிடித்திருக்கும். வளவர்-சோழ மன்னருடைய. மகளார்-புதல்வியாரும். தென்னன்-பாண்டிய மன்னனு டைய. தேவியாம்-பட்ட மகிஷியாக விளங்கும் மங்கையர்க் கரசியாரும். கோது-ஒரு குற்றமும். இல்-இல்லாத; கடைக் குறை. குணத்து-நல்ல குணங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பாண்டிமா தேவியார்-பாண் டிய மன்னனுடைய பெருமையைப் பெற்ற பத்தினியாருக்கு. முன்-முன்னால். குலச்சிறையார்-அந்தப் பாண்டிய மன்ன னுடைய முதல் அமைச்சராகிய குலச்சிறை நாயனார். போத-செல்லுமாறு. விட்டார் சிலர்-அனுப்பியவர்களாகிய சில தூதர்கள். விட்டார்: ஒருமை பன்மை மயக்கம். புகலி-புகலியாகிய சீகாழியை. வேந்தர் தமை-ஆட்சி புரிந்தருளும் அரசராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை. தம்: அசை நிலை. க்:சந்தி. காண-பார்க்கும் பொருட்டு. வந் தார்-திருமறைக் காட்டுக்கு வந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து உள்ள 285-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு குலச்சிறை நாயனார் அனுப்பிய தூதர்கள் வந்து சேர்ந்து திருமறைக் காடாகிய வேதாரணியத்தை அடைந்து நிலை பெற்ற புகழோடு விளங்கும் வேணுபுரி யாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய வேதியராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரிடம் தாங்கள் வந்த காரியத்தை அறிவித்து விட்டு அந்த நாயனாரிடம் அடைந்து அவருடைய திருவடிகளைத் தரையில் விழுந்து பணிய அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை அடைந்து ஒருவிதமான தீங்கும்

இல்லையோ என்று அந்தத் தூதர்களைக் கேட்டருள, "இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம் சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய வரே, தேவரீருடைய இரண்டு திருவடிகளையும் தியானம் புரிபவர்களுக்குத் துன்பமும் இருப்பவை ஆகுமோ?'' என அவர்கள் கூறுவார்களானார்கள்.' பாடல் வருமாறு:

'' வந்து சிவனார் திருமறைக்கா
டெய்தி மன்னு வேணுபுரி
அந்த ணாளர் தமக்கறிவித்
தவர்பால் எய்தி அடிவணங்கச்
சிந்தை மகிழ்ந்து தீதின்மை
வினவத், 'தீங்கும் உளவாமோ?
இந்த உலகம் உயவந்தீர்,
இருதாள் நினைவார்க்' கென்றுரைப்பார். ''

வந்து சிவனார்-அவ்வாறு குலச்சிறை நாயனார் அனுப்பிய தூதர்கள் வந்து சேர்ந்து. திருமறைக்காடு-திருமறைக் காடாகிய வேதாரணியத்தை. எய்தி-அடைந்து. மன்னு-நிலை பெற்ற புகழோடு விளங்கும். வேணுபுரி-வேணுபுரி யாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய. அந்தணாளர் தமக்கு-வேதியராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரிடம்; உருபு மயக்கம். தம்:அசைநிலை. அறிவித்து-தாங்கள் வந்த காரியத்தை வாயில்காவலர் மூலமாகத் தெரிவித்து விட்டு. அவர்பால்-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரிடத்தை. எய்தி-அடைந்து. அடி-அவருடைய திரு வடிகளை; ஒருமை பன்மை மயக்கம். வணங்க-அந்தத் தூதர்கள் தரையில் விழுந்து பணிய. ச்:சந்தி. சிந்தை-அந்த நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. தீது-ஒருவிதமான தீங்கும். இன்மை-இல்லாமையை. வினவ-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் கேட்டருள. 'எந்தவிதமான தீங்கும்

இல்லையோ?' என்று கேட்டருளினார் என்பது கருத்து. த்:சந்தி. இந்த உலகம்-இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள்; இடஆகு பெயர். உய-உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம்; இடைக்குறை. வந்தீர்-சீகாழில் திருவவதாரம் செய்தருளியவரே; விளி. இருதாள்-தேவரீருடைய இரண்டு திருவடிகளையும். தாள்: ஒருமை பன்மை மயக்கம். நினைவார்க்கு-தியானிக்கும் மக்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். தீங்கும்-தீய துன்பங்களும்; ஒருமை பன்மை மயக்கம். உள-இருப்பவை; இடைக்குறை. ஆமோ-ஆகுமோ? இரா என்பது கருத்து. என்று- என. உரைப்பார்-அந்தத் தூதர்கள் கூறுபவர்களானார்கள்; ஒருமை மன்மை மயக்கம்.

உலகம் உய வந்தவர்: ''காதலியார் மணிவயிற்றில் உருத்தெரிய வரும் பெரும் பேறுலகுய்ய உளதாக.'', ''எவ்வுலகும் தனித்தனியே வாழவரும் அவர்.'', ''உலகுய்ய மகப்பெற்றார்.'', ''வையமெலாம் உய்யுவரு மறைச் சிறுவர்.'' ''அஞ்செழுத்தோதி ஏறினார் உய்ய உலகெலாம்.'', ''படியறியப்பழுதென்றே மொழிந்துய்ய நெறி காட்டும் பவளவாயர்.'', ''உலகுய்ய ஞானம் உண்டார்.'', ''பாடினார் பாரெலாம் உய்ய வந்தார்.'', ''உலகுய்ய உலவாத ஞானம் பெற்றார்.'', ''தாரணி உய்யஞான சம்பந்தன் வந்தான்.'' என்று சேக்கிழாரும், ''வையகத்தோர் உய்யவும்... வந்தங் கவதரித்த வள்ளலை.'' என்று நம்பியாண்டார் நம்பியும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 286-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

''சைவ சமய வழியும், வேதங்களின் வழியும் நிலை நிற்கவும், குற்றத்தைப் பெற்ற சமண சமய வழியை தவம் என்று சொல்லும் பொய்களைப் பேசுவதில் வல்ல சமணர்கள் புரியும் செயலை யாம் சகிக்க மாட்டோம்'' என்று அந்த மங்கையர்க்கரசியார் கூறி விடுத்த தூதர்கள் கூறியதைத்

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் செவி மடுத்தருளி அந்த வலிமையைப் பெற்ற தொழில்களைப் புரிபவர்களாகிய சமணர்கள் புரியும் தீய செயல்களைப் போக்கிவிட்டு ஆதிகாலம் முதல் இருந்துவரும் சைவ சமய வழி விளக்கத்தைப் பெறும் வண்ணம், தெய்வத் தன்மையைப் பெற்ற விபூதியை எண்ணிச் சீர்த்தியைக் கொண்ட சண்பையாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய அழகிய வேதியராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் எழுந்திருந்து வந்தருளினார்.' பாடல் வருமாறு:

**" 'சைவ நெறிவைதிகம் நிற்கச்**
**சழக்கு நெறியைத் தவம்என்னும்**
**பொய்வல் அமணர் செயல்தன்னைப்**
**பொறுக்க இல்லோம்.' எனக்கேட்டே**
**அவ்வன் தொழிலோர் செயல்மாற்றி**
**ஆதி சைவ நெறிவிளங்கத்**
**தெய்வ நீறு நினைந்தெழுந்தார்**
**சீர்கொள் சண்பைத் திருமறையோர்."**

சைவநெறி-சைவ சமய வழியும். வைதிகம்-வேதங்களின் வழியும். நிற்க-நிலைபெற்று நிற்கவும். ச்:சந்தி. சழக்கு-குற்றத்தைப் பெற்ற. நெறியை-சமண சமயவழியை. த்:சந்தி. தவம் என்னும்-தாங்கள் புரியும் தவம் என்று கூறும். பொய்-பொய்களைப் பேசுவதில்; ஒருமை பன்மை மயக்கம்; ஆகுபெயர். வல்-வல்ல. அமணர்-சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். செயல் தன்னை-புரியும் கெட்ட செயலை. தன்:அசைநிலை. ப்:சந்தி. பொறுக்க இல்லோம்-யாம் சகிக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை. என-என்று அந்த மங்கையர்க்கரசியார் கூறி விடுத்த தூதர்கள் கூறியதை; இடைக்குறை. க்:சந்தி. கேட்டு-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் செவிமடுத்தருளி. ஏ:அசைநிலை.

அவ்வன்-அந்த வலிமையைப் பெற்ற. தொழிலோர்-தொழில்களைப் புரிபவர்களாகிய சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். செயல்-புரியும் தீய செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். மாற்றி-போக்கிவிட்டு ஆதி-ஆதிகாலம் முதல் இருந்து வரும். சைவநெறி-சைவ சமய வழி. விளங்க-விளக்கத்தைப் பெறும் வண்ணம். த்:சந்தி. சீர்-சீர்த்தியை. கொள்-கொண்ட. சண்பை-சண்பையாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய. த்:சந்தி. திரு-அழகிய. மறையோர்-வேதியராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். தெய்வ-தெய்வத் தன்மையைப் பெற்ற. நீறு-விபூதியை. நினைந்து-எண்ணி. எழுந்தார்-மதுரையை நோக்கி எழுந்து வந்தருளினார்.

பிறகு உள்ள 287-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு ஆகிய சமயத்தில் திருநாவுக்கரசு நாயனார் புகலியாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளியவரும், ஆண்மையையும், தகுதியையும் பெற்றவரும் ஆகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரிடம், "தங்களுடைய உடம்புகளில் அழுக்கைப் பெருகச் செய்து திரியும் பொய்களைப் பேசுவதில் வல்லவர்களாகிய சமணர்கள் கடுமையாகிய செயல்களைப் புரியும் மாயாஜாலத்தில் மிகவும் வல்லவர்களாகிய அந்தச் சமணர்கள் அடியேனுக்கு முன் காலத்தில் புரிந்த கெட்ட செயல்களும் பல ஆகும்; ஐயோ! அடியேன் அவற்றைக் கூறுவதற்கு இப்போது இசைவை உடையேன் அல்லேன்" என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு:

**"ஆய பொழுது திருநாவுக்**
**கரசு புகலி ஆண்டகைக்குக்**
**'காயம் மாசு பெருக்கிஉழல்**
**கலதி அமணர் கடுவினைசெய்**

மாயை சாலம் மிகவல்லார்;
அவர்மற் றென்னை முன்செய்த
தீய தொழிலும் பல; கெட்டேன்;
சொல்ல இசையேன்யான்' என்றார். ''

ஆய-அவ்வாறு ஆகிய. பொழுது-சமயத்தில். திருநாவுக்கரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். புகலி-புகலியாகிய சீகாழியில் திருஅவதாரம் செய்தருளியவரும்; வினையாலணையும் பெயர். ஆண்-ஆண்மையையும். தகைக்கு-தகுதியையும் பெற்றவரும் ஆகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரிடம்; உருபு மயக்கம். க்:சந்தி. காயம்-தங்களுடைய உடம்புகளில்; ஒருமை பன்மை மயக்கம். மாசு-அழுக்கை. பெருக்கி-பெருகுமாறு செய்து. உழல்-திரியும். கலதி-பொய்களைப் பேசுவதில் வல்லவர்களாகிய சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். கடு-கடுமையான. வினை-செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். செய்-புரிந்து வரும். மாயை சாலம்-மாயா ஜாலத்தில்; மறைவாகப் புரியும் கெட்ட செயல்களில். மிக-மிகவும். வல்லார்-வல்லவர்களாகிய அந்தச் சமணர்களென்னும் ஒருமை பன்மை மயக்கம். அவர்-அவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மற்று: அசை நிலை. என்னை-அடியேனுக்கு; உருபு மயக்கம். இவ்வாறு கூறுபவர் திருநாவுக்கரசு நாயனார். முன்-அடியேன் சமண சமயத்தில் சேர்ந்திருந்த அந்தப் பழைய காலத்தில். செய்த-அடியேனுக்கு அந்தச் சமணர்கள் புரிந்த. தீய-கெட்ட. தொழிலும்-செயல்களும்; ஒருமை பன்மை மயக்கம். பல-பல ஆகும். கெட்டேன்-ஐயோ. சொல்ல-அவற்றைக் கூறுவதற்கு. யான்-அடியேன். இசையேன் - இப்போது இசையமாட்டேன். என்றார்-என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

பிறகு வரும் 288-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'என இவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய, ''வரம்பு இல்லாத தூய்மையைப் பெற்ற விபூதியைப் பூசிக்கொள்ளும் சைவ சமயத்தைப் பாதுகாக்கும் மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார் என்னும் இரண்டு நாயன்மார்களையும் மதுரைக்குச் சென்று பார்க்கும் எண்ணத்தைக் கொண்டவன் அடியேன்; அந்த மதுரைமா நகரில் சைவ சமயத்தவர்களுக்குத் துன்பத்தைச் செய்யும் சமணர்கள் நிற்கின்ற நிலைமையை அழியுமாறு செய்து சைவ சமய வழியை வளர்த்து ஓங்கச் செய்வதை அல்லாமல் வேறு ஒரு செயலையும் புரியமாட்டேன்; இதற்கு ஆணை உம்முடையது.'' என்று ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு:

'' என்று கூற, 'எல்லையிலா
நீறு போற்றும் இருவரையும்
சென்று காணும் கருத்துடையேன்;
அங்குத் தீங்கு புரிஅமணர்
நின்ற நிலைமை அழிவித்துச்
சைவ நெறிபா ரித்தன்றி
ஒன்றும் செய்யேன் ஆணைஉம'
தென்றார் உடைய பிள்ளையார். ''

என்று-என. கூற-இவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. எல்லை-வரம்பு. இலா-இல்லாத; இடைக்குறை. நீறு-தூய்மையைப் பெற்ற விபூதியைப் பூசிக்கொள்ளும். போற்றும்-சைவ சமயத்தைப் பாதுகாக்கும். இருவரையும்-மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார் என்னும் இரண்டு நாயன்மார்களையும். சென்று-மதுரைக்குப் போய். காணும்-பார்க்கும். கருத்து உடையேன்-எண்ணத்தைக் கொண்டவன் அடியேன். இவ்வாறு கூறியவர் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார். அங்கு-

அந்த மதுரை மாநகரில். த்:சந்தி. தீங்கு-சைவசமயத்தைச் சார்ந்தவர்களுக்குத் துன்பத்தை. புரி-செய்யும். அமணர்-சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். நின்ற-நிற்கின்ற. நிலைமை-நிலைமையை. அழிவித்து-அழியுமாறு செய்து. ச்:சந்தி. சைவ நெறி-சைவ சமய வழியை. பாரித்தன்றி-வளர்த்து ஓங்கச் செய்வதை யல்லாமல். ஒன்றும்-வேறு ஒரு செயலையும். செய்யேன்-அடியேன் புரியமாட்டேன். ஆணை உமது-இதற்கு ஆணை ஆலவாயுடையாரே உம்முடையது; 'உம்மேல் ஆணை' என்றபடி. உடைய-ஆளுடைய. பிள்ளையார்-பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். என்றார்-என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

பிறகு உள்ள 289-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

' "மதுரை மாநகருக்கு எழுந்தருளுவதைத் தீர்மானித்துத் தேவரீர் அந்த மதுரைக்கு எழுந்தருள இது சமயம் அன்று; அந்த மதுரை மாநகரத்தில் அந்தச் சமணர்கள் புரியும் கெட்ட மாயா ஜால வித்தைகளை அடியேனே சென்று அழித்து விட்டுத் திரும்பி வருகிறேன்" என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய ஆகும் வழிகளில் எல்லாவற்றையும் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய விட்டு அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை மறுக்க முடியாமல் திருநாவுக்கரசு நாயனார் வேதாரணியத்தில் தங்கிக் கொண்டிருக்கத் தாம் தம்முடைய ஆர்வத்தினால் செந்தமிழ் நாடாகிய பாண்டி நாட்டிற்கு சிவஞானத்தில் தலைமைப் பதவியைப் பெற்றவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

" 'போமா துணிந்து நீர்அங்குப்
போகப் போதா; அவ்வமணர்
தீமா யையினை யானேபோய்ச்
சிதைத்து வருகின்றேன்' என்ன

**ஆமா றெல்லாம் உரைத்தவரை**
**மறுக்க மாட்டா தரசிருப்பத்**
**தாமா தரவால் தமிழ்நாட்டில்**
**போனார் ஞானத் தலைவனார்.''**

போமா-மதுரை மாநகருக்கு எழுந்தருளுமாற்றை. துணிந்து-தீர்மானித்து. நீர்-தேவரீர். அங்கு-அந்தமதுரைக்கு. ப்:சந்தி. போக-எழுந்தருள. ப்:சந்தி. போதா-இதுசமயம் அன்று. அவ்வமணர்-அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தீ-கெட்ட. மாயையினை-மாயா ஜாலவித்தை களை; ஒருமை பன்மை மயக்கம். யானே-அடியேனே. போய்-மதுரைக்குச் சென்று. ச்:சந்தி. சிதைத்து-அந்த வித்தைகளை அழித்து விட்டு. வருகின்றேன்-திரும்பி வருகிறேன். என்ன-என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. ஆமாறு-ஆகும் வழிகளில். ஆறு: ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாவற்றையும். உரைத்து-திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. அவரை-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த வார்த்தைகளை; ஆகுபெயர். மறுக்க மாட்டாது- மறுக்க முடியாமல். அரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். இருப்ப-வேதாரணியத்தில் தங்கிக் கொண்டிருக்க. த்:சந்தி. தாம் என்றது திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். ஆதரவால்-ஆர்வத்தினால். தமிழ் நாட்டில்-செந்தமிழ் நாடாகிய பாண்டி நாட்டிற்கு; உருபு மயக்கம். ஞான-சிவஞானத்தில். த்:சந்தி. தலைவனார்-தலைமைப் பதவியை வகிப்பவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். போனார்-எழுந்தருளினார்.

அடுத்து உள்ள 290-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வேணுபுரமாகிய சீகாழியை அரசாட்சி புரிந்தருளும் அரசராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் மதுரைக்கு எழுந்தருளிச் செல்ல அந்த நாயனாரிடம் விடையைப் பெற்றுக் கொண்டு வேதாரணியத்தில் தங்கிக் கொண்

டிருந்த வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் தாம் தம்முடைய திருவுள்ளத்தில் கொண்டிருக்கும் பக்தியினால் திருமறைக் காடாகிய வேதாரணியத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பரிசுத்தராகிய வேதாரணியேசுவரரை வாழ்த்துக்களைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு, விரும்பி அந்த வேதாரணியத்தில் வீற்றிருந்து அந்த வேதாரணியத்தில் தங்கிக் கொண்டிருக்கும் காலத்தில் அந்த வேதாரணியத்திலிருந்து புறப்படுபவராகிய திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளும் தூணைப் போன்றவராகிய வீழி நாதேசுவரருடைய வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளை மறுபடியும் அடைவதற்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எண்ணுகிறவரானார்.' பாடல் வருமாறு:

**'வேணு புரக்கோன் எழுந்தருள**
**விடைகொண் டிருந்த வாகீசர்**
**பூணும் அன்பால் மறைக்காட்டில்**
**புனிதர் தம்மைப் போற்றிசைத்துப்**
**பேணி இருந்தங் குறையும்நாள்**
**பெயர்வார் வீழி மிழலைஅமர்**
**தாணு வின்தன் செய்யகழல்**
**மீண்டும் சார நினைக்கின்றார்.''**

வேணுபுர - வேணுபுரமாகிய சீகாழியை. க்:சந்தி. கோன்-அரசாட்சி புரிந்தருளும் அரசராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். எழுந்தருள-மதுரைக்கு எழுந்தருளிச் செல்ல. விடைகொண்டு-அந்த நாயனாரிடம் விடையைப் பெற்றுக்கொண்டு. இருந்த-வேதாரணியத்தில் தங்கிக் கொண்டிருந்த. வாகீசர்-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார். பூணும்-தாம் தம்முடைய திருவுள்ளத்தில் கொண்டிருக்கும். அன்பால்-பக்தியினால். மறைக் காட்டில்-திருமறைக் காடாகிய வேதாரணியத்தில். புனிதர் தம்மை-

திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பரிசுத்தராகிய வேதாரணியேசுவரரை. தம்:அசை நிலை. ப்:சந்தி. போற்று-வாழ்த்துக்களை; ஒருமை பன்மை மயக்கம்; முதல் நிலைத் தொழிற் பெயர். இசைத்து-திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. ப்:சந்தி. பேணி-விரும்பி. இருந்து-அந்த வேதாரணியத்தில் வீற்றிருந்து. அங்கு-அந்த வேதாரணியத்தில். உறையும்-தங்கிக் கொண்டிருக்கும். நாள்-காலத்தில். பெயர்வார்-அந்த வேதாரணியத்திலிருந்து புறப்படுவாராகி; முற்றெச்சம். வீழிமிழலை-திருவீழிமிழலையில். அமர்-வீற்றிருந்தருளும். தாணுவின் தன்-வஜ்ரத் தூணைப் போன்றவராகிய வீழி நாதேசுவரருடைய: அசைநிலை. இன்: வேண்டாவழி வந்த சாரியை. செய்யகழல்-வெற்றிக் கழலைப் பூண்டுவிளங்கும் செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளை; ஆகு பெயர். மீண்டும்-மறுபடியும். சார-அடைவதற்கு. நினைக்கின்றார்-அந்த திருநாவுக்கரசு நாயனார் எண்ணுகிறவரானார்.

பிறகு வரும் 291-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பூம்பொழில் சுற்றியிருக்கும் திருமறைக் காடாகிய வேதாரணியத்தில் வீற்றிருந்தருளும் சோதியாகிய வேதாரணியேசுவரர் வழங்கிய திருவருளை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பெற்றுக்கொண்டு அந்த வேதாரணியத்தை விட்டு விட்டு மேலே எழுந்தருளிச் சென்று, ''திருமால் பள்ளி கொண்டருளிய பாற்கடலில் எழுந்த ஆலகால விடத்தை விழுங்கியவராகிய வீழிநாதேசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் திருவீழிமிழலைக்கு மறுபடியும் அடியேன் போவேன்'' என்று அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து இந்த உலகத்தில் புகழோடு நடந்த திருநாகைக் காரோணத்திற்கும், வேறு சிவத்தலங்களுக்கும் அந்த நாயனார் எழுந்தருளிக் காயாரோகணேசுவரரை வணங்கிவிட்டு, சொந்

சுவை பொருட்சுவை என்னும் சுவைகள் பொருந்தியிருக்கும் சொற்களைப் பெற்ற வளப்பத்தைக் கொண்ட செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு திருப்பதிகத்தை அந்த நாயனார் பாடியருளித் தலைவராகிய நேத்திரார்ப்பணேசுவரர் எழுந்தருளியிருக்கும் திருவீழிமிழலைக்கு எழுந்தருளி வந்து சேர்ந்தார்." பாடல் வருமாறு:

**"சோலை மறைக்காட் டமர்ந்தருளும்**
**சோதி அருள்பெற் றகன்றுபோய்**
**'வேலை விடமுண் டவர்வீழி**
**மிழலை மீண்டும் செல்வன்' என**
**ஞாலம் நிகழ்ந்த நாகைக்கா**
**ரோணம் பிறவும் தாம்பணிந்து**
**சாலும் மொழிவண் டமிழ்பாடித்**
**தலைவர் மிழலை வந்தடைந்தார்."**

சோலை-பூம்பொழில் சுற்றி விளங்கும். மறைக்காட்டு-திருமறைக் காடாகிய வேதாரணியத்தில். அமர்ந்தருளும்-வீற்றிருந்தருளும். சோதி-சோதியாகிய வேதாரணியேசுவரர். அருள்-வழங்கிய திருவருளை. பெற்று-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பெற்றுக்கொண்டு. அகன்று-அந்த வேதாரணியத்தை விட்டு விட்டு. போய்-மேலே எழுந்தருளிச் சென்று. வேலை-திருமால் பள்ளி கொண்டருளிய பாற்கடலில் எழுந்த. விடம்-ஆலகால நஞ்சை. உண்டவர்-விழுங்கியவராகிய வீழிநாதேசுவரர். வீழிமிழலை-திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவீழிமிழலைக்கு. மீண்டும்-மறுபடியும். செல்வன்-அடியேன் போவேன். என-என்று அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய; இடைக்குறை. ஞாலம்-இந்தப் பூமண்டலத்தில், நிகழ்ந்த-புகழோடு நடந்த. நாகைக்காரோணம் - திருநாகைக் காரோணத்திற்கும். பிறவும்-வேறு சிவத்தலங்களுக்கும். 'தாம்' என்றது திரு-

நாவுக்கரசு நாயனாரை. பணிந்து-எழுந்தருளி காயாரோகணேசுவரரை வணங்கி விட்டு. சாலும்-சொற்சுவை, பொருட்சுவை என்னும் சுவைகள் பொருந்தியிருக்கும். மொழி-சொற்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். வண்-வளப்பத்தைக் கொண்ட. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு திருப்பதிகத்தை; ஆகுபெயர். பாடி-அந்த நாயனார் பாடியருளி. த்:சந்தி. தலைவர்-தலைவராகிய நேத்திரார்ப்பணேசுவரர் எழுந்தருளி யிருக்கும். மிழலை-திருவீழி மிழலைக்கு. வந்து அடைந்தார்-எழுந்தருளி வந்து சேர்ந்தார்.

திருநாகைக்காரோணம்: இது நாகபட்டினம் என்னும் சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திரு நாமங்கள் காயாரோகணேசுவரர்; ஆதிபுராணேசுவரர் என்பவை. அம்பிகை நீலாயதாட்சி அம்மை. தலவிருட்சம் மாமரம். இது சப்தவிடங்கத் தலங்களுக்குள் ஒன்று. அதிர்த்த நாயனாருடைய திருவவதாரத் தலம் இது. காயாரோகணேசுவரர் புண்டரீக முனிவரைக் காயத்தோடு ஆரோகணம் புரிந்து கொண்ட தலம் இது. இந்தத் திருக்கோயிலில் முதலில் எழுந்தருளி யிருக்கும் விநாயகருக்கு நாகாபரண விநாயகர் என்பதும் கோயிலுக்குள் எழுந்தருளி யிருக்கும் விநாயகருக்கு மாவடிப் பிள்ளையார் என்பதும் திருநாமங்கள். தேவதீர்த்தம் என்னும் ஒரு தீர்த்தம் திருக்கோயிலுக்குத் தெற்குத் திசையிலும், புண்டரீக தீர்த்தம் என்பது திருக் கோயிலுக்கு மேற்குத் திசையிலும் உள்ளன. தியாகராஜ மூர்த்திக்கு எதிரில் சுந்தர மூர்த்தி நாயனார் பரவை நாச்சியாரோடு எழுந்தருளி யிருக்கிறார். இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

'' அந்த மில்புகழ் ஆயிழை யார் பணிந்
தெந்தை ஈசனென் றேத்தும் இறைவனைக்

கந்த வார்பொழில் நாகைக்கா ரோணனைச்
சிந்தை செய்யக் கெடும்துயர் திண்ணமே. "

இந்தத் தலத்தைப் பற்றிக் குறிஞ்சிப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய்
நனையும் சடைமேலோர் நகுவெண் டலைசூடி
வினையில் அடியார்கள் விதியால் வழிபட்டுக்
கனையும் கடல்நாகைக் காரோணத் தானே. "

அந்த நாயனார் செவ்வழிப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" கூனல்திங்கட் குறுங்கண்ணி
கான்றநெடு வெண்ணிலா
ஏனற் பூத்தம் மராங்கோதை
யோடும் விரா வும்சடை
வானநாடன் அமரர் பெருமாற்கிட மாவது
கானல் வேலி கழிசூழ்
கடல்நாகைக் காரோணமே. "

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

" மனைவிதாய் தந்தை மக்கள்
மற்றுள சுற்றம் என்னும்
வினையுளே விழுந்த முந்தி
வேதனைக் கிடமா காதே
கனையுமா கடல்சூழ் நாகை
மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீ ராகில்
உய்யலாம் நெஞ்சி னீரே. "

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திரு விருத்தம் வருமாறு:

" வடிவுடை மாமலை மங்கைபங்
  காகங்கை வார்சடையாய்
கடிகமழ் சோலை சுலவு
  கடல்நாகைக் காரோணனே
பிடிமத வாரணம் பேணும்
  துரகம்நிற் கப்பெரிய
இடிகுரல் வெள்ளெரு தேறுமி
  தென்னைகொல் எம்மிறையே. "

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

" பாணத் தால்மதில் மூன்றும் எரித்தவன்
பூணத் தாரை வாமை பொறுத்தவன்
காணத் தானினி யான்கடல் நாகைக்கா
ரோணத் தானென நம்வினை ஓயுமே. "

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

" பாரார் பரவும் பழனத் தானைப்
  பருப்பதத் தானைப் பைஞ்ஞீலி யானைச்
சீரார் செழும்பவளக் குன்றொப் பானைத்
  திகழும் திருமுடிமேல் திங்கள் சூடிப்
பேரா யிரமுடைய பெம்மான் தன்னைப்
  பிறர்தன்னைக் காட்சிக் கரியான் தன்னைக்
காரார் கடல்புடைசூழ் அந்தண் நாகைக்
  காரோணத் தென்ஞான்றும் காண லாமே. "

இந்தத் தலத்தைப் பற்றிச் சொல்லிக் கௌவாணப் பண்ணில் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செய்து
  வினைக்கேடு பலபேசி வேண்டியவா திரிவீர்

தொண்டாடித் திரிவேனைத் தொழும்புதனைக்
கேற்றும்
சுந்தரனே கந்தமுதல் ஆடைஆ பரணம்
பண்டாரத் தேஎனக்குப் பணித்தருள வேண்டும்
பண்டுதான் பிரமாணம் ஒன்றுண்டே நும்மைக்
கண்டார்க்கும் காண்பரிதாய்க் கனலாகி நிமிர்ந்தீர்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. ''

இந்தத் திருப்பதிகத்தில் வரும் இறுதிப் பாசுரம் வருமாறு:

'' பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை உடையேன்
உண்மயத்த உமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்காந்தும் வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரென்
றண்மயத்தால் அணிநாவல் ஆரூரன் சொன்ன
அருந்தமிழ்கள் இவைவல்லார் அமருல காள்பவரே. ''.

பிறகு வரும் 292-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருவீழிமிழலைக்கு எழுந்தருளி வீழிநாதேசுவரரை வணங்கிவிட்டு, வேதங்களை அத்தியயனம் செய்து நிறைவேற்றிய தலைவராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அந்தத் திருவீழிமிழலையில் தங்கிக் கொண்டிருக்கச் சக்கராயுதத்தைத் தம்முடைய வலக்கரத்தில் ஏந்தியுள்ள திருமாலினால் விண்ணிலிருந்து இழிந்த மலர்ச்சியை அடைந்த விண்ணிழி விமானமாகிய திருக் கோயிலில் நிலை பெற்று எழுந்தருளி யிருக்கும் பரம் பொருளாகிய அந்த வீழிநாதேசுவரரை வாழ்த்துக்களை அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு அந்தச் சிவத்தலத்தில் அந்த நாயனார் தங்கிக்கொண்டிருக்கும் காலத்தில் வேறு சிவத்தலங்களுக்கும் எழுந்தருளி அந்தச்

சிவத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கும் விருப்பத்தில் அந்த நாயனார் தலை சிறந்து நிற்பவரானார்.' பாடல் வருமாறு:

" வீழி மிழலை தனைப்பணிந்து
வேத முதல்வர் தாம்இருப்ப
ஆழி வலம்ஏந் தியஅரியால்
ஆகா சத்தின் நின்றிழிந்த
வாழி மலர்ந்த கோயில்தனில்
மன்னும் பொருளைப் போற்றிசைத்துத்
தாமும் நாளிற் பிறபதியும்
பணியும் காதல் தலைநிற்பார். "

வீழிமிழலை தனை-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவீழிமிழலைக்கு எழுந்தருளி வீழிநாதேசுவரரை. தனை: இடைக்குறை; அசைநிலை. ப்:சந்தி. பணிந்து-வணங்கிவிட்டு. வேத-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாமவேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய; ஒருமை பன்மை மயக்கம். முதல்வர்தாம்-தலைவராகிய அந்தத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். தாம்: அசைநிலை. இருப்ப-அந்தத் திருவீழிமிழலையில் தங்கிக்கொண்டிருக்க. ஆழி-சக்கராயுதத்தை. வலம்-தம்முடைய வலக்கரத்தில். ஏந்திய-ஏந்தியுள்ள. அரியால்-திருமாலினால். ஆகாசத்தின் நின்று-விண்ணிலிருந்து. இழிந்த-இறங்கிய. வாழி: அசை நிலை. மலர்ந்த-மலர்ச்சியை அடைந்த. கோயில்தனில்-விண்ணிழி விமானமாகிய திருக்கோயிலில். தன்: அசைநிலை. மன்னும்-நிலைபெற்று எழுந்தருளியிருக்கும். பொருளை-பரம் பொருளாகிய அந்த வீழிநாதேசுவரரை. ப்:சந்தி. போற்று-வாழ்த்துக்களை; ஒருமை பன்மை மயக்கம்; முதல் நிலைத் தொழிற் பெயர். இசைத்து-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. த்:சந்தி. தாமும்-அந்தச் சிவத்

தலத்தில் தங்கிக் கொண்டிருக்கும். நாளில்-காலத்தில். பிற-பிறவாக உள்ள. பதியும்-சிவத்தலங்களுக்கு எழுந்தருளி; ஒருமை பன்மை மயக்கம். பணியும்-அந்தச் சிவத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கும். காதல்-விருப்பத்தில். தலை நிற்பார்-அந்த நாயனார் தலைசிறந்து நிற்பவரானார்.

திருவீழிமிழலையைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

"மறையிடைப் பொருளர் மொட்டின்
மலர்வழி வாசத் தேனர்
கறவிடைப் பாலின் நெய்யர்
கரும்பினிற் கட்டி யாளர்
பிறையிடைப் பாம்பு கொன்றைப்
பிணையல்சேர் சடையுள் நீரர்
விறகிடைத் தீயர் வீழி
மிழலையுள் விகிர்த னாரே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

"சுழிப்பட்ட கங்கையுந் திங்களுஞ்
சூடிச்சொக் கம்பயின்றீர்
பழிப்பட்ட பாம்பரைப் பற்றுடை
யீர்படர் தீப்பருக
விழிப்பட்ட காமனை விட்டீர்
மிழலையுள் வீர்பிறவிச்
சுழிப்பட்டு நும்மை மறக்கினும்
என்னைக் குறிக்கொண்மினே."

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

"ஞால மேவிசும் பேநலம் தீமையே
கால மேகருத் தேகருத் தால்தொழும்

சில மேதிரு வீழி மிழலையுள்
கோல மேஅடி யேனைக் குறிக்கொளே.''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

'' நற்றவத்தின் நல்லானைத் தீதாய் வந்த
நஞ்சமுது செய்தானை அமுதம் உண்ட
மற்றமரர் உவந்தாலும் உவவா தானை
வருகாலம் செல்காலம் வந்த காலம்
உற்றவத்தை உணர்ந்தாரும் உணர லாகா
ஒருசுடரை இருவிசும்பில் ஊர்மூன் றொன்றச்
செற்றவனைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே.''

அந்த நாயனார் பாடியருளிய வேறு ஒரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருத் தாண்டகம் வருமாறு:

'' புடைசூழ்ந்த பூதங்கள் வேதம் பாடப்
புலியூர்ச்சிற் றம்பலத்தே நடமாடுவார்
உடைசூழ்ந்த புலித்தோலர் கலிக்கச்சி மேற்
றளியுளார் குளிர்கோவைஏகம் பத்தார்
கடைசூழ்ந்து பலிதேரும் கங்கா ளனார்
கழுமலத்தார் செழுமலர்த்தார்க் குழலியோடும்
விடைசூழ்ந்த வெல்கொடியார் மங்கு செய்ய
வீழி மிழலையே மேவி னாரே.''

வேறு ஒரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

'' நெய்யினொடு பால்இளநீர் ஆடி னான்காண்
நித்தமண வாளனென நிற்கின் றான்காண்
கையின்மழு வாளொடுமான் ஏந்தி னான்காண்
காலனுயிர் காலாற் கழிவித் தான்காண்
செய்யதிரு மேனிவெண் ணீற்றி னான்காண்
செஞ்சடைமேல் வெண்மதியம் சேர்த்தி னான்காண்

செஞ்சடைக்கண் வெண்பிறைகொண் டணிந்தார்
போலும்
திருவீழி மிழலையமர் சிவனார் போலும்
அஞ்சடக்கும் அடியவர்கட் கணியார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள்தாமே.''

இந்தத் தலத்தைப் பற்றி நட்டபாடைப் பண்ணில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' ஈறாய்முதல் ஒன்றாய்இரு
பெண்ணாண்குணம் மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு
பூதம்மவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ
டெட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்இடம்
வீழிம்மிழ லையே.''

அந்த நாயனார் நட்டபாடைப் பண்ணில் பாடியருளிய ஒரு திருவிராகப் பாசுரம் வருமாறு:

'' அணிபெறு வடமர நிழலினில்
அமர்வொடும் அடியிணை இருவர்கள்
பணிதர அறநெறி மறையொடும்
அருளிய பரனுறை விடமொளி
மணிபொரு வருமர கதநில
மலிபுனல் அணைதரு வயலணி
திணிபொழில் தருமணம் மதுநுகர்
அறுபதம் முரல்திரு மிழலையே.''

அந்த நாயனார் தக்கராகப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' புனைதல் புரிபுன் சடைதன்மேல்
கனைதல் ஒருகங் கைகரந்தான்

வினையில் லவர்வீ ழிம்மிழலை
நினைவில் வலர்நெஞ் சமும்நெஞ்சே. ''

குறிஞ்சிப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

'' பயிலும் மறையாளன்
தலையிற் பலிகொண்டு
துயிலும் பொழுதாடும்
சோதி உறைகோயில்
மயிலும் மடமானும்
மதியும் இளவேயும்
வெயிலும் பொலிமாதர்
வீழி மிழலையே. ''

குறிஞ்சிப்பண் அமைந்த ஒரு திருவிருக்குக் குறள் வருமாறு:

'' இறைவர் ஆயினீர்-மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை-முறைமை நல்குமே. ''

வியாழக் குறிஞ்சிப் பண் அமைந்த ஒரு திருவிராகப் பாசுரம் வருமாறு;

'' புகழ்மகள் துணையினர் புரிகுழல் உமைதனை
இகழ்வுசெய் தவனுடை எழில்மறை வழிவளர்
முகமது சிதைதர முனிவுசெய் தவன்மிகு
நிகழ்தரு மிழலையை நினையவ லவரே. ''

மேகராகக் குறிஞ்சிப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

'' செந்தளிர்மா மலரோனும் திருமாலும்
ஏனமோ டன்ன மாகி
அந்தம்அடி காணாதே அவரேத்த
வெளிப்பட்டோன் அமரும் கோயில்
புந்தியினால் மறைவழியே புற்பரப்பி
நெய்சமிதை கையிற் கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிக அளிப்போர்
சேரும்ஊர் மிழலை ஆமே. ''

காந்தார பஞ்சமப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

'' நஞ்சினை உண்டிருள் கண்டர்பண்
டந்தசு ணைச் செற்ற
வெஞ்சின மூவிலைச் சூலத்தர்
வீழி மிழலையார்
அஞ்சனக் கண்ணுமை பங்கினர்
கங்கையங் காடிய
மஞ்சனச் செஞ்சடை யாரென
வல்வினை மாயுமே. ''

சாதாரிப் பண்ணில் உள்ள ஒரு திருவிராகப் பாசுரம் வருமாறு:

'' பட்டமுழ விட்டபணி வத்தினொடு
பன்மறைகள் ஓது பணிநல்
சிட்டர்கள் சயத்துதிகள் செய்யஅருள்
செய்தழல்கொள் மேனி யவனூர்
மட்டுலவு செங்கமல வேலிவயல்
செந்நெல்வளர் மன்னு பொழில்வாய்
விட்டுலவு தென்றல்வரை நாறு பதி
வேதியர்கள் வீழி நகரே. ''

அதே பண் அமைந்த ஒரு திருவிராகப் பாசுரம் வருமாறு:

'' பொன்னை புரிதரு சடையினர்
பொடியணி வடிவினர்
உன்னினர் வினையவை களைதலை
மருவிய ஒருவனார்
தென்னென இசைமுரல் சரிதையர்
திகழ்தரு மார்பினில்
மின்னென மிளிர்வதொர் அரவினர்
பதிவீழி மிழலையே. ''

சாதாரிப்பண் அமைந்த ஒரு திருமுக்காற் பாசுரம் வருமாறு:

" விரைமலி பொழிலணி மிழலையு ளீரொரு
வரைமிசை உறைவதும் வலதே
வரைமிசை உறைவதொர் வலதுடை யிருமை
உரைசெயும் அவைமறை ஒலியே. "

பழம்பஞ்சுரப்பண் அமைந்த ஈரடிப் பாசுரம் ஒன்று வருமாறு:

" வேலினேர்தரு கண்ணினா ளுமை
பங்கன் அங்கணன் மிழலை மாநகர்
ஆல் நீழலின் மேவினான் அடிக்
கன்பர் துன் பிலரே. "

அதே பண் அமைந்த ஒரு திருவியமகப் பாசுரம் வருமாறு:

" துன்று கொன்றைநஞ் சடையதே
தூய கண்டம்நஞ் சடையதே
கன்றின் மானிடக் கையதே
கல்லின் மானிடக் கையதே
என்றும் ஏறுவ திடவமே
என்னி டைப்பலி யிடவமே
நின்ற தும்மிழலை உள்ளுமே
நீரெனைச் சிறிதும் உள்ளுமே. "

புறநீர்மைப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

" பாதியோர் மாதர் மாலுமோர் பாகர்
பங்கயத் தயனுமோர் பாலர்
ஆதியாய் நடுவாய் அந்தமாய் நின்ற
அடிகளார் அமரர்கட் கமரர்
போது சேர் சென்னிப் புரூரவாப்
பணிசெய்பூசுரர் பூமகன் அனைய
வேதியர் வேதத் தொலி யறாவீழி
மிழலையான் எனவினை கெடுமே. "

சீகாமரப் பண்ணில் இந்தத் தலத்தைப் பற்றிச் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" விடம்கொள் மாமிடற் றீர்வெள்ளைச்
சுருள்ஒன் றிட்டு விட்ட காதினீர் என்று
திடம்கொள் சிந்தை யினார் கலிகாக்கும்
திருமிழலை
மடங்கல் பூண்ட விமான மண்மிசை
வந்தி ழிச்சிய வான நாட்டையும்
அடங்கல் வீழிகொண் டீர்அடி
யேற்கும் அருளுதிரே. "

பிறகு வரும் 293-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இந்தப்பூ மண்டலத்தில் புகழோடு விளங்கும் நீர் ஓடும் பொன்னைக் கொழிக்கும் காவிரியாற்றினுடைய கரையின் வழியாக எழுந்தருளி வணங்குவாராகி தோற்றப் பொலிவு அமைந்துள்ளதும், ஒரு பசுமாட்டுக்குத் தம்முடைய திரு வருளை வழங்கும் குளிர்ச்சியைப் பெற்ற திருவாவடுதுறை யில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் மாசிலா மணி ஈசுவரருடைய திருவடிகளை அந்தத் திருவாவடு துறையை அடைந்து அந்த மாசிலாமணி ஈசுவரரைத் தரையில் விழுந்து வணங்கிவிட்டுத் திருநாவுக்கரசு நாயனார் சிவஞானமாகிய விருந்தை உண்டருளியவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்குச் சிவந்த தங்கக் காசுகள் ஆயிரத்தையும் அந்த நாயனார் பாடியருளிய ஒரு பாசுரத் திற்காக வழங்கியருளிய வகையை வாழ்த்திவிட்டு அப்பால் எழுந்தருளி வேறு சிவத்தலங்களுக்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தச் சிவத்தலங்களில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமான்களை வணங்குகிறவரானார்.' பாடல் வருமாறு:

" **பூவிற் பொலியும் புனற்பொன்னிக்**
**கரைபோய்ப் பணிவார் பொற்பமைந்த**

ஆவுக்கருளும் ஆவடுதண் டுறையார்
பாதம் அணைந்தி றைஞ்சி
நாவுக் கரசர் ஞானபோ
னகர்க்குச் செம்பொன் ஆயிரமும்
பாவுக் களித்த திறம்போற்றிப்
போந்து பிறவும் பணிகின்றார். ''

பூவில்-இந்தப் பூ மண்டலத்தில். 'மலர்களால்' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். பொலியும்-புகழோடு விளங்கும். புனல்-நீர் ஓடும். பொன்னி-பொன்னைக் கொழிக்கும் காவிரியாற்றினுடைய; ''பொன்னி பொன் கொழிக்கும்'' என வருதலைக் காண்க. க்:சந்தி. கரை-கரையின் வழியாக. போய்-எழுந்தருளி. ப்:சந்தி. பணிவார்-வணங்குவாராகி; முற்றெச்சம். பொற்பு-தோற்றப் பொலிவு. அமைந்த-பொருந்தியுள்ளதும்; பெயரெச்ச வினையாலணையும் பெயர். ஆவுக்கு-ஒரு பசுமாட்டிற்கு. அருளும்-தம்முடைய திருவருளை வழங்கும். ஆவடுதண்டுறையார்-குளிர்ச்சியைப் பெற்ற திருவாவடுதுறையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மாசிலாமணி ஈசுவரருடைய. பாதம்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். அணைந்து-அந்தத் திருவாவடுதுறையை அடைந்து. இறைஞ்சி-அந்த மாசிலாமணி ஈசுவரரைத் தரையில் விழுந்து வணங்கி விட்டு. நாவுக்கரசர்-திருநாவுக்கரசு நாயனார். ஞான-சிவஞானமாகிய. போனகர்க்கு-விருந்தை உண்டருளியவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கு. ச்:சந்தி. செம்-சிவப்பாக விளங்கும். பொன்-தங்கக் காசுகள்; ஒருமை பன்மை மயக்கம். ஆயிரமும்-ஆயிரத்தையும். பாவுக்கு-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரத்திற்காக. அளித்த-வழங்கியருளிய. திறம்-வகையை. போற்றி-வாழ்த்திவிட்டு. ப்:சந்தி. போந்து-அப்பால் எழுந்தருளி. பிறவும்-வேறு சிவத் தலங்களுக்கும். பணிகின்றார்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி

அந்தச் சிவத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்குகிறவர் ஆனார்.

திருவாவடுதுறை: இது சோழ நாட்டில் காவிரிஆற்றுக்குத் தென் கரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் மாசிலாமணி ஈசுவரர். அம்பிகை ஒப்பிலா அம்மை; அதுல்யகுச நாயகி எனவும் வழங்கப்படுவர். தீர்த்தம் கோமுத்தி தீர்த்தம். தலவிருட்சம் படர் அரச மரம். இது நாரசிங்கன் பேட்டை என்னும் ஊரிலிருந்து கிழக்குத் திசையில் ஒன்றரை மைல் தூரத்தில் உள்ளது. திருமூல நாயனார் ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களால் "திருமந்திரம்" என்னும் நூலை இயற்றியருளிய தலம் இது. அந்த நூல் சைவத் திருமுறைகளுக்குள் பத்தாம் திருமுறையாக உள்ளது. இந்தத் திருக்கோயிலில் மேற்குப் பிராகாரத்தில் அந்தத் திருமூல நாயனாருடைய சந்நிதி உள்ளது. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தம்முடைய தந்தையாராகிய சிவபாத ஹிருதயர் யாகம் செய்யும் பொருட்டு,

"இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடு துறையானே."

என வரும் பாசுரத்தைப் பாடியருளி ஒரு பொற்கிழியைப் பெற்ற தலம் இது.

திருநாவுக்கரசு நாயனார் திருவாவடுதுறையைப் பற்றிப் பாடியருளிய ஒரு திரு நேரிசையில்,

"மாயிரு ஞாலம் எல்லாம்
மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப்
படர்சடை வைப்பர் போலும்

காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும்
ஆவடு துறைய னாரே.''

என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கு ஆயிரம் பொற்காசுகளை வழங்கியருளியதைச் சிறப்பித்திருக்கிறார்.

இந்தத் தலத்தைப் பற்றித் தக்கேசிப் பண்ணில் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

"ஒப்பிலா முலை யாள்ஒரு பாகா
உத்த மாமத்தம் ஆர்தரு சடையாய்
முப்பு ரங்களைத் தீவளைத் தங்கே
மூவருக் கருள் செய்யவல் லானே
செப்ப ஆல்நிழற் கீழிருந் தருளும்
செல்வ னேதிரு வாவடு துறையுள்
அப்ப னேஎனை அஞ்சலென் றருளாய்
ஆர்என க்குற வமரர்கள் ஏறே."

இந்தத் தலத்தைப் பற்றிக் காந்தார பஞ்சமப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய மற்றொரு நாலடி மேல் வைப்புப் பாசுரம் வருமாறு :

"வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உன்கழல் விடுவேன் அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடு துறையானே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய வேறொரு திருநேரிசை வருமாறு :

"விடைதரு கொடியர் போலும்
வெண்புரி நூலர் போலும்

படைதரு மழுவர் போலும்
　　பாய்புலித் தோலர் போலும்
உடைதரு கீளர் போலும்
　　உலகமும் ஆவர் போலும்
அடைபவர் இடர்கள் தீர்க்கும்
　　ஆவடு துறைய னாரே.''

அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருநேரிசை வருமாறு :

'' பெருமை நன்றுடைய தில்லை
　　என்றுநான் பேச மாட்டேன்
ஒருமையால் உன்னை உள்கி
　　உகந்துவான் ஏற மாட்டேன்
கருமையிட் டாய ஊனைக்
　　கட்டமே கழிக்கின் றேன்நான்
அருமையால் நஞ்சம் உண்ட
　　ஆவடு துறையு ளானே.''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு :

'' தவள மாமதிச் சாயலோர் சந்திரன்
பிளவு சூடிய பிஞ்ஞகன் எம்மிறை
அளவு கண்டிலன் ஆவடு தண்டுறைக்
கள்வு கண்டவர் ஒத்தனள் கன்னியே.''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு :

'' ஒருமணியை உலகுக்கோர் உறுதி தன்னை
　　உதயத்தின் உச்சியை உருமா னானைப்
பருமணியைப் பாலோடஞ் சாடி னானைப்
　　பவித்திரனைப் பசுபதியைப் பவளக் குன்றைத்
திருமணியைத் தித்திப்பைத் தேன தாகித்
　　தீங்கரும்பின் இன்சுவையைத் திகழும் சோதி

அருமணியை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே."

அந்த நாயனார் பாடியருளிய வேறொரு திருத்தாண்டகம் வருமாறு :

"நறுமா மலர்கொய்து நீரின் மூழ்கி
நாடோறும் நின்கழலே ஏத்தி வாழ்த்தித்
துறவாத துன்பம் துறந்தேன் தன்னைச்
சூழுலகில் ஊழ்வினைவந் துற்றால் என்னே
உறவாகி வானவர்கள் முற்றும் வேண்ட
ஒளிதிரைநீர்க் கடல்நஞ் சுண்டுய்யக் கொண்ட
அறவா அடியேனை அஞ்சேல் என்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே."

இந்தத் தலத்தைப் பற்றித் தக்கேசிப் பண்ணில் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

"தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கன இயற்றச்
சுருண்ட செஞ்சடை யாய்அது தன்னைச்
சோழன் ஆக்கிய தொடர்ச்சிகண் டடியேன்
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
போற்றி போற்றிஎன் றன்பொடு புலம்பி
அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவடு துறை ஆதிஎம் மானே."

பிறகு உள்ள 294-ஆம் கவியின் கருத்து வருமாறு :

'சிவந்த சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய சோமேசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பழையாறை வடதளியை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அடைய அந்தப் பழையாறை வடதளிக்கு அந்த நாயனார் எழுந்தருளிய காலத்தில் மயக்கத்தைப் பெற்ற சமணர்கள் மறைத்து வைத்திருந்த பழையாறை வடதளியில் நிலை பெற்று எழுந்தருளியிருக்கும் சிவபெருமானார்

ராகிய சோமேசுவரரைத் தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டு அந்த நாயனார் பிறகு தரையில் விழுந்து அந்தச் சோமேசுவரரை வணங்கியருள அதனைப் பார்த்த வழியி னால் அந்தச் சமணர்கள் தங்களுடைய பொய்யாகக் கொண்ட விமானம் என்று கூற அதனைக் கேட்டருளி அந்த நாயனார் சகிக்காத திருவுள்ளத்தில் மிகவும் புழுக்கத்தை அடைந்து.' பாடல் வருமாறு :

**"செய்ய சடையார் பழையாறை**
**எய்த அதனிற் செல்பொழுதில்**
**மையல் அமணர் மறைத்தவட**
**தளியில் மன்னும் சிவனாரைக்**
**கைகள் கூப்பித் தொழுதருளக்**
**கண்ட வாற்றால் அமணர்கள்தம்**
**பொய்கொள் விமானம் எனக்கேட்டுப்**
**பொறாத உள்ளம் மிகப்புழுங்கி."**

இந்தப் பாடல் குளகம். செய்ய-சிவந்த. சடையார்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்ற வராகிய சோமேசுவரர். பழையாறை-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பழையாறை வடதளியை. எய்த-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அடைய. அதனில்-அந்தப் பழையாறை வடதளிக்கு; உருபு மயக்கம். செல்-அந்த நாயனார் எழுந்தருளிய. பொழுதில்-காலத்தில். மையல்-மயக்கத்தை அடைந்த. அமணர்-சமணர் கள்; ஒருமை பன்மை மயக்கம். மறைத்த-மறைத்து வைத் தருந்த. வடதளியில்-பழையாறை வடதளியில். மன்னும்-நிலை பெற்று எழுந்தருளியிருக்கும், சிவனாரை-சிவபெருமா னாராகிய சோமேசுவரரை. க்:சந்தி. கைகள்-தம்முடைய திருக்கரங்களை, கூப்பி-தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டு, த்:சந்தி. தொழுதருள-

பிறகு தரையில் விழுந்து அந்தச் சோமேசுவரரை வணங்கி யருள். க்:சந்தி. கண்ட-அதனைப் பார்த்த. ஆற்றால்-வழியினால்; முறையினால். அமணர்கள்-அந்தச் சமணர்கள். தம்-தங்களுடைய. பொய்-பொய்யாக. கொள்-கொண்ட. விமானம் என-விமானம் என்று கூற; என: இடைக்குறை. க்:சந்தி. கேட்டு-அதனைக் கேட்டருளி. ப்:சந்தி. பொறாத-அந்த நாயனார் சகிக்காத. உள்ளம்-தம்முடைய திருவுள்ளத்தில். மிக-மிகவும். ப்:சந்தி. புழுங்கி-புழுக்கத்தை அடைந்து: வருத்தத்தை அடைந்து.

பழையாறை வடதளி: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் சோமேசுவரர். அம்பிகை சோமகலா நாயகி. தீர்த்தம் சோம தீர்த்தம். இது பழையாறை என்றும் வடதளி என்றும் இரண்டு தலங்களாக உள்ளது. பம்பைப் படை என்னும் ஊருக்குச் சென்று தெற்குத் திசையில் திரும்பித் திருமலைராயன் ஆற்றைக் கடந்து கால் மைல் தூரம் சென்றால் பழையாறையை அடையலாம். இந்த இரண்டு தலங்களையும் ஒரே திருப்பதிகத்தில் சேர்த்து நாயன்மார்கள் பாடியருளியிருக்கிறார்கள். வடதளியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய திருநாமம் தருமபுரீசர் என்பது. அம்பிகை விமல நாயகி. இந்தத் தலம் காமதேனுவின் புதல்வியாகிய விமலி என்பவளால் வழிபடப் பெற்றது. இந்தத் திருக்கோயில் ஒரு மேட்டின் மேல் அமைந்திருக்கிறது. இந்தத் தலத்தில் சிவபெருமான், அம்பிகை ஆகியவர்களைத் தவிர வேறு விக்கிரகம் ஒன்றும் இல்லை. இந்தத் திருக்கோயிலுக்கு அருகில் துறையூர்ச் சிவப் பிரகாச சுவாமிகளுடைய சமாதிக் கோயில் உள்ளது. பழையாறை சந்திரன் வழிபட்ட தலம். அமர்நீதி நாயனார் வாழ்ந்திருந்த தலம் இது. காமதேனுவினுடைய புதல்வியர்களுக்குள் பட்டி என்பவள் பூசித்தது பட்டீச்சுரம். விமலி என்பவள் வழிபட்டது பழையாறை வடதளி. சபளி என்பவள் வழிபட்டது திருமேற்றளி. இங்கே

கோயில் கொண்டிருப்பவர் கைலாச நாதர். அம்பிகை சபள நாயகி. நந்தினி என்பவள் வழிபட்ட தலம் முழையூர் என்பது. இங்கே கோயில் கொண்டிருப்பவர் பரசுநாதேசுவரர். அம்பிகை ஞானாம்பிகை.

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந் தொகை வருமாறு :

"மூக்கி னால்முரன் றோதியக் குண்டிகை
தூக்கி னார்குலம் தூரறுத் தேதனக்
காக்கி னானணி யாறை வடதளி
நோக்கி னார்க்கில்லை யல்அரு நோய்களே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய மற்றொரு திருக்குறுந் தொகை வருமாறு :

"ஓதி னத்தெழுத் தஞ்சுண ராச்சமண்
வேதி னைப்படுத் தானைவெங் கூற்றுதை
பாத னைப்பழை யாறை வடதளி
நாத னைத்தொழ நம்வினை நாசமே."

பிறகு உள்ள 295-ஆம் கவியின் கருத்து வருமாறு :

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்த விமானத்துக்குச் சமீபமாக அங்கே ஓர் இடத்தினுடைய பக்கத்தை அடைந்தருளி நறுமணம் கமழும் வாசனையைப் பெற்ற கொன்றை மாலையை அணிந்திருக்கும் திருமுடியைப் பெற்றவராகிய சோமேசுவரருடைய வெற்றிக் கழலைப் பூண்டு விளங்குபவையும் செந்தாமரை மலர்களைப் போலச் சிவப்பாக உள்ளவையும் ஆகிய அந்தச் சோமேசுவரருடைய திருவடிகளைத் தியானித்து, "மந்த புத்தியைப் பெற்றவர்களாகிய சமணர்கள் வஞ்சகமான செயலால் சிவலிங்கத்தை மறைத்து வைத்திருந்த வஞ்சனையைப் போக்கியருளிப் பாசபந்தத்தைப் பெற்ற சமணர்களாகிய இழிந்த குணங்களையும் இழிவான செயல்களையும் பெற்றவர்களுடைய வஞ்சக இயல்பைப் போக்கியருளுவீராக." என வேண்டிக் கொண்டு

திருநாவுக்கரசு நாயனார் அந்தச் சோமேசுவரரை வணங்கிக் கொண்டு பழையாறை வடதளியில் தங்கிக் கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு :

'' அந்த விமானம் தனக்கருகா
ஆங்கோர் இடத்தின் பாங்கெய்திக்
கந்தம் மலரும் கடிக்கொன்றை
முடியார் செய்ய கழல்உன்னி
' மந்த அமணர் வஞ்சனையால்
மறைத்த வஞ்சம் ஒழித்தருளிப்
பந்தம் கொண்ட குண்டர்திறம்
பாற்றும்' என்று பணிந்திருந்தார்.''

அந்த-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்த. விமானம் தனக்கு-விமானத்துக்கு. தன் :அசை நிலை. அருகா-சமீபமாக. ஆங்கு-அங்கே. ஓர் இடத்தின்-ஓர் இடத்தினுடைய. பாங்கு-பக்கத்தை. எய்தி-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அடைந்தருளி. க்:சந்தி. கந்தம்-நறுமணம். மலரும்-உள்ள மலர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். கடி-வாசனை வீசும். க்:சந்தி. கொன்றை-கொன்றை மலர் மாலையை; ஆகு பெயர். முடியார்-அணிந்த திருமுடியைப் பெற்றவராகிய சோமேசுவரருடைய. செய்ய கழல்-வெற்றிக் கழலைப் பூண்டு விளங்குபவையும் செந்தாமரை மலர்களைப் போலச் சிவப்பாக உள்ளவையும் ஆகிய அந்தச் சோமேசுவரருடைய திருவடிகளை; ஆகு பெயர். உன்னி-தியானித்துக் கொண்டு மந்த-மந்தப் புத்தியைப் பெற்றவர்களாகிய; ஆகு பெயர். அமணர்-சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வஞ்சனையால்-தாங்கள் புரிந்த வஞ்சகமான செயலால் மறைத்த-சிவலிங்கத்தை மறைத்து வைத்திருந்த. வஞ்சம்-வஞ்சனையைக் கொண்ட செயலை. ஒழித்தருளி-போக்கியருளி. ப்:சந்தி. பந்தம்-பாச பந்தத்தை. கொண்ட-பெற்ற. குண்டர்-சமணர்களாகிய இழிந்த குணங்களையும் இழிவான செயல்களையும் பெற்றவர்களுடைய; ஒருமை பன்மை

மயக்கம். திறம்-வஞ்சகமான இயல்பை. மாற்றும்-போக்கி யருளுவீராக. என்று-என வேண்டிக் கொண்டு. பணிந்து-அந்தச் சோமேசுவரரை வணங்கிக் கொண்டு. இருந்தார்-பழையாறை வடதளியில் அந்த நாயனார் தங்கிக் கொண்டிருந்தார்.

அடுத்து வரும் 296-ஆம் கவியின் கருத்து வருமாறு :

' "தேவரீருடைய திருமேனியைத் தரிசித்து அடியேன் தேவரீரைப் பணிந்தாலல்லாமல் வேறு இடத்திற்குச் செல்ல மாட்டேன்" எனத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு தம்முடைய எண்ணத்தை நிறைவேற்றும் வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்யாமலே பழையாறை வடதளியில் தங்கிக் கொண்டிருந்தார்; அவருடைய தலைவராகிய சோமேசுவரரும் அந்த நாயனார் திருவமுது செய்யாமல் பட்டினியாகக் கிடப்பதைத் தெரிந்து கொண்டருளி அந்தப் பழையாறை வடதளியில் திருநாவுக்கரசு நாயனாரை வணங்குவதற்காக உறுதியாகப் பல்லவ அரசனுக்கு அந்தச் சோமேசுவரர் சொப்பனத்தில் எழுந்தருளி திருவாய் மலர்ந்தருளிச் செய்கிறவரானார்.' பாடல் வருமாறு :

" ' வண்ணம் கண்டு நான்உம்மை
வணங்கி யன்றிப் போகேன்'என்
றெண்ணம் முடிக்கும் வாகீசர்
இருந்தார் அமுது செய்யாதே;
அண்ண லாரும் அதுஉணர்ந்தங்
கரசு தம்மைப் பணிவதற்குத்
திண்ண மாக மன்னனுக்குக்
கனவில் அருளிச் செய்கின்றார்."

வண்ணம்-தேவரீருடைய திருமேனி அழகை. கண்டு-தரிசித்து. நான்-அடியேன். உம்மை-தேவரீரை. வணங்கிஅன்றி-பணிந்தால் அல்லாமல். ப்:சந்தி. போகேன்-இந்தப் பழையாறை வடதளியை விட்டு விட்டு வேறு இடங்களுக்குச்

செல்ல மாட்டேன். என்று-எனத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. எண்ணம்-தாம் எண்ணிய எண்ணத்தை, முடிக்கும்-நிறைவேற்றும். வாகீசர் வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார். அமுது செய்யாது-திருவமுது செய்யாமலே பட்டினியாக. ஏ:அசை நிலை. இருந்தார்-பழையாறை வடதளியில் தங்கிக் கொண்டிருந்தார். அண்ணலாரும்-அவருடைய தலைவராகிய சோமேசுவரரும். அண்ணலார்-'பெருமையைப் பெற்றவர்' எனலும் ஆம். அது-அந்த நாயனார் திருவமுது செய்யாமல் பட்டினியாகக் கிடப்பதை. உணர்ந்து-தெரிந்து கொண்டருளி. அங்கு-அந்தப் பழையாறை வடதளியில். அரசு தம்மை-திருநாவுக்கரசு நாயனாரை; திணை மயக்கம். தம்:அசை நிலை. ப்:சந்தி. பணிவதற்கு-வணங்குவதற்காக. த்:சந்தி. திண்ணமாக-உறுதியாக. மன்னனுக்கு-பல்லவ அரசனுக்கு. க்:சந்தி. கனவில்-அந்த அரசன் துயிலும் போது அவனுடைய சொப்பனத்தில். அருளி-எழுந்தருளி.ச்:சந்தி. செய்கின்றார்-பின் வருமாறு அந்தச் சோமேசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்கிறவரானார்.

பிறகு வரும் 297-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'சிறிதளவும் நல்ல புத்தி இல்லாத சமணர்கள் எம்மை மறைத்து வைக்க நாம் எழுந்தருளியிருந்தோம்' என அந்தப் பழையாறை வடதளியில் அடையாளங்களாகிய சின்னங்களைத் தெரிந்துகொள்ளுமாறு அந்தப் பல்லவ மன்னனுக்குப் புரிந்தருளி, ''எம்மைத் திருநாவுக்கரசு நாயனார் கும்பிடும் பொருட்டு நல்ல வழியில் செல்லுவது இல்லாத சமணர் களைப் பூண்டோடு அழித்து நீக்கி விட்டுப் போகச் செய்வாயாக'' என்று சோமேசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய உதயமாகும் நேரத்தில் உணர்ச்சியைப் பெற்று துயிலிலிருந்து எழுந்திருந்த அந்தப் பல்லவ மன்னனும் தன்னுடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த கைகளைத் தன்னுடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டுப்

பிறகு தரையில் விழுந்து அந்தச் சோமேசுவரரை வணங்கி.' பாடல் வருமாறு :

"'அறிவில் அமணர் நமைமறைப்ப
இருந்தோம்' என்றங் கடையாளக்
குறிகள் அறியச் செய்தருளி
'நம்மை அரசு கும்பிடுவான்
நெறியில் அமணர் தமையழித்து
நீக்கிப் போக்' கென் றருள்புரியச்
செறிவில் அறிவுற் றெழுந்தவனும்
செங்கை தலைமேற் குவித்திறைஞ்சி."

இந்தப் பாடல் குளகம். அறிவு-சிறிதளவும் நல்ல புத்தி. இல்-இல்லாத; கடைக்குறை. அமணர்-சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். நமை-எம்மை; இடைக்குறை. மறைப்ப-மறைத்து வைக்க. இருந்தோம்-யாம் எழுந்தருளியிருந் தோம். என்று-என. அங்கு-அந்தப் பழையாறை வடதளியில். அடையாள-அடையாளங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. குறிகள்-சின்னங்களை. அறிய-தெரிந்து கொள்ளு மாறு. ச்:சந்தி. செய்தருளி-அந்தப் பல்லவ மன்னனுக்குப் புரிந்தருளி. நம்மை-எம்மை. அரசு-திருநாவுக்கரசர்; திணை மயக்கம். கும்பிடுவான்-கும்பிட்டு வணங்கும் பொருட்டு. நெறி-நல்ல வழியில் நடத்தல். இல்-இல்லாத; கடைக்குறை. அமணர் தமை-சமணர்களை. தமை:இடைக்குறை. தம்: அசை நிலை. அழித்து-பூண்டோடு அழித்து. நீக்கி-அகற்றி விட்டு. ப்:சந்தி. போக்கு-போகச் செய்வாயாக. என்று-என. அருள் புரிய-சோமேசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. ச்:சந்தி. செறிவில்-உதயமாகும் நேரத்தில். அறிவுற்று-உணர்ச்சியைப் பெற்று. எழுந்தவனும்-துயிலிலிருந்து எழுந் திருந்த அந்தப் பல்லவ மன்னனும். செங்கை-தன்னுடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த கைகளை. கை

ஒருமை பன்மை மயக்கம். தலை மேல் - தன்னுடைய தலையின் மேல் வைத்து. குவித்து - கூப்பிக் கும்பிட்டு விட்டு. இறைஞ்சி— பிறகு தரையில் விழுந்து அந்தச் சோமேசுவரரை வணங்கி.

பிறகு உள்ள 298-ஆம் கவியின் கருத்து வருமாறு :

' அந்தப் பல்லவ மன்னன் தான் துயிலும் போது பார்த்த சொப்பனத்தில் சோமேசுவரர் எழுந்தருளிய அதிசயத்தைத் தன்னுடைய அமைச்சர்களுக்குக் கூறி அவர்களுடன் சேர்ந்து வேகமாகப் பழையாறை வடதளியை அடைந்து எல்லாத் தேவர்களுக்கும் தலைவனாகிய சோமேசுவரன் திருவாய் மலர்ந்தருளிச் செய்த அடையாளங்களை உடைய வழியைப் பார்த்துத் தெரிந்து கொண்டு சமணர்களாகிய இழிந்த செயல்களையும் இழிவான குணங்களையும் பெற்றவர்கள் புரிந்த வஞ்சகச் செயலை எண்ணி அந்தப் பல்லவ மன்னன் குலாவிய பெருமையைப் பெற்ற திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனாரை அவருடைய திருவடிகளில் விழுந்து பணிந்து விட்டுக் கூட்டமாகக் கூடியிருந்த சமணர் களாகிய மரங்களினுடைய வேர்களை அறுத்து விட்டான்." பாடல் வருமாறு :

" கண்ட வியப்பு மந்திரிகட்
கியம்பிக் கூடக் கடிதெய்தி
அண்டர் பெருமான் அருள்செய்த
அடையா ளத்தின் வழிகண்டு
குண்டர் செய்த வஞ்சனையைக்
குறித்து வேந்தன் குலவுபெருந்
தொண்டர் தம்மை அடிவணங்கித்
தொக்க அமணர் தூர்அறுத்தான்."

கண்ட—அந்தப் பல்லவ மன்னன் தான் துயிலும் போது பார்த்த சொப்பனத்தில் சோமேசுவரர் எழுந்தருளிய. வியப்பு-அதிசயத்தை. மந்திரிகட்கு-தன்னுடைய அமைச்சர் களுக்கு. இயம்பி-கூறி. க்:சந்தி. கூட-அந்த மந்திரிகளுடன்

சேர்ந்து. க்:சந்தி. கடிது-வேகமாக. எய்தி-பழையாறை வடதளியை அடைந்து. அண்டர்-எல்லாத் தேவர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். பெருமான்-தலைவனாகிய சோமேசுவரன். அருள் செய்த-திருவாய் மலர்ந்தருளிச் செய்த. அடையாளத்தின்-அடையாளங்களை உடைய; ஒருமை பன்மை மயக்கம், வழி-வழியை. கண்டு-பார்த்துத் தெரிந்து கொண்டு. குண்டர்-சமணர்களாகிய இழிந்த செயல்களையும் இழிவான குணங்களையும் பெற்றவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். செய்த-புரிந்த. வஞ்சனையை-சிவலிங்கப் பெருமானை மறைத்து வைத்ததாகிய வஞ்சகச் செயலை. க்:சந்தி. குறித்து-எண்ணி. வேந்தன்-அந்தப் பல்லவ மன்னன். குலவு-தன்னோடு குலாவியிருந்த. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். தொண்டர் தம்மை-திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனாரை. தம்:அசைநிலை. அடி-அவருடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். வணங்கி-விழுந்து பணிந்து விட்டு. த்:சந்தி. தொக்க-கூட்டமாகக் கூடிக்கொண்டிருந்த. அமணர்-சமணர்களாகிய மரங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். தூர்-வேர்களை; ஒருமை பன்மை மயக்கம். சமணர்கள் சிறிதேனும் உணர்ச்சி அற்றவர்களாதலின் அவர்களை மரங்கள் என்றார். அறுத்தான்-அந்தப் பல்லவ மன்னன் அறுத்து விட்டான்.

பிறகு வரும் 299-ஆம் கவியின் கருத்து வருமாறு :

'சிங்கத்தினால் மிதிக்கப்பட்ட யானைக் கூட்டங்களைப் போல பூண்டு இல்லாமல் கருவறுக்கப்பட்டு மிதியுண்ட சமணர்கள் ஆயிரம் பேர்களும் இறந்து போனதற்குப் பிறகு அந்த மேம்பாட்டைப் பெற்ற பல்லவ மன்னன் பரமேசுவரராகிய சோமேசுவரருக்குக் கோபுரத்தைக் கட்டுவித்து விளக்கத்தை அடையச் செய்ததற்குப் பிறகு அவருக்கு உண்டான வழிபாட்டுக்கும் அருச்சனைக்கும் அறக் கட்டளைகள் எல்லாவற்றையும் உண்டாக்கிவிட்டு அந்தச் சோமேசுவரரைத்

தரையில் விழுந்து வணங்க சிவஞானத்தைப் பெற்ற திருநாவுக்கரசு நாயனாரும் திருக்கோயிலுக்குள் நுழைந்து அந்தச் சோமேசுவரரைத் தரையில் விழுந்து வணங்கிவிட்டுத் தம்முடைய தலைவராகிய அந்த ஈசுவரருடைய சந்நிதியில் வாழ்த்தி வணங்குவாரானார்.' பாடல் வருமாறு :

**"ஆனை இனத்தில் துகைப்புண்ட**
**அமணா யிரமும் மாய்ந்ததற்பின்**
**மேன்மை அரசன் ஈசர்க்கு**
**விமானம் ஆக்கி விளக்கியபின்**
**ஆன வழிபாட் டர்ச்சனைக்கு**
**நிபந்தம் எல்லாம் அமைத்திறைஞ்ச**
**ஞான அரசும் புக்கிறைஞ்சி**
**நாதர் முன்பு போற்றுவார்."**

ஆனை இனத்தில்-சிங்கத்தினால் மிதிக்கப்பட்ட யானைகளினுடைய கூட்டங்களைப் போல; ஒருமை பன்மை மயக்கம். துகைப்புண்ட-பூண்டு இல்லாமல் கருவறுக்கப்பட்டு மிதியுண்ட. அமண-சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். திணை மயக்கம். ஆயிரமும்-ஆயிரம் பேர்களும். மாய்ந்ததற்பின்-இறந்து போனதற்குப் பிறகு. மேன்மை-அந்த மேம்பாட்டைப் பெற்ற. அரசன்-பல்லவ மன்னன். ஈசர்க்கு-பரமேசுவரராகிய சோமேசுவரருக்கு. விமானம்-திருக்கோயிலையும் கோபுரத்தையும். ஆக்கி-கட்டுவித்து. விளக்கியபின்- விளக்கத்தை அடையுமாறு செய்ததற்குப் பிறகு. ஆன-அந்த ஈசருக்கு உண்டான. வழிபாட்டு-வழிபாட்டுக்கும். அர்ச்சனைக்கு-அருச்சனைக்கும். நிபந்தம்-அறக் கட்டளைகள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாவற்றையும். அமைத்து-உண்டாக்கி விட்டு. இறைஞ்ச-அந்தச் சோமேசுவரரைத் தரையில் விழுந்து வணங்க. ஞான-சிவஞானத்தைப் பெற்ற. அரசும்-திருநாவுக்கரசு நாயனாரும்; திணை மயக்கம். புக்கு-சோமேசுவரருடைய திருக்கோயிலுக்குள் நுழைந்து. இறைஞ்சி-அந்த ஈசுவரரைத் தரையில் விழுந்து

வணங்கி விட்டு. நாதர்-தம்முடைய தலைவராகிய அந்த ஈசுவரருடைய. முன்பு-சந்நிதியில் நின்று கொண்டு. போற்றுவார்-வாழ்த்தி வணங்குவாரானார்.

அடுத்து வரும் 300-ஆம் கவியின் கருத்து வருமாறு:

' " தங்களுடைய தலைகளில் உள்ள மயிர்களைத் தாங்களே பிடுங்கிக் கொண்டு விட்டு நின்று கொண்டே உணவுகளை உண்ணும் இழிந்த சாதியிற் பிறந்த சமணர்கள் மறைத்து வைத்திருந்தாலும் அந்த ஒரு நிலையும் இல்லாதவர்களாகிய சமணர்கள் தம்முடைய வஞ்சகமான நிலைமையினால் சிவலிங்கப் பெருமானை மறைத்து வைக்க முடியுமோ? " என்னும் கருத்தை வைத்துப் பாடியருளும் விலை இல்லாத உண்மைகளைக் கூறும் பல திருக்குறுந்தொகைகளை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி விட்டு திருவீழிமிழலைக்கு வெளியில் எழுந்தருளி அந்தத் திருவீழிமிழலையில் தங்கியிருந்து கொண்டே மூன்று இலைகளைப் பெற்ற சூலமாகிய ஆயுதத்தை ஏந்தியவராகிய சிவபெருமானார் சேர்ந்து எழுந்தருளிய சிவத்தலங்கள் பிறவற்றிற்கும் எழுந்தருளி அந்தச் சிவத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை அந்த நாயனார் வணங்குவதற்காக அடைவாரானார்.' பாடல் வருமாறு:

" 'தலையின் மயிரைப் பறித்துண்ணும்
சாதி அமணர் மறைத்தாலும்
நிலையி லாதார் நிலைமையினால்
மறைக்க ஒண்ணு மோ?' என்னும்
விலையில் வாய்மைக் குறுந்தொகைகள்
விளம்பிப் புறம்போந் தங்கமர்ந்தே
இலைகொள் சூலப் படையார்சேர்
இடங்கள் பிறவும் தொழஅணைவார்."

தலையில் - தங்களுடைய தலைகளில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். மயிரை - மயிர்களை; ஒருமை பன்மை மயக்கம். ப்: சந்தி. பறித்து-தாங்களே பிடுங்கிக் கொண்டு விட்டு. இதை 'உலோச்சு' என்பர். உண்ணும்-நின்று கொண்டே உணவுகளை உண்ணும். சாதி-இழிந்த சாதியாகிய சமணர் சாதியிற் பிறந்த. அமண்ர்—சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மறைத்தாலும்-சிவலிங்கப் பெருமானை மறைத்து வைத்திருந்தாலும். நிலை- தமக்கென்று ஒரு நிலையான வாழ்க்கை நிலையை. இலாதார்-பெறுதல் இல்லாதவர்களாகிய அந்தச் சமணர்கள்; இடைக்குறை; ஒருமை பன்மை மயக்கம். நிலைமையினால்-தங்களுடைய வஞ்சகமான நிலையால். மறைக்க-அந்தச் சிவலிங்கத்தை மறைத்து வைக்க. ஒண்ணுமோ-முடியுமோ. என்னும்-என்னும் கருத்தை வைத்துத் தாம் பாடியருளும். விலை இல்-விலை கொடுத்து வாங்குதல் இல்லாத. இல்: கடைக்குறை. வாய்மை-உண்மைகளைக் கூறும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. குறுந்தொகைகள்-பல திருக்குறுந்தொகைகளை. விளம்பி-அந்தநாயனார் பாடியருளி. ப்: சந்தி. புறம்-திருவீழிமிழலைக்கு வெளியில். போந்து-எழுந்தருளி. அங்கு-அந்தத் திருவீழிமிழலையில். அமர்ந்தே-தங்கிக்கொண்டிருந்தபடியே. இலைகொள்-மூன்று இலைகளைக்கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். சூலப்படையார்-சூலமாகிய ஆயுதத்தை ஏந்தியவராகிய சிவபெருமானார். சேர்-சேர்ந்து எழுந்தருளிய. இடங்கள்-சிவத் தலங்கள். பிறவும்-பிறவற்றிற்கும் எழுந்தருள. தொழ-அந்தச் சிவத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை அந்த நாயனார் வணங்குவதற்காக. அணைவார்-அடைவாரானார்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட திருக்குறுந் தொகைகள் பழையாறை வடதளியைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியவை. அவை வருமாறு:

"தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையர்உள்
நிலையி னால்மறைத் தால்மறைக் கொண்ணுமே
அலையி னார்பொழில் ஆறை வடதளி
நிலையி னான்அடி யேநினைந் துய்ம்மினே." (1)

"மூக்கி னால்முரன் றோதியக் குண்டிகை
தூக்கி னார்குலம் தூரறுத் தேதனக்
காக்கி னான்அணி ஆறை வடதளி
நோக்கி னார்க்கில்லை யால்அரு நோய்களே." (2)

"குண்ட ரைக்குணம் இல்லரைக் கூறையில்
மிண்ட ரைத்துரந் தவிம லன்றனை
அண்ட ரைப்பழை யாறை வடதளிக்
கண்ட ரைத்தொழு துய்ந்தன கைகளே." (3)

"முடைய ரைத்தலை முண்டிக்கும் மொட்டரைக்
கடைய ரைக்கடிந் தார்கனல் வெண்மழுப்
படைய ரைப்பழை யாறை வடதளி
உடைய ரைக்குளிர்ந் துள்குமென் உள்ளமே." (4)

"ஒள்ள நிக்கணார் முன்னமண் நின்றுணும்
கள்ள ரைக்கடிந் தகருப் பூறலை
அள்ள லம்புனல் ஆறை வடதளி
வள்ள லைப்புக ழத்துயர் வாடுமே." (5)

"நீதி யைக்கெட நின்றம ணேஉணும்
சாதி யைக்கெடு மாசெய்த சங்கரன்
ஆதி யைப்பழை யாறை வடதளிச்
சோதி யைத்தொழு வார்துயர் தீருமே." (6)

"திரட்டி ரைக்கவ ளந்தணிக் கும்சமண்
பிரட்ட ரைப்பிரித் தபெரு மான்றனை
அருட்டி றத்தணி யாறை வடதளித்
தெருட்ட ரைத்தொழத் தீவினை தீருமே." (7)

"ஓதி னத்தெழுத் தஞ்சுண ராச்சமண்
வேதி னைப்படுத் தானைவெம் கூற்றுதை

பாத னைப்பழை யாறை வடதளி
நாத னைத்தொழ நம்வினை நாசமே.'' ( )

'' வாயி ருந்தமி ழேபடித் தாளுறா
ஆயி ரஞ்சம ணும்மழி வாக்கினான்
பாயி ரும்புனல் ஆறை வடதளி
மேய வன்னென வல்வினை வீடுமே.'' (9)

'' செருத்த னைச்செயும் சேணரக் கன்னுடல்
எருத்தி றவிர லால் இறை ஊன்றிய
அருத்த னைப்பழை யாறை வடதளித்
திருத்த னைத்தொழு வார்வினை தேயுமே.'' (10)

பிறகு வரும் 301-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'பொங்கிக் கொண்டு ஓடி வரும் நீர் நிரம்பிய பொன்னைக் கொழிக்கும் காவிரியாற்றினுடைய இரண்டு கரைகளிலும் போர் புரியும் இடபவாகனத்தை ஓட்டுபவராகிய சிவபெருமானார் தங்கி எழுந்தருளியிருக்கும் பல சிவத்தலங்களுக்குள் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நுழைந்து அந்தச் சிவத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கிவிட்டுச் செந்தமிழ் மொழியில் அமைந்த மாலைகளாகிய பல திருப்பதிகங்களையும் அந்தச் சிவபெருமான்களுக்கு அணிந்துவிட்டு மேலே அந்த நாயனார் எழுந்தருளி, எந்த ஊர்களிலும் நிரப்பியுள்ள புகழைப் பெற்றவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் முடிவு இல்லாத திருத்தொண்டர்கள் தம்மை எதிர்கொண்டு வரவேற்கச் சிவந்த கண்களைப் பெற்ற இடபவாகனத்தை ஓட்டுபவராகிய ஜம்புகேசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவானைக்காவிற்குப்பக்கத்திற்கு எழுந்தருளி அடைந்தார்.' பாடல் வருமாறு:

'' பொங்கு புனலார் பொன்னியினில்
இரண்டு கரையும் பொருவிடையார்

தங்கும் இடங்கள் புக்கிறைஞ்சித்
தமிழ்மா லைகளும் சாத்திப்போய்
எங்கும் நிறைந்த புகழாளர்
ஈறில் தொண்டர் எதிர்கொள்ளச்
செங்கண் விடையார் திருவானைக்
காவின் மருங்கு சென்றணைந்தார்.''

பொங்கு-பொங்கிக் கொண்டு ஓடி வரும். புனல்-நீர். ஆர்-நிரம்பிய. பொன்னியினில்-பொன்னைக் கொழிக்கும் காவிரியாற்றினுடைய; உருபு மயக்கம். "பொன்னி பொன் கொழிக்கும்" என வருதலைக் காண்க. இரண்டு கரையும்-இரண்டு கரைகளிலும். கரை: ஒருமை பன்மை மயக்கம். பொரு-போர் புரியும். விடையார்-இடப வாகனத்தை ஓட்டுபவராகிய சிவபெருமானார். தங்கும்-தங்கி எழுந்தருளியிருக்கும். இடங்கள்-பல சிவத்தலங்களுக்கும். புக்கு-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நுழைந்து. இறைஞ்சி-அந்தச் சிவத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கிவிட்டு. த்: சந்தி. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலைகளும்-மாலைகளாகிய பல திருப்பதிகங்களையும். சாத்தி-அந்தச் சிவபெருமான்களுக்கு அணிந்துவிட்டு. ப: சந்தி. போய்-அந்த நாயனார் மேலே எழுந்தருளி. எங்கும்-எந்த ஊர்களிலும். நிறைந்த-நிரம்பியுள்ள. புகழாளர்-புகழைப் பெற்றவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். ஈறு-கணக்கிட்டால் ஒரு முடிவு. இல்-இல்லாத; கடைக்குறை. தொண்டர்-திருவானைக்காவில் வாழும் திருத்தொண்டர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எதிர்கொள்ள-தம்மை எதிர்கொண்டு வரவேற்க. ச்: சந்தி. செம்-சிவப்பாக இருக்கும். கண்-கண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். விடையார்-இடபவாகனத்தை ஓட்டுபவராகிய ஜம்புகேசுவரர். திருவானைக்காவின்-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திரு-

வானைக்காவிற்கு. மருங்கு-பக்கத்திற்கு. சென்று-எழுந்தருளி. அணைந்தார்-அடைந்தார்.

திருவானைக்கா: இது சோழ நாட்டில் காவிரியாற்றிற்கு வடகரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் ஜம்புகேசுவரர்; ஜம்புநாதர் என்பவை. அம்பிகை அகிலாண்ட நாயகி. தலவிருட்சம் வெள்ளை நாவல் மரம். இது ஜம்புகேசுவரம் எனவும் வழங்கும். இது திருச்சிராப்பள்ளிக்கு வடக்குத் திசையில் இரண்டரை மைல் தூரத்தில் உள்ளது. இடையில் காவிரியாற்றைத் தாண்டிச் செல்ல வேண்டும். இது இந்திரனுடைய வாகனமாகிய வெள்ளை யானை வழிபட்ட தலமாதலால் இதற்கு 'ஆனைக்கா' (யானை வனம்) என்றும், ஜம்பு நாவல் (வெள்ளை நாவல்) மரத்தின் அடியில் ஜம்புகேசுவரர் எழுந்தருளியிருப்பதனால், 'ஜம்புகேசுவரம்' என்றும் பெயர்கள் வந்தன. ''விறல் மிக்க கரிக்கருள் செய்தவனே'' என்று தேவாரத்தில் வருவதைக் காண்க. இந்தத் தலத்தைப் பற்றித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இந்தளப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' மழையார் மிடறா மழுவாள் உடையாய்
உழையார் கரவா உமையாள் கணவா
விழவா ரும்வெணா வலின்மே வியஎம்
அழகா எனும்ஆ யிழையாள் அவளே.''

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

'' கோனைக் காவிக் குளிர்ந்தமனத்த ராய்த்
தேனைக் காவிஉண் ணார்சில தெண்ணர்கள்
ஆனைக் காவில்அம் மானை அணைகிலார்
ஊனைக் காவி உழிதர்வர் ஊமரே.''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

" நினைத்தவர்கள் நெஞ்சுளாய் வஞ்சக் கள்வா
நிறைமதியம் சடைவைத்தாய் அடையார் தம்பால்
முனித்தவர்கள் புரமூன்றும் எரியச் செற்றாய்
முன்னானைத் தோல்போர்த்த முதல்வா என்றும்
கனைத்துவரும் எருதேறும் காள கண்டா
கயிலாய மலையாநின் கழலே சேர்ந்தேன்
அனைத்துலகும் ஆள்வானே ஆனைக் காவா
அல்லகண்டம் கொண்டடியேன் என்செய் கேனே."

மற்றொரு திருப்பதிகத்தில் வரும் ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

" முன்னானைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன்னானை யாப்பண்ணி ஏறி னானைச்
சார்தற் கரியானைத் தாதை தன்னை
என்னானைக் கன்றினையென் ஈசன் தன்னை
எறிநீர்த் திரையுகளும் காவிரி சூழ்
தென்னானைக் காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே."

இந்தத் தலத்தைப் பற்றிக் காந்தாரப் பண்ணில் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" மறைகள் ஆயின நான்கும்
மற்றுள பொருள்களும் எல்லாம்
துறையும் தோத்திரத் திறையும்
தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனல் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே."

ஜம்பு நாவல் மரம் ஜம்புகேசுவரருக்கு அருகில் கருப்பக் கிருகத்திற்கு வெளியில் உள்ளது. இது பஞ்ச பூதத் தலங்

களில் ஒன்றாகிய அப்புஸ்தலம். அதனால் ஐம்புகேசுவரருக்கு அப்புலிங்கம் என்னும் திருநாமம் வந்தது. திருக்கோயிலில் மூலஸ்தானத்தில் எப்போதும் நீர் நிரம்பியிருப்பதால் அதை இறைத்து விட்டு ஐம்புகேசுவரருக்குப் பூசை செய்கிறார்கள். "செழுநீர்த் திரளைச் சென்றாடினேனே" என்று தேவாரத்தில் வருவதைக் காண்க. முன் பிறவியில் சிலந்திப் பூச்சியாக இருந்து ஐம்புகேசுவரரை வழிபட்டு அந்தப் புண்ணியத்தினால் அது மன்னராகப் பிறந்து கோச்செங்கட் சோழ நாயனார் என்னும் திருநாமத்தைப் பெற்றது. அந்த நாயனாரால் கட்டுவிக்கப் பெற்ற திருக்கோயிலையும் அந்தத் திருக்கோயிலில் ஐம்புகேசுவரர் ஒரு சித்தர் வேடத்தோடு எழுந்தருளி வந்து திருநீற்றையே கொத்தர்களுக்குக் கூலியாக வழங்கி அருளிக் கட்டுவித்தமையால், "திருநீறிட்டான் மதில்" என்று வழங்கும் திருமதிலையும் உடையது இந்தத் தலம். இந்தக் கருத்தைப் புலப்படுத்தும் ஒரு திருநேரிசையைத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியிருக்கிறார். இது திருக்குறுக்கை வீரட்டத்தைப் பற்றிய திருப்பதிகம். அந்தத் திருநேரிசை வருமாறு:

"சிலந்தியும் ஆனைக் காவில்
திருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே
கோச்செங்க ணானும் ஆகக்
கலந்தநீர்க் காவி ரிசூழ்
கோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே."

"ஆழித்தேர் மறுகிற்பயில் மெய்த்திரு நீறிட்டான மதிள் சுற்றிய பொற்றிரு ஆனைக்கா" என்று வரும் திருப்புகழ்ப் பகுதியைக் காண்க.

ஐம்புகேசுவரரை அகிலாண்ட நாயகி பூசித்த ஐதிஹ்யத்தைக் காட்டுவதற்காக இக் காலத்திலும் உச்சிக் காலத்

தில் அகிலாண்ட நாயகியினுடைய திருக்கோயிற் பூசகர் அம்பிகையைப் போல வேடம் பூண்டு கொண்டு இந்தத் திருக்கோயிலுக்கு வந்து அருச்சனை செய்து விட்டுச் செல்கிறார்.

உறையூரில் இருந்து ஆட்சி புரிந்த சோழ மன்னன் ஒருவன் பதக்கத்தை அணிந்து கொண்டு காவிரியாற்றில் நீராடிய போது அந்தப் பதக்கம் ஆற்றில் விழுந்துவிட, அந்த மன்னன், ''சிவ பெருமானே இதை ஏற்றுக் கொண்டருள்வீராக'' என்று விண்ணப்பிக்க, அந்தப் பதக்கம் திருமஞ்சன நீர் எடுக்கும் ஒரு குடத்தில் அகப்பட்டு ஐம்புகேசுவரருக்கு அபிடேகம் புரிந்த போது அது அந்த ஐம்புகேசுவரரின் மேல் விழ அதனை அந்த ஈசுவரர் அணிந்து கொண்டு அந்தச் சோழ மன்னனுக்குத் தம்முடைய திருவருளை வழங்கிய தலம் இது. இந்தச் செய்தியைச் சுந்தர மூர்த்தி நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய ஒரு திருப்பதிகத்தில்,

'' தார மாகிய பொன்னித்
 தண்டுறை ஆடி விழுந்து
நீரி னின்றடி போற்றி
 நின்மல கொள்ளென ஆங்கே
ஆரம் கொண்டஎம் ஆனைக்
 காவுடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாமும்
 எம்மையும் ஆளுடை யாரே.''

என்று புலப்படுத்தி யிருக்கிறார்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிக் கௌசிகப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரத்தில் இறைவன் ஆரத்தை ஏற்றுக் கொண்டருளியதைப் பாடியிருக்கிறார். அந்தப் பாசுரம் வருமாறு:

'' கூரும் மாலை நண்பகற்
 கூடி வல்ல தொண்டர்கள்

பேரும் ஊரும் செல்வமும்
பேச நின்ற பெற்றியான்
பாரும் விண்ணும் கைதொழப்
பாயும் கங்கை செஞ்சடை
ஆரம் நீரோ டேந்தினான்
ஆனைக் காவு சேர்மினே."

அந்த நாயனார் இந்தளப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" கறவக் கொடிகொண் டவன்நீ றதுவாய்
உறநெற் றிவிழித் தஎம்உத் தமனே
விறல் மிக்கரிக் கருள்செய் தவனே
அறமிக் கதுவென் னுமென் ஆயிழையே."

சிவலிங்கப் பெருமான் இந்தக் கோயிலில் ஒரு பள்ளத்தில் எழுந்தருளியுள்ளார். திருவானைக்காவிலிருந்து ஒரு மைல் தூரத்தில் ஸ்ரீரங்கம் என்னும் திவ்ய தேசம் இருக்கிறது.

பிறகு வரும் 302-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'ஒரு சிலந்திப் பூச்சிக்குத், தம்முடைய திருவருளை வழங்கும் ஐம்புகேசுவரருடைய வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பணிந்து விட்டு செய்யவையாகிய சொற்களைக் கொண்ட மாலைகளாகிய பல திருப்பதிகங்களைப் பாடியருளி விளங்கும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய எறும்பீசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருஎறும்பியூர் மலைக்கும் எழுந்தருளி எறும்பீசுவரரை வணங்கி விட்டு ஒரு திருப்பதிகத்தை அந்த நாயனார் பாடியருளிய பிறகு மலர்ச்சியை அடைந்த சோதியாகிய தாயுமானேசுவரர் திருக்கோயில் விளங்கும் திருச்சிராப்பள்ளியில் உள்ள மலைக்கும், திருச்சற்குடிக்கும், நன்மைகளைக் கொண்ட செல்வர்கள் வாழும் திருப்பராய்த்துறைக்கும் எழுந்தருளி தாயுமானேசுவரரையும், முத்தீசுவ

ரரையும், பராய்த்துறை நாதேசுவரரையும் வணங்கும் பொருட்டு அந்த நாயனார் எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

"சிலந்திக் கருளும் கழல்வணங்கிச்
செஞ்சொல் மாலை பலபாடி
இலங்கு சடையார் எறும்பியூர்
மலையும் இறைஞ்சிப் பாடியபின்
மலர்ந்த சோதித் திருச்சிராப்
பள்ளி மலையும் கற்குடியும்
நலம்கொள் செல்வத் திருப்பராய்த்
துறையும் தொழுவான் நண்ணினார்."

சிலந்திக்கு-ஒரு சிலந்திப் பூச்சிக்கு. அருளும்-தம்முடைய திருவருளை வழங்கும். என்றது அந்தச் சிலந்திப் பூச்சியை மறு பிறவியில் ஒரு சோழ மன்னனாகப் பிறக்குமாறு புரிந் தருளியதை. கழல்-வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளை; ஆகு பெயர். என்றது ஐம்புகேசுவரருடைய திருவடிகளை. வணங்கி-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பணிந்து விட்டு. ச்:சந்தி. செம்-செம்மையோடு விளங்கும். செம்மை-சொற்சுவை பொருட்சுவை என்பவை அமைந்த பான்மை. சொல்-செந்தமிழ் சொற்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். மாலை-மாலைகளாகிய பல திருப் பதிகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பல-பலவற்றை. பாடி-பாடியருளி. இலங்கு-விளங்கும். சடையார்-சடா பாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய எறும்பீசுவரர். எறும்பியூர் மலையும்-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திரு எறும்பியூர் மலைக்கும் அந்த நாயனார் எழுந்தருளி. இறைஞ்சி-எறும்பீசுவரரை வணங்கி விட்டு. ப்:சந்தி. பாடிய-ஒரு திருப்பதிகத்தை அந்த நாய னார் பாடியருளிய. பின்-பிறகு. மலர்ந்த-மலர்ச்சியை அடைந்த. சோதி-சோதியாகிய தாயுமானேசுவரர். த்:சந்தி.

திருச்சிராப் பள்ளி மலையும்-திருக்கோயில் விளங்கும் திருச்சிராப் பள்ளியில் உள்ள மலைக்கும். கற்குடியும்-திருக் கற்குடிக்கும். நலம்-பலவகை நன்மைகளை. கொள்-கொண்ட; அவையாவன: நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலியவை. செல்வ-செல்வர்கள் வாழும்; திணை மயக்கம். த்:சந்தி. திருப்பராய்த் துறையும் -திருப்பராய்த் துறைக்கும் எழுந்தருளி. தொழுவான்-தாயு மானேசுவரரையும், முத்தீசுவரரையும், பராய்த்துறை நாதேசுவரரையும் வணங்கும் பொருட்டு. நண்ணினார்-திருவானைக்காவிலிருந்து அந்த நாயனார் எழுந்தருளினார்.

திரு எறும்பியூர்: இது சோழ நாட்டில் உள்ள சிவத் தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் எறும்பீசுவரர். அம்பிகை நறுங்குழல் நாயகி. இந்தச் சிவத்தலம் திருவெறும் பூர் என இக்காலத்தில் வழங்கும். திருச்சிராப் பள்ளிக்குக் கிழக்குத் திசையில் ஆறே கால் மைல் தூரத்தில் இது உள்ளது. தேவர்கள் எறும்புகளினுடைய உருவங்களை எடுத்துக் கொண்டு வந்து பூசித்த தலம் இது. திருக்கோயில் மலை மேல் இருக்கிறது. சிவலிங்கப் பெருமான் வடபுறமாகச் சாய்ந்திருக்கிறார். பழைய அம்பிகை பின்னம் அடைந்திருப் பதால் வெளியில் ஒரு பக்கத்தில் வைத்திருக்கிறார்கள். பிரம தேவனும், நைமி சாரணிய முனிவர்களும் பூசித்த தலம் இது.

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

"விரும்பி யூறு விடேல்மட நெஞ்சமே
கரும்பின் ஊறல்கண் டாய்கலந் தார்க்கவன்
இரும்பின் ஊறல் அறாததோர் வெண்டலை
எறும்பி யூர்மலை யான்எங்கள் ஈசனே

இந்தத் தலத்தைப் பற்றி அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"கார்முகிலாய்ப் பொழிவானைப் பொழிந்த முந்நீர்
கரப்பானைக் கடியநடை விடையொன் றேறி
ஊர்பலவும் திரிவானை ஊர தாக
ஒற்றியூர் உடையனாய் மற்றும் ஆண்டு
பேரெழுத் தொன்றுடை யானைப் பிரமனோடு
மாலவனும் இந்திரனும் மந்திரத்தா லேத்தும்
சிறெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே."

இந்தத் தலத்தைப் பற்றி அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருத்தாண்டகம் வருமாறு:

"பளிங்கின் நிழலுட் பதிந்த சோதியானைப்
பசுபதியைப் பாசுபத வேடத் தானை
விளிந்தெழுந்த கலந்தரனை வீட்டி னானை
வேதியனை விண்ணவனை மேவி வையம்
அளந்தவனை நான்முகனை அல்லல் தீர்க்கும்
அருமருந்தை ஆமா றறிந் தென் உள்ளம்
தெளிந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே."

அந்த நாயனார் பாடியருளிய வேறொரு திருத்தாண்டகம் வருமாறு:

"பாரிடங்கள் உடன்பாடப் பயின்று நட்டம்
பயில்வானை அயில்வாய சூலம் ஏந்தி
நேரிடும்போர் மிகவல்ல நிமலன் தன்னை
நின்மலனை அம்மலர்கொண் டயனும் மாலும்
பாரிடந்தும் மேலுயர்ந்தும் காணா வண்ணம்
பரந்தானை நிமிர்ந்துமுனி கணங்கள் ஏத்தும்
சிறெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே."

திருச்சிராப்பள்ளி: இது சோழநாட்டில் காவிரியாற்றினுடைய தென்கரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் தாயுமானேசுவரர். அம்பிகை மட்டுவார் குழலம்மை; சுகந்த குந்தளாம்பிகை எனவும் வழங்கும். மூன்று தலைகளைப் பெற்றவனாகிய திரிசிரன் என்னும் அரக்கன் வழிபட்டமையால் இந்தத் தலத்துக்குத் திரிசிராப்பள்ளி என்னும் பெயர் வந்தது. இந்தத் தலமும் தட்சிண கைலாசம் என வழங்கும். திருக்கோயில் ஒரு மலைமேல் இருக்கிறது. தாயுமானேசுவரரிடம் பக்தி மிகுதியாகக் கொண்டிருந்த ஒரு பெண்மணி சருப்பமாகஇருந்து பிரசவ காலத்தில் காவிரியாற்றில் வெள்ளம் பெருகி வந்தமையால் தன்னுடைய அன்னை வந்து உதவ முடியாமல் இருந்தமையால் அவள் துன்பப்படும் சமயத்தில் தாயுமானேசுவரரே அவளுடைய தாயைப் போல் எழுந்தருளி மருத்துவம் பார்த்தருளி ஆதரித்த தலம் இது. இதனால் சிவபெருமானாருக்குத் தாயும் ஆனவர், மாதுர் பூதேசுவரர்என்னும் திருநாமங்கள் வந்தன. தாயுமான சுவாமிகள் எழுந்தருளியிருந்த தலம் இது. மலையின் உச்சியில் உச்சிப்பிள்ளையாரினுடைய திருக்கோயில் விளங்குகிறது. அங்கிருந்து பார்த்தால் திருவானைக்காவிலும் ஸ்ரீரங்கத்திலும் உள்ள திருக்கோயில்களினுடைய கோபுரங்களும், காவிரி ஆறும், கொள்ளிட நதியும், திருச்சிராப்பள்ளி நகரமும் தெரியும்.

இந்தத் தலத்தைப்பற்றிக் குறிஞ்சிப் பண்ணில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" நன்றுடை யானைத் தீயதி லானை நரைவெள்ளே
றொன்றுடை யானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறஎன் உள்ளம் குளிரும்மே. "

இந்தத் தலத்தைப்பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

" மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயும்
சிட்டர் போலும் சிராப்பள்ளிச் செல்வரே."

திருக்கற்குடி: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் மூத்தீசுவரர், உச்சிநாதேசுவரர், உஜ்ஜீவன நாதர், உய்யக் கொண்டார், கற்பகநாதர் என்பவை. அம்பிகை அஞ்சனாட்சி அம்மை. இதற்கு இக்காலத்தில் வழங்கும் பெயர் உய்யக் கொண்டான் என்பது. இதற்கு இராஜகெம்பீரவள நாட்டு மலை என்ற ஒரு பெயரும் உண்டு. திருச்சிராப் பள்ளிக்குத் தென் மேற்குத் திசையில் இரண்டரை மைல் தூரத்தில் இது உள்ளது. ஈழ நாட்டு அரசன் ஒருவன் உச்சிக் காலத்தில் வந்து உச்சிநாதேசுவரரை வழிபட்டு முத்தி பெற்ற தலம் இது.

இந்தத் தலத்தைப் பற்றித் தக்கராகப் பண்ணில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" வடந்திகழ் மென்முலை யாளைப்
பாகம தாக மதித்துத்
தடந்திரை சேர்புனல் மாதைத்
தாழ்சடை வைத்த சதுரர்
இடந்திகழ் முப்புரி நூலர்
துன்பமொ டின்பம தெல்லாம்
கடந்தவர் காதலின் வாழும்
கற்குடி மாமலை யாரே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

" மூத்தவனை வானவர்க்கும் மூவா மேனி
முதல்வனைத் திருவரையின் மூர்க்கப் பாம்பொன்

றார்த்த வனை அக்கரவம் ஆரமாக
அணிந்தவனைப் பணிந்தடியார் அடைந்த அன்போ
டேத்தவனை இறுவரையில் தேனை ஏனோர்க்
கின்னமுதம் அளித்தவனை இடரை எல்லாம்
காத்தவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே."

இந்தத் தலத்தைப் பற்றி நட்டராகப் பண்ணில் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"செய்யார் மேனியனே திரு
நீல மிடற்றினனே
மையார் கண்ணி பங்காமத
யானை உரித்தவனே
கையார் சூலத்தினாய் திருக்
கற்குடி மன்னி நின்ற
ஐயா எம்பெருமான் அடி
யேனையும் அஞ்சல் என்னே."

திருப்பராய்த்துறை: இது சோழநாட்டில் காவிரி யாற்றின் தென்கரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் பராய்த்துறை நாதேசுவரர். அம்பிகை பொன்மயிலம்பிகை யம்மை. தலவிருட்சம் பராய்மரம். இது எழுமனூர் என்னும் ஊருக்கு வடமேற்குத் திசையில் ஒன்றரை மைல் தூரத்தில் உள்ளது. இந்திரன், குபேரன், சப்தரிஷிகள் ஆகியவர்கள் வழிபட்ட தலம் இது.

இந்தத் தலத்தைப் பற்றி மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"நீறு சேர்வதொர் மேனியர் நேரிழை
கூறு சேர்வ தொர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு;

"தொண்டு பாடியும் தூமலர் தூவியும்
இண்டை கட்டி இணையடி ஏத்தியும்
பண்ட ரங்கர் பராய்த்துறைப் பாங்கரைக்
கண்டு கொண்டடி யேனுய்ந்து போவனே."

பிறகு வரும் 303-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்தத் திருஎறும்பியூர், திருச்சிராப்பள்ளி, திருக்கற்குடி, திருப்பராய்த் துறை ஆகிய சிவத்தலங்கள் முதலாக உள்ள அவற்றின் பக்கத்தில் உள்ள சிவத்தலங்களுக்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தச் சிவத்தலங்களில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களைத் தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டுப் பிறகு தரையில் விழுந்து அந்தச் சிவபெருமான்களை வணங்கிவிட்டு அழகைப் பெற்று அமைந்துள்ள உழவாரத் திருப்பணியையும் வேறு பல திருப்பணிகளையும் புரிந்து விட்டு அந்தச் சிவபெருமான்களைப் பல திருப்பதிகங்களைக் கொண்டு வாழ்த்திவிட்டு தமக்குக் கிடைத்த சிவபெருமானுடைய திருவருளினால் காவிரியாற்றைக் கடந்து அதனுடைய கரையில் ஏறி பகைவர்களாகிய தாரகாட்சன், வித்யுன் மாலி, வாணன் என்னும் மூன்று அசுரர்களுடைய பறக்கும் கோட்டைகளாகிய மூன்று புரங்களை எரியுமாறு அழித்த மேருமலையாகிய வில்லை ஏந்தியவராகிய நீலகண்டேசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருப் பைஞ்ஞீலிக்கு அந்த நாயனார் எழுந்தருளி அடைவா ராயினார்.' பாடல் வருமாறு:

"மற்றப் பதிகள் முதலான
மருங்குள் ளனவும் கைதொழுது
பொற்புற் றமைந்த திருப்பணிகள்
செய்து பதிகங் கொடுபோற்றி

உற்ற அருளால் காவிரியை
ஏறி ஒன்னார் புரம்எரியச்
செற்ற சிலையார் திருப்பைஞ்ஞீ
லியினைச் சென்று சேர்கின்றார்."

மற்று: அசைநிலை. அப்பதிகள்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்தத் திரு எறும்பியூர், திருச்சிராப்பள்ளி, திருக்கற்குடி, திருப்பராய்த்துறை ஆகிய சிவத்தலங்கள். முதலான-முதலாக உள்ள. மருங்கு-அவற்றின் பக்கத்தில். உள்ளனவும்-உள்ள சிவத்தலங்களுக்கும் அந்த நாயனார் எழுந்தருளி. கை தொழுது-அந்தச் சிவத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களைத் தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டுப் பிறகு தரையில் விழுந்து அந்தச் சிவபெருமான்களை வணங்கிவிட்டு. கை: ஒருமை பன்மை மயக்கம். பொற்பு-அழகை. உற்று-பெற்று. அமைந்த-தமக்கு ஏற்றவையாக அமைந்துள்ள. திருப்பணிகள்-உழவாரத் திருப்பணியையும் வேறு பல திருப்பணிகளையும். செய்து-புரிந்துவிட்டு. பதிகம்-அந்தச் சிவபெருமான்களைப் பல திருப்பதிகங்களை; ஒருமை பன்மை மயக்கம். கொடு-கொண்டு. போற்றி-வாழ்த்தி வணங்கிவிட்டு. உற்ற-தமக்குக் கிடைத்த. அருளால்-திருவதிகை வீரட்டானேசுவரர் வழங்கிய திருவருளினால். காவிரியை-காவிரியாற்றை. ஏறி-கடந்து அதனுடைய கரையின் மேல் ஏறி. ஒன்னார்-பகைவர்களாகிய தாரகாட்சன், வித்யுன்மாலி, வாணன் என்னும் மூன்று அசுரர்களினுடைய. புரம்-பறக்கும் கோட்டைகளாகிய மூன்று புரங்களை; ஒருமை பன்மை மயக்கம். எரிய-எரியுமாறு. ச்:சந்தி. செற்ற-அழித்த. சிலையார்-மேருமலையாகிய வில்லைஏந்தியவராகிய நீலகண்டேசுவரர். திருப்பைஞ்ஞீலியினை-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருப்பைஞ்ஞீலிக்கு; உருபு மயக்கம். ச்:சந்தி.

சென்று-அந்த நாயனார் எழுந்தருளி. சேர்கின்றார்-அடைவாராயினார்.

திருபைஞ்ஞீலி: இதுசோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் நீலகண்டேசுவரர்; ஆரணீய விடங்கர் என்பவை. அம்பிகையின் திருநாமங்கள் விசாலாட்சியம்மை, நீள்நெடுங்கண்ணி என்பவை. திருச்சிராப்பள்ளியிலிருந்து வடக்குத் திசையில் நான்கு மைல் தூரம் சென்று கொள்ளிட நதியைக் கடந்து எட்டு மைல் கிழக்குத் திசையில் சென்றால் இந்தத் தலத்தை அடையலாம்.

பசியினால் வருத்தத்தை அடைந்து வந்த திருநாவுக்கரசு நாயனாருக்கு நீலகண்டேசுவரர் கட்டமுது வழங்கியருளிய தலம் இது. அவ்வாறு கட்டமுது வழங்கியருளிய தடாகமும் தோட்டமும் இந்தத் தலத்துக்குத் தெற்குத் திசையில் முக்கால் மைல் தூரத்தில் உள்ளன.

இந்தத் தலத்தைப் பற்றிக் காந்தார பஞ்சமப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"கோடல்கள் புறவணி கொல்லை முல்லைமேல்
பாடல்வண் டிசைமுரல் பயில்பைஞ் ஞீலியார்
பேடவர் ஆணவர் பெண்ணும் அல்லதோர்
ஆடலை உகந்தஎம் அடிகள் அல்லரே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

"மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாம்தொழு தேத்துபைஞ் ஞீலிஎம்
அத்த னைத்தொழ வல்லவர் நல்லரே"

இந்தத் தலத்தைப் பற்றிக் கொல்லிப் பண்ணில் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" செந்த மிழ்த்திறம் வல்லிரோ செங்கண்
அரவம் முன்கையில் ஆடவே
வந்து நிற்கும் தென்கொ லோபலி
மாற்ற மாட்டோம் இடகிலோம்
பைந்தண் மாமலர் உந்து சோலைகள்
கந்தம் நாறுபைஞ் ஞீலியீர்
அந்தி வானமும் மேனியோ சொலும்
ஆரணீய விடங்கரே."

பிறகு வரும் 304-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு திருப்பைஞ் ஞீலிக்கு எழுந்தருளுவதற்காக வழியில் எழுந்தருளும் சமயத்தில் மிகவும் களைப்பை அடைந்து வருத்தம் உண்டாக தண்ணீர்த் தாகத்தோடும் எல்லா நன்மைகளையும் அழிப்பதை உடையதாகும் பசி தமக்கு வந்து சேர்ந்தவுடன் அதன் பொருட்டுத் தம்முடைய திருவுள்ளம் அலைச்சலைப் பெறாமல் சொற்களுக்கு அரசராகிய திருநாவுக்கரசு நாயனாரும் முன்னால் எழுந்தருளிவர நறுமணம் நிரம்பிய மலர்கள் மலர்ந்திருக்கும் பல வகை மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழில் சுற்றியுள்ள திருப்பைஞ் ஞீலியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஒற்றைக்கண்ணை ஏந்தியுள்ள நெற்றியைப் பெற்றவராகிய நீலகண்டேசுவரர் தம்முடைய திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனார் பசியினாலும் நீர்வேட்கையினாலும் அடைந்த வருத்தத்திலிருந்து அந்த நாயனாரை மீட்டருள்வாராகி.' பாடல் வருமாறு:

" வழிபோம் பொழுது மிகஇளைத்து
வருத்தம்உறநீர் வேட்கை யொடும்
அழிவாம் பசிவந் தணைந்திடவும்
அதற்குச் சித்தம் அலையாதே
மொழிவேந் தரும்முன் எழுந்தருள
முருகார் சோலைப் பைஞ்ஞீலி

விழியேந் தியநெற்றி யினார்தம்
தொண்டர் வருத்தம் மீட்பாராய்.''

இந்தப் பாடல் குளகம். வழி-அவ்வாறு திருப்பைஞ்சீலிக்கு எழுந்தருளுவதற்காக வழியில்; போம்-எழுந்தருளும். பொழுது-சமயத்தில். மிக-மிகவும். இளைத்து-களைப்பை அடைந்து. வருத்தம் உற-வருத்தம் உண்டாக. நீர் வேட்கையொடும்-தண்ணீரை விரும்பும் தாகத்தோடும். அழிவு-பல நன்மைகளை அழித்தலைக் கொண்டது. ஆம்-ஆகும். பசி-வயிற்றுப் பசி. அவ்வாறு அழியும் நன்மைகளை,

'' மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்முயற்சி தாளாண்மை-தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்போம் பறந்து.''

என்ற வெண்பாவினால் உணர்ந்து கொள்ளலாம். வந்து அணைந்திடவும்-தமக்குவந்து சேர்ந்தவுடன். அதற்கு-அந்தப் பசிக்கும் தாகத்துக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சித்தம்-தம்முடைய திருவுள்ளம். அலையாது-வருந்தாமல். ஏ:அசைநிலை. மொழி-சொற்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். வேந்தரும்-அரசராகிய திருநாவுக்கரசுநாயனாரும். முன்-முன்னால். எழுந்தருள-எழுந்தருளிவர முருகு-நறுமணம் ஆர்-நிரம்பிய. சோலை-மலர்கள் மலர்ந்திருக்கும் பல வகையான மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழில் சுற்றியுள்ள. ப்:சந்தி. பைஞ் ஞீலி-திருப்பைஞ் ஞீலியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். விழி-ஒற்றைக் கண்ணை. ஏந்திய-தாங்கிய. நெற்றியினார்-நெற்றியைப் பெற்றவராகிய நீலகண்டேசுவரர். தம்-தம்முடைய. தொண்டர்-திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனார். வருத்தம்-பசியினாலும் தாகத்தினாலும் அடைந்த வருத்தத்திலிருந்து. மீட்பாராய்-அந்த நாயனாரை மீட்டு அருளுவாராகி.

அடுத்து உள்ள 305-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'நீலகண்டேசுவரர் சோலையையும் ஒரு குளத்தையும் அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு முன்னால் அமைத்துக் காட்டியருளிவழியில் எழுந்தருளும் கருத்தோடுஎழுந்தருளும் எண்ணத்தோடு விபூதியைத் தம்முடைய திருமேனி முழுவதும்பூசிக்கொண்டு விளங்கும் ஒருவேதியராகிஅந்த நாயனார் விழையும் கட்டுச் சோற்றையும் எடுத்துக் கொண்டு நாவினால் திருவாய் மலர்ந்தருளும் சொற்களுக்கு ஒப்பற்ற அரசராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு எதிரில் எழுந்தருளி ஆகாயத்தின் மேல் தாவிப் பறக்கும் அன்னப் பறவையும், நிலத்தைத் தோண்டிப் பார்க்கும் ஒப்பற்ற பன்றியும் ஆக உருவங்களை எடுத்துக் கொண்டு தம்முடைய திருமுடியையும் திருவடிகளையும் தேடிப் பார்த்தும் பிரம தேவனும் திருமாலும் பார்ப்பதற்கு அரியவராகிய அந்த நீலகண்டேசுவரர் வீற்றிருந்தருளினார்.' பாடல் வருமாறு:

**"காவும் குளமும் முன்சமைத்துக்**
**காட்டி வழிபோம் கருத்தினால்**
**மேவும் திருநீற் றந்தணராய்**
**விரும்பும் பொதிசோ றும்கொண்டு**
**நாவின் தனிமன் னவர்க்கெதிரே**
**நண்ணி இருந்தார் விண்ணின்மேல்**
**தாவும் புள்ளும் மண்இழிக்கும்**
**தனிஏ னமும்காண் பரியவர்தாம்."**

காவும்-நீலகண்டேசுவரர் ஒரு பூஞ்சோலையையும். குளமும்-ஒரு நீர் நிறைந்த குளத்தையும். முன்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு முன்னால். சமைத்து-அமைத்து வைத்தருளி. சந்தி. காட்டி-காண்பித்தருளி. வழி-அந்த வழியாக; என்றது திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளும் வழியை. போம்-எழுந்தருளும். கருத்தினால்-எண்ணத்தோடு; உருபு மயக்கம். மேவும்-எழுந்தருளும். திருநீற்று-தம்முடைய திருமேனி முழுவதும் விபூதியைப் பூசிக்கொண்டு

ருக்கும். அந்தணராய்-ஒரு வேதியராக திருவுருவத்தை எடுத்துக் கொண்டவராகிய. விரும்பும்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தம்முடைய பசியைத் தீர்த்துக் கொள்ள விழையும். பொதி சோறும்-கட்டுச் சோற்றையும். கொண்டு-எடுத்துக் கொண்டு. நாவின்-தம்முடைய நாவினால் பேசும் சொற்களுக்கு; ஆகுபெயர். தனி-ஒப்பற்ற. மன்னவர்க்கு-அரசராகிய திருநாவுக்கரசு நாயனாருக்கு. எதிர்-எதிரில். ஏ: அசைநிலை. நண்ணி-எழுந்தருளி. விண்ணின் மேல்-ஆகாயத்தின்மேல். தாவும்-தாவிப்பறக்கும். புள்ளும்-அன்னப் பறவையும். மண்-நிலத்தை. இழிக்கும்-தோண்டிப் பார்க்கும். தனி-ஒப்பற்ற. ஏனமும்-பன்றியுமாக. காண்பரியவர் தாம்-தம்முடைய திருமுடியையும் திருவடிகளையும் தேடிப் பார்த்தும் பிரமதேவனும் திருமாலும் பார்ப்பதற்கு அரியவராகிய அந்த நீலகண்டேசுவரர். தாம்: அசைநிலை. இருந்தார்-வீற்றிருந்தருளினார்.

பிறகு வரும் 306-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

"அந்த வழியில் வீற்றிருந்தருளிய வேதியரிடம் திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனாரும் அந்த வழியில் எழுந்தருளி வர செம்மையாகிய கண்களைப் பெற்ற இடப வாகனத்தை ஓட்டுபவராகிய அந்த அந்தணர் திருநாவுக்கரசு நாயனாரைப் பார்த்தருளி, "நீர் மிகவும் வழியில் நடந்து வந்து களைப்பை அடைந்திருந்தீர்; இந்த இடத்தில் என்னிடம் கட்டுச்சோறு இருக்கிறது; இந்தக் கட்டுச் சோற்றை நீர் உண்டுவிட்டுக் குளிர்ச்சியைப் பெற்ற நீரை இந்த நீர் பொங்கி எழும் குளத்திலிருந்து மொண்டுகொண்டு அருந்தி உம்முடைய களைப்பைப் போக்கிவிட்டுச் செல்வீராக" என்று அந்த நீலகண்டேசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு:

"அங்கண் இருந்த மறையவர்பால்
ஆண்ட அரசும் எழுந்தருள

வெங்கண் விடைவே தியர்நோக்கி,
'மிகவும் வழிவந் திளைத்திருந்தீர்;
இங்கென் பாலே பொதிசோறுண்
டிதனை உண்டு தண்ணீர்இப்
பொங்கு குளத்தில் குடித்திளைப்புப்
போக்கிப் போவீர்'எனப் புகன்றார். ''

*அங்கண்* - அந்த வழியில். இருந்த - வீற்றிருந்தருளிய. மறையவர்பால்-ஒரு வேதியராக வடிவை எடுத்துக்கொண்டு எழுந்தருளிய நீலகண்டேசுவரரிடத்தில். ஆண்ட-திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்டருளிய. அரசும்-திருநாவுக்கரசு நாயனாரும்; திணை மயக்கம். எழுந்தருள-அந்த வழியில் எழுந்தருளி வர. வெம்-வெப்பமாக இருக்கும். கண்-கண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். விடை-இடப வாகனத்தை ஓட்டுபவராகிய; ஆகு பெயர். வேதியர்-அந்த அந்தணர். நோக்கி-திருநாவுக்கரசு நாயனாரைப் பார்த்தருளி. மிகவும் வழிவந்து-நீர் இந்த வழியாக நடந்து வந்து மிகவும். இளைத்திருந்தீர்-களைப்பை அடைந்திருந்தீர். இங்கு-இந்த இடத்தில். என் பால்-என்னிடம். ஏ:அசைநிலை. பொதிசோறு - கட்டுச் சோற்று மூட்டை; ஆகு பெயர். உண்டு - இருக்கிறது. இதனை - இந்த மூட்டையில் உள்ள கட்டுச் சோற்றை; உண்டு-நீர் உண்டுவிட்டு. தண்ணீர்-குளிர்ச்சியைப் பெற்ற நீரை. இப்பொங்கு-இந்த நீர் பொங்கி எழும். குளத்தில்-குளத்திலிருந்து அள்ளிக்கொண்டு. குடித்து-அந்த நீரைக் குடித்துவிட்டு. இளைப்பு-நீர் அடைந்திருந்த களைப்பை: ப்:சந்தி. போக்கி-போக்கிவிட்டு. ப்:சந்தி. போவீர்-மேலே செல்லுவீராக. என-என்று; இடைக்குறை. ப்:சந்தி. புகன்றார்-அந்த நீலகண்டேசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

பிறகு வரும் 307-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு எழுந்தருளும் திருநாவுக்கரசு நாயனார் இது நம்பராகிய நீலகண்டேசுவரர் வழங்கிய திருவருளால் கிடைத்தது எனத் தெரிந்து கொண்டவரைப் போல, ''இந் தக் கட்டுச் சோற்றை நீர் உண்பீராக'' என்று அந்த அழகிய வேதியராகிய நீலகண்டேசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு அந்தக் கட்டுச்சோற்றை வழங்கியருளிய வுடன் அதைப்பற்றி நினைக்கும் எண்ணத்தை அடையாமல் அந்தச் கட்டுச் சோற்றை அந்த நீலகண்டேசுவரருக்கு எதிரில் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் வாங்கிக்கொண்டு இனிமையோடு திருவமுது செய்துவிட்டு இனிமையான சுவையைப் பெற்றதும் குளிர்ச்சியை உடையதுமாகிய அந்தக் குளத்துநீரைக் குடித்தருளித் தம்முடைய தாகத் தைப் போக்கிக்கொண்டு அந்த நீரால் தம்முடைய திரு வாயை அலம்பிப் பரிசுத்தம் செய்துகொண்டு தம்முடைய தளர்ச்சியிலிருந்து நீங்கினார்.' பாடல் வருமாறு:

'' நண்ணும் திருநா வுக்கரசர்
நம்பர் அருள்என் றறிந்தார்போல்,
'உண்ணும்' என்று திருமறையோர்
உரைத்துப் பொதிசோ றளித்தலுமே
எண்ண நினையா தெதிர்வாங்கி
இனிதா அமுது செய்தினிய
தண்ணீர் அமுது செய்தருளித்
தூய்மை செய்து தளர்வொழிந்தார். ''

நண்ணும்-அவ்வாறு அந்த வழியாக எழுந்தருளும். திருநாவுக்கரசர்-திருநாவுக்கரசு நாயனார். நம்பர்-இது தம் முடைய அடியவர்களுக்குப் பலவிதமான நம்பிக்கைகளை உண்டாக்குபவராகிய நீலகண்டேசுவரர். அந்த நம்பிக்கை கள் இன்ன என்பதை வேறுஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டு உணர்க. அருள்-வழங்கிய திருவருளால் கிடைத்தது: ஆகு பெயர். என்று-என. அறிந்தார் போல்-தெரிந்து

கொண்டவரைப் போல. உண்ணும்-இந்தக் கட்டுச் சோற்றை நீர் உண்பீராக. என்று-என. திரு-அழகிய. மறையோர்-வேதியராக எழுந்தருளிய நீலகண்டேசுவரர். உரைத்து-திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. ப்:சந்தி. பொதி சோறு-தாம் கொண்டு வந்திருந்த கட்டுச் சோற்றை. அளித்தலும்-வழங்கியருளியவுடன். ஏ:அசை நிலை. எண்ணம்-அதைப்பற்றி நினைக்கும் எண்ணத்தை. நினையாது-எண்ணிப் பார்க்காமல். எதிர்-அந்த நீலகண்டேசுவரருக்கு எதிரில். வாங்கி-தாம் வாங்கிக் கொண்டு. இனிதா-இனிமையோடு. அமுது செய்து-திருவமுது செய்து விட்டு; உண்டு விட்டு. இனிய-இனிமையாகியசுவையைப் பெற்றதும்; வினையாலணையும் பெயர். தண்-குளிர்ச்சியை உடையதும்; ஆகு பெயர். நீர்-ஆகிய அந்தக் குளத்து நீரை. அமுது செய்தருளி-குடித்தருளி. த்:சந்தி. தூய்மை-தம்முடைய தாகத்தைப் போக்கிக் கொண்டு அந்தக் குளத்து நீரால் தம்முடைய திருவாயை அலம்பிப் பரிசுத்தம். செய்து-புரிந்து கொண்டு. தளர்வு-தாம் பசியினாலும் தாகத்தாலும் அடைந்திருந்த தளர்ச்சியிலிருத்து. ஒழிந்தார்-நீங்கினார்.

அடுத்து வரும் 308-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு தமக்கு உண்டாகியிருந்த களைப்பிலிருந்து விடுபட்டு நின்று கொண்டிருந்த அந்தத் திருநாவுக்கரசு நாயனாரைப் பார்த்தருளி அந்த இடத்தில் வீற்றிருந்த வேதியராகிய நீலகண்டேசுவரர் "இதற்கு அப்பால் நீர் எந்த ஊருக்குச் செல்வதாக இருக்கிறீர்!" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்; அந்தத் திருநாவுக்கரசு நாயனாரும் அந்த நீலகண்டேசுவரருக்கு எதிரில் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவராகி, "அடியேன் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்வதாக இருக்கிறேன்!" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய தமக்கு நிகராக வேறு யாரும் இல்லாதவராகிய அந்த நீலகண்டேசுவரரும், "நானும் அந்தத் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்கிறேன்" என்று திருவாய் மலர்ந்தருளிச்

செய்து விட்டு அந்தத் திருநாவுக்கரசு நாயனாரோடு எழுந் தருளினார்.' பாடல் வருமாறு:

" எய்ப்பு நீங்கி நின்றவரை
நோக்கி இருந்த மறையவனார்
'அப்பால்எங்கு நீர்போவ' தென்றார்;
அரசும் அவர்க் கெதிரே
செப்பு வார், 'யான் திருப்பைஞ்சீ
லிக்குப் போவ' தென்றுரைப்ப
ஒப்பிலாரும், 'யான் அங்குப்
போகின்றேன்' என்றுடன் போந்தார்."

எய்ப்பு-அவ்வாறு பசியினாலும் தாகத்தாலும் தமக்கு உண்டாகியிருந்த களைப்பிலிருந்து. நீங்கி-விடுபட்டு. நின்ற வரை-நின்று கொண்டிருந்த அந்தத் திருநாவுக்கரசு நாயனாரை. நோக்கி-பார்த்தருளி. இருந்த-அந்த வழியில் வீற்றிருந்த. மறையவனார்-வேதியராகிய நீலகண்டேசுவரர். அப்பால்-இந்த இடத்துக்கு அப்பால். எங்குநீர்-நீர் எந்த ஊருக்கு. போவது-செல்வதாக இருக்கிறீர். என்றார்-என்று அந்த ஈசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார். அரசும்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாரும்; திணை மயக்கம். அவர்க்கு-அந்த நீலகண்டேசுவரர்க்கு. எதிர்-எதிரில். ஏ: அசை நிலை. செப்புவார்-திருவாய் மலர்ந்தருளிச் செய்ப வராகி; முற்றெச்சம். யான்-அடியேன். திருப்பைஞ்சீலிக்குப் போவது-திருப்பைஞ்சீலிக்குச் செல்வதாக இருக்கிறேன். என்று-என. உரைப்ப-அந்த நாயனார் திருவாய் மலர்ந் தருளிச் செய்ய. ஒப்பு-தமக்கு நிகராக. இலாரும்-வேறு யாரும்இல்லாதவராகிய அந்த நீலகண்டேசுவரரும்; இடைக் குறை. யான்-நானும். அங்கு-அந்தத் திருப்பைஞ்சீலிக்கு. பஃசந்தி. போகின்றேன்-செல்கிறேன். என்று-எனத்திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. உடன்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாரோடு. போந்தார்-எழுந்தருளினார்.

பிறகு உள்ள 309-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு திருநாவுக்கரசு நாயனாரோடு சேர்ந்து கொண்டு எழுந்தருளி அந்த வேதியராகிய நீலகண்டேசுவரர் திருப்பைஞ்சீலியைச்சமீபிக்க அந்த ஈசுவரர்தாம்பூண்டிருந்த வேதியருடைய வேடத்தை அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு முன்னால் மறைத்துக் கொண்டவுடன் உண்மையாகிய தவத்தைப் புரிந்த மேம்பாட்டைப் பெற்றவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார், "திருநடனம் புரிந்தருளிய நீலகண்டேசுவரர் அடியேனையும் ஒரு பொருளாக எண்ணியருளி இந்தக் கட்டுச் சோற்றையும் நீரையும் அடியேனுடைய பசியைப் போக்கிக் கொள்ளவும் அடியேனுக்கு உண்டாகியிருந்த தாகத்தைத் தீர்த்துக் கொள்ளவும் வழங்கியருளிய பெருங்கருணையே இது." என்று அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எண்ணி ஒரு பாசுரத்தை விரும்பிப் பாடியருளித் தரையில் விழுந்து அந்த நீலகண்டேசுவரரை வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு தம்முடைய விழிகளிலிருந்து வழியும் நீரை மழையைப் போலச் சொரிந்தார்.' பாடல் வருமாறு;

"கூட வந்து மறையவனார்
திருப்பைஞ் சீலி குறுகியிட
வேடம் அவர்முன் மறைத்தலுமே
மெய்ம்மைத் தவத்து மேலவர்தாம்
'ஆடல் புரிந்தார் அடியேனைப்
பொருளா அளித்த கருணை' எனப்
பாடல் புரிந்து விழுந்தெழுந்து
கண்ணீர் மாரி பயில்வித்தார். "

கூட-அவ்வாறு திருநாவுக்கரசு நாயனாரோடு சேர்ந்து கொண்டு. வந்து-எழுந்தருளி. மறையவனார்-அந்த வேதியராகிய நீலகண்டேசுவரர், திருப்பைஞ்சீலி-திருப்பைஞ்சீலிக்கு. குறுகியிட-சமீபத்தில் எழுந்தருள. வேடம்-தாம்

பூண்டிருந்த வேதியருடைய வேடத்தை. அவர்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு. முன்-முன்னால். மறைத்தலும் -மறைத்துக் கொண்டவுடன். ஏ:அசை நிலை. மெய்ம்மை-உண்மையாகிய. த்:சந்தி. தவத்து-தவத்தைப் புரிந்த. மேலவர் தாம்-மேம்பாட்டைப் பெற்றவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். தாம்; அசை நிலை. ஆடல்-திருநடனம், புரிந்தார்-புரிந்தருளிய நீலகண்டேசுவரர். அடியேனைப் பொருளா-அடியேனையும் ஒரு பொருளாக மதித்தருளி. அளித்த-இந்தக் கட்டுச் சோற்றையும் குளத்து நீரையும் அடியேனுடைய பசியைப் போக்கிக் கொள்ளவும் அடியேனுக்கு உண்டாகியிருந்த தாகத்தைத் தீர்த்துக் கொள்ளவும் வழங்கியருளியது. கருணை-பெருங்கருணையே. என-என்று அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எண்ணி; இடைக் குறை. பாடல்-ஒரு பாசுரத்தை. புரிந்து-விரும்பிப் பாடியருளி. விழுந்து-தரையில் விழுந்து அந்த நீலகண்டேசுவரரை வணங்கி விட்டு. எழுந்து-பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. கண்-தம்முடைய விழிகளிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம், நீர்-வழியும் நீரை. மாரி-மழையைப்போல. பயில்வித்தார்-வழியுமாறு செய்தார். அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய பாசுரம் இப்போது கிடைக்கவில்லை. மறைந்து போன தேவாரத் திருமுறைகளில் உள்ள பாசுரங்களில் அதுவும் ஒன்றாக இருக்கும் போலும். அந்த நாயனார் திருப்பைஞ்ஞீலியைப் பற்றிப் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

"காரு லாமர்க் கொன்றையந் தாரினான்
வாரு லாமுலை மங்கையோர் பங்கினர்
தேரு லாம்பொழில் சூழ்ந்த பைஞ்ஞீலீஎம்
ஆர்கி லாஅமு தையடைந் துய்ம்மினே."

பிறகு வரும் 310-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திருப்பைஞ்சீலியில் வீற்றிருந்தருளும் பரமேசுவரராகிய நீலகண்டேசுவரருடைய திருக்கோயிலுக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி அடைந்து மையைப் போன்று நீல நிறத்தைப் பெற்றதும் நீல மணியைப் போன்றதுமாகிய திருக்கழுத்தைக் கொண்டவராகிய அந்த நீலகண்டேசுவரரைப் பணிந்து மகிழ்ச்சியில் சிறப்பை அடைந்து உண்மையாகிய இயல்போடு பக்தியினால் தம்முடைய திருவுள்ளம் உருக்கத்தை அடைய பலரும் விரும்பிப் பாடும் செந்தமிழ் மொழியில் அமைந்த மாலைகளாகிய பல திருப்பதிகங்களை அந்த நாயனார் பாடியருளித் தம்முடைய திருக்கரங்களால் பல காலமாகப் புரிந்து கொண்டு வருபவையாகிய தமக்கு உரிய உழவாரத் திருத்தொண்டினையும் வேறு பல திருத்தொண்டுகளையும் புரிந்து கொண்டு விருப்பத்தோடு அந்தத் திருப்பைஞ்ஞீலியில் தங்கிக் கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு:

" பைஞ்ஞீலி யினில் அமர்ந்தருளும்
பரமர் கோயில் சென்றெய்தி
மைஞ்ஞீ லத்து மணிகண்டர்
தம்மை வணங்கி மகிழ்சிறந்து
மெய்ஞ்ஞீர் மையினில் அன்புருக
விரும்பும் தமிழ்மா லைகள்பாடிக்
கைஞ்சீ டியதம் திருத் தொண்டு
செய்து காத லுடன்இருந்தார். "

பைஞ்ஞீலியினில்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருப்பைஞ்ஞீலியில். அமர்ந்தருளும்-வீற்றிருந்தருளும். பரமர்—பரமேசுவரராகிய நீலகண்டேசுவரர் எழுந்தருளியிருக்கும். கோயில்-திருக்கோயிலுக்கு. சென்று-எழுந்தருளி. எய்தி-அந்த ஆலயத்தை அடைந்து. மை-மையைப் போன்ற: 'மேகத்தைப் போன்ற' எனலும் ஆம். ஞ்:சந்தி. ஞீலத்து-நீல நிறத்தைப் பெற்ற. மணி-நீலமணியைப் போன்ற. கண்டர்

தம்மை-திருக்கழுத்தைப் பெற்றவராகிய அந்த நீலகண்டேசுவரரை. தம்:அசை நிலை. வணங்கி-அந்த நாயனார் பணிந்து விட்டு. மகிழ்-மகிழ்ச்சியில். சிறந்து-சிறப்பை அடைந்து. மெய்-உண்மையாகிய. ஞ்:சந்தி. ஞீர்மையினில்-இயல்போடு; உருபு மயக்கம். அன்பு-தம்முடைய திருவுள்ளம் பக்தியினால். உருக-உருக்கத்தை அடைய. விரும்பும்-பலரும் விரும்பிப் பாடும், தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலைகள்-மாலைகளாகிய பல திருப்பதிகங்களை. பாடி-அந்த நாயனார் பாடியருளி. க்:சந்தி. கை-தம்முடைய திருக்கரங்களால்; ஒருமை பன்மை மயக்கம். ஞ்:சந்தி ஞீடிய-நெடுங்காலமாகப் புரிந்து கொண்டு வருபவையாகிய. தம்-தமக்கு உரிய. திருத்தொண்டு-உழவாரத் திருத்தொண்டினையும் வேறு பல திருத் தொண்டுகளையும்; ஒருமை பன்மை மயக்கம். செய்து-புரிந்து கொண்டு. காதலுடன்-விருப்பத்தோடு. இருந்தார்- அந்தத்திருப்பைஞ்ஞீலியில் அந்த நாயனார் தங்கிக் கொண்டிருந்தார்.

அந்த நாயனார் திருப்பைஞ்ஞீலியைப் பற்றிப் பாடி அருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

"ஒன்றி மாலும் பிரமனும் தம்மிலே
நின்ற சூழல் அறிவரி யான்இடம்
சென்று பாரிடம் ஏத்துபைஞ் ஞீலியுள்
என்றும் மேவி இருந்த அடிகளே."

பிறகு வரும் 311-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தம்முடைய தலைவராகிய திருவதிகை வீரட்டானேசுவரர் மருவி எழுந்தருளியிருக்கும் அழகிய மலைகளையும். தாம் விரும்பும் சிவத்தலங்கள் பலவற்றிற்கும் மிகவும் விருப்பம் மிகுதியாக உண்டாக அந்தச் சிவத்தலங்களுக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி அந்தச் சிவத் தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கிவிட்டு தம்முடைய திருவுள்ளத்

தில் சேர்ந்திருந்த பண்கள் அமைந்த சொற்சுவை பொருட் சுவை ஆகிய வளப்பங்களைப் பெற்ற செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு திருப்பதிகத்தை அந்த நாயனார் பாடியருளி உமாதேவியாராகிய மாதரசியாரைத் தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்திருப்பவராகிய திருவதிகை வீரட்டானேசுவரர் வழங்கிய திருவருளால் வடக்குத் திசையை நோக்கி அந்த வாகீசராகிய திருநாவுக்கரசு நாய னார் எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய அருணா சலேசுவரர் வீற்றிருந்தருளிய திருவண்ணாமலைக்கு எழுந் தருளினார்.' பாடல் வருமாறு:

**'' நாதர் மருவும் திருமலைகள்**
**நாடும் பதிகள் பலமிகவும்**
**காதல் கூரச் சென்றிறைஞ்சிக்**
**கலந்த இசைவண் டமிழ்பாடி**
**மாதொர் பாகர் அருளாலே**
**வடபால் நோக்கி வாகீசர்**
**ஆதி தேவர் அமர்ந்ததிரு**
**வண்ணா மலையை நண்ணினார்.''**

நாதர்-தம்முடைய தலைவராகிய திருவதிகை வீரட்டா னேசுவரர். மருவும்-மருவி எழுந்தருளியிருக்கும். திரு- அழகிய. மலைகள்-மலைகளையும். நாடும்-தாம் வணங்க விரும்பும். பதிகள்-சிவத்தலங்களாகிய. பல-பலவற்றிற்கும். மிகவும் காதல்-மிகவும் விருப்பம். கூர-மிகுதியாக உண்டாக. ச்:சந்தி. சென்று-அந்தச் சிவத்தலங்களுக்கு அந்தத் திரு நாவுக்கரசு நாயனார் எழுந்தருளி. இறைஞ்சி-அந்தச் சிவத் தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவ பெருமான்களை வணங்கிவிட்டு. க்:சந்தி. கலந்த-தம்மு டைய திருவுள்ளத்தில் சேர்ந்திருந்த. இசை-உரிய பண்கள் அமைந்த; ஒருமை பன்மை மயக்கம். வண்-சொற்சுவை பொருட்சுவையாகிய வளப்பங்களைப் பெற்ற. தமிழ்-செந் தமிழ் மொழியில் அமைந்த. பாடி-ஒரு திருப்பதிகத்தை அந்த

நாயனார் பாடியருளி. மாது-உமாதேவியாராகிய மாதரசி யாரை; ஒருமை பன்மை மயக்கம். ஓர் பாகர்-தம்முடைய ஒரு பாகமாகிய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்திருப்பவ ராகிய திருவதிகை வீரட்டானேசுவரர். அருளால்-வழங்கிய திருவருளால். ஏ: அசைநிலை. வடபால்நோக்கி-வடக்குத் திசையை நோக்கி. வாகீசர்-வாகீசராகிய அந்தத் திருநாவுக் கரசு நாயனார். ஆதிதேவர்-எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய அருணாசலேசுவரர். அமர்ந்த-வீற்றிருந் தருளிய. திருவண்ணாமலையை-திருவண்ணாமலைக்கு; உருபு மயக்கம். நண்ணினார்-அந்த நாயனார் எழுந் தருளினார்.

திருவண்ணாமலை: இது நடு நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் அரு ணாசலேசுவரர், அண்ணாமலைநாதர், சோணாசலேசுவரர் என்பவை. அம்பிகையின் திருநாமங்கள் உண்ணாமுலை அம்மை, அபீதகுசாம்பிகை என்பவை. தீர்த்தங்கள் பிரம தீர்த்தம் முதலியவை. தலவிருட்சம் மகிழ மரம்.

இது விழுப்புரத்துக்கு மேற்குத் திசையில் 12 மைல் தூரத்தில் உள்ளது. இது பஞ்ச பூதத் தலங்களுக்குள் தேயுத் தலம். நினைக்க முத்தியளிக்கும் சிவத்தலம். 'ஸ்மரணா தருணாசலம்' என வடமொழியில் வருவதைக் காண்க. அருணாசலேசுவரர் வல்லாள மகாராசனுக்குப் புதல்வராய்த் திருவவதாரம் செய்தருளித் திருவருள் வழங்கிய தலம் இது. 'யானே பரம்', 'யானே பரம்' என்றுசெருக்கால் கூறிய பிரம தேவனுக்கும் திருமாலுக்கும் முன்னால் அருணாசலேசுவரர் ஓர் அக்கினி மலையாக எழுந்தருளி, அந்த இரண்டு தேவர் களும் அன்னப் பறவையாக வடிவத்தை எடுத்துக் கொண்டு மேலே பறந்து திருமுடியைத் தேடிப் பார்த்தும், பன்றி வடிவத்தை எடுத்துக்கொண்டு நிலத்தைத் தோண்டித் திருவடிகளைத் தேடிப் பார்த்தும் அந்த இரண்டு தேவர் களும் திருமுடியையும் திருவடிகளையும் காண முடியாமல்

தங்களுடைய செருக்குத் தீர்ந்து திகைப்பை அடைந்து நின்று கொண்டிருக்கத் தாமே பரம்பொருள் என்று அருணாசலேசுவரர் நிறுவியருளிய தலம் இது. இந்த ஐதிஹ்யத்தைப் புலப்படுத்துவதற்கு இந்தக் காலத்திலும் ஒவ்வோர் ஆண்டிலும் வரும் கார்த்திகை மாதத்துக் கிருத்திகை நட்சத்திரத்தில் தீப தரிசனத் திருவிழா இந்தத் தலத்தில் நடைபெற்று வருகிறது. மேலைக் கோபுரத்தைப் பேய்க்கோபுரம் என்று வழங்குவர். இந்த மலையைப் பிரதட்சிணம் செய்ய வேண்டுமானால் எட்டு மைல் தூரம் நடக்க வேண்டும். இடைவழியில் பல தீர்த்தங்களும் அணி அண்ணாமலை என்னும் சிவத்தலமும் குகை நமசிவாயருடைய திருக்கோயிலும் உள்ளன. உண்ணாமுலையம்மையார் தவத்தைப் புரிந்து அருணாசலேசுவரருடைய வாம பாகத்தைப் பெற்று அருளிய தலம் இது. திருப்புகழ்ப் பாக்களைப் பாடியருளிய அருணகிரிநாத சுவாமிகளுடைய திருவவதாரத் தலம் இது. அவர் சமாதி அடைந்த இடம் இந்தத் தலத்தில் ஓரிடத்தில் உள்ளது. அங்கே அவருடைய திருவுருவத்தைச் சிறியதாகச் செய்து வைத்திருக்கிறார்கள், அவருக்குத் தன்னுடைய திருவருளை வழங்கிய முருகக் கடவுளினுடைய திருவுருவம் இந்தத் திருக்கோயிலுக்குக் கிழக்கே ஒரு கம்பத்தில் இருக்கிறது. அவரை, 'கம்பத்திளையனார்' என வழங்குவர்.

இந்தத் தலத்தைப் பற்றி நட்டபாடைப் பண்ணில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம் முழவதிரும்

அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே. "

அந்த நாயனார் தக்கேசிப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" பூவார் மலர்கொண் டடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித்
தொழுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையும் சாரல்
அண்ணா மலையாரே. "

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

" ஓதிமா மலர்கள் தூவி
உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்தோள்
சுடர்மழுப் படையி னானே
ஆதியே அமரர் கோவே
அணியணா மலையு ளானே
நீதியால் நின்னை அல்லால்
நினையுமா நினைவி லேனே. "

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

" வட்ட னைம்மதி சூடியை வானவர்
சிட்ட னைத்திரு அண்ணா மலையனை
இட்ட னைஇகழ்ந் தாம்புரம் மூன்றையும்
அட்ட னைஅடி யேன்மறந் துய்வனோ. "

அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருக்குறுந் தொகை வருமாறு:

"பட்டி ஏறுகந் தேறிம் பலஇலம்
இட்ட மாக இரந்துண் டுழிதரும்
அட்ட மூர்த்திஅண் ணாமலை கைதொழக்
கெட்டுப் போம்வினை கேடில்லை காண்மினே."

பிறகு வரும் 312-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'சிவப்பாக இருக்கும் கண்களைப் பெற்ற இடப வாகனத்தை ஓட்டுபவராகிய அருணாசலேசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவண்ணாமலைக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி அந்த அருணாசலேசுவரரை வணங்கி விட்டுப் பிறகு அவருடைய திருக்கோயிலை வலமாக வந்து பரிசுத்தமாக உள்ள அந்தத் தலத்தில் உள்ள மலையின்மேல் ஏறித் தம்முடைய திருத் தொண்டர்கள் புரியும் வணக்கத்திற்கு மகிழ்ந்து அவர்களுக்கு எதிரில் எழுந்தருளி வந்து நிற்கும் அழகிய கண்களைப் பெற்ற அரசராகிய அந்த அருணாசலேசுவரரை மீண்டும் தரையில் விழுந்து அந்த நாயனார் வணங்கிவிட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு ஆனந்த சாகரத்தில் முழுகி இன்புற்று அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தாம் திருவவதாரம் செய்த இந்த மனிதப்பிறவியே முக்தியைக் காட்டிலும் மேலாக விளங்கும் பெருமையைச் சாதித்துக் காட்டினார்.' பாடல் வருமாறு:

"செங்கண் விடையார் திருவண்ணா
மலையைத் தொழுது வலங்கொண்டு
துங்க வரையின் மிசைஏறித்
தொண்டர் தொழும்புக் கெதிர்நிற்கும்
அங்கண் அரசைத் தொழுதெழுந்து
திளைத்துத் திருநா வுக்கரசர்
தங்கு பிறப்பே வீட்டினுக்கு
மேலாம் பெருமை சாதித்தார்."

செம்-சிவப்பாக இருக்கும். கண்-கண்களைப் பெற்ற: ஒருமை பன்மை மயக்கம். விடையார்-இடப வாகனத்தை

ஓட்டுபவராகிய அருணாசலேசுவரர். திருவண்ணாமலையை-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவண்ணாமலைக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி; உருபு மயக்கம். த்:சந்தி. தொழுது-அருணாசலேசுவரரை வணங்கிவிட்டு. வலங்கொண்டு-பிறகு அவருடைய திருக்கோயிலை வலமாக வந்து. துங்க-பரிசுத்தமாக உள்ள. வரையின்மிசை ஏறி-அந்தத் தலத்தில் உயரமாக நிற்கும் மலையின்மேல் ஏறி. த்:சந்தி. தொண்டர்-தம்முடைய திருத்தொண்டர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தொழும் புக்கு-புரியும் வழிபாட்டினால் மகிழ்ச்சியை அடைந்து; உருபு மயக்கம். எதிர்நிற்கும்-அவர்களுக்கு எதிரில் எழுந்தருளி வந்து நிற்கும். அம்-அழகிய. கண்-கண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். அரசை-அரசராகிய அந்த அருணாசலேசுவரரை. த்:சந்தி. தொழுது-மீண்டும் தரையில் விழுந்து அந்த நாயனார் வணங்கிவிட்டு. எழுந்து-பிறகு தரையிலிருந்து எழுந்து நின்றுகொண்டு. திளைத்து-ஆனந்த சாகரத்தில் முழுகி இன்புற்று. த்:சந்தி. திருநாவுக்கரசர்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார். தங்கு-தாம் எடுத்துக்கொண்டு இந்தப் பூமியில் தங்கியிருக்கும். பிறப்பே-மனிதப் பிறவியே. வீட்டினுக்கு-முக்தியைக் காட்டிலும்; உருபு மயக்கம். மேல்ஆம்-மேலாக விளங்கும். பெருமை-பெருமையை. சாதித்தார்-சாதித்துக் காட்டினார்.

இந்த மனிதப் பிறவியே முக்தியைக் காட்டிலும் மேலானது:

" தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாவிதாம் இன்பமாம் என்று
கண்ணில்ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்

பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.''
(தடுத்தாட் கொண்ட புராணம், 107)

என்று பெரிய புராணத்தில் வருவதைக் காண்க.

'' கூடும் அன்பினிற் கும்பிடவே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.''

என்று அந்தப் பெரிய புராணத்தில் வருவதையும் காண்க.

பிறகு வரும் 313-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'திருவண்ணாமலையில் விளங்கும் மலையின் மேல் எழுந்தருளியிருக்கும் அழகைப் பெற்ற மலையைப் போன்ற அருணாசலேசுவரரை, அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருப்தியை அடையாத பக்தியோடு, தம்முடைய அடியவர்களுக்குக் கண்களினால் நிறையத் துய்க்கும் அமுதத்தைப் போன்றவரை, தேவலோகத்தில் வாழும் தேவர்களைக் காப்பாற்றும் பொருட்டுத் திருமால் பள்ளிகொண்டருளிய பாற்கடலில் வந்து எழுந்ததும், வேறு யாரும் விழுங்காத ஆலகால விடத்தை விழுங்கினவனாகிய அந்த அருணாசலேசுவரனை அந்த நாயனார் தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டுப் பிறகு தரையில் விழுந்து அந்த அருணாசலேசுவரரை வணங்கிவிட்டு, உருக்கத்தை அடையும் திருவுள்ளத்தோடு உரிய பண் அமைந்த செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளி மீண்டும் அந்த அருணாசலேசுவரரைத் தரையில் விழுந்து வணங்கிவிட்டு அந்த ஈசுவரரைப் புகழ்ந்து தமக்கு உரிய உழவாரத் திருப்பணியையும் வேறு பல திருப்பணிகளையும் புரிந்து கொண்டு அந்தத் திருவண்ணாமலையில் தங்கியிருந்தார்.' பாடல் வருமாறு:

'' அண்ணா மலைமேல் அணிமலையை
ஆரா அன்பின் அடியவர்தம்

கண்ணார் அமுதை விண்ணோரைக்
காக்கக் கடலில் வந்தெழுந்த
உண்ணா நஞ்சம் உண்டானைக்
கும்பிட் டுருகும் சிந்தையுடன்
பண்ணார் பதிகத் தமிழ்பாடிப்
பணிந்து பரவிப் பணிசெய்தார். ''

அண்ணாமலை மேல்-திருவண்ணாமலையில் விளங்கும் உயரமாக உள்ள மலையின் மேல். அணி-எழுந்தருளி யிருக்கும் அழகைப் பெற்ற. மலையை-மலையைப் போன்றவராகிய அருணாசலேசுவரரை; உவம ஆகுபெயர். ஆரா-திருப்தியை அடையாத. அன்பின்-பக்தியோடு. அடியவர் தம்-தம்முடைய அடியவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். தம்: அசைநிலை. கண்-கண்களால்; ஒருமை பன்மை மயக்கம். ஆர்-நிறையத் துய்க்கும். அமுதை-அமுதத்தைப் போன்றவரை; உவம ஆகுபெயர். விண்ணோரை-தேவலோகத்தில் வாழும் தேவர்களை: ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. காக்க-உயிர்களை விடாமல் காப்பாற்றும் பொருட்டு. க்:சந்தி. கடலில் வந்து எழுந்த-திருமால் பள்ளி கொண்டருளிய பாற்கடலில் வந்து எழுந்ததும்; வினையாலணையும் பெயர். உண்ணா-வேறுயாரும் விழுங்க முடியாத. நஞ்சம்-ஆலகால விடத்தை. உண்டானை-விழுங்கியவனாகிய அந்த அருணாசலேசுவரனை. க்:சந்தி. கும்பிட்டு-அந்த நாயனார் தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டு விட்டுப் பிறகு தரையில் விழுந்து அந்த அருணாசலேசுவரரை வணங்கிவிட்டு. உருகும்-பக்தியினால் உருக்கத்தை அடையும். சிந்தையுடன்-திருவுள்ளத்தோடு. பண்-உரிய பண். ஆர்-அமைந்த. பதிக-ஒரு திருப்பதிகமாகிய. த்:சந்தி. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்ததை. பாடி-பாடியருளி. ப்:சந்தி. பணிந்து-மீண்டும் அந்த அருணாசலேசு

வரரைத் தரையில் விழுந்து வணங்கிவிட்டு. பரவி-அந்த ஈசுவரனைப் புகழ்ந்து. ப்:சந்தி. பணி-தமக்கு உரிய உழவாரத் திருப்பணியையும், வேறு பல திருப்பணிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். செய்தார்-புரிந்து கொண்டு அந்தத் திருவண்ணாமலையில் தங்கியிருந்தார்.

உண்ணா நஞ்சம்: ''விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும், உண்ணா நஞ்சுண்டிருந்தருள் செய்குவாய்.'' (சிலப்பதிகாரம், வேட்டுவவரி) என வருவதைக் காண்க.

திருவண்ணாமலையைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

'' பண்தனை வென்ற இன்சொற்
பாவையோர் பங்கா நீல
கண்டனே கார்கொள் கொன்றைக்
கடவுளே கமல பாதா
அண்டனே அமரர் கோவே
அணியணா மலையு ளானே
தொண்டனேன் உன்னை அல்லாற்
சொல்லுமா சொல்லி லேனே. ''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

'' காற்ற னைக்கலக் கும்வினை போயறத்
தேற்ற னைத்திரு அண்ணா மலையனைக்
கூற்ற னைக்கொடி யார்புரம் மூன்றெய்த
ஆற்ற னைஅடி யேன்மறந் துய்வனோ, ''

அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருக்குறுந்தொகை வருமாறு:

''பெற்றம் ஏறுவர் பெய்பலிக் கென்றவர்
சுற்ற மாமிகு தொல்புக ழாளொடும்
அற்றம் தீர்க்கும்அண் ணாமலை கைதொழ
நற்ற வத்தொடு ஞானத் திருப்பரே. ''

பிறகு வரும் 314-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பாம்புகள் நிறைந்துள்ள சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவரும், சிவபெருமானும் ஆகிய அந்த அருணாசலேசுவரருடைய திருவடிகளை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் வாழ்த்தி வணங்கிவிட்டுத் தமக்கு உரிய உழவாரத் திருப்பணியையும் வேறு பல திருப்பணி களையும் புரிந்து கொண்டுவரும் காலத்தில் நீலமணியைப் போல ஆலகாலவிடம் அமைந்த திருக்கழுத்தைப் பெற்ற அடியேங்களுடைய தலைவனாகிய அருணாசலேசுவரன் இந்த மண்ணுலகத்தின் மேல் மகிழ்ச்சியை அடைந்து திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவத்தலங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் குறையாத விருப்பத்தோடு அந்த நாயனார் எழுந்தருளி அந்தத் தலங்களில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமான்களைத் தரையில் விழுந்து பணிந்து விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்றுகொண்டு தமக்கு ஏற்றவையாகிய உழவாரத் திருப்பணியையும் வேறு பல திருப்பணிகளையும் புரிவாராகி அழகு நிரம்பிய செல் வர்கள் வாழும் தொண்டை நாட்டிற்கு திருவதிகை வீரட் டானேசுவரர் வழங்கிய திருவருளினால் எழுந்தருளுபவ ரானார்.' பாடல் வருமாறு:

'' பணியார் வேணிச் சிவபெருமான்
பாதம் போற்றிப் பணிசெய்நாள்
மணியார் கண்டத் தெம்பெருமான்
மண்மேல் மகிழும் இடமெங்கும்
தணியாக் காத லுடன்சென்று
வணங்கித் தக்க பணிசெய்வார்
அணியார் தொண்டைத் திருநாட்டில்
அருளால் அணைவா ராயினார். ''

பணி-பாம்புகள்; ஒருமை பன்மை மயக்கம். ஆர்-நிறைந்துள்ள. வேணி-சடாபாரத்தைத் தம்முடைய தலை

யின்மேற் பெற்றவரும்; ஆகுபெயர். ச்:சந்தி. சிவபெருமான்-சிவபெருமானாரும் ஆகிய; ஒருமை பன்மை மயக்கம். பாதம்-அந்த அருணாசலேசுவரருடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். போற்றி-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் வாழ்த்தி வணங்கிவிட்டு. ப்:சந்தி. பணி-தமக்கு உரியனவாகிய உழவாரத் திருப்பணியையும், வேறு பல திருப்பணிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். செயும்-புரிந்து கொண்டு வரும்; இடைக்குறை. நாள்-காலத்தில் மணி-நீலமணியைப் போல. ஆர்-ஆலகாலவிடம் அமைந்த. கண்டத்து-திருக்கழுத்தைப் பெற்ற. எம்-அடியேங்களுடைய; என்றது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. பெருமான்-தலைவனாகிய அருணாசலேசுவரன். மண்மேல்-இந்த மண்ணுலகத்தின் மேல். மகிழும்-மகிழ்ச்சியை அடைந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். இடம்-சிவத்தலங்களில்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-ஆகிய எல்லா இடங்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். தணியா-குறையாத. க்:சந்தி காதலுடன்-விருப்பத்தோடு. சென்று-அந்த நாயனார் எழுந்தருளி. வணங்கி-அந்தத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களைத் தரையில் விழுந்து பணிந்து விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. த்:சந்தி. தக்க-தமக்கு ஏற்றவையாகிய. பணி-உழவாரத் திருப்பணியையும் வேறு பல திருப்பணிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். செய்வார்-புரிந்து கொண்டு வருவாராகி; முற்றெச்சம். அணி-அழகு. ஆர்-நிரம்பிய. தொண்டைத் திருநாட்டில்-செல்வர்கள் வாழும் தொண்டை நாட்டிற்கு; உருபு மயக்கம். திரு: திணை மயக்கம். அருளால்-திருவதிகை வீரட்டானேசுவரர் வழங்கிய திருவருளினால். அணைவாராயினார்-எழுந்தருளுபவரானார்.

பிறகு வரும் 315-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'விருப்பத்தோடு பக்தியைப் புரியும் எண்ணத்தினோடு காட்டையும், மலையையும், காட்டாற்றையும், மாமரங்கள் மிகுதியாக வளர்ந்து நிற்கும் குளிர்ச்சியைப் பெற்ற நீர் பாயும் வயல்களைப் பெற்ற சிவத்தலங்கள் பலவற்றையும் தாண்டி எழுந்தருளி சொற்களுக்குத் தலைவராகிய அந்தத் திரு நாவுக்கரசு நாயனார் எழுந்தருளிப் பெருமையைப் பெற்ற தொண்டை மண்டலமாகிய நல்ல நாட்டை அடைந்து முன்பாகவே குளிர்ச்சியைப் பெற்ற மலர்கள் மலர்ந்திருக்கும் பலவகை மரங்கள் வளர்ந்து நிற்கும் மென்மையைப் பெற்ற பூம்பொழில் சுற்றியிருக்கும் திருவோத்தூருக்கு அந்த நாயனார் எழுந்தருளிச் சேர்ந்தார்.' பாடல் வருமாறு:

" காதல் செய்யும் கருத்தினுடன்
காடும் மலையும் கான்யாறும்
சூதம் மலிதண் பணைப்பதிகள்
பலவும் கடந்து சொல்லினுக்கு
நாதர் போந்து பெருந்தொண்டை
நன்னா டெய்தி முன்னாகச்
சீத மலர்மென் சோலைசூழ்
திருவோத் தூரிற் சென்றடைந்தார். "

காதல்-விருப்பத்தோடு பக்தியை. செய்யும்-புரியும் கருத்தினுடன்-எண்ணத்தோடு. காடும்-இடையில் உள்ள காட்டையும். மலையும்-மலையையும். கான்யாறும்-காட்டாற்றையும். சூதம்-மாமரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். மலி-மிகுதியாக வளர்ந்து நிற்கும். தண்-குளிர்ச்சியைப் பெற்ற நீர்பாயும்; ஆகுபெயர். பணை-வயல்களைக் கொண்ட. ப்;சந்தி. பதிகள்-சிவத்தலங்கள். பலவும்-பலவற்றையும். கடந்து-தாண்டி. சொல்லினுக்கு-தாம் பாடியருளும் திருப்பதிகங்களில் உள்ள சொற்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். நாதர்-தலைவராகிய அந்தத்-

திருநாவுக்கரசு நாயனார். போந்து-எழுந்தருளி. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். தொண்டை-தொண்டை மண்டலமாகிய, நல்-நல்ல, நாடு-நாட்டை. எய்தி-அந்த நாயனார் அடைந்து. முன்னாக-முன்பாகவே. ச்:சந்தி. சீத-குளிர்ச்சியைப் பெற்ற. மலர்-மலர்கள் மலர்ந்திருக்கும். பலவகையான மரங்கள் வளர்ந்து நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். அந்த மரங்களாவன: தேக்கமரம், வாகை மரம், வேங்கைமரம், மகிழமரம், கடப்பமரம், பவள மல்லிகைமரம், பூவரசமரம், விளாமரம், வில்வமரம்' நெட்டிலிங்க மரம், அசோக மரம், அரசமரம், ஆலமரம் முதலியவை. மென்-மென்மையைப் பெற்ற. சோலை-பூம்பொழில். சூழ்-சுற்றியிருக்கும். திருவோத்தூரில்-திருவோத்தூருக்கு; உருபு மயக்கம். சென்று-அந்த நாயனார் எழுந்தருளி. அடைந்தார்-சேர்ந்தார்.

திருவோத்தூர்: இது தொண்டை நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் வேதநாதகவரர். அம்பிகை இளமுலை நாயகி. இது காஞ்சிபுரத்திற்குத் தென் மேற்குத் திசையில் 10-மைல் தூரத்தில் உள்ளது. மூன்றாவது மைலில் பாலாற்றைத் தாண்டிச் செல்ல வேண்டும். திருக்கோயிலுக்கு மேற்குப் பக்கத்தில் சேயாறு ஓடுகிறது. இது ஆண் பனை மரங்கள் பெண்பனை மரங்களாக மாறிய தலம். இந்தச் செய்தியைப் பழந்தக்கராகப் பண்ணில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய பின் வரும் பாசுரத்தால் அறியலாம்.

"குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும்பு கலியுள் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே."

கருங்கல்லினால் ஒரு பனமரம் செய்து இந்தத் திருக்கோயிலில் வைத்திருக்கிறார்கள். அந்த மரத்தில் பாதி

முதலாக உள்ள தக்கவையாகிய இனிய சுவையைப் பெற்ற சொற்கள் அமைந்த மாலைகளாகிய பல திருப்பதிகங்களை அந்த வேத நாதேசுவரருக்கு அணிந்துவிட்டு அந்தத் திருவோத்தூரில் சேர்ந்து தங்கியிருந்து கொண்டு தமக்குரிய உழவாரத் திருப்பணியையும் வேறு பல திருப்பணிகளையும் புரிந்துகொண்டு வாழ்வாரானார்.' பாடல் வருமாறு :

**" செக்கர்ச் சடையார் திருவோத்தூர்த்**
**தேவர் பிரானார் தம்கோயில்**
**புக்கு வலங்கொண் டெதிர்இறைஞ்சிப்**
**போற்றிக் கண்கள் புனல்பொழிய**
**முக்கட் பிரானை விரும்புமொழித்**
**திருத்தாண் டகங்கள் முதலாகத்**
**தக்க மொழிமா லைகள்சாத்திச்**
**சார்ந்து பணிசெய் தொழுகுவார்."**

செக்கர்-செவ்வந்தி மாலையைப் போலச் சிவந்திருக்கும்; உவம ஆகுபெயர். ச்:சந்தி. சடையார்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய வேத நாதேசுவரர். திருவோத்தூர்-திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவோத்தூரில் உள்ள ஆலயத்தில் விளங்கும்; இட ஆகுபெயர். த்:சந்தி. தேவர்-எல்லாத் தேவர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். பிரானார் தம்-தலைவராகிய அந்த வேத நாதேசுவரருடைய. தம்:அசை நிலை. கோயில்-திருக்கோயிலுக்குள். புக்கு-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நுழைந்து. வலங்கொண்டு-அந்த ஆலயத்தை வலமாக வந்து. எதிர்-அந்த வேத நாதேசுவரருடைய சந்நிதியில் நின்றுகொண்டு. இறைஞ்சி-அந்த வேத நாதேசுவரரை அந்த நாயனார் வணங்கிவிட்டு. ப்:சந்தி. போற்றி-வாழ்த்தி. க்:சந்தி. கண்கள்-தம்முடைய இரண்டு திருவிழிகளும். புனல்-பக்தியினால் நீரை. பொழிய-சொரிய. முக்கண்-மூன்று கண்களைப் பெற்ற. கண்:ஒருமை பன்மை மயக்கம். பிரானை-தம்முடைய தலைவனாகிய அந்த

வேத நாதேசுவரனை. விரும்பு-பலரும் விரும்பிப் பாடும். மொழி-இனிய சுவையைப் பெற்ற சொற்கள் அமைந்த; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. திருத்தாண்டகங்கள்-பலதிருத்தாண்டகங்கள். முதலாக-முதலாக உள்ள. த்:சந்தி. தக்க-தக்கவையாகிய; தகுதியைப் பெற்றவையாகிய. மொழி-இனிய சுவையை உடைய சொற்கள் அமைந்த; ஒருமை பன்மை மயக்கம். மாலைகள்-மாலைகளாகிய பல திருப்பதிகங்களை. சாத்தி-அந்த வேத நாதேசுவரருக்கு அணிந்துவிட்டு. ச்:சந்தி. சார்ந்து-அந்தத் திருவோத்தூரில் சேர்ந்து தங்கியிருந்து கொண்டு. பணி-தமக்கு உரிய உழவாரத் திருப்பணியையும் வேறு பல திருப்பணிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். செய்து-புரிந்துகொண்டு. ஒழுகுவார்-வாழ்வாரானார்.

இந்தத் தலத்தைப்பற்றித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பழந்தக்கராகப் பண்ணில் பாடியருளிய மற்றொரு பாசுரம் வருமாறு:

"இடையீர் போகா இளமுலை யாளைஓர்
புடையீ ரேபுள்ளி மானுரி
உடையீ ரேஉம்மை ஏத்துதும் ஒத்தூர்ச்
சடையீ ரேஉம தாளே."

பிறகு வரும் 317-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'சிவப்பாக விளங்கும் திருமேனியைப் பெற்ற ஐயராகிய வேதநாதேசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவோத்தூருக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி அந்த வேதநாதேசுவரரைத் துதித்துவிட்டு மேலே எழுந்தருளி செழுமையைப் பெற்ற பல உலகங்களில் வாழ்பவர்கள் தங்களுடைய உயிர்களோடு பிழைத்திருக்கும் வண்ணம், திருமால் பள்ளிகொண்டருளியுள்ள பாற்கடலில் எழுந்த ஆலகால விடத்தை விழுங்கியருளும் அந்த வேதநாதேசுவரர் தங்கிக் கோயில் கொண்டிருக்கும் தலங்கள் பலவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தத்

தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களைப் பணிந்துவிட்டு தையலாகிய காமாட்சி அம்மை தம்மைக் கட்டித் தழுவியதனால் குழைவை அடைந்த தலைவனாகிய ஏகாம்பரேசுவரன் தங்கி எழுந்தருளியிருக்கும் தெய்வத் தன்மை வாய்ந்த சிவத்தலம் என இந்த உலகத்தில் வாழும் மக்கள் யாவரும் தரையில் விழுந்து வணங்கிப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு துதிக்கும் திருமதில் சுற்றியுள்ள காஞ்சீபுரத்தின் பக்கத்தை அந்த நாயனார் அடைந்தார்.' பாடல் வருமாறு:

**"செய்ய ஐயர் திருவோத்தூர்**
**ஏத்திப் போந்து செழும்புவனம்**
**உய்ய நஞ்சுண் டருளுமவர்**
**உறையும் பதிகள் பலவணங்கித்**
**தையல் தழுவக் குழைந்தபிரான்**
**தங்கும் தெய்வப் பதிஎன்று**
**வையம் முழுதும் தொழுதேத்தும்**
**மதில்சூழ் காஞ்சி மருங்கணைந்தார்."**

செய்ய-சிவப்பாக விளங்கும் திருமேனியைப் பெற்ற; வினையாலணையும் பெயர். ஐயர்-ஐயராகிய வேதநாதேசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். ஐயர்-தலைவர், தந்தையாரைப் போன்றவர், அழகைப் பெற்றவர். திருவோத்தூர்-திருவோத்தூருக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி. ஏத்தி-அந்த வேதநாதேசுவரரைத் துதித்துவிட்டு. ப்:சந்தி. போந்து-மேலே எழுந்தருளி. செழும்-செழுமையைப் பெற்ற. புவனம்-பல உலகங்களில் வாழ்பவர்கள்; இடஆகுபெயர். உய்ய-தங்களுடைய உயிர்கள் போகாமல் பிழைத்திருக்கும் வண்ணம். நஞ்சு-திருமால் பள்ளிகொண்டருளியுள்ள பாற்கடலில் எழுந்த ஆலகால விடத்தை. உண்டருளும்-விழுங்கியருளும். அவர்-அந்த வேதநாதேசுவரர். உறையும்-தங்கித் திருக்கோயில்,

கொண்டு எழுந்தருளியிருக்கும். பதிகள்-சிவத்தலங்கள். பல-பலவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி. வணங்கி-அந்தச் சிவத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் தனைப் பணிந்துவிட்டு. த்:சந்தி. தையல்-இளமையைப் பெற்ற காமாட்சி அம்மை. தழுவ-தம்மைக் கட்டி அணைக்க. க்:சந்தி. குழைந்த-குழைவை அடைந்த. பிரான்-தலைவனாகிய ஏகாம்பரேசுவரன். தங்கும்-தங்கி எழுந்தருளியிருக்கும். தெய்வ-தெய்வத்தன்மை வாய்ந்த. ப்:சந்தி. பதி-சிவத் தலம். என்று-என. வையம்-இந்த உலகத்தில் வாழும் மக்கள்; இட ஆகுபெயர். முழுதும்-யாவரும்; திணைமயக்கம். தொழுது-தரையில் விழுந்து வணங்கிப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. ஏத்தும்-துதிக்கும். மதில்-திரு மதில். சூழ்-சுற்றியிருக்கும். காஞ்சி-காஞ்சீபுரத்தினுடைய. மருங்கு-பக்கத்தை. அணைந்தார்-அந்த நாயனார் அடைந்தார்.

காஞ்சீபுரம்: இது திருக்கச்சி ஏகம்பம் எனவும் வழங்கும். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் ஏகாம்பரநாதர், ஏகாம்பரேசுவரர், பெரிய கம்பர் என்பவை. அம்பிகையின் திருநாமங்கள் ஏலவார்குழலி, காமாட்சி அம்மை என்பவை. தீர்த்தங்கள் சிவகங்கை, கம்பாநதி முதலிய தீர்த்தங்கள். தலவிருட்சம் மர்மரம். இது பஞ்சபூதத் தலங்களில் பிருதுவித் தலம். காமாட்சியம்மையார் ஏகாம்பரேசுவரரைப் பூசை புரிந்தருளி முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தருளிய தலம் இது. சிதம்பரம் முதலிய ஒவ்வொரு சிவத்தலத்திற்கும் எழுந்தருளிப் பல திருப்பணிகளைப் புரிந்து தலத்துக்கு ஒவ்வொரு வெண்பாவாக க்ஷேத்திரத் திருவெண்பா என்ற நூலைப் பாடியருளிய ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அரசாட்சி புரிந்தருளிய தலம் இது. திருவொற்றியூரின் எல்லையைக் கடந்தவுடன் இரண்டு கண்களின் பார்வைகளையும் இழந்திருந்த சுந்தர மூர்த்தி நாயனார் இடக்கண் பார்வையைப் பெற்ற தலம்

இது. திருக்குறிப்புத் தொண்ட நாயனார், சாக்கிய நாயனார் ஆகியவர்கள் ஏகாம்பரேசுவரரை வழிபட்டு முக்தியைப் பெற்ற தலம் இது. முத்தித்தலங்கள் ஏழுக்குள் ஒன்று இந்தத் தலம். காமாட்சியம்மையினுடைய திருக்கோயிலாகிய காமக் கோட்டமும், குமரக் கடவுளினுடைய ஆலயமாகிய குமரகோட்டமும், வரதராஜப் பெருமாளினுடைய ஆலயமாகிய அத்திகிரியும், வேறுபல திருக்கோயில்களும் உள்ள பெரிய சிவத்தலம் இது. ''நகரேஷு காஞ்சி'' என்று இதைப் பற்றி வடமொழியில் ஒரு சொற்றொடர் உண்டு. சுந்தர மூர்த்தி நாயனார் இடக்கண் பார்வையைப் பெற்றதைப் புலப்படுத்தி அவர் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

'' ஆலம் தானுகந் தமுதுசெய் தானை
ஆதியைஅம ரர்தொழு தேத்தும்
சீலம் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையுள் ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
என்றும்ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன்எம் மானைக்
காணக்கண் அடியேன்பெற்ற வாறே.''

காஞ்சீபுரத்தில் உள்ள தலங்கள்: அரிசாபம் தீர்த்த தானம், அமரீசம், அநேகதங்காவதம், அந்தகேசம், அபிராமீச்சரம், அனந்த பத்மநாபேசம், ஆதிபிதீசம், இட்டசித்தீச்சரம், இரணியீசம், இரேணுகீச்சரம், இறவாத்தானம், கச்சபேசம், கயிலாயம், கண்ணீசம், கச்சியயானம், கச்சிக் காரோணம், குமரகோட்டம், சனற்குமாரேசம், சத்த தானம், சலந்தரீசம், சார்ந்தாசயம், சிவாத்தானம், சித்தீசம், சுரகரீசம், தக்கீசம், தான்தோன்றீச்சரம், திருநெறிக்காரைக்காடு, திருமேற்றளி, திருவோணகாந்தன் தளி, திருமாற்பேறு, நவக்கிரகீசம், நாரசிங்கீசம், பராசரேசம், பணாதரீச்சரம், பலபத்திரராமீசம், பரசிராமீச்சரம்,

பாண்டவீசம், பிறவாத்தானம், புண்ணிய கோடீசம், மணி கண்டீச்சரம், மக்கீசம், மகாசாத்தன் தளி, முத்தீசம், முப்புராரி கோட்டம், யோகாசாரியர் தளி, வலம்புரி விநாயகர் திருக்கோயில், வன்மீகநாதம், வயிரவீசம், வாணீசம், விருவச்சேனீசம், வீரராகவீசம் முதலியவை. இந்தத் தலத்தில் உள்ள தீர்த்தங்கள் சகோதர தீர்த்தம், சருவ தீர்த்தம் முதலியவை.

# செய்யுள் முதற் குறிப்பு அகராதி


அங்கண் இருந்த, 283
அங்கணைந்து, 8
அங்கு நிகழ்ந்த, 202
அண்ணாமலை மேல், 298
அத்திருமூதூர், 107
அது கண்டுடைய, 199
அந்த விமானம், 254
அந்நாளில் ஆளுடைய, 93
அந்நாளில் தமக்கேற்ற, 126
அப்படிச் சின்னாள், 120
அம்மொழி மாலை, 104
அரிதில் திறக்க, 203
அல்லார் கண்டத்து, 160
அழைத்துக் கொடு, 213
அறிவில் அமணர், 257
அன்பர் ஈட்டம், 194
அன்ன வண்ணம், 211
ஆங்கணையும், 122
ஆங்கப்பரிசை, 186
ஆண்ட அரசு, 44
ஆண்ட அரசும், 219
ஆண்ட அரசெழுந்தருளி, 94
ஆதி முதல்வர், 221
ஆயபொழுது, 226
ஆறுசடைமேல், 164
ஆனை இனத்தில், 260
ஈசர் மிழலை, 162
உண்ணீர் மையினால், 188
எய்ப்பு நீங்கி, 287
எழும்பணியும், 5
என்று கூற, 228
கண்டவியப்பு, 258
கண்டு தொழுது, 50
கரண்டம் மலிதடம், 99
காண்டலே கருத்தாய், 59
காதல் செய்யு, 303
காலநாள், 7
கால நிலைமையினால், 157
காலம் தவறு, 166
காவும் குளமும், 282
கூட வந்து, 288
கைகள் குவித்து, 151
சண்பை ஆளும், 197
சார்ந்தார் தம், 137
சித்தம் நிலாவும், 102
சிலந்திக்கருளும், 271
சீர் தரு செங்காட்ட, 113
சீர் மன்னும் திருக்கடவூர், 133
சீரார் பதியினின்ற, 209
சீரின் விளங்கு, 155
சூழும் திருத்தொண்டர், 49
சேக்கிழார் சடையார், 307

செங்கண் விடையார், 296
செங்குமுத மலர், 129
செய்ய ஐயர், 309
செய்ய சடையார், 251
செய்ய மாமணி, 61
சென்றுள் புகுந்து, 149
சைவ நெறி, 225
சோலைமறை, 233
தலையின் மயிரை, 101
திருநாவுக்கரசர் எதிர் சென்று, 101
திருநீலநக்கடிகள், 127
திருப்பதிகச் செழுந், 124
திருப்புகலூர் அமர்ந் தருளும், 88
தேவர் பிரானை, 109
தொல்லை வேதம், 184
நண்ணும் திருநாவுக்கரசர், 285
நல்லூரில் நம்பர், 26
நாதர் மருவு, 292
நாலூர் தென், 33
நான் மறை நாற், 79
நீடு புகழ்த் திருவாரூர், 64
நீராரும் சடைமுடியார், 82
பணியார் வேணி, 301
பரவை ஓத, 183
பற்றொன்றிலா, 47
பாடும் தமிழ் மாலைகள், 217
பிள்ளையார் எழுந்தருள, 121
புடை மாலை, 1
புறம்பு நின்று, 196
பூவிற் பொலியும், 245
பெரு வாசமலர், 40
பொங்கு புனலார், 264
போதம் நிகழ, 207
போதுமா துணிந்து, 229
பைஞ்ஞீலியினில், 290
மற்றப் பதிகள், 277
மன்றல் விரவு, 181
மன்னும் செல்வ, 205
மாடம்நீடு, 214
மாடவீதி அலங்கரித்து, 147
மாமதில் ஆரூர், 106
மார்பாரப் பொழி, 62
முன்னாள் அயனும், 153
மேவு திருவாதிரை, 86
வண்ணம் கண்டு, 265
வந்து சிவனார், 223
வல்லமண்குண்டர், 46
வழிபோம் பொழுது, 280
வாய்ந்த மிழலை, 173
விண்ணின்றிழிந்த, 159
வீழிமிழலை, 238
வீழிமிழலை வந்தணைய, 146
வேணுபுரக்கோன், 231
வேத வனத்தின், 199
வையம் எங்கும், 156

